# ஏகத்துவப் பாடல்கள்

**பாடல்கள்**

ஆக்கம், இசையமைப்பு

**இசையரசர், ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன்,**
**ஷெய்ஹுல் முப்லிஹீன்.**

## எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ்(ரஹ்)

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | : **Eahathuvap Padalkal** |
| Author | : **Seyhul Mufliheen M.S.M.Abdullah (Rah)** |
| Subject | : ***Songs on oneness of Essence*** |
| Language | : **Tamil** |
| First Publication | : **August. 1995** |
| Copy right | : **All Ceylon Thareekathul Mufliheen** |
| Publisher | : **All Ceylon Thareekathul Mufliheen Colombo Branch Sri Lanka** |
| Second Publication | : **February 2003** |
| Third Publication | : **December 2005** |
| Paper Used | : **70 Gsm Bank** |
| Paper Size | : **A5** |
| Size of the Book | : **1/8** |
| Type used for Text | : **Kalaham** |
| Number of pages | : **303** |

**Printed By :**

***PARANAN ASSOCIATES PRIVATE LIMITED***

**403 1/1, Galle Road, Wellawatta, Colombo - 06.**

**T.P: 507932, 551241 Hotline : 077-7370292.**

# பதிப்புரை

உலகம் புத்துயிர் பெற ஏகத்துவம் உணர்த்தும் போற்றற்கரிய எண் நூற்களை வழங்கிய இசையரசர், ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன், ஷெய்ஹுல் முப்லிஹீன் எம். எஸ். எம். அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள், சிதைந்து போன தீன் வழியை புனரமைக்கும் முயற்சியாக இப்போது ஒரு நூற்றைத் தாண்டும் ஏகத்துவப் பாடல்களையும் படைத்த ளித்துள்ளார்கள்.

மார்க்கத்தின் உண்மை புதையுண்டு போன கால கட்டத்தில் மானிட சமூகத்தில் கேட்டல், கிரகித்தல் போன்றவற்றில் ஏற்பட்ட நவீன வளர்ச்சியினூடாக தௌஹீத் மக்களுக்கு பாடல்கள் மூலமாக கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இதனை இலகுவில் விளங்கியறிந்து சாமான்யனும், சான்றோரும் பயனுறும் வகையில் கடினமான இலக்கண சொற் பிரயோகங்களைத் தவிர்த்து வழக்கிலுள்ள நடைமுறைச் சொற்களைக்கொண்டே இப்பாடல்கள் அமையப்பெற்றிருப்பது குறிப்பிட்டுக்கூறக்கூடிய சிறப்பம்சமாகும்.

தீர்க்கதரிசனமுடைய மகாஞானி நாயகம் அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களால் இயற்றி இசையமைக்கப்பட்ட இப்பாடல் வரிகள் ஒவ்வொன்றும் வெறும் கற்பனைத் திறனால் புனையப்படாமல் இறை அறிவினால் உணரப்பட்டனவாக விருப்பதால்; இசைநயத்துடன் கேட்கும்போதும், வரிவடிவத்துடன் படிக்கும்போதும் புதுப்புதுக் கருத்துக்களாலும், தெய்வீக உணர்வுகளாலும் உள்ளம் உந்தப்பட்டு உவகை அடைகின்றது.

இப்பாடல்கள் இசை ஆர்வலர்களுக்கு இனிய விருந்தாகவும், இசைவித்தகர்களுக்கோ இசைஞானக் கருவூலமாகவும் வாய்க்கப்பெற்றிருப்பது மற்றொரு முக்கிய சிறப்பம்சமாகும். இவை பாடல்களாக அமையப்பெற்றிருந்தாலும் எக்காலத்தினர்க்கும், எந்நாட்டினர்க்கும், எச்சமுதாயத்தினர்க்கும் அவசியமான போதனைகளை மையமாகக் கொண்டே இயற்றப்பட்டிருக்கிறது. இசையுலகில் எவரும் தொடமுடியா எல்லையைத் தொட்டிருக்கும் இப்பாடல்கள் கலை, இலக்கிய உலகில் நூல்வடிவமாய் புதுப்பிரவேசம் செய்வது (அறிவுலகுக்கு) நல்ல சகுனமாகும்.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்ட பாடல் தொகுப்பினை நூல்வடிவமாய் அச்சிட்டு வெளியிட பணித்தமைக்கு எம் ஞானத்தந்தை நாயகம் அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களுக்கு ரசூல்(ஸல்) அவர்களின் சார்பாக எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன்
கொழும்புக்கிளை

இப்புத்தகத்தில் அடங்கியிருக்கும் அனைத்து பாடல்களும் பின்வரும் தலைப்புக்களில் தென்னிந்திய பாடகர்களான S. M. அபுல் பறக்காத் பிலாலி, முப்லிஹீன் ஜேம்ஸ் கெனடி (M.A) ஏகத்துவக்குரல் அவர்களினால் பாடப்பட்டு ஒலிப் பேழைகளாகவும், இசைத்தட்டுக்களாகவும் (Cassette / CD) வெளிவந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

1. **அமுதூறும் தீன் கலிமா**
2. **கனவான உலகு**
3. **வேதத்தின் கொள்கை**
4. **சொக்கத்தில் வாழவே ஆசை**
5. **வான்மறையின் வசனங்கள்**
6. **தித்திக்கும் திருமறை**
7. **ஆண்டவனருள்**
8. **தூயோன் துணை**
9. **இஸ்லாத்தின் கொள்கை**
10. **உத்தமர் போதனை**
11. **லா என்ற சொல்லாலே**
12. **மறுமையின் வாழ்வை மறக்காதே**
13. **யாவும் மாயைதானே**
14. **ஸிறாத்**
15. **நேர்வழி**
16. **கற்பனைக் கடவுளை மறந்துவிடு**
17. **மீஸான்**
18. **உண்மை அழிவதில்லையே**
19. **உள்ளம் அமைதிபெற**
20. **ஷில்சிலா**
21. **பதவி மோகம்**
22. **சிந்தனை செய்**
23. **வீணெண்ணம்**
24. **அருள் வெள்ளம்**
25. **திக்கிர் என்பது எதற்காக**

# பொருளடக்கம்


| பாட்டு | பக்கம் |
|---|---|
| 1. கற்பனைக் கெட்டாத காருண்ய மூர்த்தியே | 01 |
| 2. கலையென்ற சோலையில் | 02 |
| 3. இருள் சூழ் இதயத்திடும்பர் பலர் | 03 |
| 4. அமுதூறும் தீன் கலிமா | 04 |
| 5. அறிவும் அன்பும் இணையும் போது | 05 |
| 6. உடை கண்டு எடை போடும் உளமே | 06 |
| 7. பயணம் வாழ்வு மறுமையை | 08 |
| 8. மணிமுடி சூடினும் | 09 |
| 9. அன்பு என்பதோர் பண்பு | 10 |
| 10. சிறைவிட்டுச் சிறைமாறும் மனிதா | 11 |
| 11. கனவினில் கண்ட பொருள் | 12 |
| 12. உண்மையென்பதுறைவிடம் | 13 |
| 13. லா என்ற சொல்லாலே | 14 |
| 14. உண்மையின் உருவம் உண்மையாய் நீயே | 15 |
| 15. ஆதியின் ஜோதியின்பாலே | 16 |
| 16. பாதை கண்டு ஏகு நீ | 17 |
| 17. கனவே – கனவு | 18 |
| 18. கனவான உலகம் நிலையானதென்ற | 19 |
| 19. உலகமே ஒரு கண்ணாடி | 20 |
| 20. ஆசைக்கு அளவேது மனிதா | 21 |
| 21. உலகம் பாலைவனக் கடையாகும் | 22 |
| 22. சமூகத்தில் பிணக்கின்றிச் | 23 |
| 23. உண்மைக்கு உடை வேண்டுமா | 25 |
| 24. யாவும் மாய்கைதானே | 26 |
| 25. ஆதியின் பிம்பமாய் அறிவிலே | 27 |
| 26. களிக்கும் சுவன வாசலே | 29 |
| 27. எல்கையை மீறிய பாபியே யாகினும் | 30 |
| 28. பக்தியின் நோக்கம் | 31 |
| 29. அலையும் உள்ளப் போக்கிலே | 33 |
| 30. காரணராய் நின்ற ராஜா | 35 |
| 31. நபியே திரு நபியே | 36 |
| 32. கலிமாப் பொருளுணர்ந்து கருத்தை | 37 |
| 33. வேதத்தை உணரா வேதியர் வாழ்வு | 38 |
| 34. நபிநாதர் புகழ்பாட நாவில்லையே | 39 |
| 35. சத்தியத்தின் பிறப்பிடமான | 40 |
| 36. அருளுக்குப் பெயராகும் அறிவு | 41 |
| 37. பொன்னாசை புகழாசை | 42 |
| 38. செய்தியொன்று சொல்லி வைப்பேன் | 44 |
| 39. ஆளுக்கொரு வேதம் வேண்டுமா | 46 |
| 40. வெந்து நொந்த உள்ளத்துக்கு | 48 |
| 41. வேதத்தின் கொள்கை உன் உயிரப்பா | 49 |
| 42. பேதை மனமே கேழ் | 50 |
| 43. சொர்க்கத்தில் வாழவே ஆசை | 51 |
| 44. மேலெண்ணம் கொண்டோர்க்கு | 52 |
| 45. கறைபடிந்த உள்ளத்தில் | 54 |
| 46. உலகம் என்பதோர் உளுத்தமரம் | 55 |
| 47. உலகமக்கள் சாந்திபெற | 57 |
| 48. இறைவன் தந்த திருவசனம் | 59 |
| 49. ஆண்டவன் ஒருவனே என்றாங்க | 60 |
| 50. பேயாட்டம் ஆடுகிறான் மனிதன் | 61 |

51. வான்மறையின் வசனங்களை 63
52. எங்கே போகிறாய் நீ எங்கே போகிறாய் 65
53. நீயே உன்னை மறந்துவிட்டாய் 66
54. இலகுகாத்த கிள்ளை உள்ளம் ஏமாறும் 68
55. முக்தியை அறியா மூடரின் பக்தி 69
56. மனநோய்க்கு மருந்தொன்று 71
57. உண்டு உடுத்து உறங்கி விழிக்கும் 73
58. நாயோடு படுத்திருப்போன் 75
59. ஏனிந்தக் கோலமடா 77
60. தித்திக்கும் திருமறையைத் திறந்து பார் 78
61. இறைவனுக்கிணை கற்பிக்கும் மனிதன் 80
62. வேலையில்லாதவன் மூளை 82
63. கதம்பக் கலையில் கனிந்த வாழ்வு 84
64. வாழ்வுக்கென்றொரு நோக்கிருக்குது 86
65. நிந்திக்கும் மனச்சாட்சி 88
66. சாண்தைக்க முழம் கிழிவதேன் 90
67. எங்கெங்கு நோக்கினும் 92
68. காக்கைகளே காக்கைகளே 93
69. நெறிகெட்ட உலகிலே நிம்மதி 95
70. ஆண்டவனருளால் அவனுருவானோம் 97
71. பேராசை கொண்டாயே பிடிவாதம் செய்தாயே 99
72. வாழ்வோடு போராடும் வாலிபரே கேளும் 101
73. வான் பூமி கடல் மலை 102
74. இறைவனுக்கிணையில்லைத் துணையில்லையே 104
75. தூயோன் துணை வேண்டும் 106
76. சொல்லாதே பொய் சொல்லாதே 107
77. உலகெல்லாம் எதிர்த்தாலும் 109
78. கண்காணும் மண்ணுலகு 110
79. உண்மையை உணரா உலுத்தரின் வாழ்வு 112
80. மனச்சாட்சி மாறாமல் மார்க்கநெறி மீறாமல் 114
81. ஆண்டவன் அடியார்க்கு அருள்செய்த ஞானம் 115
82. மந்தார மடையர்க்கு மதிபிறக்குமா 116
83. ஆடியோடி அலுப்படைந்த 118
84. என்றென்றும் சாந்தியில் இன்புற்று வாழ்ந்திட 119
85. மண்ணறை வாழ்வை மறந்துவிட்டாய் 121
86. காயகற்பக் கலிமா கல்பின் கறையை 123
87. கோதறப்பழுத்து மதுரமே கனிந்த 124
88. உள்ளொன்று புறமொன்று கொள்ளாதேடா 126
89. இதயத்துக்குயிரூட்டும் தியானம் 128
90. கஸ்டத்தோடு சுகமிருக்குது 129
91. உறவாடு உறவாடு 130
92. மனிதன் தன்னை அறிந்து கொள்ள 132
93. கலிமாப் பொருளில் கரைந்துவிடு 133
94. அறிவில் தோன்றி அறிவில் மறையும் 135
95. நாளொரு மேனி பொழுதொருவண்ணம் 137
96. காற்றடிக்கும் கடற்பரப்பில் 139
97. பிறக்குமா இன்பம் பிறக்குமா 140
98. மறுமையின் வாழ்வை மறக்காதே 141
99.அலையும் உள்ளத்தை அடக்கிவிடு 143
100.அமைதியே இல்லா அவலத்தை நீக்க 145
101. ஸிறாத் 147
102. அகத்தில் ஈமான் 149

103. மூடிய கண்களில் 151
104. ஆளுமையில்லாக் 153
105. நானெனும் உணர்வொன்று 155
106. நாடகம் வாழ்வு 157
107. வருவது வரட்டும் 158
108. நேர் வழி 160
109. உருண்டோடும் உலகத்தில் 161
110. உள்ள மெனும் வீட்டினிலே 162
111. மாந்தருக் கேற்படும் 163
112. அகிலத்தின் உயிரான 165
113. பாதை புரியாப் பயணம் 167
114. சத்தியத்தில் வாழுகின்ற 168
115. கற்பனைக் கடவுளை 170
116. தீயகுணங்கள் அத்தனையும் 172
117. இன்பதுன்பம் இருவினையும் 174
118. உடன்பாடும் எதிர்மறையும் 176
119. அலைபாயும் மனத்தோடு 178
120. கண்டெடு கேட்டெடு 180
121. எங்கும் நிறைந்த காலம் 181
122. உலகுக்குப்பயந்து உண்மையை 183
123. மீஸான் என்பது மனச்சாட்சி 185
124. ஈமானில்லா அமலாளி 187
125. இறைவனுக்கிணை இல்லை 189
126. தன்குறைகாணும் தகமை 191
127. அச்சத்தின் காரணத்தால் 193
128. இறைவனென்ற கலைஞன் 195
129. இரக்கம் கோபம் 197
130. மருட்சிப்புலன்களில் மருண்ட 198
131. உண்மை அழிவதில்லையே 200
132. இருளடைந்த உள்ளத்துக்கு 202
133. உலகமக்கள் யாவருக்கும் 204
134. தொல்வினையைத் தோற்கடிக்கும் 206
135. அறிவை மயக்குவது புலனாட்சி 208
136. நீதியை நித்திரையில் 210
137. உள்ளம் அமைதிபெற 212
138. உறவும் பகையும் 214
139. மணக்கும் கலிமாவைப் 216
140. ஒளியைக் கொண்டு வழியை 217
141. நப்பாசை கொண்ட உள்ளம் 219
142. உன்னை உனக்குணர்த்தி 220
143. ஷில்சிலா மயக்குன்னை 222
144. ஈமானை எடுத்துக்கொள்ள 224
145. பலமுறை சிந்தித்து ஒருமுறை 226
146. பொன்னென்றும் பெண்ணென்றும் 228
147. உலகை மயக்குவது வேஷம் 229
148. எண்ணத்தின் விளைவே 230
149. அழுவதும் சிரிப்பதும் 232
150. இருட்டறைக்குள் ஏகுமுன் 234
151. பதவி மோகம் பயங்கர நோய் 235
152. இதயத்திற்கு அறிவூட்டும் நாதம் 237
153. நெற்றியுடையாமல் தப்பிக்கொள்ளும் 238
154. இறைவனை ஏகனாய் 240

155. உள்ளம் என்பதோர் நீதிமன்றம் 242
156. அகதான சமதொன்றைத் தவிர 244
157. சிந்தனை செய் தெளிவு பெறு 245
158. இரக்கம் கோபம் இருக்கவேண்டும் 247
159. வீணான சந்தேகம் கொள்ளாதே 249
160. வேரறுந்து கெட்டுப்போன 251
161. வீணெண்ணம் வீழ்ச்சிக்கு 253
162. கொள்கை தவறிக் குழியில் வீழ்ந்தோர் 255
163. இறந்தழிந்த உள்ளத்துக்குயிரூட்டி 256
164. ஆசையை அளவோடமைத்தவர் 258
165. கொள்கை எங்கே கொண்டு செல்லும் 259
166. அடாது செய்தவர் படாதுபடுவர் 261
167. நேர்வழியை மூடிவிட்டு 263
168. உலகெல்லாம் சாந்தி தேடி 265
169. கண்ணும் செவியும் கலக்கமூட்டலாம் 266
170. புவிவாழும் மக்களுக்கு 268
171. அல்லாஹ்வின் அருளின்றி 270
172. அருள்வெள்ளக் கரையிலுமா 272
173. கொள்கையில் ஏனோபேதம் 274
174. சத்தியத்தைக் தேடுகின்ற 276
175. தம்மை தாமே 278
176. அறிவும் அன்பும் அரவணைப்பும் 280
177. தீன்கலிமா உன் திரைநீக்கும் 281
178. திக்கிர் என்பது எதற்காக 282
179. உள்ளப்பரிசுத்தத்தோடு 284
180. எங்கும் நிறைந்த ஹக்கை 287
181. கலைச்சொற்பதம் 289

## பாட்டு - 1

### தொகையறா

கற்பனைக்கெட்டாத காருண்யமூர்த்தியே
கதியில்லா ஏழையென்னைக் காத்தருள் ஹக்கனே
காதிறேகருணைபெற உனை வேண்டிக் கரம் நீட்டினேன்
யாறஹீம் யாகரீம் யாஅல்லாஹ்

### பல்லவி

அலைகொண்ட வெள்ளத்தில் தொலைந்திட்ட மக்களில்
நபி நூஹுவைக் காக்கவில்லையா
தீயிடைப்பட்ட நபி இப்றாஹீம் வேகாமல்
நீ அவரைக்காக்கவில்லையா (அலை)

### அனுபல்லவி

பிர்அவுன் பின்தொடரக் கடல்கடத்தி
நபி மூஸாவைக் கரைசேர்த்து வைக்கவில்லையா
நபி ஈஸாவைக் கொலை செய்ய நீசர்கள் சதி செய்ய
நீ அவரைக்காக்கவில்லையா
யாறஹீம் யாகரீம் யாஅல்லாஹ்

### சரணம்

1. புனர்வாழ்வு கேட்ட நபி ஐயூபின்
   துயர்தனைப் போக்கி நீ காக்கவில்லையா
   புவியோர் புரிந்திடப்புர்க்கான் மஜீதிலே
   போதனை செய்யவில்லையா
   யாறஹீம் யாகரீம் யா அல்லாஹ் (அலை)

2. உத்தமர் முஹம்மதைப்பின்பற்றி நான் வாழ
   நீயேனும் பார்ததில்லையா
   தீயவை நீக்கவும் தேவையைக் கேட்கவும்
   திருமறையில் கூறவில்லையா
   யாரஹீம் யாகரீம் யா அல்லாஹ் (அலை)

3. கனமான கலிமாவின் துணைகொண்டு
   உனைவேண்டி ஹக்கனே கரம் நீட்டினேன்
   கட்டுண்ட கட்டெல்லாம் விட்டுப்பிரிந்திடக்
   கர்த்தனே உனை வேண்டினேன்
   யாறஹீம் யாகரீம் யா அல்லாஹ்
   யாதல்ஜலாலிவல்இக்றாம் (அலை)



## பாட்டு - 2

### தொகையறா

கலையென்ற சோலையில் களையாக மாறிநான்
களைப்புற்றிருந்த போது (தற்)கொலையென்ற நிலையிலே
சிலையாக இருந்த என் கண்களைத் திறந்து விட்டாய்
தேர்ந்தறிய முடியாத திருநபியின் பொருட்டினால்
திசைமாற்றி எனைச் செலுத்தி உன் தீதாறுபெற
அருள்செய்த இறையோனே உன் அருளை
அனுதினமும் நினைகுவேனே
உன்னாணை உனையன்றி ஒன்றுமே இல்லையென
எனக்குணர்த்திப் பொன்னான வாழ்வளித்தாய்
மண்ணான புத்தியை மாய்த்திட்ட
மன்னவா மனதார நன்றி அல்லாஹ்

### பல்லவி

ஈமானென்ற செல்வமீந்து
இருளைநீக்கி ஒளியைத் தந்த
இறைவா உனையே புகழுவேனே

### அனுபல்லவி

பார்வை கேள்வி பேச்சு மூச்சு
பண்பு யாவும் நீயேயாச்சு
மனித அறிவு மாய்ந்தபோதே
மழ்ஹர் என்ற உண்மை கண்டேன் (ஈமானென்ற)

### சரணம்

1. மாய உள்ள மருட்சி நீங்கிக்
   கால வெள்ளக்கரை கடந்தேன்
   ஆயயாவும் நீயேயல்லால்
   அணுவும் இல்லை லாஇலாஹ (ஈமானென்ற)

2. கனவுத் துன்யாக் காட்சி நீங்கிக்
   கரியதிரைகள் அகலக்கண்டேன்
   மறதி நீங்கி மனிதனானேன்
   மர்ஹபாசொல் லாஇலாஹ (ஈமானென்ற)

## பாட்டு - 3

### தொகையறா

இருள் சூழ் இதயத்திடும்பர்பலர் வாழுலகில்
தீனுக்கு உயிரூட்டத் தீர்பளித்தாய்
பொருளிலும் புகழிலும் புதையுண்டோர் மத்தியில்
இடர்நீக்கி அணைத்தெடுத்தாய்
நன்றிக்கு நாவேது நான் அறிவேன் என்றாலும்
என்றைக்கும் உள்ளவனே நன்றி அல்லாஹ்

### பல்லவி

நீயே உனக்கு விரோதியடா
நிந்திக்கும் மனமே சாட்சியடா
நிந்திக்கும் மனமே சாட்சியடா

### அனுபல்லவி

நிம்மதி தேடி ஓடுகின்றாய்
நேர்வழியறியாதாடுகிறாய் (நீயே)

### சரணம்

1. ஆவதும் அழிவதும் மருட்சியடா
இதை அறிந்து கொள்வதோர் புரட்சியடா
செயலுக்குக் கூலிதரும் உலகமடா
நல்ல நோக்குக்குக் கூலிதரும் தெய்வமடா (நீயே)

2. உள்ளதோர் நானென்னும் ஏகமடா
இதில் உருப்பெற்று மறைவதே உலகமடா
அறியவே பிறந்த நீ அறியவில்லை
இதை அறிந்திடும் வழியை நீ தேடவில்லை (நீயே)

3. வேதத்தின் உயிரே ஏகத்துவம்
இதை ஏற்றிட மறுப்பவன் மடையனடா
புலனறிவூட்டிய மயக்கமடா
இதைப் புரிந்து கொள்ளவே பிறந்தாயடா (நீயே)

4. வேஷம் வேதத்தை விளக்காது
அதை விவாதமும் உனக்கு உணர்த்தாது
சற்குரு யாரென அறிந்து கொண்டால்
அங்கு சாந்தியின் வாசல் திறக்குமடா (நீயே)



## பாட்டு - 4

### பல்லவி

அமுதூறும் தீன்கலிமா அனைவர்க்கும் அருமருந்து
அல்லாஹ்வின் பாதையிலே அணைத்தீர்க்கும் திருமருந்து

### அனுபல்லவி

அறிவூட்டும் அருள் காட்டும் அல்லாஹ்வின் அருகோட்டும்
தேன்கலிமா தீன்கலிமா (அமுதூறும்)

### சரணம்

1. யாரென்று உனைக்காட்டும் ஹக்கென்று நினைவூட்டும்
அர்ஷென்ற ஆசனத்தின் அருகோட்டி ஆட்கொள்ளும்
பாதையிலே செல்வோரைப் பழுதின்றிக் கரைசேர்க்கும்
பர்க் கென்ற வாகனத்தில் பரலோகம் சேர்த்துவைக்கும்
இஸ்க்கென்ற வெண்திரையைக் கிழித்தெறிந்து உனைக்காட்டும்
பரிவட்டம் பல ஈர்ந்து பாதையினைத் தெளிவாக்கும்
(அறிவூட்டும்)

2. அருள் கொண்ட அடியாரை அணைத்தெடுக்கும் தேன்கலிமா
அருள் கெட்ட தீயோரைக் களைந்தொதுக்கும் தீன்கலிமா
பல காலம் தொழுதாலும் பகல் நோன்பு நோற்றாலும்
கலிமாவின் துணையின்றிக் கரைகாணல் அரிதாகும்
(அறிவூட்டும்)

3. தவறிழைத்த ஆதம் நபி தவறழித்த கலிமாவே
தவம் செய்த நபிமார்க்குத் தலமீந்த கலிமாவே
இறை வேதம் எமக்களித்த உயிர் வசனம் கலிமாவே
இஸ்லாத்தின் உயிரான இரகசியம் கலிமாவே
(அறிவூட்டும்)

## பாட்டு - 5

### பல்லவி

அறிவும் அன்பும் இணையும் போது
அகிலம் உன்னை ஆட்கொள்ளும்
அறிவும் அன்பும் அணையும் போது
ஆசை உன்னை மேற்கொள்ளும்
ஆசை உன்னை மேற்கொள்ளும்

### அனுபல்லவி

பகுக்கும் திறமை மிகைத்திடில் உயர்
பண்பு உன்னை அணைத்திடும்
பரமன் தொடர்பும் நிலைத்திடும் பல
பதவியுயர்வும் கிடைத்திடும்
பதவியுயர்வும் கிடைத்திடும் (அறிவும்)

### சரணம்

1. கண்ணின் தேவை காட்சியானால்
செவியின் தேவை இன்னிசை
உடலின் தேவை உணவேயென்றால்
உயிரின் தேவை சுதந்திரம்
உயிரின் தேவை சுதந்திரம் (அறிவும்)

2. அறிஞர் கூட்டம் ஈர்ந்து சென்ற
அறிவின் முடிவு சுதந்திரம்
அளிக்கும் கலிமா சுதந்திரத்தை
அறிவு கொண்டு நோக்கு நீ
அறிவு கொண்டு நோக்கு நீ (அறிவும்)

3. அறிவின் விளைவே அனைத்துமாகும்
அறிந்து கொண்டால் சுதந்திரம்
அடிமைவாழ்வை அமைக்கும் புலனை
அணைத்துக் கொண்டால் சுதந்திரம் - இதை
அளிக்கும் கலிமா மந்திரம் (அறிவும்)



## பாட்டு - 6

### பல்லவி

உடை கண்டு எடை போடும் உளமே - உண்மை
உணராமல் மருளாதே மனமே

### அனுபல்லவி

பணம் கண்டு புகழ்பாடும் உலகே - அன்புக்
குணம் கண்டும் குறை கூறல் தவறே (உடை)

### சரணம்

1. கனவொத்த உலகத்தில் நிலையற்ற பொருள் கண்டு
கருத்தூறி நிற்பதா வாழ்வு - உண்மை
மனம் ஒன்றி உணராமல் அனல் வீசும் மெழுகாகி
அறிவிழந்து நிற்பதா வாழ்வு - முற்றும்
பிணமாகி வீழ்வதா வாழ்வு (உடை)

2. மலரொத்த இளமாதர் சிறையொத்த உலகிலே
சிக்குண்டு சோர்வதா வாழ்வு - இல்லை
இணையற்ற காளையர் நெறிகெட்ட சூழலில்
சிக்குண்டு வீழ்வதா வாழ்வு - இல்லை
சீரோடு வாழ்வதா வாழ்வு (உடை)

3. மடமாதர் புடைசூழ முடியேந்தி வாழினும்
மனச் சாந்தி கிட்டுமா வாழ்வில் - இல்லை
கடல் நீரில் கரைந்தாகும் கல்லுப்புப் போலாகில்
மனச்சாந்தி கிட்டுமே வாழ்வில் - உண்மை
மனச்சாந்தி கிட்டுமே வாழ்வில் (உடை)

4. நான் வேறு நீ வேறு நலம் நாடும் உளம் வேறு
என்றெண்ணம் ஈவதே ஆசை - இன்ப
துன்பங்கள் ஒன்றென்று இருள் நீங்கித் தெளிவானால்
இதுவல்லோ உண்மையில் வாழ்தல் - உண்மை
இருடிகள் கையேந்தும் ஆவல் (உடை)

5. அறவாழ்வு நெறியேகும் பெரியோரைக் குறைகூறி
புறம் பேசிப் பொய்யாக்கும் உலகு - அன்னோர்
மறைவான பிறகேகிக் கவிபாடிக் கொடியேற்றி
வரம் கேட்டுக் கையேந்தும் உலகு - பிள்ளை
வரம் கேட்டுக் கையேந்தும் உலகு

(உடை)



## பாட்டு - 7

**பல்லவி**

பயணம் வாழ்வு மறுமையை நோக்கிய பயணம்

**அனுபல்லவி**

பாதைகள் பல உண்டு பார்த்தெடு கவனம்
ஆசைகள் பல உண்டு பகுத்தெடு சுவனம்

(பயணம்)

**சரணம்**

1. இன்பமும் துன்பமும் ஏமாற்றும் கவனம்
இறைவனின் அன்போ தரம் மாற்றும் புதினம்
அழகிய உடல் நிஜம் கைமாறும் கவனம்
அழிந்திடும் உலகின்பம் அசையாதே கவனம்

(பயணம்)

2. பொய்யும் புறமும் உன்னை ஏய்த்திடும் கவனம்
பொல்லாத சூழல் உன்னை மாய்த்திடும் கவனம்
ஆசையும் கோபமும் அலைத்திடும் கவனம்
அன்பும் அறமும் உன்னை உயர்த்திடும் சுவனம்

(பயணம்)

3. பாதைக்கு வழிகாட்டும் போலிகள் அனேகம்
பாமரர் பேச்சுன்னை மயக்கிடும் கவனம்
பயணத்தை மறந்திடில் படுதுயர் அநேகம்
பண்பொடு பழகிடில் பயணமோ சுவனம்

(பயணம்)

## பாட்டு - 8

**பல்லவி**

மணிமுடி சூடினும் மரணமோ ஓர் நாள்
வந்துனை வீழ்த்திவிடும் - மனிதா
வந்துனை வீழ்த்திவிடும்

**அனுபல்லவி**

குபேரனாய் வாழ்ந்த கொடியவன் சத்தாத்
கட்டிய கோட்டையெங்கே
நம்றாத் தேடிய செல்வமெங்கே
நம்றாத் தேடிய செல்வமெங்கே (மணிமுடி)

**சரணம்**

1. உள்ளத்தைத் திக்ரில் பொருத்திக் கொண்டாலங்கு
இன்பமோ துன்பமோ இருக்காது
இறப்பே மறுமைப் பிறப்பென உணர்ந்தால்
மறுமையில் துன்பம் தொடராது
மறுமையில் துன்பம் தொடராது (மணிமுடி)

2. மரணத்தின் ஜீவன் மறதியென்றறிந்தால்
மரணத்தின் அச்சம் தோணாது
மறதி மயக்கம் நீங்கிவிட்டாலங்கு
மறுமையில் துன்பம் தொடராது
மறுமையில் துன்பம் தொடராது (மணிமுடி)

3. தக்கவர் பேச்சைத் தள்ளிவிட்டாலங்கு
தத்துவ உண்மைபுரியாது
தவமே ஜெயமாய் அமைந்து விட்டாலங்கு
மறுமையில் துன்பம் தொடராது
மறுமையில் துன்பம் தொடராது (மணிமுடி)



## பாட்டு - 9

**பல்லவி**

அன்பு என்பதோர் பண்பு - அதன்
அர்த்தம் பொது நலமென்பார்
பொது நலமென்பதோர் ஸ்லோகம் - அதன்
பொருளோ சுயநலதாகம்
பொருளோ சுயநலதாகம்

**அனுபல்லவி**

தாய் தந்தையன்போ தனிரகம் - அதைத்
தனித்திருந்தாய்ந்தால் தன்நலம்
தூயவர் போதனை அவசியம் - துயர்
தொடர்வதே அன்பின் இரகசியம்
தொடர்வதே அன்பின் இரகசியம் (அன்பு)

**சரணம்**

1. இருப்பது ஏகமென்றுணர்ந்துகொண்டால் - அங்கு
அன்பு என்பது அமையாது
விருப்பும் வெறுப்பும் நீங்கிவிட்டாலுள்ளம்
குமுறும் கடலாய் அமையாது (அன்பு)

2. உள்ளத்தின் நோய்கள் பலவாகும் - அவை
பிறப்பது சுயநலச் சுனையாகும்
விருப்பும் வெறுப்பும் மயக்காகும் - அவை
நீங்கிடில் உள்ளவன் நானாகும் (அன்பு)

3. தனிமையிலமைவதே தவமாகும் - அதில்
தவறிடும் மனிதன் பிணமாகும்
கற்பனையுலகோர் கனவாகும் - இதைக்
கருத்தினிலிருத்த நான் தெளிவாகும் (அன்பு)

## பாட்டு - 10

### பல்லவி

சிறைவிட்டுச் சிறைமாறும் மனிதா - உன்
சிறைவாழ்வு நீங்குமா புனிதா

### அனுபல்லவி

சிறைச் சாவியுன் கையிலுண்டு - அது
தித்திக்கும் தேன்கலிமா நம்பு (சிறைவிட்டு)

### சரணம்

1. மனம் குளிரும் இன்பமும் இனம் பிரிக்கும் துன்பமும்
சிறைவாழ்வை நீக்கிவைக்கா
ஒளிவீசும் கலிமாவின் தெளிவான விளக்கத்தில்
ஒன்றிடில் சிறை நீங்கலாம்
ஒன்றிடில் சிறை நீங்கலாம் (சிறைவிட்டு)

2. பௌதீக உலகிலே பல காலம் வாழ்ந்த பலர்
பலனேதும் பெற்றதுண்டா
இறந்தபின் எச்சிறையோ அச்சிறையில் சிலகாலம்
இருந்துதானாக வேண்டும்
இருந்துதானாக வேண்டும் (சிறைவிட்டு)

3. லா என்ற வாளினால் இலாஹுவை அழித்திடில்
சிறையெல்லாம் அழிந்தேபோகும்
நிறைவாழ்வு நிலைத்திடும் நித்திய ஜீவனாய்
என்றென்றும் வாழ்வோனாவாய்
என்றென்றும் வாழ்வோனாவாய் (சிறைவிட்டு)



## பாட்டு - 11

### தொகையறா

கனவினில் கண்டபொருள் காண்போனேதனையன்றிக்
கருவினில் வேறு ஆமோ
பேரண்ட வெளியும் மற்றெல்லாம் அவன்சொல்லால்
அவனிலேயானதன்றோ
நீயேது நானேது நிலையான அவனன்றி
அணுவேனுமில்லையன்பா
அஹமது நபி தந்த அரும் பெரும் கலிமாவை
ஆராய்ந்துபாரு நண்பா

### பல்லவி

உன்னைக் கொஞ்சம் நோக்காயா
உண்மை சொல்வேன் கேட்பாயா
உண்மைக் கலிமா உனை ஹக்காய்
உணரச் செய்யும் ஓதாயா
உணரச் செய்யும் ஓதாயா

### சரணம்

1. ஹக்கும் கல்கும் கருவும் உருவுமுன்
கருத்தின் பிசகால் வேறாகும்
கலிமா உணர்த்தும் கருத்தைப் புரிந்தால்
ஹக்காய் ஹக்கு நீயாகும்
ஹக்காய் ஹக்கு நீயாகும் (உன்னை)

2. காணும் பொருட்கள் யாவும் கனவே
ஹக்கன்றிக் கருப்பொருள் வேறேது
கருத்தைச் செலுத்தக் கலிமா உணர்த்தும்
ஹக்காய் ஹக்கு நீயாகும்
ஹக்காய் ஹக்கு நீயாகும் (உன்னை)

3. அறிவின் சிகரம் அஹமது நபியை
அலசிப் பார்க்க முயலாயா
அவர் சொன்ன கலிமா அகமியமறிந்தால்
ஹக்காய் ஹக்கு நீயாகும்
ஹக்காய் ஹக்கு நீயாகும் (உன்னை)

## பாட்டு - 12

**பல்லவி**

உண்மையென்பதுறைவிடம்
உறுதியான உள்ளமே
உவகை அன்பின் பிறப்பிடம்
உண்மை கண்ட உள்ளமே

**சரணம்**

1 உறுதியற்ற உள்ளமோ
மீனை ஒத்ததாகுமே
நீரில் மூழ்கிவாழினும்
நிலைத்து நிற்பதில்லையே
தேனைப் பிரிந்த மெழுகு போல்
திகைத்து நிற்குமுள்ளமே
தீனைக் கடந்த நிலையிலே
சாந்தியடைவாயுண்மையே (உண்மை)

2. சாந்தி நிலையை எய்துவோர்
சாகரத்தில் மூழ்கிடும்
உப்பையொத்த நிலையிலே
உண்மையோடு ஒன்றுவார்
இன்மையென்ற திரையிலே
இருந்த உண்மை உணர்ந்திடில்
இருவினையும் நீங்கிடும்
இன்ப சாந்தி எய்திடும் (உண்மை)

3. மறதி நீங்கித் தெளியுமே
மறுமையச்சம் தீருமே
குறைகள் யாவும் நீங்குமே
குதுபின் எல்கை கிட்டுமே
உத்தமர் தம்வாழ்விலே
உணர்த்திச் சென்ற ஈமானே
சத்தியம் நிறைந்த வாக்கு
சத்தியமாய்க்கலிமாவே (உண்மை)



## பாட்டு - 13

**பல்லவி**

லா என்ற சொல்லாலே - இலாஹுவை
மறந்திடில் வெளியாவான் - அல்லாஹ்
மறந்திடில் வெளியாவான்

**அனுபல்லவி**

நிலைபெறும் ஸறகைப் பேணிக் கொள்ளு
நினைவறத்திக்றைப் பிடித்துக் கொள்ளு
நீயேயுன்னை உணர்ந்து கொள்வாய்
நீயேயுன்னை உணர்ந்து கொள்வாய் (லா என்ற)

**சரணம்**

1. மௌனம் உன்னை மணமாக்கும்
பேச்சோ உன்னைப் பிணமாக்கும்
உண்மையைச் சொன்னேன் உணர்ந்து கொள்ளு
உறுதி வேணும் தெரிந்து கொள்ளு
மறதி வாழ்வு புரிந்து கொள்ளு
மறதி வாழ்வு புரிந்து கொள்ளு (லா என்ற)

2. தனிமை இனிமைக்கு வழியாகும்
வறுமை உரிமைக்கு விதையாகும்
உள்ளதைக் கொண்டு பொருந்திக் கொள்ளு
உள்ளத்தைத் திக்றில் பொருத்திக் கொள்ளு
உன்னையுணர்வாய் பொறுத்துக் கொள்ளு
உன்னையுணர்வாய் பொறுத்துக் கொள்ளு (லா என்ற)

3. காண்போன் காட்சி அவனாகும்
கருமம் யாவும் எழிதாகும்
விகடமில்லை இதை விளங்கிக் கொள்ளு
விளங்கிய வழியைப் பிடித்துக் கொள்ளு
பரவெளி செல்வாய் அறிந்து கொள்ளு
பரவெளி செல்வாய் அறிந்து கொள்ளு (லா என்ற)

## பாட்டு - 14

### பல்லவி

உண்மையின் உருவம் உண்மையாய் நீயே
உணர்ந்திடில் திரையில்லை உணர்வாயே
உத்தமருணர்த்திய சத்தியக் கலிமாவின்
உண்மையையுணர்ந்திடில் தடையில்லையுண்மை
உறுதியாய் ஹக்கில் நிலைப்பாயே

### அனுபல்லவி

உணர்ந்தறி நீ உயர்ந்திடுவாய்
மறைந்த பல தெரிந்திடுவாய்
மழ்ஹறென உணர்ந்தறிவாய் (உண்மையின்)

### சரணம்

1. ஆலமுல் இன்ஸான் ஆனதன்பின்னே
   அனைத்துமே ஸிபத்தென வெளியாகும்
   ஆதியும் அந்தமும் லாஹிரும் பாதினும்
   நானெனச் சொல்லிடத் துணிவாகும்
   நான் மறைப் போதங்கள் உணர்த்திய உண்மைகள்
   அனைத்துமே கனவென வெளியாகும் பின்
   அஹதென்ற மகாமே நிலையாகும்
   (உண்மையின்)

2. சத்தியமறிந்து பின் முக்தியில் மூழ்கிடில்
   சக்தியில் ஊறித்திளைப்பாயே
   சத்தியமுணர்த்தும் சற்குண புருடன்
   நிச்சயம் காமீல் ஆவாயே
   நித்திய நரகில் சிக்கிடாதிரையின் நிலைபெறும்
   ஒளியெனத் தெளிவுறுமுண்மை
   நித்தியம் ஹக்காய் நிலைப்பாயே
   (உண்மையின்)



## பாட்டு - 15

### பல்லவி

ஆதியின் ஜோதியின் பாலே
நீயே சிந்திப்பாயே ஹக்கு ஹக்கு கலிமா
கருத்தினை உணர்ந்ததுண்டா - நீ
கருத்தினை உணர்ந்ததுண்டா

### சரணம்

1. இறை கலீ∴பா நீயல்லவா
   இணையில்லா இன்ஸானல்லவா
   மழ்ஹறென்ற மறை பொருளல்லவா
   உணர்ந்தறி நீ உன்னை உணர்ந்தறி நீ
   உணர்ந்தறி நீ
   (ஆதியின்)

2. தீன் கலிமா உன் திரைநீக்கும்
   தீதாறைத் தெளிவாக்கும்
   குதுபாக உனைமாற்றும்
   உணர்ந்தறி நீ உன்னை உணர்ந்தறி நீ
   உணர்ந்தறி நீ (ஆதியின்)

3. மணல் வீடு இடமாமோ
   மண்சோறு உணவாமோ
   மனிதரெல்லாம் மணியாமோ
   உணர்ந்தறி நீ உன்னை உணர்ந்தறி நீ
   உணர்ந்தறி நீ (ஆதியின்)

4. மதலையைப் போல் வாழாதே
   மருட்சியிலே ஊறாதே
   மறைபொருளை மறவாதே
   உணர்ந்தறி நீ உன்னை உணர்ந்தறி நீ
   உணர்ந்தறி நீ (ஆதியின்)

## பாட்டு - 16

### பல்லவி

பாதை கண்டு ஏகு நீ - ஹக்கைக்
காட்டிடும் கலிமா ஓதுநீ

### அனுபல்லவி

சிந்தித்துத் தெளிவு பெற்றபின்பு
ஸிறாத்தல் முஸ்தகீம் தோணுமே
சீக்கிரம் தாண்டுவாய் சித்துருவாகுவாய்
ஹக்கென்றுணர்ந்துனைக் கண்டு நீ தேறுவாய் (பாதை)

### சரணம்

1. ஸிதறத்துல் முன்தஹாவரையும் ஜிப்ரீல்
உனை அழைத்துச் செல்லுவார்
அகிலின் தத்துவம் மறையும்பின்பு
அணைக்கும் விஜ்தான் அர்ஷிடை (பாதை)

2. மலக்கூத்தென்ற ஆலம் தன்னில்
மறைந்த செய்திகள் அறியுவாய்
மறைக்கும் திரைகள் மறையும் பின்னே
ஸாபிறா காபிறா காணுவாய் (பாதை)

3. நரக சுவர்க்கம் ஒதுக்குவாய்
நமன் பிடியிலிருந்து நீங்குவாய்
நாட்டமெது வென்றறியுவாய் பின்
சாந்தியில் சாதுவாய் மூழ்குவாய் (பாதை)



## பாட்டு - 17

### பல்லவி

கனவே - கனவு
உலகம் நீண்டதோர் கனவு

### அனுபல்லவி

உலகம் நீண்டதோர் கனவு - அதன்
இருப்பிடம் இருதய நினைவு
மதிப்புடன் வாழ்வதாய் நினைவு - பலர்
செருக்குடன் வீழ்வதே முடிவு (கனவே)

### சரணம்

1. நிறத்தினைப் பொருளென மதித்திடும் மனிதன்
நிலையற்ற வாழ்வே மேற்கொள்வான்
நிலையற்ற வாழ்வே மேற்கொள்வான்
மரணத்தின் போது மயக்கொழிந்தாலும்
மறுமையில் துன்பமே பெறுகின்றான்
மறுமையில் துன்பமே பெறுகின்றான் (கனவே)

2. சிருஷ்ட்டியின் உண்மையைச் சிந்தித்துத் தெளியும்
சித்தம் உண்மையில் நிலை கொள்ளும்
சித்தம் உண்மையில் நிலை கொள்ளும்
சீருடன் வாழும் சிறப்பினை இறைவன்
இகபரமிரண்டிலும் ஈகின்றான்
இகபரமிரண்டிலும் ஈகின்றான (கனவே)

3. உண்மையையுணர்ந்த உள்ளத்தில் ஈமான்
என்றும் நிலையாய் இடங்கொள்ளும்
என்றும் நிலையாய் இடங்கொள்ளும்
உருவத்தில் மயங்கும் உள்ளத்தில் அச்சம்
அழியாப் பண்பாய்க் குடிகொள்ளும்
அழியாப் பண்பாய்க் குடிகொள்ளும் (கனவே)

## பாட்டு - 18

### பல்லவி

கனவான உலகம் நிலையானதென்ற
கருத்தோடு வாழாதே - பொய்மைக்
கருத்தோடு வாழாதே

### அனுபல்லவி

அழியாத உண்மை அவனன்றி இல்லை
அறிவோடு சிந்தித்துப்பார் - திக்றில்
அவனோடு ஒன்றித்துப்பார் - திக்றில்
அஹதோடு ஒன்றித்துப்பார் (கனவான)

### சரணம்

1. நிறம் தோற்றம் பெயரன்றி
நிலையான பொருள் ஏது
நினைவோடு சிந்தித்துப்பார் - ஹக்கு
வெளியாகும் சிந்தித்துப்பார் - வஹ்மு
தெளிவாகும் சிந்தித்துப்பார் (கனவான)

2. கடல் கொண்ட அலையேது
கடலன்றிப் பொருள் இல்லை
கருத்தோடு சிந்தித்துப்பார் - கலிமா
புலனாக்கும் சிந்தித்துப்பார் - வஹ்மு
தெளிவாகும் சிந்தித்துப்பார் (கனவான)

3. பூணாரம் பல உண்டு
பொன்னன்றிப் பொருள் ஏது
புர்கானைச் சிந்தித்துப்பார் - புத்தி
தெளிவாகும் சிந்தித்துப்பார் - ஹக்கு
வெளியாகும் சிந்தித்துப்பார் (கனவான)



## பாட்டு - 19

### பல்லவி

உலகமே ஒரு கண்ணாடி - அதை
ஊன்றிப் பார்த்தவன் தள்ளாடி
ஏகுறானே மலைநாடி - நீ
சாகுறாயே புகழ் தேடி

### சரணம்

1. இன்ப துன்பம் அறிவாகும்
இதை அறிந்து கொள்வதே நெறியாகும்
உள்ளம் என்பது ஒளிவாகும் அதை
உணர்ந்து கொள்வதே வாழ்வாகும்
(உலகமே)

2. பொய்யும் புறமும் நிலைநில்லா
உயர் புகழ் பெற்ற வாழ்வும் நிலைநில்லா
அகமும் புறமும் ஒன்றானால் பின்
அஹதென்ற மகாமே நிலையாகும்
(உலகமே)

3. மனமேயுன்னை நிறுக்கிறதே
மறுமையில் வேஷம் உதவாதே
மறதியை நீக்கி நீ நினைவு பெற்றால்
மறுமையில் சாந்தி நிலையாகும்
(உலகமே)

## பாட்டு - 20

### பல்லவி

ஆசைக்கு அளவேது மனிதா ஆசைக்குப் பொருளேது

### அனுபல்லவி

உள்ளத்திலேற்படும் உளநோயே ஆசை
உன்னை நீ உணர்ந்திடில் ஒழிந்திடும் ஆசை

(ஆசைக்கு)

### சரணம்

1. பாசமும் நேசமும் புலன்களின் தோஷம்
உண்மையை நோக்கினால் உலகமே வேஷம்
உள்ளது அவனெனில் ஆசையே போச்சி
உவப்பதற்கெதுவுமே இல்லையென்றாச்சி

(ஆசைக்கு)

2. தங்கத்தை மாலை உவப்பதுமில்லை
மாலையத் தங்கம் வெறுப்பதுமில்லை
உவப்பதும் வெறுப்பதும் உள்ளத்தின் மருட்சி
உலகாசைப் பேயை ஒழிப்பதே புரட்சி

(ஆசைக்கு)

3. அனைத்துமே ஆண்டவன் நாமத்தின் காட்சி
அறிந்திடில் ஆசையே இல்லாது போச்சி
ஆண்குலம் பெண்குலம் ஆசையின் சூட்சி
ஆனது ஒன்றுமே இல்லையென்றாச்சி

(ஆசைக்கு)



## பாட்டு - 21

### பல்லவி

உலகம் பாலைவனக் கடையாகும்
உன்பங்கதிலோர் குடையாகும்
கடையையுனதாக்கக் காலம் தடையாகும்
வாழ்வு மறுமையை நோக்கிய நடையாகும்

### சரணம்

1. இன்பம் என்பது ஏமாற்று
துன்பம் இன்பத்தின் உருமாற்று
உன் அழகிய உடலொரு கைமாற்று
நீ அன்பும் அறமும் கொண்டு செயலாற்று

(உலகம்)

2. சொல்லாமல் மரணம் இனம் மாற்றும்
நிலையில்லாத பணமோ குணம் மாற்றும்
பொல்லாத உறவு பிணமாக்கும்
அறிவு இல்லாத சூழல் உனையமனாக்கும்

(உலகம்)

3. சொல்லாதே பொய்புறம் தாழ்த்திவிடும்
செய்யாதே எக்களவும் வீழ்த்திவிடும்
வையாதே வஞ்சகம் வீழ்த்திவிடும் குறை
இல்லாத மறையுனை உயர்த்திவிடும்

(உலகம்)

4. உள்ளத்தில் நல்லதைக் குடியிருத்து
நீ தள்ளாதே உண்மையை நிலைநிறுத்து
சொல்லாதே கோட்செவி நிறுத்திவிடு
மறை சொல்லாத பாதையை மறுத்துவிடு

(உலகம்)

## பாட்டு - 22

### தொகையறா

சமூகத்தில் பிணக்கின்றிச் சகலரும் வாழ்ந்திடச்
சன்மார்க்க சட்டம் வேண்டும்
சட்டத்தை மீறிடும் கொட்டத்தை யடக்கிடச்
சரியான தலைவன் வேண்டும்
சத்திய வழியினில் சறுக்கிடாதேகிடச்
சரியான விளக்கம் வேண்டும்
சற்குணம் குடிகொண்ட மனிதனாய் மாறிடச்
சரியான உறுதி வேண்டும்

### பல்லவி

ஆண்குலத்தழகு நல் அறிவு நம் தாய்ப்
பெண்குலத்தழகு நல்லொழுக்கம்

### சரணம்

1 அறிஞருக்கழகு நல்லறிவினையூட்டுதல்
அனைவர்க்குமழகதைக் கேட்டல்
சிந்தித்துத் தெளிவு பெற்றொழுகிடில் சமூகம்
சிறப்புடன் வாழ்ந்திடுமுண்மை
சிறப்புடன் வாழ்ந்திடுமுண்மை
(ஆண்குலத்)

2. செல்வருக்கழகு தம் செழும்கிளை தாங்குதல்
செருக்குடன் வாழ்வது தீது
வறியவர்க்கழகு தம் வறுமையில் செம்மை
வகுத்துணர்ந்தொழுகிடில் சமூகம்
வளம் பெற வாழ்ந்திடும் உண்மை
(ஆண்குலத்)



### தொகையறா

இலக்கணவழுவுடைய செய்யுளைப் பார்க்கினும்
இனிமைதரும் இசையே நன்று
உயர்குலம் பிறக்கினும் உண்மையை நோக்கிடில்
ஒழுக்கமே உயர்ந்ததாகும்
தவறுடைய வீரத்தை நோக்கிடில் அதைவிடத்
தீராத வியாதி நன்றே
பழியினுக்கஞ்சாத மனைவியோடு வாழ்வதிலும்
பசியோடு தனிமை நன்றே

### சரணம்

3. அறநெறி வழுவாதறிவுடன் வாழுதல்
அமைதிக்கு வழியினைவகுக்கும்
அறிவினை ஒதுக்கும் பிடிவாத முயற்சிகள்
பிணக்கினில் சமூகத்தை நுழைக்கும்
பிணக்கினில் சமூகத்தை நுழைக்கும் (ஆண்குலத்)

4. உண்மையையுணர்தல் உள்ளத்தில் பதித்தல்
உத்தம குணமதே வீரம்
பலவல்ல ஏகமாய்ப் பகுத்துணர்ந்தறிதலே
பரவழி ஏகிடும் மார்க்கம்
சட்டங்கள் வகுத்ததன் நோக்கம் (ஆண்குலத்)

### தொகையறா

புவியோரை ஏமாற்றிப் புகழ்தேடும் பணிநீக்கிப்
பூர்க்கானை நோக்க வேண்டும்
புண்ணியர் முன்நிலையில் புகுந்து சந்தேகமற்
றறியாமை நீக்க வேண்டும்
ஆசைக்கு அடிமையாய் மதிகெட்ட மிருகமாய்
மாறாமல் காக்க வேண்டும்
மனமொன்றி முக்தியின் மார்க்கத்தில் நிலைபெற்று
மதியொத்து வாழ வேண்டும் (ஆண்குலத்)

## பாட்டு - 23

### பல்லவி

உண்மைக்கு உடை வேண்டுமா - ஞான
உண்மைக்கு உடை வேண்டுமா - உள்ள
உறுதிக்குத் துணை வேண்டுமா

### அனுபல்லவி

சொல்லாலும் செயலாலும் கருத்தாலும் ஒன்றான
(உண்மைக்கு)

### சரணம்

1. பொய்கூறிப்புறம் பேசும் போலிகள் - அறிவுக்குப்
புத்தகம் வழி காட்டுமா - வேதப்
புத்தகம் வழி காட்டுமா - ஞான
தத்துவம் தலைகாட்டுமா
(உண்மைக்கு)

2. மாடிப்படி வீட்டில் வாசம் செய்தாலுமென்
மோட்சப்படி கிட்டுமா - உயர்
மோட்சப்படி கிட்டுமா - தெய்வக்
காட்சி நிலை கிட்டுமா
(உண்மைக்கு)

3. ஆதியைத் தேடி நீ அருள் பெற நாடினால்
ஜோடியை நீக்கு நீ தோழா - இணை
ஜோடியை நீக்கு நீ தோழா - உள்ள
ஜோதியில் மூழ்கு நீ நேசா
(உண்மைக்கு)



## பாட்டு - 24

### பல்லவி

யாவும் மாயைதானே - மனிதா
யாவும் மாயைதானே
இன்பம் துன்பம் ஏனோ - இக
வாழ்வே கனவுதானே - மனிதா

### சரணம்

1. கரையேயில்லாத ஆசைக்கடலில்
திரையேயில்லாத காட்சிகள்
நிலையே இல்லாமல் போவதாலே (யாவும்)

2. தேசம் நேசம் யாவும் கனவாய்
வாசம் செய்த உடலும் கனவாய்
மாறி மறைந்து போவதாலே (யாவும்)

3. கானல் நீர் போல் காட்சி தரினும்
தாகம் தீர வழியில்லாமல்
காலம் வீணாய்க் கழிவதாலே (யாவும்)

4. புலனுக்குகேற்ப புவியின் வாழ்வு
சுழுத்திநிலையில் மறைவதாலே
மறையும் உலகு மாயையே (யாவும்)

## பாட்டு - 25

### தொகையறா

ஆதியின் பிம்பமாய் அறிவிலே வெளியாகி
அறியாமல் நிற்பதேனோ
காலத்தில் கட்டுண்ட கனவான துன்யா
உன் கவனத்தை ஈர்ப்பதேனோ
மரணத்தின் பின் மறுமை எய்துவதுண்மையிதை
உணராமல் நிற்பதேனோ
மரணத்தின்பின் மரணம் இல்லவே இல்லையிதை
மறந்து நீ வாழ்வதேனோ

### சரணம்

1. உதவுவோரில்லா ஒரு நாளில்
உன் செயற்கூலி பெறும் நாளில்
உண்மையாய் இன்பம் பெற நாடில்
நீ மறதியை நீக்கி உனை அறிந்து செல்லு
மறதியை நீக்கி உனை அறிந்து செல்லு

2. வேஷத்தில் காலத்தைக் கடத்தாதே
வேடிக்கை ஞாலத்தில் மருளாதே
பாலத்தைக் கடந்திறை பாசத்தை அடைந்திட
ஓர்வழி இங்குண்டு மறவாதே
நேர்வழி இங்குண்டு மறவாதே

### தொகையறா

சீரான வாழ்வுமுறை நேராக வலியுறுத்தும்
திருமறையை மறந்ததேனோ
அறியாத சில மூடர் பின்பற்றும் வழி வீழ்ந்து
அருள் கெட்டு நிற்பதேனோ
இகபரத்தின் வழிகாட்டி இஸ்லாத்தின் கொடி போட்ட
திருநபியை மறந்ததேனோ
பல்லாயிரம் நபிமார் பகர்ந்தீந்த கலிமாவைப்
பகுத்துணர மறந்ததேனோ

### சரணம்

3. பெயரோ புகழோ நிலைநில்லா
பிடிவாத மூடம் துணைநில்லா
ஈமானொன்றே ஈடேற்ற மளித்திடும்
இணையில்லாத்துணையது மறவாதே
இணையில்லாத்துணையது மறவாதே



4. மூ:.மீனின் துன்யா சிறைச்சாலை
முஷ்ரிக்கின் துன்யா பூஞ்சோலை
முஹம்மது நபிசொன்ன முதுபெரும் வாக்கியம்
முழுமனதோடிதை ஆய்ந்து செல்லு
முழுமனதோடிதை ஆய்ந்து செல்லு

### தொகையறா

பணம் கண்டு புகழுவோர் பலருண்டு பகுத்தறி
பகைமையை மறைத்து நிற்பார்
குணம் கண்டும் குறை கூறிக் குற்றமே சுமத்துவோர்
குவலயம் நிறைய உண்டு
உண்மையை உணரவும் உணர்ந்தபடிவாழவும்
பல்லாயிரத்திலொருவருண்டு
அறியாத மூடர் புகழ் அணுவேனும் துணை வேண்டாம்
அல்லாஹ்வின் அருளே போதும்

### சரணம்

5. வாழ்வினில் இன்பம் நிலைகொள்ளத்
தாழ்வுறு துன்பம் துணையாகும்
ஒப்பிட்டு நோக்கி நீ உணர்ந்து கொண்டால்
உறுதியாய் ஈமானில் நிலைத்திடுவாய்
உறுதியாய் ஈமானில் நிலைத்திடுவாய்

6. அருளுக்கு இன்பம் தடைபோடும்
அறிவுக்குத் துன்பம் எடைபோடும்
மறுமைக்குன்னறிவே வழிகாட்டும் நீ
மஃஹரென்றறிந்தமல் புரிந்து செல்லு
மஃஹரென்றறிந்தமல் புரிந்து செல்லு

7. உலகோர் உன்னை இகழட்டும்
ஒரு சாரார் உன்னைப் புகழட்டும்
இருசாரார் வழியிலும் இருதயம் செலுத்திடாத்
துணிவுடன் இறைவழி நடந்து செல்லு
துணிவுடன் இறைவழி நடந்து செல்லு

## பாட்டு -26

### பல்லவி

களிக்கும் சுவன வாசலே
இனிக்கும் அறிவின் ஆசையே

### அனுபல்லவி

எரியும் நரகில் நுழையும் வாசல்
தொடரும் மூட ஆசையே
தொடரும் மூட ஆசையே (களிக்கும்)

### சரணம்

1. பழிக்கும் செயலை நீக்கிடப் பகுக்கும் திறமை அவசியம்
   இனிக்கும் செயலைக் கண்டிடக் கடின உள்ளமவசியம்
   கலையில் இனிமை தென்பட ஹசது நீக்கமவசியம்
   ஹக்கையுணர்ந்து நிலைத்திடக் கலிமா விளக்கமவசியம்
   (களிக்கும்)

2. அடிமை வாழ்வு நீங்கிட அறிவின் தாகமவசியம்
   அமைதி பெற்று வாழ்ந்திட அன்பு உள்ளம் அவசியம்
   சாந்தி பெற்று வாழ்ந்திடச் சற்குணங்களவசியம்
   ஹக்கையுணர்ந்து நிலைத்திடக் கலிமா விளக்கமவசியம்
   (களிக்கும்)

3. தூயகலையில் முன்னேறத் துணைவன் ஒஸ்த்தாதவசியம்
   உண்மை கண்டு உணர்ந்திட உறுதியுள்ளமவசியம்
   உலகவாழ்வில் ஜெயித்திட ஒதுங்கிவாழ்தலவசியம்
   மறுமைவாழ்வில் ஜெயம்பெற மறதிநீக்கமவசியம்
   (களிக்கும்)

4. ஏய்த்துப்பிழைக்க விரும்பினால் வேஷம் வேண்டுமவசியம்
   ஏற்றுப்பிழைக்க விரும்பினால் உரோஸம் வேண்டுமவசியம்
   மறதி நீங்கி ஜெயம் பெற மறையின் விபரமவசியம்
   இறைவனோடு ஒன்றிட இறைதியானமவசியம்
   (களிக்கும்)



## பாட்டு - 27

### தொகையறா

எல்லையை மீறிய பாவியே யாகினும்
இறையருளை மறக்கலாமோ
நன்மையே செய்து நீ நலமாக வாழினும்
இறைநாட்டமெதுவாகுமோ
மனமே மாறாதே கருணையுண்டு
மயங்காதே கலங்காதே

### பல்லவி

இன்பதுன்பம் எதுவந்தாலும் இதய உறுதி மாறாதே
இறைவன் வகுத்த இயற்கை நியதி என்றுமுலகில் மாறாதே

### அனுபல்லவி

தரிசு நிலமும் தளிர்த்துச் செழிக்கும்
காலம் ஒன்று மாறுமே
காலம் ஒன்று மாறுமே
நிலைமைமாறும் நேரம் வரலாம்
கலங்கி வாழ்வை இழக்காதே (இன்பதுன்பம்)

### சரணம்

1. ஆறுபோடும் மடுவும் மேடும்
   அழிந்தொழிவதியற்கையே
   அழிந்தொழிவதியற்கையே
   அறிவு கொண்டு துணிந்து நின்றால்
   அமைதியடைவாயுண்மையே (இன்பதுன்பம்)

2. ஆசையென்ற நோயின் விளைவே
   இன்பதுன்பமாகுமே
   இன்பதுன்பமாகுமே
   அறிவிலாசையடங்கும் போது
   அமைதியடைவாயுண்மையே (இன்பதுன்பம்)

3. பண்டைமனிதர் சரித்திரத்தைப்
   படித்துப் பார்த்ததில்லையா
   படித்துப் பார்த்ததில்லையா
   புதுமைபுகுதப் பழமை வீழும்
   பயம் தெளிந்து செல்லு (இன்பதுன்பம்)

## பாட்டு - 28

### பல்லவி

பக்தியின் நோக்கம் சித்தியேயானால்
முக்தியில் சேர்த்திடும் ராஜா
பாமரர் புகழப் பக்தியை நாடில்
இறைவழி மறைந்திடும் நேசா
இறைவழி மறைந்திடும் நேசா

### அனுபல்லவி

அறிவினிலமையாப் பொருளினிலாசை
அமைவது எப்படி நேசா
அதை முதல் யோசி நீ ராஜா

### சரணம்

1. அனைவர்க்குமுணரும் ஆற்றலிருந்தால்
அதிகம் நபிமார் எதற்காக
அறிவினை மறைக்கும் திரையினைக்களையவே
அகமது நபியிங்கு வந்தார்கள்
அறிவொளிக்கலிமாதந்தார்கள்
அத்வைதமுணர்த்தி நின்றார்கள்
அறநெறிபுகட்டிச் சென்றார்கள் (பக்தியின்)

2. இம்மை மறுமை இரண்டிலும் தேறிட
இருதயத்துாய்மை துணையாகும்
இறைமறைபுரியா ஒருசிலமூடர்
உளறிடும் வார்த்தைகள் தடையாகும்
மறையுனக்களிக்கும் வழிவகைமறந்து
மருட்சியிலூறித் திளையாதே
மறுமையில் துன்பம் அடையாதே (பக்தியின்)



3. வேறெனும் ஷிர்க்கை விட்டிடில் பின்னால்
நானெனும் தொடக்கு நசிந்தாகும்
வேதத்தின் உண்மையை விளக்கிடும் கலிமா
வெருட்டிடும் ஷைத்தான் வெருண்டோடும்
உத்தமர் கொணர்ந்த சத்திய வாக்கை
உதறிடும் ஈனர்க்கு இருள் தோணும்
மறந்திடும் மடையர்க்கு மருள் தோணும்
(பக்தியின்)

4. ஆட்டுக்கும் தாடி அறிவதற்கேது
வழிகண்டு தெளியும் துணிவேது
தடியினைப் பயந்து தலைவனுக்கடங்கும்
தனிச்சிறப்பதன் குணம் மறவாதே
பாமரர் பேச்சில் மயங்கிய பலர்க்குப்
பகுத்தறிவே முற்றும் பாழாச்சி
அதைப்பகுத்து உணர்வதுன் செயலாச்சி
(பக்தியின்)

## பாட்டு - 29

### பல்லவி

அலையும் உள்ளப் போக்கிலே
அறிவு போதாநிலையிலே
உலகில் இன்பம் எதுவுண்டு
உணரும் வாய்ப்பு பல உண்டு
மறதி நீங்கித் தெளியணும்
மனதில் சாந்தி அடையணும்
மனதில் சாந்தி அடையணும்

### அனுபல்லவி

சாந்தி பாதை அறியணும்
சபல புத்தி நீங்கணும்
ஆண்டவன் சொல் கேக்கணும்
அறிவிலூறித் தெளியணும்
கலிமா காட்டும் கருத்தை உணர்ந்து
ஹக்கில் நிலைத்து நிற்கணும்
ஹக்கில் நிலைத்து நிற்கணும்

(அலையும்)

### சரணம்

1. மூடர் வழியை மறக்கணும்
நபிமுஹம்மதைப் பின்பற்றணும்
துவித உணர்வு மாறணும்
துரிய நிலையை அடையணும்
ஹக்கை உணராக் கடின குணத்தைக்
கழைந்து வேரோடறுக்கணும்
கல்பின் வாசல் திறக்கணும் (அலையும்)



2. அறிவே இன்பம் அறியணும்
அறநெறியிலே வாழணும்
மறையையறிந்து நோக்கணும்
குறையையறிந்து நீக்கணும்
குபிரைக் களைந்து இருளைப்பிளந்து
ஒளியையேற்றி வைக்கணும்
ஹக்காய்ச் சாந்தி எய்தணும்

(அலையும்)

3. வாழ்க்கை நோக்கைப் புரியணும்
வம்பர் போக்கை வீசணும்
உன்னை நீயே உணர்ந்து கொள்ள
உரிய தியானம் செய்யணும்
உரிமை கோரி நிற்கணும்
உண்மை ஹக்கை உணரணும்
உத்தமனாய் வாழணும் (அலையும்)

## பாட்டு - 30

### பல்லவி

காரணராய் நின்ற ராஜா
ஹக்கின் ஒளியான தாஹா
ஹக்கின் ஒளியான தாஹா

### சரணம்

1. அஹதுக்குப் பொருளான வாஹிதாய் நின்று
ஆலத்தின் கோலத்தில் ஆகிப்பின்னே
ஆதமாய் ஹவ்வாவாய் ஆகிப் பின்வழிகாட்ட
றசூலென்று வெளியான ஆகிர்நபி
றசூலென்று வெளியான ஆகிர்நபி (காரணராய்)

2. பேச்சிக்கு எட்டிடாப் பேரரசாய்க்கண்
காட்சிக்கு எட்டிடாப் பேரொளியாய்
தாத்தும் ஸிபாத்துமாய் தன்னிலேதானான
தாரகைத் தன்சுடர் தாஹாநபி
தாரகைத் தன்சுடர் தாஹாநபி (காரணராய்)

3. இஸ்மென்ற உறையில் இருளென்ற அறையில்
ஒளியென்று வெளியான ஹக்கே றசூல்
அறிவென்ற நூறின் பொறிகொண்டு நோக்கில்
ஹக்கான ஹக்கேதான் தாஹாநபி
ஹக்கான ஹக்கேதான் தாஹாநபி (காரணராய்)

4. ஆதியும் அந்தமும் லாஹிறும் பாதினும்
ஆனதும் அற்றதும் தாஹாவன்றோ
உண்மையும் இன்மையும் ஒன்றாயமைந்த
உண்மைப் பொருளாகும் தாஹாநபி
உண்மைப் பொருளாகும் தாஹாநபி (காரணராய்)



## பாட்டு - 31

### பல்லவி

நபியே திருநபியே
திருநபியே அருள் நிறை நபியே
மறையொளி தந்த இறை நபியே
மறையொளி தந்த இறை நபியே

### அனுபல்லவி

ஹக்கின் ஒளியே கலிமாப் பொருளே
கரையில்லா ஞானக் கடலே
கரையில்லா ஞானக் கடலே (திருநபியே)

### சரணம்

1 இருட்திரை கடந்து இறையிடம் சென்றே
இனியதீன் தந்தருள் செய்தீர்
மருட்சியில் வீழ்ந்த மனுக்குலம் வாழ
மறையொளி தந்தருள் செய்தீர்
மறையொளி தந்தருள் செய்தீர் (திருநபியே)

2. அறியாமக்கள் அணியாய்த்திரண்டு
அரக்கராய் மாறியபோதும்
அலையா நெஞ்சுடன் சிலையாய் நின்று
அறநெறி புகட்டிய நபியே
அறநெறி புகட்டிய நபியே (திருநபியே)

3. சொல்லும் செயலும் ஒன்றாய்க்காட்டி
கொல்லும் அவர்க்கறிவூட்டி
கல்லைப் பொன்னைக் கருத்தினில் கொண்டோர்
கரைசேர மார்க்கம் தந்தீர்
கரைசேர மார்க்கம் தந்தீர் (திருநபியே)

4. அறிவொளியில்லா அராபியர் முன்னே
அறிவொளித்தனி வழிகாட்டி
அன்பைப் பண்பை அனைவர்க்குமீந்த
அஹமது நபியே வாழ்க
முஹம்மது நபியே வாழ்க
முஹம்மது நபியே வாழ்க (திருநபியே)

## பாட்டு - 32

**பல்லவி**

கலிமாப் பொருளுணர்ந்து கருத்தை
அதில் செலுத்து நீதோணுவாய் - உண்மை
மிஹ்றாஜின் வழி காணுவாய் - ஹக்கின்
தீதாறின் ஒளி காணுவாய்

**அனுபல்லவி**

இருளை விலக்கிக் கல்பைத் துலக்கித்
திக்றைச் சொல்லிப்பார்
இன்பத்திக்றைச் சொல்லிப்பார் (கலிமா)

**சரணம்**

1. வேஷத்தில் இல்லை வேதம் நம்பாதே
   நேசம் கொள்ளாதே
   நிய்யத்தைக் கொண்டேஅமல்
   நிறைவாய்த் திக்றை முறையாய்ச் செய்தால்
   மனிதரில் தேவனாவாய்
   மறைபொருள் யாவும் காண்பாய்
   தீதாறைக்கண்டு கொள்ளுவாய்
   தீதாறைக்கண்டு கொள்ளுவாய் (கலிமா)

2. மாய்கையில் வீழ்ந்து
   மதிமயங்காதே கதிகலங்காதே
   மழ்ஹர் நீயென்ற உண்மை மறவா
   திக்றை முறையாய்ச் செய்தால்
   மனிதரில் தேவனாவாய்
   மறைபொருள் யாவும் காண்பாய்
   தீதாறைக்கண்டு கொள்ளுவாய்
   தீதாறைக்கண்டு கொள்ளுவாய் (கலிமா)



## பாட்டு - 33

**பல்லவி**

வேதத்தை உணரா வேதியர் வாழ்வு
வேஷத்தில் கழியுதடா - அந்த
வேஷத்தில் மயங்கிய பாமரன் வாழ்வு
படுகுழியாகுதடா - மனிதா
படுகுழியாகுதடா

**அனுபல்லவி**

போதையில் ஊறிய போதகர்வாழ்வு
புதையுண்டு போகுதடா - அந்த
போதையையுணர்ந்த பொதுமகன் வாழ்வு
மாசற்று விளங்குமடா - வாழ்வு
மாசற்று விளங்குமடா (வேதத்தை)

**சரணம்**

1. மாதர் மடியைப் பஞ்சணையாக்கிய
   மதகுருப்பலருண்டு - அந்த
   மூடரின் பேச்சை வீசியெறிந்த
   வீரரும் சிலருண்டு - உண்மை
   வீரரும் சிலருண்டு (வேதத்தை)

2. நல்லவர் பெயரால் பெட்டியை நிரப்பும்
   நரிகளும் பலருண்டு - அந்த
   நரிக்குணமில்லா நல்லவர் சிலரும்
   நம்மிடை இருப்புண்டு - இன்னும்
   நம்மிடை இருப்புண்டு (வேதத்தை)

## பாட்டு - 34

### பல்லவி

நபிநாதர் புகழ்பாட நாவில்லையே - அன்புக்
குருநாதர் ஒளிகாணக் கண்ணில்லையே
கண்ணில்லையே

### அனுபல்லவி

ஆதிதன் ஜோதியாய்க் கொண்டில்லையானால்
அணுவேனுமில்லை அஹதன்றிவேறு
அஹதேதான் உஹதாகி வாகிதாய்வந்த
அஹதேதான் உஹதாகி வாகிதாய்வந்த (நபிநாதர்)

### சரணம்

1. மண்ணுக்கும் நீருக்கும் மத்தியில் ஆதம்
அஹமதர் அவ்வேளை றசூலாகி நின்றே
அகிலத்தை ஆட்கொள்ள அவனியில் வந்த
அகிலத்தை ஆட்கொள்ள அவனியில் வந்த
(நபிநாதர்)

2. அறிவுக்கு எட்டாத அகண்டமே அந்நூர்
குண்டர்க்கு அறிவூட்டக் கண்டமாய் நின்று
குறைவில்லாச் சாந்திக்கு வழிகாட்டிச் சென்ற
குறைவில்லாச் சாந்திக்கு வழிகாட்டிச் சென்ற
(நபிநாதர்)

3. நாய்போலும் நரிபோலும் பேய்போலும் வாழ்வோர்
நல்லோராய் மாறிட மார்க்கமே தந்து
பொய்யென்ற போலியைப் பூண்டோடகற்றிய
பொய்யென்ற போலியைப் பூண்டோடகற்றிய
(நபிநாதர்)



## பாட்டு - 35

### பல்லவி

சத்தியத்தின் பிறப்பிடமான
சற்குணத்தின் உறைவிடமான
உத்தமத் திருநபிக்கே
எங்கள் சலாம் - என்றும்
எங்கள் சலாம்

### சரணம்

1. கலிமாவை எதிர்த்துநின்ற
கயவருடன் யுத்தம் செய்து
கலிமாப் பொருளுணர்த்திக்
கரை சேர்த்த எம் நபிக்கே
கனிவான எங்கள் சலாம் - என்றும்
எங்கள் சலாம்
(சத்தியத்தின்)

2. மார்பு தட்டி வீறு கொண்ட
மதியீனர்க்கறிவுறுத்தி
வேர்களைந்து வஹ்மை நீக்கி
வேதம் தந்த எம் நபிக்கே
கனிவான எங்கள் சலாம் - என்றும்
எங்கள் சலாம்
(சத்தியத்தின்)

3. ஊணுறக்கம் ஓய்வுமின்றி
உலகாசைப் பேயுமின்றி
உண்மையை நிலைநாட்டிச் சென்ற
உத்தமராம் எம் நபிக்கே
கனிவான எங்கள் சலாம் - என்றும்
எங்கள் சலாம்
(சத்தியத்தின்)

## பாட்டு - 36

### பல்லவி

அருளுக்குப் பெயராகும் அறிவு - நல்ல
பொருளுக்கு பெயராகும் ஒழுக்கம்

### அனுபல்லவி

நிறைவுக்குப் பொருளாகும் அடக்கம் - கெட்ட
நரகத்தின் பேரறிவுறக்கம்
நரகத்தின் பேரறிவுறக்கம் (அருளுக்கு)

### சரணம்

1. சம்சாரக் கடலில் நீ அஞ்சாமல் ஏகிட
அறிவோடத் துணை வேண்டும் - என்றும்
துஞ்சாமல் நின்று நீ கெஞ்சாமல் ஏகிடத்
திக்கிர் துணைவேண்டும் - நல்ல
திக்கிர் துணைவேண்டும் (அருளுக்கு)

2. கண்காணும் துன்யாவே ஹக்கென்றுணராதே
கட்புலன் போலிக்கூத்து - ஹக்கு
காட்சிக்கு எட்டிடாப் பேச்சுக்குத் தட்டிடா
பேரின்பத் தேனூற்று - உண்மை
பேரின்பத் தேனூற்று (அருளுக்கு)

3. கட்டவிழ் நிலையை நீ எட்டிக்கடந்திடக்
கல்நெஞ்சத் துணை வேண்டும் - உண்மை
ஹக்கோடு ஒன்றி நீ ஹக்காயமைந்திட
கலிமா துணை வேண்டும் - நல்ல
கலிமா துணை வேண்டும் (அருளுக்கு)

4. பேராசைப் பேயோடு பித்தராய் வாழ்வோர்க்கு
பேரின்ப வீடேதப்பா - அந்தப்
பேராசான் சொல்லை ஏற்று நடப்போர்க்குப்
பேரின்பம் கிட்டுமப்பா - என்றும்
பேரின்பம் கிட்டுமப்பா (அருளுக்கு)



## பாட்டு - 37

### தொகைறா

பொன்னாசை புகழாசை
பெண்ணாசை மற்றெல்லாம்
அளவுக்கு அதிகமானால்
கோலில்லாக் குருடனாய்க்
கொள்கையில்லா மூடனாய்க்
கொதிநரகில் சேர்க்குமப்பா

### பல்லவி

கொள்கையென்பதுன் ஆவி
கோலமோ வெறும் சாவி
கொள்கை விளக்கமில்லையானால்
கொடியநரகில் வீழுவாய்
கொடியநரகில் வீழுவாய் (கொள்கை)

### சரணம்

1. வேதம்தந்த ஞானவழியை
விளங்கித் தெளிய வேண்டுமே
விளங்கித் தெளிய வேண்டுமே
வேதம் சொல்லாவேற்றுவழியை
வீசியெறிய வேண்டுமே
வீசியெறிய வேண்டுமே
சரியைப் பிழையைக் கணிப்பதற்கு
மஹ்கூல் மன்கூல் இருக்குதே
மஹ்கூல் மன்கூல் இருக்குதே
மறதி நீங்கித்தெளிவு பெற்றால்
மறுமை இன்பம் கிடைக்குமே
மறுமை இன்பம் கிடைக்குமே (கொள்கை)

2. வேதம்தந்த ஏவல் விலக்கல்
ஏற்று நடக்க வேண்டுமே
ஏற்று நடக்க வேண்டுமே
வெருட்டும் ஷைத்தான்

வழியைக் கண்டால்
விலகி ஒதுங்க வேண்டுமே
விலகி ஒதுங்க வேண்டுமே
வேறுகாணும் துவிதவாதம்
விலக்கல் பேணவேண்டுமே
விலக்கல் பேணவேண்டுமே
வேஷம்கண்டு மயங்கும் மனதை
மாற்றிக்கொள்ள வேண்டுமே
மாற்றிக்கொள்ள வேண்டுமே (கொள்கை)

3. சொன்ன சொல்லை விட்டுவிட்டு
சுரையைப் பிடுங்க முனைவதேன்
சுரையைப் பிடுங்க முனைவதேன்
தன்னாலேதான் கெட்டபின்பு
தலைவனைக் குறைசொல்வதேன்
தலைவனைக் குறைசொல்வதேன்
பொருளும்புகழும் காக்குமென்ற
போதையில் நீ வாழ்வதேன்
போதையில் நீ வாழ்வதேன்
போகும் இடமே நரகமென்றால்
பொருளும் புகழும் உதவுமா
பொருளும் புகழும் உதவுமா (கொள்கை)

4. மதியில்லாத மடையர்கூட்டம்
மறுமையின்பம் நுகருமா
மறுமையின்பம் நுகருமா
வழுக்கைத்தலையர் கூட்டத்துக்குச்
சீப்பின்சண்டை வேண்டுமா
சீப்பின்சண்டை வேண்டுமா
விதியும்மதியும் இணையும்போது
மறுமையின்பம் கிடைக்குமே
மறுமையின்பம் கிடைக்குமே
இருளும்ஒளியும் இணைவதில்லை
இறைவன் செய்தவிதியப்பா



இறைவன் செய்தவிதியப்பா (கொள்கை)

## பாட்டு - 38

### பல்லவி

செய்தியொன்று சொல்லி வைப்பேன்
செவிகொடுத்துக் கேட்பாயா
சீற்றம் கொண்ட சிறுத்தை போல
சீறிப்பாய மாட்டாயா

### சரணம்

1. மாய உடலே மனிதன் என்ற
மருட்சியறிவு மாறாதா
ஆதி அந்தம் அற்ற உன்னை
அறிந்து கொள்ளமாட்டாயா
மயக்க அறிவு மறைந்து விட்டால்
மனித அறிவு பிறந்து விட்டால்
மறைகள் சொன்ன நிறைநிலையில்
மகிழ்ச்சியோடு வாழலாம்
மகிழ்ச்சியோடு வாழலாம் (செய்தி)

2. காலமென்ற வெள்ளத்திலே
கரையறியா தோடுகிறாய்
மாய உள்ள மருட்சியிலே
மயக்கமுற்று நீந்துகிறாய்
மதத்தின் கொள்கை புரிந்து விட்டால்
மறதி நீங்கித் தெளிந்து விட்டால்
மறைகள் சொன்ன நிறைநிலையில்
மகிழ்ச்சியோடு வாழலாம்
மகிழ்ச்சியோடு வாழலாம்
(செய்தி)

3. பித்தர் வழியை பிடித்துக்கொண்டு
பெரு நெருப்பில் வீழ்கிறாய்
ஆவியடங்கிப் போனபின்னே
அமலின் விளைவை காணுகிறாய்
கொள்கை விளக்கம் அறிந்து கொண்டால்
குருவின் பேச்சை புரிந்து கொண்டால்
மறைகள் சொன்ன நிறைநிலையில்
மகிழ்ச்சியோடு வாழலாம்
மகிழ்ச்சியோடு வாழலாம்
(செய்தி)

4. மடையர் வழியை மறக்க வேண்டும்
மறையின் வழியை புரிய வேண்டும்
துவித உணர்வு மாறணும்
துரிய நிலையை அடையணும்
அறிவே இன்பம் அறிந்து கொண்டால்
அறநெறியில் வாழ்ந்து கொண்டால்
மறைகள் சொன்ன நிறைநிலையில்
மகிழ்ச்சியோடு வாழலாம்
மகிழ்ச்சியோடு வாழலாம்
(செய்தி)



## பாட்டு - 39

### பல்லவி

ஆளுக்கொரு வேதம் வேண்டுமா - அதைத்திணிக்க
நாளுக்கொரு வேஷம் வேண்டுமா

### அனுபல்லவி

மூடர்வாதம் முடிவதில்லை
மூளைமுடிச்சு அவிழ்வதில்லை
ஆளுக்கொரு கட்சி சேர்த்து
அடைந்த பலன் ஏதுமில்லை
அமைதி எங்கும் காணவில்லை (ஆளுக்கொரு)

### சரணம்

1. ஆயிரம் ஆதவன் இருந்தாலும்
அந்தகன் வாழ்வில் இருள்மயமே
தூயவர் போதனை தொடர்ந்தாலும்
துவிதத்தின் முடிவு துயர்மயமே
துவிதத்தின் முடிவு துயர்மயமே (ஆளுக்கொரு)

2. வேதங்கள் யாவும் கொள்கையில் ஒன்றே
விளங்கிடில் பேதம் கிடையாது
வேதனம் தேடும் வேதியர் கூட்டம்
வேதத்தை இன்றும் புரட்டுதப்பா
வேதனை வாசலை திறக்குதப்பா
வேதனை வாசலை திறக்குதப்பா (ஆளுக்கொரு)

3. அரசனும் நீயே அடிமையும் நீயே
அறிந்திடில் அங்கே அமைதியுண்டு
மறந்திடில் மாயை மறையவே முடியா
மறுமையில் துன்பம் தொடர்ந்து வரும்

மறுமையில் துன்பம் தொடர்ந்து வரும் (ஆளுக்கொரு)

4. கற்பனைக் கடவுளை கருந்தினில் இருத்தி
காலத்தைக் கழிக்கின்றான் மனிதன்
குறியறியாமல் கோலத்தைப் போட்டு
குரங்காய் மாறுது உள்ளம்
குரங்காய் மாறுது உள்ளம்
(ஆளுக்கொரு)

5. காலம் கடந்ததாய் கருதுகிறாய் - இது
கற்பனை அறிவின் களியாட்டம்
வருமோ காலமென்று ஏங்குகிறாய்
இது வகுக்கும் முறையின் பேயாட்டம்
இது வகுக்கும் முறையின் பேயாட்டம்
(ஆளுக்கொரு)

6. என்றும் உள்ளது நிகழ்காலம் இதை
ஏற்றவர் அறிவிற்குப் பொற்காலம்
ஏகமாய் காண்பது உன்முகமே - இதை
அறிவதே சாந்தியின் தலைவாசல்
அறிவதே சாந்தியின் தலைவாசல்
(ஆளுக்கொரு)



## பாட்டு - 40

### பல்லவி

வெந்து நொந்த உள்ளத்துக்கு உலகமே ஒரு சாக்கடை
உறுதி கொண்ட உள்ளத்துக்கு உலகமே அதன் வெளிப்படை
உலகமே அதன் வெளிப்படை

### அனுபல்லவி

திரைகளற்ற உள்ளத்திலே தெரிவதெல்லாம் தெய்வீகம்
மருட்சியுள்ள உள்ளத்திலே உதிப்பதெல்லாம் மௌட்டீகம்
(வெந்து)

### சரணம்

1. உதவிக்காக உனக்களித்த ஊடகங்கள் யாவையும்
உன்னெதிரி பயன்படுத்தி உளநோயை ஊட்டிவிட்டான்
அறிந்து கொள்ள முடியாமல் அலைந்து நொந்த உள்ளமோ
அணையில்லாமல் பாய்ந்து செல்லும்
அழுக்கு நிறைந்த சாக்கடை
அழுக்கு நிறைந்த சாக்கடை (வெந்து)

2. இறைவன் தந்த காயகற்பம் இனிக்கும் கலிமா மந்திரம்
பித்தர்கூட்டம் பொருளைமாற்றி பிதுஅத்தையே நுளைத்துவிட்டார்
தெரிந்து கொள்ள முடியாமல் திணறுகின்ற உள்ளமோ
திசையறியா தோடுகின்ற தீப்பிடித்த ஓடமே
தீப்பிடித்த ஓடமே (வெந்து)

3. துவிதம் உள்ள உள்ளமது துயர்நிறைந்த ஓடமே
திசையறியா தோடவிட்டால் தீ நரகில் சேர்க்குமே
ஏகமென்ற பெருங்கடலில் இணைந்துவிடும் உள்ளமோ
திசையறிந்து ஓடுவதால் சேருவது சொர்க்கமே
சேருவது சொர்க்கமே (வெந்து)

## பாட்டு - 41

### பல்லவி

வேதத்தின் கொள்கை உன் உயிரப்பா
இதை வேதியர் புரட்டிய தேனப்பா
வேதனம் தேடும் வழியப்பா
இதை விளக்கினால் முருத்தத்துப் பெயரப்பா
(வேதத்தின்)

### சரணம்

1. இதயமென்பதே அர்ஷப்பா அதில் இருப்பவன்
நானெனும் இறைவனப்பா
இடத்தை காலத்தை மறந்து விட்டால்
உன்னிருதயக் கதவு திறக்குமப்பா
(வேதத்தின்)

2. பலவாய் காண்பதே இணையப்பா
இதை இருதயத்திலிருத்தினால் ஷிர்க்கப்பா
மார்க்கம் என்பதே வழியப்பா
இதை மறைப்பதன் அர்த்தம் எதுவப்பா
(வேதத்தின்)

3. இயற்கை வழியை மறந்ததனாலே
இகபரம் இரண்டும் தவறுதப்பா
எண்ணம் விஷத்தை வீசுவதாலே
இயற்கையின் தண்டனை தாக்குதப்பா
(வேதத்தின்)

4. பகுத்து காண்பதே பகுத்தறிவு
இது பாதையை காண்பதற்கு அவசியம்தான்
ஏகமாய் காண்பதே இறையறிவு
இவ்விரண்டையும் ஏற்பதே நிறையறிவு
(வேதத்தின்)



## பாட்டு - 42

### பல்லவி

பேதை மனமே கேள் பேதை மனமே கேள்

### அனுபல்லவி

உலகம் யாவும் உனதென்றாலும்
இறுதி நாளில் ஏதும் உதவா (பேதை)

### சரணம்

1. பந்த பாசம் யாவும் மாயை
மறந்தே போகும் மரணவேளை
உதவிக்காக ஏதும்வாரா
ஒன்றியாய்த்தான் ஏக வேண்டும் (பேதை)

2. காலம் கணித்த விதியின் வேலை
கருத்திலிருத்தி செயலையாற்று
கலிமா உனக்கு உதவி செய்யும்
கணமும் மறவாயுறுதி கொண்டால் (பேதை)

3. இறப்பும் பிறப்பும் இயற்கை நியதி
இறக்கும் முன்பே இறந்து பிறந்தால்
என்றும் உள்ள இறைவனோடு
நிலையாய் இருப்பவன் நீயே நீதான் (பேதை)

4. ஈமான் மனதில் குடியிருந்தால்
இம்மை மறுமை அச்சம் வரா
மலக்கின் கூட்டம் உதவிதரலாம்
மறுமைவாழ்வும் சீராய் அமையும் (பேதை)

## பாட்டு - 43

### பல்லவி

சொர்க்கத்தில் வாழவே ஆசை
கஞ்சாக்கள்ளபின் மஸ்த்திலே போதை
வேசியர் வீட்டிலே பூசை - இது
வெருட்டிடும் ஷைத்தானின் வேலை

### சரணம்

1. ஆலத்தின் கோலமே ஜோதி - இது
   அண்ணல் நபி சொன்ன சேதி
   ஈமானே நிலை பெற்ற ஜோதி - இதில்
   இருப்பவர் என்றுமே சுக சொர்க்கவாதி
   சுக சொர்க்கவாதி (சொர்கத்)

2. உஸ்த்தாதைக்கண்டிட வேணும் - பின்பே
   றசூலுல்லாதரிசனம் தோனும்
   அன்னையைக் கண்டிடாப்பிள்ளை - தன்
   அன்பான தந்தையை அறிந்திடாக்கிள்ளை
   அறிந்திடாக்கிள்ளை (சொர்கத்)

3. தான்தோன்றித்தனமான கொள்கை - உன்னைத்
   தலைகீழாய் மாற்றிடும் உண்மை
   உலகத்தில் வாழ்வதாய் எண்ணம் - இல்லை
   உள்ளத்தில் ஹாவியா இருப்பதுதிண்ணம்
   இருப்பதுதிண்ணம் (சொர்கத்)

4. முனாபீக்காய் வாழ்பவன் மந்தி - கெட்ட
   முஷ்ரீக்காய் இருப்பவன் பன்றி
   வேதத்தை ஏற்பவன் மனிதன் - உண்மை
   ஏகத்தை ஏற்பவன் புனிதன் புனிதன்
   ஏகத்தை ஏற்பவன் புனிதன் (சொர்கத்)

5. வான்கோழி மயிலாக மாறா - கரும்
   காக்கையும் குயில் போல கூவா
   அத்தர் கடை புகுந்த தோட்டி - அவனை
   அறியாமல் மயங்குவது அறிவுக்குக்காட்சி



அறிவுக்குக்காட்சி (சொர்கத்)

## பாட்டு - 44

### தொகைறா

மேலெண்ணம் கொண்டோர்க்கு இறைசமூகம் கிட்டாது
இப்லீஸைக் கொண்டறிந்த பாடம்
ஈமானும் பொறாமையும் ஓருள்ளத்தமையாது
இறைதூதர் சொன்ன பாடம்

### பல்லவி

உள்ளத்திலுள்ள மேலெண்ணம் - இது
வாழ்க்கையை வீழ்த்திடும் மாபெரும்பள்ளம்
மாபெரும்பள்ளம் (உள்ளத்தில்)

### அனுபல்லவி

உடலேதான் நானென்ற உணர்வோடு உருவான
மருட்சியால் ஏற்பட்டமயக்கம்
மருட்சியால் ஏற்பட்டமயக்கம் (உள்ளத்தில்)

### சரணம்

1. உளநோய்கள் யாவுக்கும் உயிராய் இருப்பது
   உத்தமர் றசூலுல்லா தவிர்த்திடச்சொன்னது
   உண்மையை உள்ளத்தால் உதாசீனம் செய்வது
   மேலெண்ணம் - மேலெண்ணம் (உள்ளத்தில்)

2. பொன்னாடைகேட்கும் பூமாலையும்கேட்கும்
   பட்டம்பதவியைக்கட்டிச்சுமக்கும்
   மார்க்கமோ நஞ்சென்று மனதாரவெறுக்கும்
   மேலெண்ணம் - மேலெண்ணம் (உள்ளத்தில்)

3. ஊராருக்கெல்லாம் பொய்உபதேசம் செய்யும்

உளநோயே இதுவென்று உணராமல்பேசும்
நல்லோரைப் பொய்யராய்க் காட்டிடமுனையும்
மேலெண்ணம் - மேலெண்ணம் (உள்ளத்தில்)

4. குருவையே குறைகாணும் குருடனாய் மாற்றும்
குலவித்தை மாறாதுகும்மாளம் போடும்
செய்நன்றி கொன்றழித்த பன்றியாய் மாற்றும்
மேலெண்ணம் - மேலெண்ணம் (உள்ளத்தில்)

5. தானேதானறிஞனென்று தம்பட்டமடிக்கும்
தப்பாதுபொய்புறம் கூசாமல்பேசும்
தன்நலம்பேணிடத்தவறாது நடிக்கும்
மேலெண்ணம் - மேலெண்ணம் (உள்ளத்தில்)



## பாட்டு - 45

### தொகைறா

கறைபடிந்த உள்ளத்தில் கலிமாவின்
கருத்தமைதல் கடினமே கடினமென்றார்
காத்தமுன் நபி சொன்ன கருத்தினை
நோக்கினால் ஹக்கான சேதியப்பா

### பல்லவி

கருத்தழகை விட்டுவிட்டுச் சொல்லழகில் மூழுகிற
கர்மிக்கெல்லாம் கேடு கேடு கேடுதான்
எங்கள் கருணை நபி போட்ட சாபம் உண்மைதான்
(கருத்த)

### சரணம்

1. நன்றி கெட்ட பன்றிக்கூட்டம் நாற்புறமும் இருக்குது
பித்தன் கூற்றை நம்பிவாழும் பேயர்கூட்டம் இருக்குது
தோலை உண்டு சுளையை வீசும் சுத்தப்பித்தனாவதா
பித்தனாக வாழும் மனிதன் சாந்தி பெற்றுவாழ்வானா
(கருத்த)

2. தொன்று தொட்டு வந்த மரபைத் தோற்கடித்தல் கடினமே
பகுத்தறிவைப்பயன்படுத்திப் பாதையினைக்காணணும்
பாதை புரியாப் பயணத்தினால் பயனைக்காண முடியுமா
பயஹம்பர் சென்ற வழியில் பயமில்லாமல் செல்லணும்
(கருத்த)

3. தரணியெல்லாம் தஜ்ஜால்வேடம் தலைவிரித்து ஆடுது
தந்தையை அறியாத்தனையர்கூட்டம் தாளம் போட்டு ஆடுது
தஜ்ஜாலிஸ வழியிற் சென்று தஜர்ருத்தை நீ அடைவாயா

சரித்திரத்தில் எங்கேயேனும் சான்று ஏதும் இருக்குதா
(கருத்த)

## பாட்டு - 46

### பல்லவி

உலகம் என்பதோர் உளுத்தமரம் - அதில்
சாகும் மனிதனே சாயாதே
உள்ளம் என்பதோர் வெள்ளாடு - அதை
உறுதியாய்க்கட்டிதீனியிடு - நீ
திக்கிர் என்ற தீனியிடு

### சரணம்

1. அட்டையை மெத்ததையில் வைத்தாலும் - அது
அழுக்குச்சேற்றை மறக்காது
மணலுள் மறைந்த நுணலையெல்லாம் - தம்
வாயால் கெடுவது வழமையப்பா
வாயால் கெடுவது வழமையப்பா
வஞ்சகம் பொறாமை கொண்ட உள்ளம்
மரம்விட்டு மரம் பாயும் மருக்கமப்பா - இது
மறையின் தீர்ப்புச் சுருக்கமப்பா
(உலகம்)

2. குருட்டுக்கழுதைக் கூட்டத்துக்கு
இருளும் ஒளியும் சமம்தானே
வம்புபேசும் வாயென்றால் - அது
வம்பன் ஷைத்தான் வாழிடமே
வம்பன் ஷைத்தான் வாழிடமே
மேகனமில்லா மஞ்சிகர் கூட்டம்
ஏனக்குழுவாய் மாறிவிட்டால் - அவை
இயன்றவரையில் உறுமட்டுமே
(உலகம்)



3. கலைகளை அறியாக் கழுவர் குழாம்
கபடம் கொண்டு உளறட்டுமே
மலைகளைப்பார்த்து நாய் குரைப்பதனால்
மலைகள் சரிந்து மண்ணாவதில்லை
மலைகள் சரிந்து மண்ணாவதில்லை
விக்கிக்கக்கி நக்கட்டுமே - அதைக்
காண்போர் பார்த்துச் சிரிக்கட்டுமே
குக்கல் குழுவென்று நான் கூறில் - எனைக்
குரைத்துக்கடிக்க வருவாரோ - இல்லை
குப்பை மேட்டில் கிடப்பாரோ
(உலகம்)

## பாட்டு - 47

**பல்லவி**

உலகமக்கள் சாந்திபெற
உள்ளவழி ஒன்று - அதை
உருக்குலைத்து விட்டதனால்
சீரழிவு இன்று - சீரழிவு இன்று

**சரணம்**

1. ஒழுக்கநெறி இல்லாமல்
வாழுகின்ற மனிதன்
ஒருபோதும் சாந்திபெற
முடியாத மிருகம்
அணுகுமுறை புரியாமல்
அலட்டிக்கொள்ளும் மனிதன்
அமைதிகாண வழியில்லாமல்
அணையா நெருப்பில் வீழ்வான்
அணையா நெருப்பில் வீழ்வான் (உலக)

2. வேலியில்லாப் பயிரைக்கொண்டு
விளைவுகாண முடியுமா
ஒழுக்கமில்லா உலகவாழ்வு
உயர்நிலையில் சேர்க்குமா
திட்டமில்லா வாழ்வு உன்னைத்
திருச்சமூகம் சேர்க்குமா
நோக்கமில்லாப் போக்கு உன்னைச்
சாந்தி நிலையில் சேர்க்குமா
சாந்தி நிலையில் சேர்க்குமா (உலக)

3. மூளையற்ற முண்டமாக
வாழச் சொல்வோன் ஞானியா
நோக்கமின்றி வாழச்சொன்னோன்
நோக்கமின்றிச் சொன்னானா
போக்கில்லாத போக்கிரியின்
போதனையில் ஊறினால்
போதையுண்ட மந்தியாக
மாறிச்சாக நேருமே
மாறிச்சாக நேருமே (உலக)



4. ஆணும் பெண்ணும் கண்ணை மூடி
அழுது சிரித்துப் படுத்தெழுந்தால்
ஆத்மசாந்தி கிட்டுமா
உன்னறிவே இதனை ஏற்குமா
பித்தன் கூறும் தியானமெல்லாம்
பேயன்ஷைத்தான் கூற்றப்பா
பெரியோர் தந்த வழியில் சென்று
பேரின்பத்தை உணரப்பா
பேரின்பத்தை உணரப்பா (உலக)

5. தெய்வீக ஞானமதை
தெரிந்து கொண்டு செயல்படு - உன்னை
உணர்ந்து கொள்ளும் ஞானவழியை
அறிந்து கொண்டு செயல்படு
மனம்போன போக்கில் சென்றால்
சாந்தி எங்கும் தென்படா
மறைவிளக்கம் புரியாமல்
மனமும் உனக்கு வழிப்படா
மனமும் உனக்கு வழிப்படா (உலக)

6. நாணமில்லா நரிகள் கூட்டம்
நவிலும் வார்த்தை ஞானமா
பேய்போல் வாழும் பித்தர் கூட்டம்
போடும் ஆட்டம் தியானமா
வரட்டுவாதக் குருட்டுக் கூட்டம்
உருட்டுப் புரட்டுச் செய்யினும்
முரட்டுக் குணத்தை நீக்கி விட்டு
முக்தி வழியைத் தேடப்பா
முக்தி வழியைத் தேடப்பா (உலக)

## பாட்டு - 48

### பல்லவி

இறைவன் தந்த திருவசனம்
ஏகத்தை உணர்த்தும் உயிர்வசனம்
ஏற்று நடந்த மூ.்.மீன்கள்
இருப்பதற்கென்றே தனிச்சுவனம்

### சரணம்

1. வசனத்தின் பொருளைத் தலைகீழாய்
மாற்றிப் புரட்டி மனதிருத்தி
சோற்றுச்சுமையாய் வாழ்ந்து விட்டுச்
சொர்கம் போக நினைத்தாலும்
சேரும் இடமோ எரிநரகு
சேயலுக்குக் கூலி இறை நியதி
சிந்தனைசெய்து சீருடன் வாழ்ந்தால்
சேரும் இடமோ ஒளியுலகு (இறைவன்)

2. மும்மலச் ஷிர்க்கை நீக்கிவிடு
மூடர் வழியை மறந்துவிடு
முர்ஸல் நபியைப்புரிந்து கொண்டு
முழுமையாய்த் தீனில் நுழைந்துவிடு
முக்தர் போக்கைப் புரிந்துகொள்ளு
முழுநிலையடைவாய் அறிந்துகொள்ளு
சிந்தனைசெய்து சீருடன் வாழ்ந்தால்
சேரும் இடமோ ஒளியுலகு (இறைவன்)

3. கலிமாப் பொருளைக் கருத்திருத்திக்
கலையாதுணர்வை நிலைநிறுத்தி
காலை மாலை தியானம் செய்தால்
கற்பனையுலகு மறைந்துவிடும்
மருட்சித்திரைகள் மறைந்துவிட்டால்
மலக்கூத்துலகம் திறந்துவிடும்
சிந்தனைசெய்து சீருடன் வாழ்ந்தால்
சேரும் இடமோ ஒளியுலகு (இறைவன்)



## பாட்டு - 49

### பல்லவி

ஆண்டவன் ஒருவனே என்றாங்க - அவன்
அர்ஷிலே இருப்பதாய்ச் சொன்னாங்க
ஷிர்க்கே பாவமென்றுரைத்தாங்க - இதைச்
சிந்திக்க ஏனோ மறந்தாங்க - இதைச்
சிந்திக்க ஏனோ மறந்தாங்க

### சரணம்

1. ஓரிடமிருக்கும் ஓர்பொருளை நாம்
இறைவனாய் ஏற்பது எப்படியோ
இறைவனேயன்றி ஏதுமே இல்லெனில்
ஓரிடமிருத்துதல் பொருந்தாதே - இதை
உள்ளத்தில் பதித்து நீவருந்தாதே (ஆண்டவன்)

2. அஹதுன் என்பதன் அர்த்தமென்ன - அவன்
அனைத்துமாயிருப்பதை அறியீரோ
அறியும் முறைப்படி அறியாவிடில் - நாம்
அணுகும் முறையே பிழையாகும் - எம்
அமலே நரகில் நுழைத்து விடும் (ஆண்டவன்)

3. எங்கும் நிறைந்தோன் எம்முடனிருப்போன்
ஏனோ வேறாய்க் கணிக்கின்றோம்
இரண்டு நானில்லவே இல்லையென்றால் - எங்கும்
ஏகனாயிருப்பவன் அவனல்லவா - என்றும்
ஏகனாயிருப்பவன் அவனல்லவா (ஆண்டவன்)

4. சீருடையேனோ ஷில்சிலா ஏனோ
சிந்திக்கும் உரிமை கிடையாதோ
மருட்சியில் ஊறிய மடையரின் வழியை
மறந்திடில் உண்மை புலனாகும் - உள்ளம்
மறந்திடில் உண்மை புலனாகும் (ஆண்டவன்)

## பாட்டு - 50

### பல்லவி

பேயாட்டம் ஆடுகிறான் மனிதன் - உலகில்
பிறந்து வந்த நோக்கமதை
மறந்துவிட்ட காரணத்தால்
பேயாட்டம் ஆடுகிறான் மனிதன்

### சரணம்

1. பிறந்த நோக்கின் விபரம் தந்து
வாழும் வழியை வகுத்துச்சொன்ன
இறைவன் தந்த வேதமதை
எங்கே வீசினான் - மனிதன்
எங்கே வீசினான்
ஷைத்தானின் போதனையில்
மேலும் மேலும் ஊறினான்
தன்னை மிருகமாக மாற்றிக்கொண்டு
மனிதஉருவில் வாழ்கிறான்

(பேயாட்டம்)

2. சாந்தி தேடி ஓடுகின்றான்
சற்குருவைச் சாடுகின்றான்
வேதம் சொன்ன வழிவகையை
எங்கே வீசினான் - மனிதன்
எங்கே வீசினான்
உயிரில்லாத ஷிர்க்கிலூறி
உள்ளத்தையே மாற்றினான் அதை
உணர்ந்துகொள்ள முடியாத
உன்மத்தனாய் வாழ்கிறான்

(பேயாட்டம்)



3. பட்டம் பதவி தேடுகிறான்
பகல்வேஷம் போடுகிறான்
இறைவன் தந்த இயற்கை அறிவை
எங்கே வீசினான் - மனிதன்
எங்கே வீசினான்
நாகரீகப் போர்வையிலே
நாயைப் போலமாறினான்
தன்னை மனிதனாக நம்பிக்கொண்டு
மார்புதட்டி வாழ்கிறான்

(பேயாட்டம்)

4. கற்றறிந்த கல்வி உன்னைக்
கயவனாக மாற்றலாம்
சம்பிரதாய வழி வகைகள்
சத்தியத்தை மறுக்கலாம்
சத்தியத்தை மறுக்கலாம்
சாந்தி வழியிலழைத்துச் செல்லும்
சற்குருவைப் பெற்றிடில்
சாந்தி பாதை காணலாம் பின்
சாந்தி பெற்று வாழலாம்

(பேயாட்டம்)

## பாட்டு - 51

### பல்லவி

வான்மறையின் வசனங்களை
வழு இல்லாமல் ஓதுகிறாய்
வாழும் வழிபுரியாமல்
வாடிநொந்து ஏகுகிறாய்
வாடிநொந்து ஏகுகிறாய்

### சரணம்

1. இருதயத்தைக் கல்லாக்கி
இன்பசுகம் தேடுகிறாய்
இன்பமாய்க் காண்பதெல்லாம்
துன்பமாய் மாறுவதேன்
இன்பதுன்பம் இரண்டெனினும்
இருதயத்தின் அனுபவமே
விரும்புவதும் வெறுப்பதுவும்
உன்பழக்க தோஷமப்பா
உன்பழக்க தோஷமப்பா (வான்மறையின்)

2. மனமோ உன் ஆட்ச்சிப்பொருள் நீ
மனமாய் மாறிவிட்டாய்
அமானதத்தை பாழ்படுத்தி
அல்லற்பட்டு வாழுகிறாய்
தொண்டையிலே ஸக்கூம்பழம்
கெண்டையிலே கால் விலங்கு
உத்தமர்கள் உணர்ந்து கொண்டார்
உள்ளத்திலே சாந்திபெற்றார்
உள்ளத்திலே சாந்திபெற்றார் (வான்மறையின்)



3. உள்ளத்திலே சாந்திபெற
உண்மைவழி இருக்குதப்பா
உத்தமரைக் கேட்டறிந்தால்
உண்மையது புரியுமப்பா
தீன் வழியைத் தேர்ந்தெடுத்து
திசையறிந்து வாழ்ந்து கொண்டால்
என்றென்றும் சாந்தியுண்டு
இறையோனின் இணக்கமுண்டு
இறையோனின் இணக்கமுண்டு
(வான்மறையின்)

4. வாழும் வழிபுரியாமல்
வாழ்வே மண்ணாகுதடா
வள்ளல் நபி சென்ற வழி
வான்மறையேதந்த வழி
எல்லோர்க்கும் ஏற்ற வழி
இயற்கையோடொத்த வழி
ஈருலக வாழ்க்கையிலும்
இன்பசுகம் காணும் வழி
இன்பசுகம் காணும் வழி
(வான்மறையின்)

## பாட்டு - 52

**பல்லவி**

எங்கே போகிறாய் - நீ எங்கே போகிறாய்

**அனுபல்லவி**

சத்தியத்தை மறந்தே விட்டாய்
சற்குணத்தை இழந்தே விட்டாய்
ஷைத்தானைப் பின் தொடர்ந்து
சாந்தி தேடி ஓடுகின்றாய் (எங்கே)

**சரணம்**

1. உள்ளத்திலே சாந்தியுண்டு
உருக்குலைத்து விட்டாயடா
ஊர் புகழ வாழ எண்ணி
உளநோயில் மாட்டிக் கொண்டாய்
உத்தமர்கள் போதனையை
உதறிவிட்டு ஓடுகின்றாய் (எங்கே)

2. இருக்கு யஜுர் சாமு எங்கே
அறிவூட்டும் அதர்வணமெங்கே
தௌறாத் சபூர் இஞ்சீல் எங்கே
ஞான ஒளிப்புர்க்கானெங்கே
அத்தனையும் புரட்டிக் கொண்டு
சாந்தி தேடி அலைகிறாயே (எங்கே)

3. ஐனுல் எக்கீன் அடைந்து விட்டால்
எரி நரகைக் காண்பாயடா
ஹக்குல் எக்கீன் கிடைத்துவிட்டால்
கட்டவுழ்தல் கிட்டுமடா
ஹக்கோடு ஒன்றிவிட்டால்
அர்ஷின் நிழல் கிட்டுமடா (எங்கே)

4. வானவரும் அறிந்து கொள்ளார்
முர்ஸல்களும் புரிந்து கொள்ளார்
இறையோனின் சிர்ரு ஒன்று
இருக்குதடா உள்ளத்திலே
முத்திரைகள் நீங்கிவிட்டால்
முழுச் சாந்தி கிட்டுமடா (எங்கே)



## பாட்டு - 53

**பல்லவி**

நீயே உன்னை மறந்து விட்டாய் - இப்போ
நிம்மதி வாழ்வு தேடுகிறாய்

**அனுபல்லவி**

உடலே நானென்றுணராதே - உன்
உடலும் மாயைதான் மறவாதே (நீயே)

**சரணம்**

1. புலன்கள் காட்டும் புவியுலகு - இது
புனிதர்களறிவில் மயக்குலகு
புனிதர்களறிவில் மயக்குலகு
இறைவன் தந்த இயல்பூக்கம் - இதை
இறைவன் சொற்படி பயன்படுத்து
இறைவன் சொற்படி பயன்படுத்து
என்றும் எதிலும் இணையின்றி வாழ்ந்தால்
என்றும் எங்கும் இன்பமயம் - இதை
மறந்தவர் வாழ்வோ துன்பமயம் (நீயே)

2. அலையும் நப்ஸை நெறிப்படுத்த - ஓர்
அழகிய வழிமுறை இருக்குதப்பா
அழகிய வழிமுறை இருக்குதப்பா
இயங்கும் முறையே அமலாக்கம் - இதை
இறைமறை தெளிவாய் விளக்குதப்பா
இறைமறை தெளிவாய் விளக்குதப்பா
என்றும் எதிலும் இணையின்றி வாழ்ந்தால்
என்றும் எங்கும் இன்பமயம் - இதை
மறந்தவர் வாழ்வோ துன்பமயம் (நீயே)

3. உலகம் என்பதோர் தங்குமடம் - இதை
உரிய முறைப்படி பயன்படுத்து
உரிய முறைப்படி பயன்படுத்து
மறுமை என்பதை நீ மறந்தாலும்
மரணத்தின் பின் அது நிச்சயம்தான்
மரணத்தின் பின் அது நிச்சயம்தான்
என்றும் எதிலும் இணையின்றி வாழ்ந்தால்
என்றும் எங்கும் இன்பமயம் - இதை
மறந்தவர் வாழ்வோ துன்பமயம் (நீயே)

4. வாழும் முறையைப்புரிந்து கொள்ளு - நீ
வரம்பைப் பேணி வாழ்ந்து கொள்ளு
வரம்பைப் பேணி வாழ்ந்து கொள்ளு
மறுமையை மனதில் இருத்திக்கொண்டு - நீ
செய்யும் அமலைத் திருத்திக் கொள்ளு
செய்யும் அமலைத் திருத்திக் கொள்ளு
என்றும் எதிலும் இணையின்றி வாழ்ந்தால்
என்றும் எங்கும் இன்பமயம் - இதை
மறந்தவர் வாழ்வோ துன்பமயம் (நீயே)

5. அழியாப் பொருளுடன் அணைந்துகொள்ளு - எங்கள்
றசூலின் கொள்கையில் இணைந்துகொள்ளு
றசூலின் கொள்கையில் இணைந்துகொள்ளு
மூடர் புகழைத் துறந்துவிடு பின்
முக்தியில் மூழ்கத்துணிந்துவிடு
முக்தியில் மூழ்கத்துணிந்துவிடு
என்றும் எதிலும் இணையின்றி வாழ்ந்தால்
என்றும் எங்கும் இன்பமயம் - இதை
மறந்தவர் வாழ்வோ துன்பமயம் (நீயே)



## பாட்டு - 54

### பல்லவி

இலகுகாத்த கிள்ளை உள்ளம் ஏமாறும் - உண்மை
உறுதிகாத்த வெள்ளை உள்ளம் ஈடேறும்

### அனுபல்லவி

செய்த அமலின் விளைவைக்காண ஆகிறாவரை காக்கிறாய்
ஈமானற்ற அமல்கள்யாவும் இலவம்பஞ்சிபோல் மாறுமே
இலவம்பஞ்சிபோல் மாறுமே (இலகுகாத்த)

### சரணம்

1. பழக்கவழக்க அடிப்படையில் பல அமல்களைச் செய்கின்றாய்
பலனைக்காண முடியாமல் பலகாலம் கழிக்கிறாய்
ஆகிறாவில் பலனைக்காண அறிஞர் கூட்டம் கூறுது
அவாம்கள் நிலையில் சரியென்றாலும் அதிலோர் சிர்ரு இருக்குது
அறிவுக்கண்கள் அமைந்திருந்தால்
பலனை இங்கே காணலாம் - அமலின்
பலனைக் காணலாம் (இலகுகாத்த)

2. ஷிர்க்கை நீக்கக் கலிமாதந்தான் சிந்திக்காமல் செயல்பட்டால்
அமலேஷிர்கைவலுப்படுத்தும் ஆகிறாவில் கைசேதம்
காலநேர இடமறிந்து செய்யும் அமலின் நோக்கறிந்து
சீராய் அமலைச் செய்திருந்தால் ஈமான் உன்னில் தரிப்படும்
காலமேதான் ஹக்கென்றாகும்
ஹக்கின் தொடர்பும் வெளியாகும் (இலகுகாத்த)

3. இல்லாப்பொருளோ இருப்பதில்லை
இருக்கும் இறைவன் மறைவதில்லை
இல்லாப் பொருளை உள்ளத்திருத்தில் ஈருலகுமே இருள்மயம்
இல்லாநானை இழந்துவிட்டு இருக்கும் நானை உணர்ந்து கொள்
ஷிர்க்கு என்ற நோயழிந்தால் அவனையன்றி நீயில்லை
கற்பனை நான் மறைந்து விட்டால்
ஹக்கான நான் உன்னுடன் (இலகுகாத்த)

## பாட்டு - 55

**பல்லவி**

முக்தியை அறியா மூடரின் பக்தி
புத்தியை மீறுதடா - மனிதா
புத்தியை மீறுதடா

**அனுபல்லவி**

சீரோடுவாழவே ஆசைகொண்டாலும்
வேரோடு வீழ்த்துதடா - வாழ்வை
வேரோடு வீழ்த்துதடா - மனிதா
வேரோடு வீழ்த்துதடா

(முக்தியை)

**சரணம்**

1. மரணத்தின் பின்பும் வாழ்வொன்று உண்டு
மஹ்ஸரில் புரியுமடா - மனிதா
மஹ்ஸரில் புரியுமடா
மனநோயில் ஊறிய மயங்கிய அறிவு
மறுமையைக் காணுமடா - மனிதா
மறுமையைக் காணுமடா
மாற்றானுதவி மறுமையில்கிட்டா
மனம் நொந்து நுழைவாயடா - நரகில்
மனம் நொந்து நுழையாதேடா

(முக்தியை)

2. நாளுக்குப் பதினேழு பிரார்த்தனை செய்து
நல்வழி கேட்டாயடா - மனிதா
நல்வழி கேட்டாயடா
நாற்பது வருடம் கேட்டதின் பின்பும்
நல்வழி பெற்றதுண்டா - மனிதா
நல்வழி பெற்றதுண்டா
வேடத்தில் வாழ்ந்து காலத்தைக் கடத்தில்
வேதனை நிச்சயம்தான் - நரகில்
வேதனை நிச்சயம்தான்

(முக்தியை)



3. தோளோடு தோள் சேர்த்துத்
தொழுகையில் கேட்டதை
துன்யாவில் பெற்றதுண்டா - மனிதா
துன்யாவில் பெற்றதுண்டா
மறுமையில் கிடைப்பதாய்
மருண்டவர் பேச்சை
மறையே மறுக்குதடா - மனிதா
மறையே மறுக்குதடா
தோன்றாத் துணையாய்த்
துயர் தீர்க்கும் ஈமான்
ஜென்னத்தில் சேர்க்குமடா - மனிதா
ஜென்னத்தில் சேர்க்குமடா

(முக்தியை)

4. அறிவைச் சிறையில் அடைக்காதே - உன்
ஆண்டவன் சொல்லை மறுக்காதே - மனிதா
ஆண்டவன் சொல்லை மறுக்காதே
அமலை முறைப்படி செய்திருந்தால் - இறை
அருட்கொடைவாயில் திறந்துவிடும்
அருட்கொடைவாயில் திறந்துவிடும்
இம்மை மறுமை இரண்டிலும் சாந்தி - மனிதா
இயன்றவர் முயற்சி செய்யட்டுமே
இயன்றவர் முயற்சி செய்யட்டுமே

(முக்தியை)

த)

## பாட்டு - 56

### பல்லவி

மனநோய்க்கு மருந்தொன்று சொன்னான் - அது
மணக்கின்ற கலிமத்துத் தையிபா என்றான்
மனநோய்க்கு மருந்தொன்று சொன்னான்

### சரணம்

1. மனம் போன போக்கிலே வாழ்வதும் ஏனோ
மறை சொன்ன மருந்ததை மறந்ததும் ஏனோ
மனநோயே இதுவென்று அறியாத குற்றம்
மறை சொல்லை மதிக்காத மருட்சியின் தாக்கம்
மயக்குலகைச் சொர்க்கமாய் மதிக்கின்ற குற்றம்
மனநோய்கள் அழிந்திடில் மறையாது சொர்க்கம்
மறையாது சொர்க்கம் (மனநோய்க்கு)

2. உள்ளவை ஏகமென்றுணர்ந்திடும் போது
உண்மைக்கு மாறான சொல் செயல் ஏது
பண்பெல்லாம் உயர்பண்பாயமைந்திடும் போது
பகுத்தறிவு அக்கிலென்ற படித்தரத்தையடையும்
அக்கிலென்ற படித்தரம் லுப்பு என்றானால்
அகிலமே நூறென்று அமைந்திடும் மனிதா
அமைந்திடும் மனிதா (மனநோய்க்கு)

3. தியானநிலை சரியானால் காட்சி நிலைகிட்டும்
காட்சி நிலை முடிவிலே ஒளித்திரைகள் நீங்கும்
கட்டவுழ்தல் கிட்டினால் கலீபா என்றாவாய்
முக்காலம் மூவிடமும் முற்றாக நீங்கும்
பேச்சுக்கு எட்டாத பேரின்ப போகம்
பிடிவாத மூடர்க்கு எட்டாதிஞ்ஞானம்
எட்டாதிஞ்ஞானம் (மனநோய்க்கு)



4. தஜர்ருத்துக் கிட்டினால் தகைமை பெறும் மூ.்.மீன்
தவறாத தெளிவான இறையுணர்வு தோன்றும்
இறையுணர்வு பெற்றிடும் இதயமே அர்ஷு
பிரபஞ்ச தோற்றமெல்லாம் இருப்பதே குர்ஷி
மழ்ஹறாய் வாழ்பவர் மறை சொன்ன ஞானி
மௌத்துக்கு முன் மௌத்தை அனுபவித்த ஞானி
அனுபவித்த ஞானி

(மனநோய்க்கு)

## பாட்டு - 57

### பல்லவி

உண்டு உடுத்து உறங்கி விழிக்கும்
உலகம் உண்மை உணருமா
என்றோ ஓர் நாள் இறக்கவேணும்
இதனை உலகம் மறுக்குமா

### சரணம்

1. ஆழ்ந்த உறக்கநிலையில் எங்கே
அமைந்திருந்தாய் அறிவாயா
விழிப்பை பெற்றபின்பும் உலகு
இருப்பதை நீ அறிவாயா
இல்லாப்பொருளோ இருப்பதாகா
இதனை அறிவு ஏற்காதா
இறந்தபின்பும் மறுமைநாளில்
விழிப்பைப் பெறுவாய் மறுப்பாயா
விழிப்பைப் பெறுவாய் மறுப்பாயா

(உண்டு)

2. உடலால் செய்த உழைப்பின் பலனை
இன்று இங்கே பெறுகிறாய்
உள்ளம் வாழ்ந்த வாழ்வின் பயனை
இறப்பின் பின்பு பெறுகிறாய்
இறைவன் அநீதி இழைப்பதில்லை
உன் இதயம் இதனை உணருமா
நன்மையெனினும் தீமையெனினும்
நாமே பொறுப்பு ஏற்கணும்
நாமே பொறுப்பு ஏற்கணும்

(உண்டு)



3. பெண்டிர் பிள்ளை வேண்டாமென்று
வேதம் ஏதும் கூறுதா
மலையில் குகையில் வாழச்சொல்லி
மார்க்கம் ஏதும் சொல்லுதா
பிதற்றிக் கொண்டு வாழும் மனிதன்
பேரின்பத்தைப் பெறுவானா
இறைவன் கூற்றை ஏற்றுவாழ்ந்தால்
என்றும் சாந்தி நிலவுமே
என்றும் சாந்தி நிலவுமே

(உண்டு)

4. வரட்டுக் கௌரவம் தேடிநின்றால்
உருட்டும் புரட்டும் உருப்படும்
உலகை ஈர்க்க வேண்டுமென்றால்
ஹக்கைப் பொய்யாய்க் காட்டணும்
உதவாக்கரையாய் வாழ்ந்திறந்து
எரியும் நரகில் வீழணும்
மறையிற் சொன்ன வழியில் வாழ்ந்தால்
மறுமை இன்பம் நிச்சயம்
மறுமை இன்பம் நிச்சயம்

(உண்டு)

## பாட்டு - 58

### பல்லவி

நாயோடு படுத்திருப்போன்
தெள்ளோடு எழுந்திருப்பான்
நாடறிந்த உண்மையடா தம்பி - இது
நாடறிந்த உண்மையடா தம்பி

### சரணம்

1. வாய்மாலம் போடுகிற
பேய்வாழும் உள்ளத்திலே
பேரின்பம் கிட்டாதே தம்பி
பேரின்பம் கிட்டாதே தம்பி
ஈருலகவாழ்க்கையிலும்
இன்பசுகம் காண்பதென்றால்
ஈருலகவாழ்க்கையிலும்
இன்பசுகம் காண்பதென்றால்
இருதயத்தை திருத்தி அமைதம்பி - உன்
இருதயத்தை திருத்தி அமைதம்பி

(நாயோடு)

2. இருதயத்தை சுத்தி செய்ய
இருக்குதொரு இலகுவழி
இறைமறையைப் பகுத்துணர்ந்துபாரு
இறைமறையைப் பகுத்துணர்ந்துபாரு - இன்றேல்
இறைநேசச் செல்வர்களைக்
கண்டறிந்து பின்தொடர்ந்து
ஈமானைப் பெற்றுக்கொள்ளு தம்பி - உன்
ஈமானைப் பெற்றுக்கொள்ளு தம்பி

(நாயோடு)



3. வாய்வேதம் வழிகாட்டா
பேயாட்டம் குறிகாட்டா
வான்மறையின் போதனையைக்கேளு
வான்மறையின் போதனையைக்கேளு
தீய ஷிர்க்கழிக்கும் தியானத்தில்
சிலகாலம் பயிற்சிபெற்றால்
சீரான சாந்தியுண்டு தம்பி - உனக்குச்
சீரான சாந்தியுண்டு தம்பி

(நாயோடு)

4. தீயோரைத் தவிர்த்துவிட்டுத்
தூயோரைப் பின் தொடர்ந்தால்
தீன்கலிமா சாந்திதரும் தம்பி - நல்ல
தீன்கலிமா சாந்திதரும் தம்பி
தீநரகை ஒதுக்கி வைக்கும்
திருச்சமூகம் சேர்த்து வைக்கும்
தீதாறைத் தந்துணர்த்தும் தம்பி - ஹக்கின்
தீதாறைத் தந்துணர்த்தும் தம்பி

(நாயோடு)

5. வானுலக மோட்ச நிழல்
வாய்க்குமடா இம்மையிலே
வழிசறுக்காத் தியான நிலைபெற்றால்
வழிசறுக்காத் தியான நிலைபெற்றால்
வாழும்வழிகாட்டிச் சென்ற
வள்ளல் நபி சென்ற வழி
வல்லோனே சொன்னவழி தம்பி - இது
வானவரும் போற்றும் வழி தம்பி

(நாயோடு)

## பாட்டு - 59

### பல்லவி

ஏனிந்தக் கோலமடா மனிதா
ஏகனின் சாபமடா

### சரணம்

1. நப்பாசைப் பேயினால் நலிவுற்று வாழ்கிறாய்
துப்பாக்கிச் சமரினால் துன்பத்தில் வீழ்கிறாய்
அணுக்குண்டுப் போரினால் அகிலத்தை அழிக்கிறாய்
ஆசைக்கு அளவுண்டு அமைதிக்கு வழி உண்டு
போருக்கு நோக்குண்டு புகழுக்குப்போர் வேண்டுமா - இல்லை
புகழுக்குப்போர் வேண்டுமா (ஏனிந்த)

2. உண்மையோடொன்றிட உள்ளத்தில் போராடு
உத்தமர் நோக்கத்தை உணர்ந்து நீ போராடு
கற்பனைத் தீயில் கலந்து நீ போராடில்
கண்டிப்பாய் நீ வீழ்வாய் காலத்தின் தீர்ப்பு
காளையருள்ளத்தில் கனிந்திடும் நெருப்பு
கயவனாய் மாற்றிடும் கற்பனைப் போக்கு (ஏனிந்த)

3. சற்குணப் பொய்கையில் சாதுவாய் நீராடு
சற்சன சங்கத்தில் சதாவும் நீ உறவாடு
நீதிக்காய் போராடு நிம்மதி உண்டு
நித்திய ஜீவனாய் வாழ்ந்திட வாய்க்கும்
கோபமும் மோகமும் கொலை செய்யத்தூண்டும்
பேடிகள் பேச்சுன்னைப் பேயாக மாற்றும் (ஏனிந்த)

4. கொள்கையை அறியாத கோமாளிப் போக்கு
கோலத்தை நம்பிக் குதர்க்கத்தில் வீழ்த்தும்
தீமையை நன்மையாய்த் திசை மாற்றிக்காட்டும்
திக்கெட்டும் துன்பமே வந்துனை வாட்டும்
தீராத தீயுன்னைப் போராடி வீழ்த்தும்
தீன்வழி செல்வோரைச் ஜென்னத்து ஈர்க்கும் (ஏனிந்த)



## பாட்டு - 60

### பல்லவி

தித்திக்கும் திருமறையைத் திறந்து பார் - உன்
திரை நீக்கும் கலிமாவை உணந்து பார்

### சரணம்

1 கொள்கையை அழித்திடக்
கொடும் தீயை வளர்த்தானே
கொடியோனாய் வாழ்ந்த நம்றூத்
கொள்கையே உயிரெனக்
கொண்டநபி இப்றாஹிம்
கொடு நெருப்பில் எரிய வில்லையே - அவர்
மயிர் கூட வெந்ததில்லையே
மகத்தான அற்புதம் ஈமானுக்குண்டென்று
இறைவேதம் கூறவில்லையா - இதை
இறைதூதர் சொல்லவில்லையா
(தித்திக்கும்)

2. ஈமானுக்கிணையான
துணையேதுமில்லென்றுன்
இருதயம் ஏற்கவில்லையா
பாராண்ட மன்னர் பலர்
மண்ணோடு மண்ணானார்
படித்து நீ பார்க்கவில்லையா
பயஹாம்பர் பாதையினைத்
தெளிவாக்கித்தந்திருக்கப்
பகல் வேஷம் நமக்கேனப்பா - இனி
பகல் வேஷம் நமக்கேனப்பா
(தித்திக்கும்)

3. மறுமையை நம்பாத
மடையர்க்கு மனச்சாந்தி
மறுமையிலும் கிட்டாதப்பா
முனாபீக்காய் வாழாமல்
முழுமனதோடீமானை
ஏற்றவர் மூ.ீ.மீனப்பா
ஈமானோடிறப்பவர்
இறைகிருபை பெறுவதால்
ஈடேற்றம் பெறுவாரப்பா - அவர்
ஜென்னத்தில் சேர்வாரப்பா

(தித்திக்கும்)

4. விபசாரம் கொலைகளவு
மதுபோதை வட்டியை
மனதார நீக்கிக்கொண்டால்
மறைவில்லா இறையோனின்
கிருபையால் மனச்சாந்தி
வந்துனக்கு வாய்க்கக் கூடும் - என்றும்
வந்துனக்கு வாய்க்கக் கூடும்
மனச்சாட்சி மாறாமல்
மனிதனாய் வாழ்ந்திறந்தால்
மஹ்மூதர் ஸிபாரிசுண்டு

(தித்திக்கும்)



## பாட்டு - 61

### பல்லவி

இறைவனுக்கிணை கற்பிக்கும் மனிதன்
எங்கே அறிவை விட்டுவிட்டான்
எங்கே அறிவை விட்டுவிட்டான்
ஏனோதானோ வாழுகிறான் - அவன்
எரிநரகிலே வீழுகிறான்
எரிநரகிலே வீழுகிறான்

### சரணம்

1. இணையின் விளைவே அறிவில் இருளை
இணைத்து நர்த்தனமாடுது
ஆசை காட்டி மோசம் செய்து
அணையா நெருப்பில் தள்ளுது
வேதமோதிய வேதியரில் பலர்
வேசத்திலே வாழ்கின்றார்
ஏழைமக்கள் இன்னோரை நம்பி
இருளில் மூழ்கித்தவிக்கிறார்
இருளில் மூழ்கித்தவிக்கிறா

(இறைவனு)

2. மருட்டும் மயக்க வாழ்வுக்காக
மனதைக்கல்லாய் மாற்றினான்
மக்கள் மத்தியில் மதிப்பைத் தேடி
மறையை மறுத்து வாழ்கிறான்
மனதில் தோன்றும் மருட்சி அலைகள்
மனிதப்பண்பை மாற்றுது
மதியிருந்தும் தெளிவில்லாத
மடையர் வாழ்வு மண்ணேதான்
மடையர் வாழ்வு மண்ணேதான்

(இறைவனு)

3. இணையில் மூழ்கி இரும்பாய் மாறிய
இதயம் சாந்தி அடையுமா
கருணைக்கண்ணே இல்லாக்கயவர்
காட்டும் வழிகள் பொருந்துமா
கறையில்லாத மறையை மீற
மனித அறிவு துணியுமா
இயற்கையறிவோடிணையை நீக்கு
ஈருலகிலும் சாந்திதான்
ஈருலகிலும் சாந்திதான்

(இறைவனு)

4. மனிதயூகம் போடும் சட்டம்
மாற்றியமைக்க நேரிடும்
மாற்றியமைத்த பின்பும் உள்ளம்
மருட்சியின்றி வாழாது
இறைவன்தந்த இனிய வேதம்
இருளை நீக்கி ஒளி தரும்
என்றும் சாந்தி பெற்று வாழ
இயற்கைவழியில் செலுத்திடும்
இயற்கைவழியில் செலுத்திடும்

(இறைவனு)



## பாட்டு - 62

### பல்லவி

வேலையில்லாதவன் மூளை - அது
ஷைத்தான் செயற்படும் ஆலை

### அனுபல்லவி

சிந்திக்கத் தெரியாதோன் சீர் கெட்ட மிருகம்
சித்தத்தைக்குளப்புவோன் ஷைத்தானின் உருவம்

(வேலை)

### சரணம்

1 பிறந்ததன் நோக்கம் புரியாதோ - உன்
பிடிவாத உணர்வு மரியாதோ
பித்அத்தின் தாக்கம் புரியாதோ - அதை
நீக்கிட வழியுனக்குத் தெரியாதோ
சற்சன உறவு சாந்திதரும் - உன்
சபல புத்தியை நீக்கிவிடும்
தீயோர் உறவு திசை திருப்பும் - இதைச்
சரித்திரப்புத்தகம் தெளிவுதரும்
சரித்திரப்புத்தகம் தெளிவுதரும்

(வேலை)

2. வேதத்தைக் கொண்டு தெளிவுபெறு - உன்
வேதனை வாசலை மூடிவிடும்
கல்பின் கறையை நீக்கிவிடு - பின்
கலிமாவின் கருத்தில் கலந்துவிடு
அறிவைக் கொண்டு அமைதிபெறு - இறை
அன்பைக் கொண்டு நிறைவு பெறு
அலட்சியப் போக்குன்னை அழித்துவிடும் - உன்
அறிவைச் சிறையில் அடைத்துவிடும்
அறிவைச் சிறையில் அடைத்துவிடும்

(வேலை)

3. புத்தியிலமையாப்புது உலகு - அதுவுன்
உள்ளத்தில்தானே மறைந்திருக்கு
புதுமையில் வாழும் புவியோர்க்கு - இது
என்றும் கிடைக்கா மறைவுலகு
கொள்கையில் வாழ்வோர் குடிபுகுவார் - அந்தக்
கொள்கையை மறுப்போர் நரகெய்துவார்
குர்ஆன் கூறும் ஒளியுலகு - அது
கொள்கையில் வாழ்வோர்க்குயிருலகு
கொள்கையில் வாழ்வோர்க்குயிருலகு

(வேலை)

4. நோக்கமில்லாச்செயலில்லை - அந்த
நோக்குக்கு மாறான பலனில்லை
நோக்கின் கூலி இறைவனிடம் - அது
இரண்டு உலகிலும் கிடைத்துவிடும்
கற்பனை மருட்சி கரைசேர்க்கா - இது
ஹக்கோடிணைந்திட வழிவகுக்கா
காலத்தை வீணாய்க்கழிக்காதே - உன்
கடமையை முறையாய்க் கைக்கொள்ளு
கடமையை முறையாய்க் கைக்கொள்ளு

(வேலை)



## பாட்டு - 68

### பல்லவி

கதம்பக்கலையில் கனிந்தவாழ்வு
கலைந்துமண்ணாய் மாறுதே
இறந்தபின்பும் இடர்படாமல்
வாழும்வழியைத் தெரிந்துகொள்
வாழும்வழியைத் தெரிந்துகொள்

### சரணம்

1. மாய உள்ள மருட்சியாலே
மனிதப்பண்பே மாறுது
மதத்தை மறந்து வாழ்வதாலே
மிருகப்பண்பே மிகைக்குது
மறுமைவாழ்வை மறுப்பதாலே
மனமே நரியாய் மாறுது
மணக்கும் கலிமாவை
விளங்கிக் கொண்டால்
மனத்தில் சாந்தி நிச்சயம்
மனத்தில் சாந்தி நிச்சயம்

(கதம்ப)

2. காளைக்கன்றைக் கடவுளாக
அன்று கண்டார் ஒரு கூட்டம்
காசிக்கட்டைக் கடவுளாக
இன்றுகாண்போர் பெரும்கூட்டம்
கடவுள் பொழியும் கருணைமழையை
கண்டறிவோர் மிகச்சிலர்
கண்டபின்பும் கால்சறுக்கி
வீழ்ந்துகிடப்போர் ஒருசிலர்
வீழ்ந்துகிடப்போர் ஒருசிலர்

(கதம்ப)

3. பூரணத்தைப் பெறுவதற்காய்
பூவுலகில் பிறந்தாயே
புதுமைப்பித்தில் மாட்டிக்கொண்டு
புழுவாய்த் துடிப்பது பொருந்துமா
கதம்ப வாழ்விலும் கருணை பெறலாம்
கல்புக் கண்ணுனக் குண்டானால்
கடவுள் எவர்க்கும் அநீதிசெய்யார்
கட்டளையை மீறாதே - அவர்
கட்டளையை மீறாதே (கதம்ப)

4. உலகவாழ்வின் உண்மை நிலையை
கண்டறியும் கண் எங்கே
உலகைவாங்க முயற்சி செய்வோர்க்
உண்மை எங்கும் தென்படா
மறுமை வாழ்வை மனதில்கொண்டு
மனிதனாக வாழ்ந்திடில்
இம்மை மறுமையில் துன்பம்தொடரா
இன்பவாழ்வு நிச்சயம்
இன்பவாழ்வு நிச்சயம் (கதம்ப)

5. மனிதக்கலைகள் மருட்சியறிவால்
மாய்ந்து மறைந்துபோகுது
மதங்கள் சொன்ன மனிதப்பண்புகள்
மனிதனை விட்டுநீங்குது
மாயாஜால வித்தைபோல
மதங்கள் யாவும் மறையுதே
மனித உள்ளம் மறுத்தபோதும்
மறையின் வாக்கு நிறைவேறுது
மறையின் வாக்கு நிறைவேறுது (கதம்ப)



## பாட்டு - 64

### பல்லவி

வாழ்வுக்கென்றொரு நோக்கிருக்குது - அதை
வகுத்துக்காட்டி விளக்கம் தந்த
வேதமிருக்குது வேதமிருக்குது

### சரணம்

1. மழலைப்பருவ உள்ளத்திலே
மலக்கூத்துலகைக் கண்ட நீ
மடையர் வாழ்வைக் கொப்பி பண்ணி கல்பை
குப்பை மேடாய் மாற்றினாய்
பழக்கவழக்கம் நூலறிவு பகுத்தறிவை மீறுது
பாதை கண்டு பயணம் செய்யப்
பகல் வேஷம்மறுக்குது
பயஹம்பர் சென்ற வழியில்
பயமில்லாமல் செல்லு நீ
பயமில்லாமல் செல்லு நீ
(வாழ்வு)

2. தீன் வழியில் தவறில்லாமல்
திருத்தமாகச் செயல்பட்டால்
திரைகளற்ற தௌஹீதிலே
திருப்தியோடு ஒன்றலாம்
மடமையென்னும் மருட்சிநீங்கி
மனிதனாக வாழலாம்
மறைந்த பின்பும் மகிழ்ச்சியோடு
மறுமையின்பம் காணலாம்
மடையர் கூறும் மயக்குவார்த்தை
மறுமையின்பம் தாராது
மறுமையின்பம் தாராது
(வாழ்வு)

3. மோட்சம் கடந்துன் மூலத்திலே
வாழவும் வழி கிடைத்திடும்
முக்தியென்ற முழு நிறைவும்
பூரணமாய் வாய்த்திடும்
வேறு கண்ட விகர்ப்ப உணர்வு
வேரோடறுந்து மாய்ந்திடும்
வேதம் சொல்லா வேற்று வழிகள்
வேதனையில் நுழைத்திடும்
துவிதக் கொள்கையை எடுத்துக்கொண்டால்
தூயோன் சமூகம்கிட்டாது
தூயோன் சமூகம்கிட்டாது

(வாழ்வு)

4. கலிமாக் கூறும் கருத்தில் நிலைக்கக்
கடமைகளைச் செய்திடில்
காலன் கூட உன் விருப்பமின்றிக்
கடத்திச் செல்ல முடியாது
ஹவ்லுல் கௌதர் இங்கேயுண்டு
கல்புக் கண்ணால் கண்டறி
காத்தமுன் நபி காட்டித்தந்த
ஹக்கின் வழியை கடைப்பிடி
கருத்திலமையாச் சொர்க்கபோகம்
ஹக்காயுனக்குக் கிடைக்கலாம்
ஹக்காயுனக்குக் கிடைக்கலாம்

(வாழ்வு)



## பாட்டு - 65

### பல்லவி

நிந்திக்கும் மனச்சாட்சி நேர்வழியில் சேர்க்கும்
சிந்திக்காச் செயலெல்லாம் தீ நரகில் சேர்க்கும்
தீ நரகில் சேர்க்கும்

### சரணம்

1. மனிதனாய் வாழ்வோர்க்கு மனச்சாட்சி உண்டு
மருட்சியில் வாழ்வோர்க்கு மனச்சாட்சி ஏது
மதியிழந்த மடையர்க்கு என்னாளும் சாவு
மறை வழியில் செல்வோர்க்கு என்னாளும் வாழ்வு
மனச்சாட்சிமாறாமல் மனிதராய் வாழ்ந்தால்
மறுமையிலும் சாந்தியுண்டு மனக்கவலையில்லை
மனக்கவலையில்லை

(நிந்திக்கும்)

2. தவறுக்கு மறதிக்கு மன்னிப்பு உண்டு
தவறில்லாக் குற்றமா நரகமே மருந்து
இறை கூற்றுப் பொய்யல்ல இருதயம் சாட்சி
இம்மையிலும் பார்க்கலாம் இறையோனின்பேச்சு
உண்மையில் வாழ்வோர்க்கு ஜென்னத்தில் விருந்து
உண்மையை மறுப்போருக்கு நரகிலே விருந்து
நரகிலே விருந்து

(நிந்திக்கும்)

3. குழந்தையைக் கறி சமைத்து உண்ணுகிற உலகு
கொடியோரின் இருப்பிடம் இதிலென்ன தவறு
நாயை நாய் உண்பதாய் நாமறிந்ததில்லை
நாகரீக லேபலில் நாஸ்த்தீக ஆட்சி
நீதிக்கும் அநீதிக்கும் அடிப்படையுண்டு
அடிப்படை வேதமாய் அமைந்திடில் சாந்தி
அமைந்திடில் சாந்தி

(நிந்திக்கும்)

4. வேதங்கள் செயலிழந்து வீழ்ந்ததும் ஏனோ
வேதியர் வாய் மூடி வாழ்வதும் ஏனோ
இன்றுள்ள பெரும்பாலார்க்கிருதயம் எங்கே
இயன்றவரை மனச்சாட்சி மாறாமல் வாழு
இறையோனின் கிருபையால் ஈடேற்றம் பெறலாம்
இறை தூதர் சென்ற வழி அறிந்து நீ வாழு
அறிந்து நீ வாழு

(நிந்திக்கும்)



## பாட்டு - 66

### பல்லவி

சாண்தைக்க முழம் கிழிவதேன் - அது
சரியான அறிவில்லாச் சபலபுத்திதானே
சாண்தைக்க முழம் கிழிவதேன்

### சரணம்

1. பேய் வாழும் சுடுகாடு போலமைந்த உள்ளம்
பெருச்சாளி வாழ்கின்ற பெரும் குழியாய் மாறும்
கோபமாம் கொதிநரகில் கும்மாளம் போடும்
கொலையென்ன களவென்ன கூசாமல் செய்யும்
தான் தோன்றித்தனமான சதி000000த்திட்டம் தீட்டும்
தானேதான் அதில் வீழ்ந்து தறுதலையாய் மாறும்
தறுதலையாய் மாறும் (சாண்தைக்க)

2. கோழைக்குக் குறுக்குவழி தோன்றுதல் இயல்பு
குறுக்குவழி நிச்சயம் கொடு நரகில் தள்ளும்
இயற்கையறிவென்னாளும் இறையுதவி தேடும்
இறையோனின் அன்புக்கு இலக்காகி வாழும்
இறை தூதர் சென்ற வழி எடுத்திங்கே வாழும்
என்னாளும் சாந்தியுனக்கு இயல்பாக வாய்க்கும்
இயல்பாக வாய்க்கும் (சாண்தைக்க)

3. பணம் வேண்டும் சனம் வேண்டும் சாத்வீகம் வேண்டும்
பணமில்லாச் சமூகத்தில் பிணம்தானே மிஞ்சும்
பணம் சனத்தைக் கையாளும் முறையறிய வேண்டும்
பக்குவமாய் கற்றறிந்து பரிமாற வேண்டும்
ஏழைக்கு இரங்காமல் இருட்டடிப்புச் செய்தால்
ஈருலகும் நஸ்டமே இதையுணர வேண்டும்
இதையுணர வேண்டும் (சாண்தைக்க)

4. பெரியோர்கள் சென்ற வழி பேணி நாம் வாழ்ந்தால்
பேரழிவு தோன்றாது பெரியோனின் வாக்கு
சீரழிவை உருவாக்கும் சிற்றறிவை நீக்கில்
சீரான வாழ்வுலகில் எல்லோர்க்கும் வாய்க்கும்
பேரறிவு உருவாகும் பேரின்பம் தோன்றும்
பெரியோர்கள் சிபாரிசினால் பேரழிவு நீங்கும்
பேரழிவு நீங்கும் (சாண்தைக்க)



## பாட்டு - 67

**பல்லவி**

எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் அவன் முகமே
வேறெதனை நீ காண்கிறாய் - மனிதா
வேறெதனை நீ காண்கிறாய்
இருளென்ற வஹ்மிலே வாழ்கின்ற மூடர்க்கு
இறை தோற்றம் புரியாதடா - மனிதா
இறை தோற்றம் புரியாதடா

**சரணம்**

1. பேரண்டம் யாவுமே அவன் அஸ்மா எனக் கொண்டால்
அவனன்றி வேறேதடா - மனிதா
அவனன்றி வேறேதடா
இதையறியாச் ஷிர்க்கேதான் உலகத்தை ஆட்டுது
அமைதிக்கு வழிதேடடா - மனிதா
அமைதிக்கு வழிதேடடா
பெரியோனின் திருவசனம் பெரியோர்கள் அனுபூதி
பிழையாக காணாதேடா - மனிதா
பிடிவாதம் வேண்டாமடா (எங்கெங்கு)

2. வெளிக்கோலம் ஹூறாகும் உயிரொன்றே ஹக்காகும்
உணர்ந்தறிதல் ஈமானடா - மனிதா
உணர்ந்தறிதல் ஈமானடா
உணர்ந்துள்ள மூ.ஃ.மீனோடிறையிருக்கும்
நிலைதானே இறையுணர்வென்று சொல்வார்
இறையுணர்வென்று சொல்வார்
பெரியோனின் திருவசனம் பெரியோர்கள் அனுபூதி
பிழையாகக் காணாதேடா - மனிதா
பிடிவாதம் வேண்டாமடா (எங்கெங்கு)

3. உன்னிலே நீயாக நீயிருக்கும் போது
எங்குன்னை நீகாணுவாய் - மனிதா
எங்குன்னை நீகாணுவாய்
இருப்பவை இறைநாமம் இதைவிட வேறில்லை
என்றேற்றால் ஷிர்க்கேதடா - மனிதா
என்றேற்றால் ஷிர்க்கேதடா
பெரியோனின் திருவசனம் பெரியோர்கள் அனுபூதி
பிழையாக காணாதேடா - மனிதா
பிடிவாதம் வேண்டாமடா (எங்கெங்கு)

## பாட்டு - 68

**பல்லவி**

காக்கைகளே காக்கைகளே எங்கே போறீங்க - நீங்க
உலகமக்களுக்கொற்றுமையை உணர்த்திக் காட்டுங்க
எருமைகளே எருமைகளே எங்கே போறீங்க - நீங்க
இதயமில்லா மனிதர்க்கிதயம் கொண்டாபோறீங்க
இதயம் கொண்டாபோறீங்க

**சரணம்**

1. மதியில்லாத மனிதன் விதியை
எங்கே காணுவான் - அவன்
எங்கே காணுவான்
கண்டபோதும் மதியில்லாமல்
எங்கே பேணுவான் - அவன்
எங்கே பேணுவான்
மதியே விதியை ஏற்றுக்கொண்டால்
துன்பம் துயரம் வாட்டாது
விதியை ஒத்த மதியுள்ளோர்க்கு
வேற்று வழிகள் வேண்டுமா
வேற்று வழிகள் வேண்டுமா (காக்கை)

2. இயற்கை விதியே இயக்கும் சக்தி
எள்ளளவும் மாறாது
எள்ளளவும் மாறாது
இயற்கை விதியோடொட்டி வாழ்ந்தால்
இறப்பின் பின்பும் சாந்திதான்
இறப்பின் பின்பும் சாந்திதான்
இயற்கையறிவு தெளிவுபெற்றால்
இன்ப துன்பம் பயிற்சிதான்
இன்ப துன்பம் பயிற்சிதான்
இரண்டுமொன்றென்றறிந்த உள்ளம்
இயல்பை மீறி வாழுமா
இயல்பை மீறி வாழுமா (காக்கை)



3. ஆசை அணையை மீறும் போது
அமைதி அங்கே தென்படா
அமைதி அங்கே தென்படா
அடக்கு முறையில் மூழ்கும்போது
அறிவுக்கண்ணே குருடாகும்
அறிவுக்கண்ணே குருடாகும்
இயற்கை நெறியில் வாழுவோர்க்கு
இரண்டு கண்ணும் தெளிவுறும்
ஈருலகிலும் சாந்திகாண
இயற்கை நியதி இதுவேதான்
இயற்கை நியதி இதுவேதான் (காக்கை)

4. இருளை நீக்கித் தெளிவை ஊட்டும்
இறைவன் தந்த மந்திரம்
இறைவன் தந்த மந்திரம்
இடர் படாமல் செல்வதற்கு
இருக்கு கலிமா மந்திரம்
இருக்கு கலிமா மந்திரம்
விளங்கித்தெளிந்து வழி நடந்தால்
வீதியெல்லாம் ஒளி மயம்
வீதியெல்லாம் ஒளி மயம்
மருட்சியற்ற மனிதனாக
மறுமையின்பம் காணலாம்
மறுமையின்பம் காணலாம் (காக்கை)

## பாட்டு - 69

### பல்லவி

நெறிகெட்ட உலகிலே நிம்மதி வாழ்வுக்கு
நேர் வழியொன்று இருக்குதப்பா
நித்திய சாந்தியில் நிலைபெற்று வாழ
நினைவூட்டும் திக்றை எடுத்துக்கொள்ளு
நினைவூட்டும் திக்றை எடுத்துக்கொள்ளு

### சரணம்

1. உண்மை வழியை நீ எடுத்துக்கொள்ளு - பின்
உறுதியாய் ஈமானை ஏற்றுக் கொள்ளு
அதாலத் விபரத்தை அறிந்து கொள்ளு - உலகில்
அதாலத்தை மீறாமல் வாழ்ந்து கொள்ளு
குணங்களை மணமாய் மாற்றிக்கொள்ளு - நீ
கொடியவருறவை நீக்கித்தள்ளு
நல்லோர் உறவை எடுத்துக்கொள்ளு - நீ
நல்லோனாய் வாழ்வாய் புரிந்து கொள்ளு
நல்லோனாய் வாழ்வாய் புரிந்து கொள்ளு

(நெறிகெட்ட)

2. எண்ணமே வாழ்வென்றேற்றுக்கொள்ளு - அது
இரண்டு வழியிலும் ஏற்படலாம்
எண்ணம் நன்னோக்கில் அமைந்து விடில் - உனக்கு
எல்லாச் செயலிலும் சாந்தியுண்டு
எண்ணம் தீவழியில் அமைந்திருந்தால் - அது
எல்லாச் செயலுமே இழிவு தரும்
எண்ணத்தின் வலிமைக்கு நிகரில்லை - அதன்
விரைவுக்கும் எவருக்கும் கணக்கில்லை
விரைவுக்கும் எவருக்கும் கணக்கில்லை

(நெறிகெட்ட)



3. எண்ணம் பிறக்கும் நோக்கறிந்து - நீ
இயன்றவரை அதாலத்தை எடுத்துக் கொள்ளு
சொல்லைச் செயலைச் சீர்படுத்தி - உன்
சோம்பேறிக் குணத்தை விட்டு விடு
சோதனை என்பது உயர்வூட்டும் - நீ
சோராது அயராது துணிந்து சென்றால்
வேதனையெல்லாமே விலகிவிடும் - உன்னை
வெருட்டும் ஷைத்தானும் மறைந்துவிடும்
வெருட்டும் ஷைத்தானும் மறைந்துவிடும்

(நெறிகெட்ட)

4. வேதமே எமக்கு நீதிபதி - எம்
றசூலுல்லாஹ் தீர்ப்புக்கு முதல் சாட்சி
நிந்திக்கும் லவ்வாமா எம்சாட்சி - நாம்
உரிய முறைப்படி வழக்காடில்
உண்மையாய் உண்மை வெளியாகும் - நீ
உலகுக்குப் பயந்துண்மையைத்தள்ளாதே
மறுமையை மறந்து வாழாதே நீ
மதத்தை லேபலாய்க் கொள்ளாதே
மதத்தை லேபலாய்க் கொள்ளாதே

(நெறிகெட்ட)

## பாட்டு - 70

**பல்லவி**

ஆண்டவனருளால் அவனுருவானோம்
அறிவாயா மனிதா
அன்பைப்பண்பை அறிவினிலமைத்தான்
அறிவாயா மனிதா

**சரணம்**

1. மறதியை உறுதிக்கு மருந்தாக அமைத்தான்
மறக்காதே மனிதா - மனிதா
மறக்காதே மனிதா
மறதியை நீக்கி உறுதியிலமைய
மார்க்கத்தை ஈந்தானே - இறைவன்
மார்க்கத்தை ஈந்தானே
மறுமையை நம்பாமனிதர்க்கு உலகில்
ஆதாரம் தந்தானே - மனிதா
ஆதாரம் தந்தானே
மார்க்கத்தை நஞ்சாய் மதித்திடும் மனிதர்க்கு
மருட்சியே நீங்காதே - மனிதா
மருட்சியே நீங்காதே (ஆண்டவன்)

2. கோழைத்தனமாய்க் குதர்க்கத்தில் வாழ்ந்து
கொதிநரகேகாதே - மனிதா
கொதிநரகேகாதே
கோபத்தில் மூழ்கிக் கொடியோனாய் வாழ்ந்து
கொள்கையை மறுக்காதே - மனிதா
கொள்கையை மறுக்காதே
கோலத்தில் வீழ்ந்து குருடனாய் வாழ்ந்து
கொடிகட்டிப் பறக்காதே - மனிதா
கொடிகட்டிப் பறக்காதே
நீதிக்குமனீதிக்கும் நிறைவான தீர்ப்புண்டு
நினைவுடன் வாழணுமே - மனிதா
நினைவுடன் வாழணுமே (ஆண்டவன்)



3. ஆசையும் கோபமும் அவசியத்தளவெனில்
அகிலம் வெறுக்காது - மனிதா
அகிலம் வெறுக்காது
ஆசையும் கோபமும் அளவினை மீறினால்
அறிவே இருக்காது - மனிதா
அறிவே இருக்காது
ஞானமும் கல்வியும் கிடைத்தவர் வாழ்வு
நலிவுற்று மாறாது - மனிதா
நலிவுற்று மாறாது
தானமும் தயாளமும் நிறைந்தவர் வாழ்வு
தலைகீழாய் மாறாது - மனிதா
தலைகீழாய் மாறாது
(ஆண்டவன்)

## பாட்டு - 71

**பல்லவி**

பேராசை கொண்டாயே
பிடிவாதம் செய்தாயே
மண்ணோடு மண்ணாவதேன் - வாழ்வு
மண்ணோடு மண்ணாவதேன்

**அனுபல்லவி**

பாராளும் மன்னன் போல்
பகல் வேடம் போட்டாயே
பரிதாப முடிவேனடா - மனிதா
பரிதாப முடிவேனடா

**சரணம்**

1. புலனறிவில் கட்டுண்ட
புவியுலக வாழ்விலே
புர்க்கானோடொத்து வாழ்ந்தால்
புவியுலகும் வீழ்த்தாது
நெருப்புலகும் எரிக்காது
புதுவாழ்வே கிட்டுமப்பா
பக்தியிலூறிப் பின் முக்தியில் சேருவோர்
முழுநிலமை பெறுவாரப்பா
முழுநிலமை பெறுவாரப்பா (பேராசை)

2. வீண்போக்கு வினைதீக்கா
வெளிவேஷம் துணைசேர்க்கா
வேதநெறி வினைதீர்க்குமே
விளங்காத செயலிலே
வீண்காலம் போக்கிடில்
தீநரகில் சேரநேரும்
வேஷத்தை வீசியெறி
கரும்திரையைக் கழட்டிஎறி
கருணைமழை பொழியுமப்பா
கருணைமழை பொழியுமப்பா (பேராசை)



3. பேரண்டம் மறுத்திட்ட
பெரும்கொடையைப் பெற்ற நீ
பித்தன் போல் வாழ்தல் ஏனோ
பித்றத்தில் பிறந்த நீ
மனிதனாய் வாழாமல்
மருட்சியில் வாழுகின்றாய்
மறை கூறும் மருந்ததை
அருந்தாமல் வாழ்ந்திறந்தால்
மறுமையிலும் துன்பம்நேரும்
மறுமையிலும் துன்பம்நேரும்
(பேராசை)

4. மறை கூறும் மருந்ததை
விருப்போடு உட்கொண்டால்
மனமாற்றம் பெறுவாயப்பா
மனமாற்றம் பெற்றிடில்
மயக்கநிலை மாறிடில்
ஒளியுலகு தெளிவாகுமே
மன்னர்க்கும் அஞ்சாத
மனஉறுதி உருவாகும்
மறுமையிலும் வெற்றிகாண்பாய்
மறுமையிலும் வெற்றிகாண்பாய்
(பேராசை)

## பாட்டு - 72

### பல்லவி

வாழ்வோடு போராடும் வாலிபரே கேளும்
வள்ளல் நபி வாழ்ந்த கொள்கை வழுவாமல் வாழும்
வழுவாமல் வாழும்

### சரணம்

1. சீரான வாழ்வு முறை செப்புதே இஸ்லாம்
சீரற்ற வாழ்வுக்கும் இஸ்லாமா லேபல்
புரியாத மூடர்கள் புரட்டலால் வந்த
புதுமையில் தானின்று புதைந்திருக்கு கொள்கை
தீனுக்கு வழி காட்டும் திருக்குர்ஆனுண்டு
தீராத மனநோயைத் தீர்க்குமே கொள்கை
தீர்க்குமே கொள்கை (வாழ்வோடு)

2. பள்ளியில் சென்றழுது பாசாங்கு செய்து
பகல் வேளைப் பட்டினியை நோன்பென்று கொண்டு
ஏழைக்கு ஈயாமல் இரவு பகல் உழைத்து
ஹாஜியார் பேர் வாங்க ஹஜ்ஜிக்கும் போவார்
பலனேதும் காணாமல் பகல் வேஷம் போட்டார்
பக்குவமாய்க்கற்றறிந்து அமல் செய்து செல்லு
அமல் செய்து செல்லு (வாழ்வோடு)

3. இறைவனோடிணைப்பதே இஸ்லாத்தின் கொள்கை
எவருக்கும் அதைப்புரட்ட உரிமையே இல்லை
கொள்கையை மறுத்திங்கு குருடராய் வாழ்வோர்
குபேரனாய் வாழினும் கொதிநரகே செல்வார்
இறப்புக்குப்பின் மறுமை இருப்பதை நம்பி
இயன்றவரை கொள்கையோடிணைந்திங்கு வாழு
இணைந்திங்கு வாழு (வாழ்வோடு)

4. உள்ளத்திலுள்ளறியா உனையாட்டி வீழ்த்தும்
உயர் கலிமா உள்ளத்துக்குயிரூட்டி வைக்கும்
தெய்வீகம் தெளிவுபடத் திரை நீக்கம் செய்யும்
கண்காணா மலக்கூத்தைக் கண்டுணரச் செய்யும்
ஹக்கோடு ஒன்றிடக் கட்டவிழ்த்து வைக்கும்
கரையில்லாச் சொர்க்கத்தில் கண்டிப்பாய்ச் சேர்க்கும்
கண்டிப்பாய்ச் சேர்க்கும் (வாழ்வோடு)



## பாட்டு - 73

### பல்லவி

வான் பூமி கடல் மலை யாவுமே ஸுஜூதிட
நீயேன் மறுத்து விட்டாய் - மனிதா
நீயேன் மறுத்து விட்டாய்

### அனுபல்லவி

மனிதனாய் வாழ மறந்து விட்டாய் - இன்று
மறதியிலூறித் திணறுகின்றாய்
மறதியிலூறித் திணறுகின்றாய் (வான்பூமி)

### சரணம்

1. மார்க்கத்தின் கொள்கையில் தெளிவு பெறு - பின்
மடையரின் கொள்கையை மறந்துவிடு
மறை சொல்லும் வழியில் நுழைந்துவிடு
மறை சொல்லும் வழியில் நுழைந்துவிடு - பின்
மனிதனாய் வாழ துணிந்துவிடு
இறை வழி செல்பவர்க்கிறைவனினுதவி
என்றும் எதிலும் கிடைக்குமப்பா
என்றும் எதிலும் கிடைக்குமப்பா (வான்பூமி)

2. அவசியத்தளவுலகை எடுத்துக் கொள்ளு - நீ
காலத்தைக் கவனத்திலிருத்திக் கொள்ளு
என்றோ ஓர் நாள் இறப்பு வரும்
என்றோ ஓர் நாள் இறப்பு வரும் - இதை
இருதயத்திருத்தித் திருந்திக்கொள்ளு
முக்தியில் சேர்வோர் சித்தியே பெறுவார்
முதலவன் சொன்ன திருவாக்கு
முதலவன் சொன்ன திருவாக்கு (வான்பூமி)

3. குணங்களை நேராய் நிலைப்படுத்து - உன்
கொள்கையில் தரிபட நெறிப்படுத்து
வரட்டுக் கௌரவம் வழி கெடுக்கும்
வரட்டுக் கௌரவம் வழி கெடுக்கும் - உன்
வாழ்வுக்கே நஞ்சாகிக் குடி கெடுக்கும்
மயக்க புத்தியில் மாட்டிக்கொண்டால் - உன்
மறுமை வாழ்வு என்னாகும்
மறுமை வாழ்வு என்னாகும்

(வான்பூமி)

4. விற்பவர்க்கோர்க்கண் போதுமென்றால் - அதை
வாங்குவோர்க்கிருகண் வேணுமப்பா
புத்தியிலமையாப் போதனை செய்யும்
புத்தியிலமையாப் போதனை செய்யும்
போலிகள் அநேகம் புவியிலுண்டு
நான்மறை கூறும் கொள்கையிலூறி
நபிகளார் சென்ற வழி செல்லு
நபிகளார் சென்ற வழி செல்லு

(வான்பூமி)



## பாட்டு - 74

### பல்லவி

இறைவனுக்கிணையில்லைத் துணையில்லையே - இதை
ஏற்றிட மனிதருக்கறிவில்லையே

### சரணம்

1. அறிவில்லா மனிதர்க்கு அருளேது - அவர்
உளறிடும் வார்த்தைக்குப் பொருளேது
மதி கெட்ட மனிதர்க்கு உயிரேது - அவர்
மரணித்த பின்னவர்க்குத் துணையேது
துணையேது
நெறிகெட்ட போக்குனை உயர்த்தாது
நிம்மதி வாழ்வுக்கும் உதவாது
நிம்மதியோடு நேர்வழி செல்ல
நிலையான கொள்கையை எடுத்துக்கொள்ளு

(இறை)

2. வாள் கொண்டு கொள்கையை வலுப்படுத்தி - நீ
வாழ்ந்திடும் வழிகளை நெறிப்படுத்தி
வாழ்வுக்கு வழி சொன்ன வேதமெங்கே - அதை
வரட்டு வேதியர் புரட்டிக்கொண்டார்
புரட்டிக் கொண்டார்
மனிதனாய் வாழ மனமிருந்தால் - நீ
மறைகூறும் கொள்கையில் வாழ்ந்து கொள்ளு
மரணத்தின் பின்னுள்ள மறுமையின் வாழ்வும்
மனம் போலமையலாம் அறிந்து கொள்ளு

(இறை)

3. தீனுல் இஸ்லாம் வழியிருக்கு - அதைத்
தெளிவாய் விளங்கித் தெரிந்துகொள்ளு
இணையென்றால் எதுவென்று
புரிந்துகொள்ளு - பின்
இணையின்றிவாழத் துணிந்துகொள்ளு
துணிந்து கொள்ளு
இணையை நீக்கும் அமல்களை முறையாய்
ஏற்று நடப்பவர் வலியாவார்
இறைவழி செல்பவர் இன்பத்தில் வாழ்வார்
இறைவன் தந்த வாக்குறுதி - இது
(இறை)

4. ஆடும் மாடும் அணிகலன் பொருளும்
அமைதிக்கு வழியைத்தந்துதவா
தேனும் பாலும் திவ்விய உணவும்
ஆகிறா வாழ்வில் அமைதிதரா
அமைதிதரா
அறிவும் அமலும் அமைந்திடில் - அங்கே
ஆத்துமா சாந்தி அடைந்துவிடும்
அணையா நெருப்பில் இணையாதிருக்க
ஈமான் உனக்கு உதவி செய்யும்
(இறை)

5. காலம் கெடுவதோ அழிவதோஇல்லை
கடவுளே காலமென்றறிந்துகொள்ளு
கல்பின் திரைகளை நீக்கிக்கொள்ளு
ஹக்கோடொன்றிட ஆசைகொள்ளு
ஆசைகொள்ளு
காத்தமுன் நபியின் சிபாரிசினாலே
கட்டவிழ் நிலையை நீ பெற்றிடலாம்
கலையா உணர்வோடு ஹக்கோடிணைந்திடில்
கவலைகளெல்லாம் பறந்துவிடும்
(இறை)



## பாட்டு - 75

**பல்லவி**

தூயோன் துணை வேண்டும் - துயர்நீங்க
தூயவழி தோன்றும்

**சரணம்**

1. ஜாதியும் பேதமும் சண்டாளக் கொலைகளும்
சற்றேனும் தலைகாட்டா வழிகண்டு வாழ்ந்தால்
காருண்ய நபி சொன்ன கலிமாவை உணர்ந்தால்
கண்டிப்பாய்த் துயர் நீங்கும் கண்கண்ட உண்மை
கண்கண்ட உண்மை (தூயோன்)

2. இருப்பது ஏகமென்றுணர்ந்திடும் மக்கள்
யாருக்கு யார் தீமை செய்பவராவார்
சற்குணம் குடிகொண்டால் சச்சரவேது
சாந்தியே நிலை கொள்ளும் யோசித்துப்பாரு
யோசித்துப்பாரு (தூயோன்)

3. தெய்வத்தின் சித்தத்தைப் பொருந்திய மக்கள்
சீரோடு வாழ்ந்திடச் சித்தாந்தமுண்டு
தக்தீரின் பொருத்தமே ஜென்னத்தின் வாசல்
தவறாது செல்லலாம் தனிவழி அதுதான்
தனிவழி அதுதான் (தூயோன்)

4. தவறான வழிகாட்டல் தரணியை ஆட்டுது
தாய்க்குலம்பேய்போல நாட்டியமாடுது
போக்கில்லா குழந்தைகள் துப்பாக்கி தூக்குது
நல்லோரின் சாபத்தால் நாடே அழியுது
நாடே அழியுது (தூயோன்)

5. பொய்க்குப் புகலிடம் கொடுத்திடும் உள்ளம்
பூகம்பம் ஏற்படும் புதை குழியாகும்
உண்மையை மறுத்திடும் உள்ளத்தில் என்றும்
ஓயாதெரிமலை வெடிப்பது திண்ணம்
வெடிப்பது திண்ணம் (தூயோன்)

## பாட்டு - 76

**பல்லவி**

சொல்லாதே பொய் சொல்லாதே

**சரணம்**

1. சொல்லாதே பொய் சொல்லாதே
செய்யாதே களவு செய்யாதே
பேசாதே புறம் பேசாதே
செய்யாதே கொலை செய்யாதே
மதுவில் மயங்கி மருளாதே
வேசியராசையில் வீழாதே - நீ
வேஷத்தில் வாழ்ந்து வீழாதே
மார்க்கத்தை மறந்து வாழாதே - நீ
மனிதனாய் வாழ மறக்காதே
மனிதனாய் வாழ மறக்காதே (சொல்லாதே)

2. எங்கும் நிறைந்த ஏகனின் முன்னால்
ஏனோ அவன் சொல்லை மீறுகிறாய்
இம்மை மறுமையில் கூலியுண்டு இதை
ஏனோ மறந்து வாழுகிறாய்
இன்பம் துன்பம் இடருறச் செய்வது
இருட்திரை உள்ளத்திருப்பதனால்
ஏகனின் அன்பைப் பெற்றிட நினைத்தால்
இருட்டிரை அனைத்தையும் நீக்கிவிடு
இருட்டிரை அனைத்தையும் நீக்கிவிடு (சொல்லாதே)

3. ஆசைக்கடலில் மூழ்குவதாலே
அறநெறிவாழ்வு அழியுதடா
அரக்கர் போக்கைக் கொண்டதனாலே
அகிலம் நரகாய் மாறுதடா
அறிவைப் பண்பை ஏற்றவர் வாழ்வு
அமைதி நிலையை அடைந்து விடும்
ஆண்டவன் பொருத்தம் பெற்றவர் வாழ்வில்
ஆத்துமா சாந்தி அடைந்துவிடும் (சொல்லாதே)



4. உள்ளும் புறமும் ஒன்றாக்கி
உத்தமர் வாழ்வைக் கைக்கொள்ளு
உலகுக்கஞ்சும் உளநோயை
ஒழித்துக்கட்டி உறுதிபெறு
உண்மை வழியில் வாழ்ந்து கொண்டால்
உலகுனை வீழ்த்த முடியாது
வானத்தின் வாசல்கள் திறந்துவிடும்
வாழ்க்கையில் துன்பம் நீங்கிவிடும் (செல்லாதே)

## பாட்டு - 77

**பல்லவி**

உலகெல்லாம் எதிர்த்தாலும்
உறவெல்லாம் மறுத்தாலும்
உயிர்தானே ஈமானடா
உயிர்தானே ஈமானடா

**சரணம்**

1. செல்வத்தில் புரண்டாயே
திக்கெட்டும் பறந்தாயே
தீன்கலிமா வழி வாழ்ந்தாயா
தீன்கலிமா வழி கண்டாயா
வறுமையில் வாடினாய்
வயதெல்லை தாண்டினாய்
வழிகண்டு வாழ்ந்ததுண்டா
வழிகண்டு வாழ்ந்ததுண்டா (உலகெல்லாம்)

2. சத்தியத்தை மறுப்போர்க்கு
சபலபுத்தி கொண்டோர்க்கு
சாந்தி பெறும் வழியேதடா
சாந்தி பெறும் வழியேதடா
சற்குருவை அறியாதோர்
சற்குணத்தைப் பேணாதோர்
முக்திக்கு வழிகாண்பரா
முக்திக்கு வழிகாண்பரா (உலகெல்லாம்)

3. அறியாதோர் அறிஞரைக்
கேட்டறிந்து வழிகாண்பார்
அரக்கர்க்கு வழிதோணுமா
அரக்கர்க்கு வழிதோணுமா
நல்லோர்போல் நடிக்கலாம்
நரியொத்து வாழலாம்
நரகெய்த வேண்டிநேரும்
நரகெய்த வேண்டிநேரும் (உலகெல்லாம்)



## பாட்டு - 78

**பல்லவி**

கண்காணும் மண்ணுலகு
காலத்திலே மறையுமடா
கண்காணா மறு உலகு
கர்மவினை காட்டுமடா
கர்மவினை காட்டுமடா

**சரணம்**

1. புத்தியுள்ள மனிதனுக்கு
புவியுலகு மாயையடா
போதையுள்ள மனிதனுக்கு
ஈருலகும் நரகமடா
மண்ணறையில் நுழைந்த பின்பு
மதிபிறந்து என்னபயன்
மனமுரண்டாய் வாழ்வோர்க்கு
மறை தெரிந்தும் என்னபயன்
மாநபியைப் பின்தொடர்ந்தால்
மறுமையிலும் சாந்தியுண்டு
மாமறையின் உபதேசம்
மறந்துவிடில் கைசேதம்
மறந்துவிடில் கைசேதம் (கண்காணும்)

2. ஆத்துமாவைச் சிறைப்படுத்தி
ஆசையிலே மூழ்கிவிட்டால்
அண்ணல் நபி சென்றவழி
அமையாது வாழ்க்கையிலே
இன்ப துன்பமிருநிலையும்
இடரளிக்கா இவ்வுலகில்
ஈருலகும் வெற்றிகிட்டும்
இயற்கைவழி இஸ்லாமே
இயன்றவரை முயற்சிசெய்து
இயற்கைவழி வாழ்ந்திறந்தால்
ஈருலகும் வெற்றியடா
இன்பசுகம் காண்பாயடா
இன்பசுகம் காண்பாயடா (கண்காணும்)

3. காயகற்பக் கலிமாவை
கருத்திருத்திச் செயல் தொடர்ந்தால்
ஹக்கின் வழி தெரிந்துவிடும்
கட்டளைகள் புரிந்துவிடும்
கருணை நபி சிபாரிசினால்
கட்டவிழ்தல் கிட்டிவிடும்
கல்பிலுள்ள திரைகளெல்லாம்
கழன்று உண்மை நிலைத்துவிடும்
உண்மை கண்ட உள்ளத்தோடு
உரிய வழி வாழ்ந்திறந்தால்
ஈருலகும் வெற்றியடா
இன்பசுகம் காண்பாயடா
இன்பசுகம் காண்பாயடா (கண்காணும்)

4. மனநோயைத் தீர்த்துவைக்க
மாநபிகள் வந்தார்கள்
மனுக்குலத்தை ஈடேற்ற
மறைபுர்க்கான் தந்தார்கள்
மாநபியின் கொள்கையினை
மனதார ஏற்றெடுத்து
மண்ணுலகில் வாழ்ந்திறந்தால்
மறுமையிலும் சாந்தியுண்டு
மாநபிகள் சென்றவழி
மாறாமல் வாழ்ந்திறந்தால்
இம்மையிலும் சாந்தியுண்டு
இருவினையும் தீருமடா
இருவினையும் தீருமடா (கண்காணும்)



## பாட்டு - 79

### பல்லவி

உண்மையை உணரா உலுத்தரின் வாழ்வு
உதவாக்கரையல்லவா - மனிதா
உதவாக்கரையல்லவா
உண்மையை உணர்ந்த உத்தமர் வாழ்வு
உலகுக்கே ஒளியல்லவா - இருண்ட
உலகுக்கே ஒளியல்லவா

### சரணம்

1. சிற்றின்ப வாழ்வில் சீரழிந்தாயே
சீர்பெறும் நாளின்னும் வரவில்லையா
சீர்பெறும் முறையைச் செப்புதே இஸ்லாம்
செவிகொடுத்தின்னும் கேட்கலையா - உன்
சித்தம் அதனை ஏற்கலையா
காமவெறியைக் காதலென்றெண்ணிக்
கடினமாய்ப் பரவுதே விபச்சாரம்
வேலியே பயிரை மேய்ந்திடும் காலம்
விடிந்தால் தெரியுமே விளையாட்டு
வீணனின் சொல்லல்ல இப்பாட்டு
(உண்மையை)

2. காதலர் தினமெனக் கட்டவிழ்த்தாரே
கடைசி முடிவென்ன புரியாதா
புதுப்புது நோய்கள் பரவுதே உலகில்
புதுமையில் வாழும் முடிவிதுதான்
பூவுலகின்று புதுமையில்தான்
முட்டாள் போக்குக்கு முடிவில்லையா - எம்
முதல்வன் சொன்ன வழி சரியில்லையா
மனம்போன போக்கில் வாழ்ந்திறந்து - நீ
மனச்சாந்தி பெறுவது முடியாது
மடையனாய் வாழ்ந்து இறக்காதே
(உண்மையை)

3. எல்லோர்க்கும் இயல்பூக்கம் இருக்கிறது - இதை
பித்அத்தில் நுழைப்பவர் பெரும்பாவி
புத்தகச் சுமைமட்டும் அறிவுதரா - எம்
புதுப்புது பித்அத்தும் சாந்திதரா
புண்ணியத்தோடும் வாழவிடா
வகுத்துணர்ந்தொழுகிச் சாந்திபெறு - நீ
பாதையை முறையாய்ப் பயன்படுத்து
பண்பிலாக் குணங்களை நீக்கிவிடு
மஹ்சறை மறவாமல் வாழ்ந்துகொள்ளு
இது இறுதிக்காலம் உணர்ந்துகொள்ளு

(உண்மையை)

4. இறுதிக் காலம்தான் இஸ்லாத்தின் நாமம்
இருந்தும் உயிரைக் காணவில்லை
வேதத்தில் எழுத்துக்கள் இருந்தாலும் அதன்
அர்த்தம் படிப்படி மறைகிறதே
அவரவர் நோக்கம் புரிகிறதே
கடமை நடைபெறும் வணக்கஸ்தலமெல்லாம்
நேர்வழி கெட்டுப் போயிருக்கு
வழிகாட்டும் கூட்டம் வானத்தின் கீழே
கெட்ட ஜென்தென்று நபி சொன்னார்
இதை நம்பி உன்னைக் காப்பாற்று

(உண்மையை)



## பாட்டு - 80

### பல்லவி

மனச்சாட்சி மாறாமல் மார்க்கநெறி மீறாமல்
வாழுவோர் சித்தி பெறுவார் - அவர்
வாழ்விலே வெற்றி பெறுவார் - அவர்
வாழ்விலே வெற்றி பெறுவார்

### சரணம்

1. பொன்னான வாழ்வினை மண்ணாக்கியோர்
மறுமைத் துன்பத்தில் துஞ்ச நேரும்
மண்ணான புத்தியை மாய்த்திட்ட விசுவாசி
மனச்சாந்தி பெற்று வாழ்வார் - என்றும்
மனச்சாந்தி பெற்று வாழ்வார்
உயிரான ஈமானில் உறுதிபெற்ற விசுவாசி
உலகுக்கே அஞ்சமாட்டார்
உறவென்ன துறவென்ன இரண்டுமே ஹுரூரென்று
இதயத்தில் உறுதிபெறுவார் - அவர்
இறைவனுக்காக வாழ்வார் (மனச்சாட்சி)

2. மறையறிவு பிழையென்று மறுக்கின்ற முஷ்ரீக்கின்
மனச்சாட்சி மறைந்தே போகும்
மனச்சாட்சி மாறினால் மனிதகுணம் இருக்காது
மண்ணுலகு தந்த பாடம்
மண்ணுலகு தந்த பாடம்
மறையறிவு பெற்றோர்க்கு மண்ணென்ன விண்ணென்ன
யாவுமே மழ்ஹறாகும்
மனம் போன போக்கிலே வாழாமல்
மனிதனாய் மணம்கமழ வாழ்வாரப்பா - அவர்
மறைபொருளை உணர்வாரப்பா (மனச்சாட்சி)

3. முக்காலத் திரையோடு முழுமைபெற முடியாது
கட்டவிழ்தல் கிட்டாதப்பா
கட்டவிழ்தல் கிட்டினால் கனவுலக வாழ்விலும்
கருணைக்கடலாவாயப்பா
கருணைக்கடலாவாயப்பா
ஹக்கையே உணர்ந்தவர் ஹக்கிலே வாழ்பவர்
கறையில்லா ஞானியாவார்
ஹக்கோடு ஒன்றிடக் கட்டவிழ்தல் பெற்றிட
கலிமாவின் துணைகொள்ளுவார் - அவர்
ஹக்கோடு இணைந்துகொள்ளுவார் (மனச்சாட்சி)

## பாட்டு - 81

### பல்லவி

ஆண்டவன் அடியார்க்கு அருள்செய்த ஞானம்
ஆத்தும சாந்திக்கு அவசியம் தியானம்
பெரியவனருளால் கிடைத்த - இஞ்ஞானம்
பேச்சுக்கு எட்டாத பேரின்ப போகம்
பேச்சுக்கு எட்டாத பேரின்ப போகம்

### சரணம்

1. தியானத்தின் ஸர்த்துடன் சீராகச் செயல்படு
சித்தெட்டும் சித்தத்தில் சீராக அமையும்
மறைவின்றி மலக்கூத்து மனதிலே தோன்றும்
மணபதைகள் காணாத மர்மங்கள் துலங்கும்
மார்க்கத்தின் இரகசியம் மனதிலே பதியும்
மறைத்திட்ட திரைநீங்கும் மழ்ஹறாய் அமைவாய்
(ஆண்டவன்)

2. கஞ்சாவில் மயங்கிய கலக்கமா ஞானம்
கரையில்லாக் கடலல்லோ ஹக்கனின் ஞானம்
வாக்கிலே வடிக்கொணா வான்மறைப்போதம்
வள்ளலார் எமக்கீந்த கலிமாவின் சாரம்
வம்பர்க்கு வழிகாட்டா ஞானோபதேசம்
வாழ்ந்திட நினைப்போர்க்கே நல்லுபதேசம் (ஆண்டவன்)

3. ஷில்சிலா மயக்கெல்லாம் சிறுபிள்ளைப் போக்கு
சீரற்ற சிந்தனையைச் சீராக்கும் தியானம்
அறியாதோர் கையாண்ட அமலெல்லாம் வேண்டாம்
ஆண்டவன் சொன்ன நல்லருள் வழியுண்டு
ஷிர்ருடைய நபிசென்ற நேர்வழியுண்டு
சிந்தனை செய்து நீ தியானத்தில் மூழ்கு (ஆண்டவன்)

4. பேரண்டம் யாவுமே நீயென்று ஆனால்
பெரியோனின் கலீபா நீ பேரருள் பெற்றாய்
உன்னை நீ உணராத உயிரற்ற பிணமாய்
உலகிலே வாழ்வது வாழ்க்கையேயல்ல
இறப்புக்குப் பின் மறுமை இருப்பதை நம்பி
கலிமாவின் வழிநின்று கரைகண்டு செல்லு (ஆண்டவன்)



## பாட்டு - 82

### பல்லவி

மந்தார மடையர்க்கு மதிபிறக்குமா - அவர்
மனச்சாந்தி வாழ்வுக்கு வழிபிறக்குமா

### அனுபல்லவி

உச்சாப்பு மடையர்க்கு உறவிருக்குமா - இல்லை
உண்மையை மறுப்போர்க்கு அறிவிருக்குமா (மந்தார)

### சரணம்

1. குதர்க்கத்தில் வாழ்வோர்க்கு குணமிருக்குமா - உண்மைக்
கொள்கையில் வாழ்வோர்க்கு குறையிருக்குமா
பொய்யிலே வாழ்வோர்க்கு உயிரிருக்குமா - அவர்க்குக்
கையிலே கூலியுண்டு கண்திறக்குமா
பொய்யான போக்குக்குப் புகழ் வேண்டுமா - இல்லை
புவியோரை ஏமாற்றப் புகழ் வேண்டுமா (மந்தார)

2. மனச்சாட்சியற்றோர்க்கு மதம்மாறுமா - கொண்ட
கொள்கையை அறியார்க்குக் குணமிருக்குமா
கோமாளி வாழ்வுக்கு நிறைவிருக்குமா - அவரைக்
கொடும்பாபி எனக்கூறில் குறையிருக்குமா
அணையாத துயருக்கு அளவிருக்குமா - அவர்
ஆத்துமா சாந்திக்கு வழிகிடைக்குமா (மந்தார)

3. கீழ்ஜாதிப் பறவை அத்திப் பழமுண்ணலாம் - அது
உண்டபின் வாந்தியில் மல்லாடலாம்
இருள் படிந்த உள்ளத்தில் ஒளி தோணுமா - இல்லை
திரைபடிந்த மனம் கலிமா மணம் காணுமா
சிறகொடிந்த பறவைக்குச் சீர்கேடுதான் - கெட்ட
மந்தார மடையருடல் நரகோடுதான்
(மந்தார)

4. இதயத்துக்குயிருட்டும் இறை சொன்ன தியானம் - உன்
இருட்திரையை நீக்கி உனையுணர்த்தி வைக்கும் ஞானம்
இறையோனுக்கிணை கொண்ட தாக்கமா வாழ்வு
இயற்கைக்கு முரணான ஆக்கமா வாழ்வு
நோக்கறியாப் போக்கினால் வெந்து நொந்த உள்ளம்
நோக்குள்ள தியானத்தால் சாந்திபெற்று வாழும்
(மந்தார)



## பாட்டு - 83

### பல்லவி

ஆடியோடி அலுப்படைந்த ஆண்மகனே கேளடா
ஆசையுனக்கு ஏன் பிறக்குது ஆழ்ந்து சிந்தித்துப்பாரடா
ஆழ்ந்து சிந்தித்துப்பாரடா

### அனுபல்லவி

பிறந்ததற்கு நோக்கமுண்டு புரிந்துகொண்டு வாழடா
பிறவிப்பயனைப் பெறுவதற்கு உரிய வழியைத்தேடடா
உரிய வழியைத்தேடடா (ஆடியோடி)

### சரணம்

1. இன்பதுன்பம் நன்மை தீமை இருவினையும் சாந்திக்கே
அறிவு வீசும் ஆசை வலையைச் சபலபுத்தி கையாளா
தற்கொலை கூடச் சாந்திக்காகச் சகலரும் இதை உணரணும்
சபலபுத்தியில் முளைத்த ஆசை சத்துருவாய் மாறலாம்
நிறை நிலையைத் தேடும் ஆசை நித்யசாந்தி பெற்றிடும்
நித்யசாந்தி பெற்றிடும் (ஆடியோடி)

2. விருப்பு வெறுப்பு இனிப்புக்கசப்பு அமைதி பிடிக்கும் வலையப்பா
அமைதி பிடிக்கும் வலையப்பா
அறிவு பெற்ற ஆத்துமாவின் அனைத்துக் குணமும் வலையப்பா
அனைத்துக் குணமும் வலையப்பா
விளக்கம் பெற்ற அறிவின் வலையில் அமைதி நிச்சயம் கிடைத்திடும்
சபலபுத்தி வீசும் வலையில் சல்லும் புல்லும் கிடைக்கலாம்
பேதபுத்தியை விட்டுவிட்டு பெரியோன் சொற்படி வாழ்ந்துகொள்
பெரியோன் சொற்படி வாழ்ந்துகொள் (ஆடியோடி)

3. ஆசையற்ற ஜீவனில்லை நோக்குக்கேற்ப ஆசைகொள்
நோக்குக்கேற்ப ஆசைகொள்
ஆசை சாந்தியை அடைவதானால் அறிவில் தெளிவு அவசியம்
அறிவில் தெளிவு அவசியம்
ஆசை குறியை மீறுமானால் அகிலம் நரகாய் மாறிடும்
இறைதிருப்தியைத் தேடும் ஆசை இன்ப சாந்தியை அடையலாம்
அறிவே சாந்தி அறிந்துகொண்டால் ஆத்மாசாந்தி அடைந்திடும்
ஆத்மாசாந்தி அடைந்திடும் (ஆடியோடி)

## பாட்டு - 84

### பல்லவி

என்றென்றும் சாந்தியில் இன்புற்று வாழ்ந்திட
இறைவேதம் வழிசொல்லுதே - அந்த
ஏகனின் சொல்லினை ஏற்று நடப்பவர்
எரிநரகேகாரப்பா - அவர்
இறை நேசராவாரப்பா

### சரணம்

1. பற்றற்ற வாழ்வு பகற்கனவு - இது
பற்றற்ற சமதில் மறையும்வரை
ஊனென்ன உடையென்ன பேச்சென்ன மூச்சென்ன
யாவுமே பற்றுள்ள செயலல்லவா
யாவுமே பற்றுள்ள செயலல்லவா
பிணக்கோடு வாழும் நோக்கமென்ன - நீ
பேரின்பம் தேடும் நோக்கமென்ன
பற்றையே பற்றினால் வெல்லணுமே - நீ
பற்றும் பொருளை உணரணுமே
பற்றை முறைப்படி பயன்படுத்து - நீ
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய்
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய் (என்றென்றும்)

2. தேவையே ஆசையைத் தோற்றுவிக்கும் - அந்த
ஆசையே பற்றை வளர்த்தெடுக்கும்
இறையை உணர்வதும் பற்றல்லவா - நீ
இம்மையில் வாழ்வதும் பற்றல்லவா
இகபர ஆசையே பற்றல்லவா
இகபர ஆசையே பற்றல்லவா
குறை நிறை காண்பதும் பற்றல்லவா - நீ
கொள்கையில் வாழ்வதும் பற்றல்லவா
பற்றில்லாச் செயலினால் பலன்கிட்டுமா - இறை



பாதை புரியாமல் பற்றறுமா
பற்றை முறைப்படி பயன்படுத்து - நீ
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய்
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய் (என்றென்றும்)

3. கல்லோடு கல் மோதில் தீயுண்டாகும் - உள்ளக்
கறையோடு கறை மோதில் அழிவுண்டாகும்
கொள்கையே ஒன்றானால் கருணைமழை - அங்கு
கருமேகம் தோன்றும் கலைந்துவிடும்
கருமேகம் தோன்றும் கலைந்துவிடும்
எல்லோர்க்கும் சொன்னானே எம்இறைவன் - இதை
ஏற்றிடாப் பேர்வழி ஏமாளி
ஏமாளிப் போக்குனை ஈடேற்றா - நீ
ஏகனின் சொல்லை எடுத்துநட
பற்றை முறைப்படி பயன்படுத்து - நீ
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய்
பற்றற்ற சமதில் மறைந்திடுவாய் (என்றென்றும்)

## பாட்டு - 85

### பல்லவி

மண்ணறை வாழ்வை மறந்துவிட்டாய்
மார்க்கத்தின் கொள்கையை இழந்துவிட்டாய்
மன்னிப்பு உண்டு மனமாற்றம் பெற்றால்
மறதியை நீக்கி நீ வாழ்ந்துகொள்ளு
மறதியை நீக்கி நீ வாழ்ந்துகொள்ளு

### சரணம்

1. சோதனை வேதனை உயர்த்தும் வழி
சாதனை என்பது சொர்க்க வழி
சோதனையில்லா மன்னுயிரில்லை
சோர்வடைந்தாயா சொர்க்கமும் இல்லை
இஸ்லாத்தின் கொள்கையை எடுத்துக்கொள்ளு
இயற்கை வழியில் வாழ்ந்துகொள்ளு
ஈருலகாட்சி இறைவனின் கையில்
இருப்பதைப் பொருந்தி வாழ்ந்துகொள்ளு
இருப்பதைப் பொருந்தி வாழ்ந்துகொள்ளு

(மண்ணறை)

2. இன்பம் துன்பம் இடர்தரலாம்
இருட்திரை உன்னை மயக்கிடலாம்
கொள்கையில் நிலையாய் அமைந்துவிடில் என்றும்
கொடுவினை உன்னை அசைக்காது
கோலத்தை வீசி எறிந்துவிடு
கொள்கையை விளங்கித் தெளிந்துகொள்ளு
குதர்க்கத்தில் வாழ்ந்த வாழ்க்கையை விட்டு
கோமான் நபிவழி வாழ்ந்துசெல்லு
கோமான் நபிவழி வாழ்ந்துசெல்லு

(மண்ணறை)



3. ஏமாற்றுப் போக்குனை ஏமாற்றும்
இயற்கை நெறியை இருளாக்கும்
முனாபீக் வாழ்க்கை முக்திதரா - அந்த
மூடரின் பேச்சு புத்திதரா
கோளைகள் பேச்சுக் குறைதீர்க்கா
கொடியவர் பேச்சும் நிறைவுதரா
கொள்கையிலூன்றி வாழ்ந்துசெல்லு
கோமான் நபியின் சிபாரிசுண்டு
கோமான் நபியின் சிபாரிசுண்டு

(மண்ணறை)

4. மடமையை மார்க்கமாய்க் கொள்ளாதே
மனிதரை மடமையில் தள்ளாதே
புனிதனாய்வாழு பொறுமைகொள்ளு - இந்த
பூவுலகெல்லாம் உதவியுண்டு
மறுமை வாழ்வை மனதில்கொண்டு
மார்க்கத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளு
மரணத்தின் முன்பே மறுமையின் நிலையை
மனதார உணரலாம் அறிந்துகொள்ளு
மனதார உணரலாம் அறிந்துகொள்ளு

(மண்ணறை)

## பாட்டு - 86

### பல்லவி

காயகற்பக் கலிமா கல்பின் கறையை நீக்கும் மாத்திரை
கொண்ட பின்பும் உண்ணாதோர்க்கு கல்பின் கதவில் முத்திரை
கல்பின் கதவில் முத்திரை

### சரணம்

1. மூலமந்திரக் கலிமா உனது முத்திரையை நீக்கிடும்
முழுமைபெற்ற மனிதனாக முக்தியிலே சேர்த்திடும்
சபலபுத்தியை நீக்கிவிட்டுச் சாந்திவழியை காட்டிடும்
சாத்தானை நீ வெற்றிகொள்ளும் சக்தியை உனக்கீந்திடும்
சாந்திதேடி அலையவேண்டாம் சாந்தி உள்ளத்தமைந்திடும்
சரித்திரத்தை நோட்டமிட்டால் சங்கதி உனக்குப் புரிந்திடும்
சங்கதி உனக்குப் புரிந்திடும் (காயகற்ப)

2. தேடியடைந்த செல்வமெல்லாம் மரணத்தோடு மறைந்திடும்
மரணமற்ற வாழ்வு எமக்கு மறுமைவரையில் இல்லையே
இறக்குமுன்பே ஈமானை நாம் ஏற்றுக்கொண்டு செல்லணும்
ஈமானுள்ள மனிதனுக்கு என்றும் சாந்தி நிச்சயம்
இருட்திரையை நீக்கியோர்க்கு இவ்விடயம் புரியலாம்
இறைவன் சொன்ன வார்த்தையிது இறப்பில்லாத சத்தியம்
இறப்பில்லாத சத்தியம் (காயகற்ப)

3. ஆசைகொண்ட பொருட்கள் எவையும் ஆகிறாவில் கைதரா
ஆத்ம சாந்தி அடைவதானால் விசேட கிருபை அவசியம்
ஈருலகிலும் விசேட கிருபைக்கீமான் உனக்கு அவசியம்
இன்ப துன்ப இடரில்லாமல் ஈருலகிலும் வாழலாம்
மோட்சம் கடந்துன் முதல்வனோடு மூழ்கும்மந்திரம் கலிமாதான்
முக்திபெற்ற நபிமார் தந்த மூலமந்திரம் கலிமாதான்
மூலமந்திரம் கலிமாதான் (காயகற்ப)

4. சாதி சமய பேதமெல்லாம் சாத்தான் போட்ட சதித்திட்டம்
சகல கால மனிதருக்கும் சாந்திப் பாதை ஒன்றேதான்
சாத்தான் பிடியில் மாட்டிக்கொண்டோர் சாதி சமயம் கணிக்கட்டும்
சகல மக்களும் ஓர்குடும்பம் சரித்திரத்தைப் படித்தறி
உண்மைச்சாந்தி யாவருக்கும் உள்ளத்துண்டு உணர்ந்தறி
உருக்குலைத்து விட்டிடாமல் தியானம் செய்து கண்டறி
தியானம் செய்து கண்டறி (காயகற்ப)



## பாட்டு - 87

### தொகையறா

கோதறப்பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வை வாய் அரம்பையர் வாழ்ந்தும்
போதகர் நபியின் கொள்கை - புவியோரை
புனிதராய் மாற்றுமன்றோ

### பல்லவி

ஆயிரம் கொள்கைகள் அவசியமா - அவை
அனைத்துமே அமைதியைத் தந்திடுமா
(ஆயிரம்)

### சரணம்

1. சந்தர்ப்ப வாதம் பொருந்தாது
சந்தர்ப்ப வாதம் பொருந்தாது - அது
சாந்திக்கு வழியைக் காட்டாது
இருட்திரையுள்ள உள்ளத்திலும் - அங்கே
இருக்குதே சாந்தி பள்ளத்திலே
இருதயத் திரைகள் நீங்கவென்றால் - நீ
இணைநீக்கும் கலிமாவை எடுத்துக்கொள்ளு
இணைநீக்கும் கலிமாவை எடுத்துக்கொள்ளு
(ஆயிரம்)

2. அறிவும் ஆண்மையும் அமைந்துவிடில்
அறிவும் ஆண்மையும் அமைந்துவிடில் - உன்
ஆளுமை அங்கே பிறந்துவிடும்
ஈருலகின்பம் நிச்சயம்தான் - உன்
இறைவனின் பொருத்தமும் சத்தியம்தான்
வான்மறைப் போதனையை மறக்காதே - நீ
வள்ளலார் வழியை இழக்காதே
வள்ளலார் வழியை இழக்காதே
(ஆயிரம்)

3. பகுக்கும் திறமை வழிகாட்டும்
பகுக்கும் திறமை வழிகாட்டும் - அது
பகுபடும் பொருள்வரை தெளிவாக்கும்
பகுபடாப் பொருளில் அமைவதென்றால் - உன்
பகுத்தறிவங்கே நூறாகும்
பகுக்கும் அறிவு உலகோடு - உனைப்
படைத்தவன் தொடர்பு நூறோடு
படைத்தவன் தொடர்பு நூறோடு

(ஆயிரம்)

4. சொல்லைச் செயலைச் சீர்படுத்து
சொல்லைச் செயலைச் சீர்படுத்து - உன்
சோம்பேறிக் குணத்தைப் பாழ்படுத்து
உண்மையைப் பொய்யுடன் கலக்காதே - நீ
உலுத்தனாய் வாழ்ந்து இறக்காதே
வாழ்க்கை என்பது வழிநடத்தல் - இதை
வல்லோன் சொற்படி நெறிப்படுத்து
வல்லோன் சொற்படி நெறிப்படுத்து

(ஆயிரம்)



## பாட்டு - 88

### பல்லவி

உள்ளொன்று புறமொன்று கொள்ளாதேடா - தம்பி
உத்தமர் போதனையைத் தள்ளாதேடா
உத்தமர் போதனையைத் தள்ளாதேடா

### சரணம்

1. நிலையான உடலென்று கொள்ளாதேடா - தம்பி
நிம்மதி வாழ்வுக்கு வழிதேடடா
முதியோரின் அனுபவத்தைத் தள்ளாதேடா - நீ
முனாபீக்காய் வாழ்ந்திறந்து செல்லாதேடா
அணையாத பெரும்நெருப்பில் வீழாதேடா - தம்பி
அறிவற்ற மிருகமாய் வாழாதேடா
அறிவற்ற மிருகமாய் வாழாதேடா

(உள்ளொன்று)

2. நிலையான சாந்திதரும் ஈமானடா - உன்னை
நித்தியனாய் வாழவைக்கும் ஈமானடா
அச்சத்தைத் தீர்த்துவைக்கும் ஈமானடா - உன்
அறிவொளியை நிரப்பிவைக்கும் ஈமானடா
துர்க்குணத்தை நீக்கிவைக்கும் ஈமானடா - உன்
துயர்நீங்க வழிகாட்டும் ஈமானடா
துயர்நீங்க வழிகாட்டும் ஈமானடா

(உள்ளொன்று)

3. பகல்வேடம் போடுவோர் பணம் தேடலாம் - அவர்
பகட்டாக வாழ்ந்துலகை ஏமாற்றலாம்
ஏமாற்றும் பேர்வழியே ஏமாறுவான் - அவன்

ஈருலக வாழ்விலுமே இன்னலடைவான்
இனங்கண்டு வாழ்வோரே ஈடேறுவார் - அவர்
இம்மையிலும் மறுமையிலும் சாந்திபெறுவார்
இம்மையிலும் மறுமையிலும் சாந்திபெறுவார்
(உள்ளொன்று)

4. திரைபடிந்த உள்ளத்தில் திசைதோணுமா - உண்மை
தீன்கலிமா வழிசெல்லத் துணிவாகுமா
மருட்சியில் வாழ்வோர்க்கு மனம்நிறையுமா - அவர்
மனச்சாந்தி வாழ்வுக்கு வழிபிறக்குமா
அறிவற்ற மனிதனுக்கு அருள்கிட்டுமா - அவர்
அன்றாட வாழ்க்கையிலும் நெறிகிட்டுமா
அன்றாட வாழ்க்கையிலும் நெறிகிட்டுமா
(உள்ளொன்று)



## பாட்டு - 89

### பல்லவி

இதயத்துக்குயிருட்டும் தியானம் - உண்மை
இறைவழியில் செல்வோர்க்குப் பிறக்குமே ஞானம்
பிறக்குமே ஞானம்

### சரணம்

1. ஈருலக வாழ்விலும் ஈடேற்றும் ஞானம்
இயற்கை வழி வாழ்வோர்க்கு இறைவன் தரும் தானம்
மார்க்க நெறி காப்போர்க்கு மகிழ்வு தரும் ஞானம்
மகிழ்வு தரும் ஞானம்
மந்தார புத்தியை மாற்றிவிடும் தியானம்
மாற்றிவிடும் தியானம் (இதயத்துக்கு)

2. மயக்குலகில் வாழ்ந்திறந்து மஹ்ஸறில் எழுந்தால்
மனச்சாந்தியுடன் ஜன்னத்தில் நுழைக்குமே தியானம்
எக்குறையுமில்லா இன்சானாய் மாற்றி
இன்சானாய் மாற்றி
இறைகிருபை பெறும் வழியை ஈயுமே ஞானம்
ஈயுமே ஞானம் (இதயத்துக்கு)

3. மண்குதிரை ஏறியோர் கடல்கடக்க முடியா
மரக்கலத்தில் ஏறியோர் கடல்கடக்க முடியும்
மரக்கலம் கொள்கைதான் மண்குதிரை ஷிர்க்கு
மண்குதிரை ஷிர்க்கு
இப்லீசைத் துணைகொண்டோர்க்கு இரட்சிப்பே இல்லை
இரட்சிப்பே இல்லை (இதயத்துக்கு)

4. பொன் கொழிக்கும் புவிவாழ்வைப் புதுமையில் கழித்தோர்
புகழ் பூத்த ஜன்னத்தை மஹ்ஸறில் இழப்பார்
அணையாத நரகத்தை அணைக்குமே கொள்கை
அணைக்குமே கொள்கை
அறிவிருந்தால் அதைக்கொண்டு ஆதியிடம் செல்லு
ஆதியிடம் செல்லு (இதயத்துக்கு)

## பாட்டு - 90

### பல்லவி

கஸ்டத்தோடு சுகமிருக்குது கடவுள் சொன்ன வார்த்தை - அதைக்
கருத்திலிருத்திக் கருமமாற்று கவலையெல்லாம் நீங்கும்
கவலையெல்லாம் நீங்கும்

### சரணம்

1. கஸ்டநஸ்டம் பொதுமைச்சொத்து
கடவுள்செய்த விதியையொத்து
கருமமாற்று மறையையொத்து
கஸ்டநஸ்டம் தீரலாம் - உன்
கஸ்டநஸ்டம் தீரலாம்
இறைவன் தந்த இயற்கைவிதியை
ஏனோமீறி வாழ்கிறாய்
ஏனோமீறி வாழ்கிறாய்
இயற்கை வழியை மீறி வாழில்
ஈருலகிலும் துன்பமே ஈருலகிலும் துன்பமே (கஸ்ட)

2. காரணத்தை மீறுகின்ற காரியங்கள் ஏதப்பா
கடவுள் போட்ட இயற்கை விதியை
கட்டவிழ்ப்போர் யாரப்பா
கட்டவிழ்ப்போர் யாரப்பா
விபரக்கற்பனை விதியைக் கொண்டே
விண்ணும் மண்ணும் இயங்குது
விண்ணும் மண்ணும் இயங்குது
இயற்கைவழியை மீறி வாழ்ந்தால்
ஈருலகிலும் துன்பமே ஈருலகிலும் துன்பமே (கஸ்ட)

3. விதியை மறுக்கும் மனிதனுக்கு வீணேகாலம் கழியுது
விளக்கமில்லாச் செயலினாலே
விரக்தி உள்ளத்தமையுது
விரக்தி உள்ளத்தமையுது
விரக்தி தீரவழியைக் கூறும் வேதவாக்கைக் கண்டறி
இயற்கை வழியை மீறி வாழ்ந்தால்
ஈருலகிலும் துன்பமே ஈருலகிலும் துன்பமே (கஸ்ட)



## பாட்டு - 91

### பல்லவி

உறவாடு உறவாடு உடனிருக்கும் உன் இறைவனுடன் - நீ
உறவாடு உறவாடு

### சரணம்

1. திரையைக் கொண்டே பேசுகிறான்
அவன் சிந்திக்கச் சொல்லி ஏவுகிறான்
உன்சியத் என்றால் அறிவாயா - அது
இன்சான் இயல்பென்று புரிவாயா
குர்ஆன் என்பது சொல் விளக்கம் - இந்த
குவலயம் எல்லாம் செயல் விளக்கம்
பிராத்தனை என்பது உறவாட்டம் - அது
பேரின்ப வாழ்வுக்கு வழிவகுக்கும் (உறவாடு)

2. இறை உறவில்லான் இன்சானா - அவன்
இதயத்திருப்பவன் ஷைத்தானே
ஷைத்தான் புலன்களை வசப்படுத்தி - உன்னை
சீர் கெட்ட மிருகமாய் மாற்றிடுவான்
இயல்புக்கு முரணாய் வாழ்ந்திறந்தால் - அந்த
இயற்கைவிதியே உன்னை சுட்டெரிக்கும்
இருட்திரை அகலப் போராடு - உன்
இறைவனுடன் என்றும் உறவாடு (உறவாடு)

3. மறையை விளங்கித் தெளிவுபெறு - உன்
மனதைத்திருத்தி ஒளிவு பெறு
உறுதி கொண்டு உணர்வு பெறு - நீ
உலக வாழ்வில் அமைதி பெறு
உத்தமர் வழியை எடுத்துக் கொள்ளு - நீ
உத்தம புருடனாய் வாழ்ந்து கொள்ளு
ஹவ்லுல் கவ்தரில் நீராடி - நீ
கரையில்லா இறையோடு கலந்துவிடு (உறவாடு)

4. வான் புவி கடல் மலை கடவுளுரு - அந்த
காலமே இணையில்லாக் கடவுளடா
அவனன்றி அணுவும் இல்லையென்றால் - இந்த
அண்டமும் பிண்டமும் அவனுருவே
ஆவதும் அழிவதும் அறிவிலடா - உயர்
கலிமாவின் கருத்தை உணர்ந்து கொண்டால்
மருட்சியை நீக்கி நீ மன்றாடு - உன்
இறைவனுடன் என்றும் உறவாடு (உறவாடு)



## பாட்டு - 92

### பல்லவி

மனிதன் தன்னை அறிந்து கொள்ள
அறிவில்லாமல் அலைகிறான்
வரட்டுக்கௌரவத்திமிரில் வாழ்ந்து
ஹாவியாவில் நுழைகிறான்

### சரணம்

1. ஆதாரங்கள் அநேகமுண்டு
ஆயும் திறமை அறிவுக்குண்டு
கோவணத்தைக் கட்டிக்கொண்டு
குகையில் வாழவேண்டுமா - கஞ்சாக்
குழலும் கையில் வேண்டுமா
தன்னைவிட்டும் வேறாய்க்கணித்த
தலைவனுணர்வு கிடைக்குமா
உடனிருக்கும் கடவுள்சொன்ன
உரியவழியைக்கண்டறிந்து
உறுதியோடு தியானம் செய்தால்
உன்னை நீயே உணரலாம்
இறையுணர்வும் கிடைக்கலாம்
(மனிதன்)

2. தாடிதலைப்பாகையோடு
நீண்ட மணிக்கோவையோடு
ஷிர்க்கில் மூழ்கி வாழ்வோர்க்கு
நித்ய சாந்திகிட்டுமா - அவரை
நரக நெருப்பு தீண்டுமா
பொய்யும் புரட்டும் முரட்டுக்குணமும்
உன்னை உருட்டி வீழ்த்துது
உடனிருக்கும் இறைவனை நீ
உணரும் வாய்ப்பை மறைக்குது
உண்மை வழியைக்கண்டறிந்து
உறுதியோடு தியானம் செய்
உன்னையே நீ உணரலாம் (மனிதன்)

## பாட்டு - 93

### பல்லவி

கலிமாப் பொருளில் கரைந்துவிடு - நீ
ஹக்கோடு ஹக்காக ஒன்றிவிடு

### அனுபல்லவி

ஷிர்க்கிலே வாழ்ந்திறந்து செல்லாதேடா - அந்த
தீயுலகு பொல்லாது செல்லாதேடா (கலிமாப்)

### சரணம்

1 தியானத்தைவிட்டு நீ வாழாதேடா - இறை
தீதாறைப்பெற்றிட வாய்க்காதடா
உள்ளத்தை திக்றில் இணைத்துக்கொண்டால் - அந்த
உள்ளமே அர்ஷாகத் தோணுமடா
சொல்லாலும் செயலாலும் கருத்தாலும் ஒன்றான
உண்மையை உள்ளத்தில் ஏற்றெடுத்து
கலிமாப் பொருளில் கரைந்துவிடு - நீ
ஹக்கோடு ஹக்காக ஒன்றிவிடு (கலிமாப்)

2. வாழ்விலே பாதி தூக்கமடா - மீதி
வாழ்விலும் சேதி ஏக்கமடா
உண்மையை ஏற்றிட்ட உள்ளமது - இறை
ஜோதியைப்பெற்று நிலைக்குமடா
ஹௌலுல் கௌதராய் மாறுமடா - உள்ளம்
ஹக்கின்தரிசனம் காணுமடா
கலிமாப்பொருளில் கரைந்துவிடு - நீ
ஹக்கோடு ஹக்காக மறைந்துவிடு (கலிமாப்)



3. ஈமானுக்கென்றொரு சக்தியுண்டு - அது
இம்மைமறுமையைச் சீர்படுத்தும்
கொள்கையறியாக்குருடனாய் வாழில்
கொடுநெருப்புன்னை ஈர்த்தெடுக்கும்
இறைவனே சொன்ன இயற்கைவிதி - இது
என்றென்றும் மாறாத மார்கவிதி
கலிமாப்பொருளில் கரைந்துவிடு - நீ
ஹக்கோடு ஹக்காக மறைந்துவிடு (கலிமாப்)

4. பேய்க்குலம்கூறும் பிதற்றலெல்லாம் - அந்த
பேரின்ப வாழ்வை மறைத்துவிடும்
ஆட்டைப்போல் மாட்டைப்போல் வாழாதே - அந்த
மார்க்கத்தின் கொள்கையை மீறாதே
துஷ்டரின் கொள்கையை மறந்துவிடு - இறை
தூதரின் கொள்கையில் கலந்துவிடு
கலிமாப்பொருளில் கரைந்துவிடு - நீ
ஹக்கோடு ஹக்காக மறைந்துவிடு (கலிமாப்)

## பாட்டு - 94

**பல்லவி**

அறிவில் தோன்றி அறிவில் மறையும்
அகிலம் உன்னை மயக்குதே
அறிந்து கொள்ள அறிவில்லாமல்
ஆசை அளவை மீறுதே
ஆசை அளவை மீறுதே

**சரணம்**

1 மயக்கபுத்தி மனிதப்பண்பை
மாற்றி உன்னை வீழ்த்துதே
மறைந்துகிடந்த மிருகப்பண்பு
மார்க்க நெறியை மீறுதே
மார்க்க நெறியை மீறுதே
மண்ணாய் மாறும் மனிதஉடலே
மனிதனென்று நம்பினாய்
மனிதனென்று நம்பினாய்
மறைந்தபின்பும் வாழ்வு உண்டு
மார்க்க நெறியைக் கடைப்பிடி
மார்க்க நெறியைக் கடைப்பிடி
மறுமை வாழ்வை மனதிருத்தி
மனிதனாக வாழ்ந்து செல்
மனிதனாக வாழ்ந்து செல் (அறிவில்)

2. கடவுள் தந்தபுலனுக்கேற்பக்
காணுமுலகு மாய்கையே
மாயை விபரம் புரிந்துவிட்டால்
மண்ணுலகும் மறைந்திடும்
மண்ணுலகும் மறைந்திடும்
எண்ண அலையின் ஆக்கம் சிருஷ்டி
இதயம் ஏற்றால் இணையில்லை
இதயம் ஏற்றால் இணையில்லை



இணையை நீக்கும் இயல்பு வாய்த்தால்
என்றும் எங்கும் பேரின்பம்
என்றும் எங்கும் பேரின்பம்
இதயசுத்தியோடு தியானம்
செய்தால் உண்மை தரிபடும்
செய்தால் உண்மை தரிபடும் (அறிவில்)

3. கையில் வெண்ணெய் இருக்கும்போது
நெய்யைத் தேடிஅலைகிறாய்
இஸ்கு என்ற நெருப்பில் உருக்கில்
நெய்யே தானாய் வெளிவரும்
நெய்யே தானாய் வெளிவரும்
உதவாக்கரைகள் உளறலாலே
உருக்குலைந்து போகாதே
உருக்குலைந்து போகாதே
உண்மை வழியை எடுத்துக்கொண்டால்
உள்ளம் சாந்தியடைந்திடும்
உள்ளம் சாந்தியடைந்திடும்
இதயசுத்தியோடு தியானம்
செய்தால் நிலைமை சீர்படும்
செய்தால் நிலைமை சீர்படும் (அறிவில்)

## பாட்டு - 95

### பல்லவி

நாளொருமேனி பொழுதொரு வண்ணம்
நாட்டியமாடுதடா - உள்ளம்
நாட்டியமாடுதடா

### அனுபல்லவி

மூடர்கள் போட்ட மூக்கணாங்கயிறு
உண்மையை மறைக்குதடா - மனிதா
உண்மையை மறைக்குதடா
உண்மையை உணர்ந்தும் உலகுக்கு உரைக்கா
ஊமையாய் மாற்றுதடா - உன்னை
ஊமையாய் மாற்றுதடா (நாளொரு)

### சரணம்

1. இறைவன் ஈந்த இணைநீக்கும் கலிமா
இஸ்லாத்தின் உயிரல்லவா - மனிதா
இஸ்லாத்தின் உயிரல்லவா
ஏற்பவர் கொள்ளட்டும் எதிர்ப்பவர் தள்ளட்டும்
நிர்பந்தம் கிடையாதே - தீனில்
நிர்பந்தம் கிடையாதே
காரணமில்லாக் காரியமில்லை
கடவுளின் நியதியிதுவாகும்
கடவுளின் நியதியிதுவாகும் (நாளொரு)

2. நரியொத்து வாழும் மனிதரின் கொள்கை
நரகத்தில் நுழைக்குமடா - மனிதா
நரகத்தில் நுழைக்குமடா
இறைவன் தந்த இஸ்லாத்தின் கொள்கை
ஜன்னத்தில் நுழைக்குமடா - மனிதா
ஜன்னத்தில் நுழைக்குமடா
கற்பனையான கலிமத்துல் கபிஸா
கரைசேர்த்து வைக்காதே - உன்னை
கரைசேர்த்து வைக்காதே (நாளொரு)



3. மணக்கும் கலிமாவின் குணத்துடன் வாழில்
மகத்தான வெற்றியடா - மனிதா
மகத்தான வெற்றியடா
பணம் தேடும் நோக்குடன் பகல்வேடம் போடில்
படுகுழி நரகமடா - மனிதா
படுகுழி நரகமடா
பகுத்து உணர்ந்து பாதையில் செல்வோர்
ஒளியுலகெய்தி மகிழ்வார் - அவர்
உண்மையுடன் ஒன்றிவிடுவார்
ஏகத்திலே வாழ்ந்து நிலைப்பார் (நாளொரு)

## பாட்டு - 96

**பல்லவி**

காற்றடிக்கும் கடற்பரப்பில் கடின அலை சூழும்
ஆழ்கடலின் கீழ்ப்பரப்பில் அமைதி அங்கேவாழும்

**அனுபல்லவி**

மாறுபட்ட ஆசை வீசும் மனமே வைலாய் மாறும்
மார்க்க நெறியில் வாழும் மனதில் மஹ்ஸர் நிலைமை தோணும்
(காற்றடிக்கும்)

**சரணம்**

1. வெளிமனத்தில் வீசுகின்ற வேஷமென்ற காற்று
புலனறிவு போட்டுக் கொண்ட புவியுலகக் காட்சி
ஆழ்மனத்தில் அலையிருக்கா அனுபவமே சாட்சி
உரியவழியைக் கண்டறிந்து உறுதிபெற்று வாழு
உறுதிபெற்று வாழு (காற்றடிக்கும்)

2. அலையில்லாத ஆழ்மனத்தில் அமைந்திருக்கும் ஜோதி
ஒளியுலகில் வாழ்வதற்கு உதவியந்த ஜோதி
உத்தமர்கள் சொன்னசேதி உண்மை அனுபூதி
உண்மை பொய்யைக் கண்டறிந்து உறுதிபெற்று வாழு
உறுதிபெற்று வாழு (காற்றடிக்கும்)

3. மனிதப்பண்பை மறந்திடாமல் மனிதனாக வாழணும்
மறையினறிவில் நிறைவுகண்ட புனிதனாக வாழணும்
உள்ளம் சாந்தி பெற்றுவாழ உரிய வழியைக் கண்டறி
உண்மையான ஈமானோடு மு.்.மீனாக வாழ்ந்து செல்
மு.்.மீனாக வாழ்ந்து செல் (காற்றடிக்கும்)



## பாட்டு - 97

**பல்லவி**

பிறக்குமா இன்பம் பிறக்குமா
பறக்குமா துன்பம் பறக்குமா

**சரணம்**

1. இருளில் மூழ்கி மருளில் வாழில்
இதயம் சாந்தி காணுமா
கொள்கையில்லாக் குருட்டுவாழ்க்கை
கொடியோனாயுனை மாற்றுமே
கோடிப்பொன்னைக் குவித்தபோதும்
கோமான் கருணைகிட்டுமா
மாய உலக மருட்சிவாழ்வு
மறுமையின்பம் காணுமா
மறுமையின்பம் காணுமா (பிறக்குமா)

2. மதத்தின் கொள்கை மனிதகுலத்தின்
மருட்சி நீக்கத் தந்தானே
மடையர் கூட்டம் மாற்றிப்புரட்டி
மனித குலத்தை மடக்கினார்
பகுத்தறிவு படைத்த மனிதன்
பகுத்து உணர வேண்டுமே
கொள்கை நழுவா வாழ்வமைந்தால்
கொடிய நரகு தீண்டாதே
கொடிய நரகு தீண்டாதே (பிறக்குமா)

3. மணக்கும் கலிமா மகிமையறிந்து
மனத்தில் பதிக்க வேண்டுமே
துவிதக்கொள்கையைத் தூக்கி வீசி
தூயோன் கொள்கையில் வாழ்ந்து செல்
மயக்குமுலக மனித வாழ்வை
மறையோடமைத்து வாழ்ந்துசெல்
இறக்குமுன்பே சாந்தி பெறலாம்
இறைவன் சன்னிதி சேரலாம்
இறைவன் சன்னிதி சேரலாம் (பிறக்குமா)

## பாட்டு - 98

**பல்லவி**

மறுமையின் வாழ்வை மறக்காதே
மறதியில் வாழ்ந்து இறக்காதே

**சரணம்**

1. பிறப்பின் நோக்கொடு வாழ்திறந்தால் - உன்
பேரின்பவாழ்வு சத்தியம்தான்
மறதியில் வாழ்ந்து மடையனாய் இறந்தால்
மறுமையில் துன்பம் நிச்சயம்தான்
மறுமையில் துன்பம் நிச்சயம்தான்
வாளொடு தோள்மோதி
வளர்த்த தீன் கொள்கையை
வழுவவிடுவதே பெரும்பாபம்
வழியறியாமல் நெறி புரியாமல்
வாழ்க்கையில் சாந்தி அமையாது
வாழ்க்கையில் சாந்தி அமையாது
கொள்கையை மறந்து குருடனாய் வாழ்ந்து
கொதி நரகேகாதே - நீ
கொதி நரகேகாதே (மறுமை)

2. ஆணவம் கன்மம் மாயையும் நீங்கில்
அமைதி அங்கே குடிகொள்ளும்
ஆசையும் கோபமும் அளவினைமீறினால்
அரக்கர் குணமே குடிகொள்ளும்
அரக்கர் குணமே குடிகொள்ளும்
உலகே சதமென நினைத்தவர் வாழ்வு
உதவாக் கரையாய் அமைந்துவிடும்
உள்ளத்தில் ஈமான் நிலைபெறில் வாழ்வு
உலகுக்கே ஒளியூட்டும் உண்மை
உலகுக்கே ஒளியூட்டும் உண்மை
இறை தந்த கலிமாவை இதயத்திலிருத்தி
நிறைநிலைபெறுவாயே - நீ
நிறைநிலைபெறுவாயே (மறுமை)



3. இறப்புக்குமுன்பே இறந்து பிறந்திடில்
இதயத்தில் ஈமான் முழுமைபெறும்
இஸ்லாத்திலிதற்கோர் வழிதான் கலிமா
இயன்றவர் விளங்கிச் செயல்படட்டும்
இயன்றவர் விளங்கிச் செயல்படட்டும்
கொள்கையைப் புரட்டும் கோலத்தை நம்பிய
கொடியோனாய் வாழ்ந்து இறக்காதே
ஈமான் என்பது இறையுரிமை இது
இறந்து பிறக்காமல் இசைந்துவரா
இறந்து பிறக்காமல் இசைந்துவரா
மறைசொன்ன கொள்கையை
மறுத்திடும் உள்ளம்
மனிதனாய் வாழவிடா - உன்னை
மனிதனாய் வாழவிடா (மறுமை)

## பாட்டு - 99

### பல்லவி

அலையும் உள்ளத்தை அடக்கிவிடு - உன்
ஆத்தும சாந்திக்குவழி பிறக்கும்

### அனுபல்லவி

தரவுகள் நிறைந்த உள்ளமதைத்
தனிமைப்படுத்துதல் மிகக்கடினம்
தனிமையிலமையா உள்ளத்திலே
தலைவிரித்தாடும் ஷைத்தானியா

(அலையும்)

### சரணம்

1. உள்ளத்தை அடக்க ஓரேயோர்வழி
உயர்கலிமாவை உணர்வதுதான்
பன்மையை உணரும் பகுத்தறிவங்கே
மறைந்துவிடும் நூர்பிறந்துவிடும்
பாதை தெளிவாய்ப் புரிந்துவிடும் - பின்
பலவல்ல ஏகமென்றுணர்வுவரும்
மறைந்த அறிவு திரும்பவரும் - பின்
மன்கூல் மஹ்கூல் ஒருமைப்படும்
இதுவே இறையுணர்வடையும் வழி
இயன்றால் முயன்று நீ வெற்றிபெறு

(அலையும்)

2. போதைப் பொருளிதற்குதவாது
பொருள் புகழாசையும் பொருந்தாது
வேஷம் இதற்குவழிகாட்டா - உன்
வேதமே உண்மைக்கு வழிகாட்டும்
வேண்டாம் நரிக்குணம் நழுவவிடு - உன்
நாயகன் சொல்லை நம்பிநட



உலகை ஏய்க்க முயலாதே உன்னால்
உண்மையை மறைக்கமுடியாது
உள்ளத்தை ஓர்நிலைப்படுத்திவிடு உனக்கு
உண்மையோடொன்றுதல் கிடைத்துவிடும்

(அலையும்)

3. உள்ளம் என்பதோர் ஒளியுலகு - அது
உத்தமர் வாழ்வின் தனி அலகு
மடையரின் அறிவில் மறைந்திருந்தாலும்
மஹ்ஸூக்கின் அறிவில் மறைவதில்லை
பேரண்டம்யாவும் அதிலுள்ளதே - உன்
பேரின்ப வாழ்வும் அதன் அலைதான்
கலிமாவைக்கொண்டதில் கரைந்துவிடு - உன்
ஹக்கின் தரிசனை கிட்டிவிடும்
மறைக்கும் பொருளேதுமில்லையப்பா - உன்
மருட்சியே மறைக்கும் திரையாகும்

(அலையும்)

## பாட்டு 100

**பல்லவி**

அமைதியே இல்லா அவலத்தை நீக்க
அழைக்குதே தீன்கலிமா - உன்னை
அழைக்குதே தீன்கலிமா

**சரணம்**

1 அன்றாடவாழ்விலும் அமைதியில்லை
மன்றாட்டம் போட்டாலும் சாந்தி இல்லை
கொள்கையே இல்லார்க்கு குணமில்லை - நல்ல
குணமில்லா மனிதர்க்கு அமைதி இல்லை
பணத்தினாலமைதி கிடைப்பதில்லை - நல்ல
குணமிருந்தாலமைதி குடிகொள்ளும்

(அமைதி)

2. சிற்றின்ப நோக்குன்னைச்சிறைப்படுத்தும்
சீரற்ற வாழ்வினைத்தோற்றுவிக்கும்
பேரின்ப நோக்குன்னைப் பிணையேற்கும் - அது
பெரியோன் சமூகத்தில் சேர்த்து வைக்கும்
நித்திய சாந்தியில் நிலைபெற்றுவாழ
நேர்வழி காட்டிடும் தீன்கலிமா

(அமைதி)

3. ஆசையை அளவோடு எடுத்துக்கொண்டால்
அமைதிக்கு வழி அங்கேதென்படலாம்
எல்லோர்க்கும் பொதுவிதி பூவுலகில் - உண்மை
மு.ஃ.மீனுக்கென்றோர் தனி அலகு
கலிமாவைக்கொண்டோர் கரை சேரலாம் - அவர்
கல்பின் கதவெல்லாம் திறந்துவிடும்

(அமைதி)



4. விதியென்பதியற்கை நியதியப்பா அந்த
விதியை விதியே வீழ்த்திவிடும்
மருட்சியில் வாழ்வோர் மறுத்தாலும் - இதை
மதியுள்ள மனிதன் புரிந்து கொள்வான்
கட்டவிழ் நிலையைப் பெற்றுவிட்டால் - உன்னைக்
கலக்கிய விதிவேறாய் மாறிவிடும்

(அமைதி)

# பாட்டு - 101

**பல்லவி**

ஸிறாத்தென்ற பாதையில் சீராகச்சென்றிடச்
ஷிர்க்கறிவு ஒவ்வாதப்பா - அந்தப்
பெரியோனின் துணைகொண்டு பேரறிவைப்பெற்றிடில்
பிணக்கின்றிச் செல்லலாமே - நாம்
பிணக்கின்றிச் செல்லலாமே
உற்றாரும் பெற்றோரும் உதவாத நாளொன்று உண்மையாய் வந்தேதீரும்
உண்மையாய் வந்தேதீரும்

**சரணம்**

1 ஷிர்க்கென்ற சிறையிலே சிக்குண்ட மனிதர்க்கு
சிந்தனையில் தெளிவேதப்பா - அவர்
சிந்தனையில் தெளிவேதப்பா
சீரான வாழ்வமைக்கும் சிறப்பான கொள்கையை
சிந்திக்க மறக்காதப்பா - கொள்கையை
சிந்திக்க மறக்காதப்பா
உற்றாரும் பெற்றாரும் உதவாத நாளொன்று
உண்மையாய் வந்தேதீரும்
உண்மையாய் வந்தேதீரும் (ஸிறாத்)

2. கொடிமரத்தை நாட்டலாம் குத்துவிளக்கேற்றலாம்
கொதிநரகு நூராதடா - உள்ளக்
கொதிநரகு நூராதடா
கொள்கையில் வாழ்வோரைக்
கொதிநரகு தீண்டாது
குர்ஆனின் கூற்றல்லவா - இது
குர்ஆனின் கூற்றல்லவா
உற்றாரும் பெற்றாரும் உதவாத நாளொன்று
உண்மையாய் வந்தேதீரும்
உண்மையாய் வந்தேதீரும்
(ஸிறாத்)



3. பாருலகில் தோன்றிய பல்லாயிரம் நபிமார்
படுதுயரோடெத்திவைத்தார் - கொள்கையை
படுதுயரோடெத்திவைத்தார்
பயஹம்பர் இறுதியில் புர்கானின் கொள்கையை
பாரெல்லாம் பரத்திவைத்தார் - கொள்கையை
பாரெல்லாம் பரத்திவைத்தார்
உற்றாரும் பெற்றாரும் உதவாத நாளொன்று
உண்மையாய் வந்தேதீரும்
உண்மையாய் வந்தேதீரும்
(ஸிறாத்)

4. சீரற்றகல்வியில் சிக்குண்ட ஒரு சாரார்
திசைதிருப்பி விட்டாரப்பா - கொள்கையை
திசைதிருப்பி விட்டாரப்பா
சிந்தித்துத் தெளிவு பெறத்தெரியாத மனிதகுலம்
திசைமாறிச் செல்லுதப்பா - உலகு
திசைமாறிச் செல்லுதப்பா
உற்றாரும் பெற்றாரும் உதவாத நாளொன்று
உண்மையாய் வந்தேதீரும்
உண்மையாய் வந்தேதீரும் (ஸிறாத்)

## பாட்டு - 102

**பல்லவி**

அகத்தில் ஈமான் தரிபடில்
ஆத்மசாந்தி கிடைத்திடும்
ஆத்மசாந்தி அமைந்திடில் - நாம்
அர்ஸின் நிழலில் வாழலாம் - எம்
அர்ஸின் நிழலில் வாழலாம்
அரக்கர் குணமும் மாறலாம்
அரக்கர் குணமும் மாறலாம்

**சரணம்**

1. கோரவினையும் கொடிய அழிவும்
கொள்கையளித்த கோலமே
கொள்கையோடு வாழ்ந்து கொண்டால்
கோஷ்டி மோதல் குறையுமே - எம்
கொடிய அழிவும் நீங்குமே
கொடிய அழிவும் நீங்குமே (அகத்தில்)

2. ஏனெதற்கு எங்கே எப்போ
என்ற கேள்விகள் பிறந்திடில்
பகுத்தறிவு தொழிற்படும்
பக்குவமும் ஏற்படும் - எம்
பாதை சரியாய்ப்பிடிபடும்
பாதை சரியாய்ப்பிடிபடும் (அகத்தில்)

3. அரசின் நிழலில் வாழும் மக்கள்
ஆறுதல் பல கூறலாம்
ஆத்மா சாந்தியடைவதென்றால்
ஆண்டவன் சொல் கேட்கணும் - நாம்
ஆத்மவழியைத் தேடணும்
ஆத்மவழியைத் தேடணும் (அகத்தில்)



4. பணத்துக்காகப் பட்டம் பெற்றோர்
பசப்புவார்த்தை பகரட்டும்
பதவி மோகத்திமிரில் வாழ்வோர்
பாதைகண்டு ஏகட்டும் - நற்
பண்புகொண்டு வாழட்டும்
பண்புகொண்டு வாழட்டும்

(அகத்தில்)

## பாட்டு - 108

### பல்லவி

மூடியகண்களில் முழுமதி தோணா
முன்னவன் தீர்ப்பிதுதான் - மனிதா
முன்னவன் தீர்ப்பிதுதான்

### அனுபல்லவி

திரையுள்ள உள்ளத்தில் தீதாறின் ஒளிதோணா
திக்கெல்லாம் இருள்மயமே - மனிதா
திக்கெல்லாம் இருள்மயமே (மூடிய)

### சரணம்

1. ஐம்புலனறிவில் அமைந்த இவ்வகிலம்
ஆதியின் நாமமடா - மனிதா
ஆதியின் நாமமடா
ஐம்புலனடங்கில் அனைத்துமே மறைந்திடும்
அவனன்றி வேறேதடா - மனிதா
அவனன்றி வேறேதடா
அறநெறிகற்று அறிவோடு வாழ்ந்தால்
அமைதியைப் பெறுவாயடா - மனிதா
அமைதியைப் பெறுவாயடா (மூடிய)

2. வாலிபம் காமத்தில் வாட்டிவதைக்க
வண்டொத்து வாழ்ந்தாயடா - மனிதா
வண்டொத்து வாழ்ந்தாயடா
பொருள்தேடும் நோக்குனைப் பேயாகமாற்ற
பேரின்பம் பெறுவதெப்போ - மனிதா
பேரின்பம் பெறுவதெப்போ
புத்தியைத் துலக்கி புதுமையை நீக்கிப்
புனிதனாய் வாழணுமே - மனிதா
புனிதனாய் வாழணுமே (மூடிய)



3. அறிவில்லாப் போதையில் அலட்டிக் கொள்ளாதே
அமைதிக்கு வழிதேடடா - மனிதா
அமைதிக்கு வழிதேடடா
அறிவுக்கு நிகரான அருட்கொடை கிடையாது
அரக்கர்க்கு அமையாதடா - மனிதா
அரக்கரக்கு அமையாதடா
கொள்கையைப் பெற்றிறைக் குணம் கொண்டு வாழில்
கொடு நரகேகாயடா - மனிதா
கொடு நரகேகாயடா (மூடிய)

4. வழமையை மாற்றலாம் வாதத்தைப் போக்கலாம்
பிடிவாதம் நீங்காதடா - மனிதா
பிடிவாதம் நீங்காதடா
எத்தராய் வாழும் பித்தரின்அறிவு
பேரின்பம் காணாதடா - மனிதா
பேரின்பம் காணாதடா
பெரியோரை அணுகிப் பிடிவாதம் நீக்கி
பேரின்பம் பெறுவாயடா - மனிதா
பேரின்பம் பெறுவாயடா (மூடிய)

## பாட்டு - 104

### பல்லவி

ஆளுமையில்லாக் கோழையினுள்ளம்
அமைதியைப் பெறுவதெப்போ
அமைதியைப் பெறுவதெப்போ

### அனுபல்லவி

இறையோடு உறவாட
நெறியோடு உடல்வாழ
உள்ளத்தில் ஒளிவேணும் - உன்
உள்ளத்தில் ஒளிவேணும்

### சரணம்

1. உள்ளத்தை உறுதியாய் ஓர்நிலைப்படுத்திட
உயிர்க்கல்வி அவசியமே
உயிரற்ற உபதேசம் உள்ளத்தில் தரிபடா
உலகிதை உணரணுமே
உலகிதை உணரணுமே
உண்மையே உள்ளத்தில்
உறுதியாயமைந்திடில்
உயர்நிலை பெறுவாயே - நீ
உயர்நிலை பெறுவாயே (ஆளுமை)

2. கோபியினுள்ளம் கொதி நிலை நரகு
ஏழையினுள்ளம் ஏக்கத்தினுலகு
மாயவரைவர் மறைக்கிறார் மதியை
மன்பதை இன்று மயங்குதே இருளில்
மயங்குதே இருளில்
மாநபி கொள்கையை மனதார உணரில்
மாசற்ற வாழ்வுண்டு மறுமையும் வெற்றியுண்டு
(ஆளுமை)



3. ஆளுமையில்லாத உள்ளத்தில் ஷைத்தான்
அன்றாடம் ஆட்சி செய்வான்
அறிவில்லா மக்களை ஆட்டிப் படைக்கிறான்
அறிவுள்ள சிலருக்குப் பேராசையூட்டுகிறான்
நெறிகெட்ட அறிஞர்கள் நிதிக்காக வாழ்கிறார்
நீதிக்கும் நேர்மைக்கும் இடமில்லை உலகில்
இடமில்லை உலகில்
இடமேயில்லை உலகில் (ஆளுமை)

## பாட்டு - 105

### பல்லவி

நானெனும் உணர்வொன்று உண்டு - அது
நாநிலம் யாவுக்கும் நன்கொடைச் சொத்து
நன்கொடைச் சொத்து

### அனுபல்லவி

உண்மையில் உள்ள நான் ஒன்றே - அது
ஏகமாயிருப்பதால் எல்லோர்க்கும் பங்கே
எல்லோர்க்கும் பங்கே (நானெனும்)

### சரணம்

1. உடலுக்குள் நானென்ற கூற்று - இது
உண்மையையுணராத உலுத்தரின் கூற்று
உலுத்தரின் கூற்று
வட்டத்தில் கட்டுண்ட அறிவு - அந்த
வகைதோன்றா உணர்வினை வேறென்று நம்பி
வேறென்று நம்பி
தீன்வழி தவறுதே இன்று - அந்தத்
தீனிலே தரிபட நேர்வழி உண்டு
நேர்வழியுண்டு (நானெனும்)

2. உண்மையில் ஒன்றவே பக்தி - அதை
உண்மையாய்க் கையாளில் கிடைக்குமே முக்தி
கிடைக்குமே முக்தி
மூடத்தனமான பக்தி - உன்னை
வைலென்ற ஓடையில் வீழ்த்திடும் தாக்கி
வீழ்த்திடும் தாக்கி
தீன்வழி தவறுதே இன்று - அந்தத்
தீனிலே தரிபட நேர் வழியுண்டு
நேர்வழியுண்டு (நானெனும்)



3. மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை - அந்த
மார்க்கமே தீர்ப்பென மனதார நம்பி
மனதார நம்பி
தெளிவான கொள்கையில் நின்று - நல்ல
தீனமல் செய்திடில் காரியம் சித்தி
காரியம் சித்தி
ஏகத்துவக் கொள்கை இஸ்லாம் - இன்று
ஓரிறைக் கொள்கையாய் உருமாற்றிவிட்டார்
உருமாற்றிவிட்டார்

(நானெனும்)

## பாட்டு - 106

**பல்லவி**

நாடகம் வாழ்வு என்பதோர் நாடகம் - அது
எண்ணெண் கலைகளும் இயல்பாயமைந்த நாடகம்
அது நாடகம்

**அனுபல்லவி**

உலக வாழ்வோர் குறுநாவல் - உன்
ஆகிறா வாழ்வோ நெடுநாவல்
நெடுநாவல் (நாடகம்)

**சரணம்**

1. நோக்கையறியாமல் நடித்த பேர்க்கு
நரகிலே துன்பநாடகம்
இயன்ற வரையில் முறையாய் நடிப்பின்
ஜன்னத்திலே இன்பநாடகம்
நோக்கையறிந்து நடிப்பை முடித்த
மூ:.மீனுக்கிறை தாயகம் - ஆம்
மூ:.மீனுக்கிறை தாயகம் (நாடகம்)

2. ஏங்கித்திரியும் மனித குலத்தை
ஏய்த்துப் பிழைப்பது துர்ப்போதனை
இருளில் வாழும் மனிதகுலத்துக்
கறிவை யூட்டுதல் சாதனை
அமைதி தேடும் மனிதரிதனை
அறியாதிருப்பது வேதனை
அறியாதிருப்பது வேதனை (நாடகம்)

3. நாடகத்தை முறையாய் நடிக்கில்
நாட்டிலமைதி ஏற்படும்
இயற்கை எமக்கு இன்னலிழைக்கா
எங்கும் சாந்தி நிலவலாம்
எங்கும் அமைதி காண்பதானால்
இயற்கை விதியை மீறாதே
இயற்கை விதியை மீறாதே (நாடகம்)



## பாட்டு - 107

**பல்லவி**

வருவது வரட்டும் போவது போகட்டும்
பு்ர்கானோடொத்து உந்தன்
புத்தியைச் சீர்படுத்து - உந்தன்
புத்தியைச் சீர்படுத்து

**சரணம்**

1. சிதறிய சிந்தனை சீர்குலைக்கும்
சீரற்ற வாழ்வைத் திணித்து வைக்கும்
மறுமை வாழ்வை மறக்கடிக்கும் - பின்
மனித இயல்பையே மாற்றிவிடும்
அறிவை முறையாய்ப் பயன்படுத்து
அணையாத்துயரை அழித்துவிடும்
அணையாத்துயரை அழித்துவிடும் (வருவது)

2. பிறப்பின் நோக்கை புரிந்துகொள்ளு
பெரியவன் பேச்சை விளங்கிக்கொள்ளு
பேரின்பமுண்டு பித்றத்தில் வாழ்ந்தால்
பெரியவன் வாக்கினை நினைவுகொள்ளு
அறிவுக்குப் பொருந்திய நெறியுடன்வாழில்
அரக்கர்குணமே அழிந்துவிடும்
அரக்கர்குணமே அழிந்துவிடும் (வருவது)

3. நித்திய சாந்திக்கு வழிகாட்டும்
நிரந்தர வாழ்வுக்கு வழிவகுக்கும்
ஆண்டவனீந்த அருள்மறை வேதம்
அனைவர்க்கும் அமைதிக்கு வழிகாட்டும்
ஆடவர் பெண்டிர் அனைவருமுணரில்
அகிலத்தில்சாந்தி அமைந்துவிடும்
அகிலத்தில்சாந்தி அமைந்துவிடும் (வருவது)

4. பொருளும் புகழும் அழிந்துவிடும்
பூமி உன்னை விழுங்கிவிடும்
படைத்தவன் முன்னே பரிதாப நிலையில்
பதறித்துடிக்க நேர்ந்துவிடும்
கலிமாவைக் கொண்டோர் களிப்புறுவார்
கயவராய்வாழ்ந்தோர் நரகெய்துவார்
கயவராய்வாழ்ந்தோர் நரகெய்துவார்

(வருவது)



## பாட்டு - 108

**பல்லவி**

நேர்வழி வாழ் மனமே - உன்னைத்
தீண்டிடும் தீமைகள் அகன்றிடும் நிஜமே
நேர்வழி வாழ்மனமே

**அனுபல்லவி**

வேதனை வாசலை மூடிடும் தியானம்
வேறெனும் உளநோயைப் போக்கிடும் தியானம் (நேர்வழி)

**சரணம்**

1. வேதத்தின் கொள்கையை வீசிவிடாதே
வேஷத்தை நம்பி வீழ்ந்துவிடாதே
மாயையை நம்பி மருண்டுவிடாதே
மாநபி வார்த்தையை மறந்துவிடாதே (நேர்வழி)

2. காலத்தில் கண்டுண்ட கனவொத்தவாழ்வு
காலனின் கடமையால் கலைந்திடும்போது
தேடிய பணம் புகழ் பலனளிக்காது
பாதையைப் புரிந்து பின் பண்போடுவாழு (நேர்வழி)

3. உள்ளத்தில் போராடி உண்மையை இருத்து
உண்மைக்கு மாறான போக்கினை நிறுத்து
உத்தமர் வாழ்வினை உதாரணம் கொண்டு
உத்தம புருடனாய் உலகிலே வாழு (நேர்வழி)

4. தீயவருறவுன்னைத் தீ நரகோட்டும்
தீயதை நன்மை போல் திசை மாற்றிக் காட்டும்
நல்லவருறவு நற்பயன் நல்கும்
நாயனின் பாதையில் நலமாகச் சேர்க்கும் (நேர்வழி)

## பாட்டு - 109

### பல்லவி

உருண்டோடும் உலகத்தில் பிடியாணை வருமுன்பே
பெரியோனில் சரணாகிடு - நீ
பெரியோனில் சரணாகிடு

### அனுபல்லவி

சரணடைய வழியுண்டு சற்குருவின் மொழியுண்டு
சாத்வீக நெறியிருக்குதே - எமக்கு
சாத்வீக நெறியிருக்குதே (உருண்டோடும்)

### சரணம்

1 நிறுக்காமல் பெருமறிவு நிம்மதிதாராது
அளக்காமல் கொடுத்தாலும் அமைதியைத் தாராது
குறிப்பறிந்து ஈதலேகுணம் கொடுக்கும் அதுவின்றேல்
கொடுவினையே சூழநேரும்
எடுத்தாலும் கொடுத்தாலும் உண்மையையுரைப் போர்க்கு
உள்ளத்தில் சாந்திதோன்றும் - அவர்
உள்ளத்தில் சாந்திதோன்றும் (உருண்டோடும்)

2 இறக்காமல் இறந்து பின் பிறக்காமல் பிறப்போர்க்கு
என்றென்றும் சாந்தியுண்டு
இலாஹில்லை எனும் வசனம் இதயத்திலமைந்திடில்
இறக்காமல் இறந்தேவிட்டாய்
இல்லல்லாஹு எனும் வசனம் இதயத்திலமைந்திடில்
பிறக்காமல் பிறந்துவிட்டாய் - நீ
பேரின்பம் பெற்றுவிட்டாய் (உருண்டோடும்)

3 இஸ்லாத்துக்குடலுண்டு உயிரில்லை இன்றுலகில்
இறைத்தூதர் சொன்னதுண்மை
குர்ஆனில் எழுத்துண்டு கொள்கையில் மாறுண்டு
சிற்றறிவு செய்தவேலை
உண்மையை உணர்வோர்க்கு ஒளியுண்டு நெறியுண்டு
இறையோனின் உதவியுண்டு
இறையோனின் உதவியுண்டு (உருண்டோடும்)



## பாட்டு - 110

### பல்லவி

உள்ள மெனும் வீட்டினிலே உறங்குகிற உன்னறிவை
தட்டி எழுப்பிவிடு தம்பி - நீ
தலைநிமிர்ந்து வாழலாமே தம்பி

### அனுபல்லவி

தூக்கத்தை நீக்கிவைக்கத் தூய கலிமா இருக்கு
தூயோன் துணையிருக்கு நம்பி - உள்ளத்
தூய்மையோடு செயல்படணும் தம்பி

### சரணம்

1. இறக்கும் வரைக்கும் குருடனாக
இருளில்வாழும் வௌவால்போல
வாயாலுண்டு வாயால்களிக்கவேணுமா - தம்பி
வாடிநொந்து சாகவேணுமா
எல்லாம் வல்ல இறைவனீந்த
இறப்புப் பிறப்பை நீக்கும் மருந்தை
எடுத்துக்கொண்டால் தூக்கம்நீங்குமே
எடுத்துக்கொண்டால் தூக்கம்நீங்குமே (உள்ள)

2. வரட்டுக்கௌரவத் திமிரில் ஊறி
இருட்டுக்குழியில் வீழ்ந்தபின்பும்
முரட்டுக்குணமே இன்னும்வேணுமா - தம்பி
மூடனாக இறக்கவேணுமா
இறைவனீந்த இனியவேதம்
இயற்கை வழியைக் காட்டும்போது
மீறிவாழில் நரகுஈர்க்குமே - தம்பி
நித்யசாந்தி தவறிப்போகுமே (உள்ள)

3. வாழும் வழியை நெறிப்படுத்தி
வல்லோன் கிருபை பெற்று வாழ
வேதமுனக்குப் போதம் செய்யுதே - தம்பி
நீதமற்று வாழ்வதேனடா
கொள்கையோடு சொல்லும் செயலும்
சேரில் சொர்க்கம் நிச்சயம்
சோர்வடைந்தால் நரகம் தீண்டுமே - தம்பி
சோர்வடைந்தால் நரகம் தீண்டுமே (உள்ள)

## பாட்டு - 111

### பல்லவி

மாந்தருக் கேற்படும் மனநோயை மாற்றும்
மாமருந்தே கலிமா - உண்மை
மார்க்கமே தீன்கலிமா

### சரணம்

1. ஆரம்ப நாள் முதல் அழிந்திடும் நாள்வரை
அனைவர்க்கும் அருமருந்து - கலிமா
அனைவர்க்கும் அருமருந்து
ஆதியின் வேதனை அணையில்லா நெருப்பை
அழித்திடும் தீன்கலிமா - உண்மை
அழித்திடும் தீன்கலிமா (மாந்தருக்)

2. புலன்களில் மயக்குறும் பூவுலகறிவு
பூரணம் தாராதே - மனிதா
பூரணம் தாராதே
புத்தியைத்துலக்கிப் புதுமையைநீக்கும்
புகழ்பெற்ற பொதுமருந்து - கலிமா
புகழ்பெற்ற பொதுமருந்து (மாந்தருக்)

3. வாக்கினை மீறுகின்ற போக்கினை நீக்கும்
வான்மறை மருந்தல்லவா - கலிமா
வான்மறை மருந்தல்லவா
மார்க்கத்தை மீறுகின்ற நோய்க்குறி நீங்கும்
வான்மறை மருந்தல்லவா - கலிமா
வான்மறை மருந்தல்லவா (மாந்தருக்)



4. வானோரும் அறியா முர்ஸலும்புரியா
மர்மங்கள் மனதிருத்தும் - கலிமா
மர்மங்கள் மனதிருத்தும்
அண்டசராசரம் அனைத்தையும் தெளிவாக்கும்
அருள்நிறை தீன்கலிமா - உண்மை
அனுபவம் தீன்கலிமா (மாந்தருக்)

5. ஆலங்கள்யாவுமுன் ஆதேயம் தானென்று
அறிவூட்டும் தீன்கலிமா - மனிதா
அறிவூட்டும் தீன்கலிமா
ஆதாரம் ஆதேயம் அனைத்துமே அவனென்று
அனுபூதி தரும்கலிமா - எம்
ஆருயிர்த்தீன்கலிமா
(மாந்தருக்)

## பாட்டு - 112

### தொகைறா

அகிலத்தின் உயிரான அறிவென்ற அமானதத்தை
அனுபூதி அடையவே பெற்றுக்கொண்டாய்
அகங்கார உணர்வினால் அமானதத்தை மறந்துவிட்டாய்
மறதியை நீக்கி மனிதனாய் வாழ்ந்து முழுமைபெற
மகத்தான கலிமாவை விளங்கிச் செயல்படு
வெற்றி உண்டு வெற்றி உண்டு
வெற்றி உண்டு

### சரணம்

1. குணியை விட்டுக் குணத்தை வேறாய்க்
கணிக்கும் கொள்கை ஷிர்க்காகும்
குணியும் குணமும் ஏகமென்று
ஏற்கும் கொள்கை தௌஹீது - இதை
ஏற்று நடத்தல் நேர்வழி
ஏற்று நடத்தல் நேர்வழி (குணியை)

2. குருட்டுப் பக்தி குணத்தைக் கொடுக்கா
மயக்க புத்தி மருட்சி நீக்கா
மார்க்க நெறியில் மகிமைகாண
அறிவில் தெளிவு அவசியமே - இதை
அறிந்து கொள்வது அவசியமே (குணியை)

3. மார்க்கத் துயிரே மணக்கும் கலிமா
விளங்கித் தெளிந்து செயல்படு
உயிரை விடுத்து உடலைச்சுமந்தால்
பிணத்தைச் சுமந்த பேயன்தான் - அந்த
பெரியோனிடத்திலும் பித்தன்தான் (குணியை)



4. இறையுணர்வைப் பெறுவதற்கு
இயற்கை வழியே தௌஹீது
இயன்ற வரையில் எடுத்துக் கொண்டால்
இறைவனுதவி கிட்டலாம் - இதை
ஏற்று நடப்பதே நேர்வழி (குணியை)

5. கொள்கையறியாக் கொடியோர் வினைகள்
குவலயத்தைத் தாக்குது
கோடி மக்கள் இறைஞ்சும் போதும்
இயற்கையழிவு நீங்குதா
கொடிய வினைகள் நீங்கும்போது - அந்த
இயற்கையழிவும் நீங்கிடும்
(குணியை)

## பாட்டு - 113

### பல்லவி

பாதை புரியாப்பயணம் செய்து
பலனைக்காண முடியுமா
பகுத்தறிவை மீறுமுள்ளம்
பாதைகண்டு ஏகுமா
பாதைகண்டு ஏகுமா

### சரணம்

1. நோக்கையறிந்து போக்கைப் புரிந்தால்
புனிதனாக வாழலாம்
புவியோர் எதிர்க்கும் போதும் உதவி
புரிவோன் உடன் தானிருக்கிறான்
போலி அறிவை வீசிஎறிந்து
புர்க்கான்வழியில் வாழ்ந்துசெல்
புர்க்கான்வழியில் வாழ்ந்துசெல் (பாதை)

2. குணியை விட்டுக் குணத்தை வேறாய்க்
காணுமறிவு வேணுமா
கொள்கைபுரியாக் குருட்டுவாழ்வு
கொடிய நரகாய் மாறுமே
வேஷநடிப்பை விட்டுநீங்கி
வேதநெறியில் வாழ்ந்துசெல்
வேதநெறியில் வாழ்ந்துசெல் (பாதை)

3. வேத நெறியில் விளக்கம்வேணும்
விளங்கித் தெளியத் துணிவுவேணும்
துணிவிருந்தும் ஒளியில்லார்க்கு
தூய வழியேதென்படா
குருட்டுச் ஷைத்தான் இருட்டில் வீழ்த்தும்
கொள்கை நோக்கைக்கண்டறி
கொள்கை நோக்கைக்கண்டறி (பாதை)



## பாட்டு - 114

### பல்லவி

சத்தியத்தில் வாழுகின்ற சற்சனங்கள் யாவருக்கும்
சாந்தி சாந்தி சாந்தியென்று சங்கே முழங்கு
சங்கே முழங்கு சங்கே முழங்கு

### சரணம்

1. ஆவிபொருள் அத்தனையும் ஆண்டவனுக்குக்கர்ப்பணித்த
ஆத்துமாக்கள் வெற்றி பெறச் சங்கேமுழங்கு
சங்கேமுழங்கு
சோதனையில் வேதனையில் சோர்வில்லாமல் வாழுகின்ற
சோதரர்கள் யாவருக்கும் சோபனம்
சுப சோபனம் - சுப சோபனம் (சத்தியத்தில்)

2. மனிதஉரிமையை மீறிச்செல்லும்
மடையரோடு வாழ்ந்துகொண்டும்
மதத்தின் கொள்கையில் வாழுகின்ற மக்களுக்கு
சோபனம் சோபனம் சோபனம்
கொள்கையறியாக் குருடர் கூட்டம்
கொலையேசெய்ய முயன்றபோதும்
கொள்கை கொண்டு வாழுவோர்க்கே சோபனம்
சுப சோபனம் - சுப சோபனம் (சத்தியத்தில்)

3. இணையில்லாத இதயமெல்லாம் இறைவன் ஜோதி வீசட்டும்
இயற்கைவழியில் வாழுவோர்க்கு ஈருலகிலும்
சோபனம் சோபனம் சோபனம்
மறதிநீங்கி வாழுவோர்க்கு மண்ணுலகிலும் சாந்திதான்
மார்க்கநெறியில் வாழுவோர்க்கு சோபனம்
சுப சோபனம் - சுப சோபனம் (சத்தியத்தில்)

4. முரசே முழங்கு - முரசே முழங்கு
பாதையினைக் கண்டறிந்து படிப்படியாய் கடந்து சென்ற
பாரவான்கள் யாவருக்கும் வெற்றி வெற்றியென்று
முரசே முழங்கு - முரசே முழங்கு
நல்லோரைக் கண்டறிந்து நல்லறிவைப் பெற்றுக்
கொண்ட நாற்புறத்து மாணவர்க்கும் சோபனம்
சோபனம் - சோபனம் - சுப சோபனம்
லா இலாஹ இல்லல்லாஹு
முஹம்மதுர்றசூலுல்லாஹ் (சத்தியத்தில்)



## பாட்டு - 115

**பல்லவி**

கற்பனைக்கடவுளை மறந்துவிட்டு
ஹக்கான இறையோடு கலந்துவிடு
எவருமே உதவா மஹ்ஸரின் போது
சாந்தியைப்பெறுவாயே - நீ
சாந்தியைப்பெறுவாயே

**சரணம்**

1. கற்பனைக்கடவுளைக் கருத்தினில்கொண்டால்
கடினவேதனை கிடைக்குமென்று
கடவுள் சொன்னவார்த்தையிது
கருத்தினிலிருத்திக் கடமைபுரி
கடினவேதனை நீங்கிவிடும்
எவருமே உதவார் எதுவுமே தாரார்
மஹ்ஸரில் என்னாகும் உன்கதி
மஹ்ஸரில் என்னாகும் (கற்பனை)

2. வேலைப்பழிக்கும் கூர்விழியாளுடன்
சேர்ந்திங்கு வாழ்ந்தாயே
வேதனைகிட்டும் வேளையின்போது
மனைவியுமுதவி தருவாளோ
மக்களும்முதவி செய்வாரோ
எவருமே உதவார் எதுவுமேதாரார்
மஹ்ஸரில் என்னாகும் உன்கதி
மஹ்ஸரில் என்னாகும் (கற்பனை)

3. படுதுயரோடுபெற்ற உன் தாயும்
மஹ்ஸரில் உதவவருவாளோ
இரத்தத்தை சாறாய்ப் பிழிந்து வளர்த்த உன்
தந்தையும் உதவவருவாரோ
உலகோரும் உதவவருவாரோ
எவருமே உதவார் எதுவுமே தாரார்
மஹ்ஸரில் என்னாகும் - உன்கதி
மஹ்ஸரில் என்னாகும் (கற்பனை)

4. தேனைப்பழிக்கும் தீன்கலிமாவின்
திசைகண்டு தெளிவு பெறவேணும்
தீனோரெல்லாம் திசையறிந்தேகில்
திருநபி சிபாரிசுண்டு எமக்கு
திக்கெல்லாம் உண்மைச்சாந்தியுண்டு
அச்சம் தீர அருள் பெற்று வாழ
அமிர்தக் கலிமாவில் கரைந்து விடு
ஆத்துமா சாந்தியடைந்துவிடும் (கற்பனை)



## பாட்டு - 116

**பல்லவி**

தீயகுணங்கள் அத்தனையும் ஷிர்க்கிலிருந்தே பிறப்பவை
ஷிர்க்கை அறியா மனிதக்கூட்டம்
சீரழிந்துசாகுது

**அனுபல்லவி**

பாரம்பரிய பழக்கவழக்கம்
ஷிர்க்குக்கழுத்தம் கொடுக்குது
ஷிர்க்கில்வாழும் மனிதக்கூட்டம்
உடலை நம்பி வாழுது
உடலை நம்பி வாழுது (தீயகுணங்கள்)

**சரணம்**

1. உடலேநானென்றுணரும் மக்கள்
உண்மைகாண முடியாது
உயிருக்காக உடலேயென்று
உணரில் உண்மை புலப்படும்
உயிருமுடலும் நிறைவுகாண
உவந்த கொள்கை தௌஹீது
உருக்குலைந்து போனதாலே
உலகே நரகாய்மாறுது
உலகே நரகாய்மாறுது (தீயகுணங்கள்)

2. துவித உணர்வு உள்ளவரையில்
துவேஷ உணர்வு நீங்காது
இறை உணர்வைப் பெற்றுவாழத்
துவித உணர்வு பொருந்தாது
இம்மை மறுமையின்பம் காண
ஏற்றவழியே தௌஹீது
இருட்டடிப்புச் செய்ததாலே
ஈருலகிலும் கைசேதம்
ஈருலகிலும் கைசேதம் (தீயகுணங்கள்)

3. மறுமைப்பயனைப்பெற்றுக்கொள்ள
மனிதன் முயற்சிசெய்யலாம்
மறதிநீக்கா மனிதமுயற்சி
மறுமையின்பம் காணாது
இன்பதுன்பம் இருக்கும்வரையில்
இன்ஸானியத்திருக்கலாம்
அஹதில் மறைந்த அடியாருக்கு
இன்பதுன்பம் கற்பனை
இன்பதுன்பம் கற்பனை (தீயகுணங்கள்)



## பாட்டு - 117

**பல்லவி**

இன்பதுன்பம் இருவினையும் இடர்படுத்தும் சூழலில்
அமைதிதேடி எங்கே போகலாம் - நாம்
அமைதிதேடி எங்கே போகலாம்

**சரணம்**

1. உள்ளத்திலே அமைதியுண்டு
உணர்ந்துகொள்ள வழியுமுண்டு
நல்லோர் சென்ற வழியைக்கண்டு
நாமும் அவ்வழிசெல்லணும்
உண்மைபொய்யை உணராமக்கள்
உளறும் வார்த்தையை தள்ளனும்
உலகுக்கஞ்சா உறுதியோடு
உண்மை வழியில் செல்லணும் - நாம்
உண்மை வழியில் செல்லணும் (இன்பதுன்பம்)

2. மண்ணில்வீழும் மழையின் நீரும்
மண்ணின் குணமேகொண்டிடும்
மடையரோடு உறவுகொண்டால்
மதியே புதிதாய் மாறிடும்
கொள்கையறியாக் குருடர் பேச்சு
கொடியநரகில் சேர்த்திடும்
மன்னிப்பில்லா குற்றம் ஷிர்க்கே
மனதிலிருத்தி வாழனும் - நாம்
மனதிலிருத்தி வாழனும் (இன்பதுன்பம்)

3. தெய்வசித்தத்தைப் பொருந்திக்கொண்டால்
சிதறும் சிந்தனை சீர்படும்
இன்பதுன்பம் ஒன்றாய்த்தோணும்
இறையுணர்வும் ஆட்கொள்ளும்
நரகவேதனை நெருங்கமுடியா
நாயனுதவி கிடைத்திடும்
தூதர் வழியில் தொடர்ந்து சென்றால்
துன்பமுன்னைத் தீண்டாது - ஆம்
துன்பமுன்னைத் தீண்டாது (இன்பதுன்பம்)



## பாட்டு - 118

**பல்லவி**

உடன்பாடும் எதிர்மறையும்
ஒன்றாமல் இயக்கமில்லை
இகபரத்தின் இயற்கை இதுதான் மனிதா
இறைசெய்த பேருதவிதான் - இது
இறைசெய்த பேருதவிதான்

**சரணம்**

1. எதிரிடையே இல்லாமல் இயல்பூக்கம் இயங்காது
எச்செயலும் இருக்காதல்லவா - இகபரத்தில்
எச்செயலும் இருக்காதல்லவா
எதிரியை நெறிப்படுத்தி இன்பசுகம் காண்பதற்கு
இறைமறையே வழிகாட்டுதே - மனிதா
இறைமறையே வழிகாட்டுதே
இறைதந்த பகுத்தறிவை முறையாகப்பயன்படுத்தில்
ஈருலகும் வெற்றிபெறலாம் - நாம்
ஈருலகும் வெற்றிபெறலாம் (உடன்பாடு)

2. பகுத்தறிவைப் பயன்படுத்திப் புலனறிவை நெறிப்படுத்தி
எதிரிடையை வெற்றி கொள்ளலாம் - மனிதா
எதிரிடையை வெற்றிகொள்ளலாம்
ஊடகத்தைப் பயன்படுத்தும் உரியவழி தந்திருக்க
உதாசீனம் செய்வதேனடா - மனிதா
உதாசீனம் செய்வதேனடா
இறைதந்த நேர்வழியில் முறையாக நாம் சென்றால்
முக்தி நிலை பெறலாமடா - மனிதா
முக்தி நிலை பெறலாமடா (உடன்பாடு)

3. எதிர்நோக்கும் பிரச்சினையை தீர்த்துவைக்க வழிதந்தும்
அறியாமல் அழிவதேனடா - மனிதா
அறியாமல் அழிவதேனடா
நிந்திக்கும் மனச்சாட்சி நிதானமாய்த்தொழிற்பட்டால்
நிம்மதி வந்தே சேரும் - மனிதா
நிம்மதி வந்தே சேரும் ஊடகத்தின் மருட்சியிலே
உறுதிகொள்ளும் காரணத்தால்
உய்யும் வழி தவறிப்போகுதே - மனிதா
உண்மை வழி மறைந்து போகுதே (உடன்பாடு)



## பாட்டு - 119

### தொகைறா

அலைபாயும் மனத்தோடு அமல்செய்து சித்திபெற
முடியவே முடியாதன்பா
அலைபாயுமுள்ளத்தை அடக்கி நீ வெற்றிபெற
ஐம்புலனடக்கம் வேணும்

### பல்லவி

நிலையில்லாமல் மாறுபடும்
குணத்தைக்கொாண்ட இதயம் - அது
காசுவந்தால் போதுமென்று
கனவுகாணும் இதயம்

### சரணம்

1. வம்பளக்கும் உள்ளமுன்னை
வண்டிமாடாய் மாற்றும்
வகையறியாச் சுமையை ஏற்றி
ஹாவியாவில் சேர்க்கும்
இறைமறையை ஏற்ற உள்ளம்
இறைபணியில் மூழ்கும்
இறைவனீயும் சாந்தியோடு
ஈருலகிலும் வாழும்
ஈருலகிலும் வாழும் (நிலையில்)

2. இதய எண்ணம் திண்மைபெற
இயற்கைவழி தியானம்
இதயத்திரைகள் நீங்கிவிட்டால்
இறைவன் ஜோதி தோணும்
மலக்கூத்துலக மர்மமெல்லாம்
மறைவில்லாமல் உணர்வாய்
சத்தாரென்ற முத்திரையில்
சாந்தியோடு வாழ்வாய்
சாந்தியோடு வாழ்வாய் (நிலையில்)

3. எறும்புகூட இயற்கைநெறியை
மீறாமலே வாழும்
இருளில்வாழும் மனித இதயம்
இயற்கைவழியை மீறும்
கொள்கையோடு செயலும்சேரில்
பூரணமே வாய்க்கும்
புதியவழிகள் எதுவுமில்லை
புர்க்கான்வழியில் வாழு
புர்க்கான்வழியில் வாழு (நிலையில்)



## பாட்டு - 120

**பல்லவி**

கண்டெடு - கேட்டெடு
உண்மைகாண நிறுத்தெடு

**சரணம்**

1. கேள்விச்செவியன் ஊரைக்கெடுப்பான்
கிறுக்குமடையன் குடியைக்கெடுப்பான்
போலி அறிஞன் உலகைக்கெடுப்பான்
புர்க்கான் கொள்கையைப் புரட்டிக்காட்டுவான்
(கண்டெடு)

2. வேலிபயிரை மேயும்காலம்
வேதநெறிகள் வீழ்ந்த காலம்
தஜ்ஜால்தாசரின் வேதகாலம்
தரணிகொள்கையை இழந்தகாலம் (கண்டெடு)

3. பொருளும் புகழும் தேடும் காலம்
பெரியோன் சொல்லை மீறும்காலம்
பிறப்பின் நோக்கை அறியாக்காலம்
பித்தனாக்கள் நிறைந்தகாலம் (கண்டெடு)

4. கொடியநோய்கள் மலிந்தகாலம்
குபேரவாழ்வைத் தேடும்காலம்
மனத்தின்சாட்சி மறைந்தகாலம்
மதத்தைவிற்றுப் பிழைக்கும்காலம் (கண்டெடு)

5. கொலையும் கொள்ளையும் மலிந்தகாலம்
கொள்கை மறைந்த இருண்டகாலம்
குறுக்குவழிகள் நிறைந்தகாலம்
மனிதஇயல்பே மறைந்தகாலம் (கண்டெடு)

## பாட்டு - 121

**பல்லவி**

எங்கும் நிறைந்த காலம்
ஏகமாய் இருக்கும் காலம்
கற்பனைக்கு எட்டாக்காலமே - கடவுள்
கற்பனையிலுள்ள ஞாலமே

**அனுபல்லவி**

அணுவேனும் மாறுபடா
அதனிருப்புக் கூறுபடா
ஆதியந்தமற்றதடா காலம் - அந்த
ஆண்டவனின் நாமமடா ஞாலம் (எங்கும்)

**சரணம்**

1. புலனறிவில் மயக்கமுற்றுப்
புதுமைப்பித்தில் புகுந்துகொண்டு
புரியாமல் வாழுகிறான் மனிதன் - இதைப்
புரிந்துகொள்ளத்தந்ததடா வேதம்
இஷ்டம் போல புரட்டிக்கொண்டு
இருட்டடிப்புச்செய்ததாலே
இயற்கைவழி மறைந்துபோச்சுதே - மனிதா
இறைவன்கிருபை தவறிப்போகுதே - மனிதா
இறைவன்கிருபை தவறிப்போகுதே (எங்கும்)

2. பிறப்பிற்கோர் நோக்கமுண்டு
நோக்கமின்றேல் தாக்கமுண்டு
உடலுக்காக மட்டும் வாழ்வதேன் - வேதம்
உண்மை நோக்கை உரைத்துக்காட்டுதே
விளங்கியறியாச் செயலினாலே
வீணே காலம் கழியுதென்று
வேதமுனக்கு விளக்கிக் காட்டுதே - மனிதா
வீணே நரகில் வீழ்வதேனடா - மனிதா
வீணே நரகில் வீழ்வதேனடா (எங்கும்)



3. இருக்கும் பொருள் அத்தனையும்
இறைநாமத் தோற்றமென்று
அறிந்து கொண்டால் அநீதி ஏதடா - இதை
அறிவுறுத்தக்கொள்கை இருக்குதே
அறியாமல் புரட்டிக்கொண்டு
அல்லற்படும் மக்களுக்கு
அமைதிவழி எங்குகிட்டுமோ - மனிதா
அமைதிவழி எப்போகிட்டுமோ - மனிதா
அமைதிவழி எப்போகிட்டுமோ (எங்கும்)

## பாட்டு - 122

**பல்லவி**

உலகுக்குப்பயந்து உண்மையை இழந்தால்
உன்கதி என்னாகும் - மஹ்ஸரில்
உன்கதி என்னாகும்

**சரணம்**

1. பணமென்ன புகழென்ன பட்டத்தின் மதிப்பென்ன
பலனேதும் தாராதே - மஹ்ஸரில்
பலனேதும் தாராதே
நபிக்கொள்கை கொண்டிங்கு
நலமாக வாழ்ந்தோர்கள்
நற்பலன் பெறுவாரடா - மஹ்ஸரில்
நற்பலன் பெறுவாரடா
நபிவழிகண்டு நல்லமல் செய்தால்
நற்கூலிபெறுவாரடா - மஹ்ஸரில்
நற்கூலிபெறுவாரடா (உலகுக்கு)

2. உள்ளொன்று புறமொன்று
கொண்டிங்கு வாழ்ந்தோர்க்குக்
கொதிநரகேகூலி - மஹ்ஸரில்
கொதிநரகே கூலி
நேரானபாதையில் சீராகவாழில்
நித்தியசாந்தியுண்டு - மஹ்ஸரில்
நித்தியசாந்தியுண்டு
நபிவழிகண்டு நல்லமல் செய்தால்
நற்கூலிபெறுவாரடா - மஹ்ஸரில்
நற்கூலிபெறுவாரடா (உலகுக்கு)



3. சொல் மட்டும் போதாது
சொல்லோடு செயல்சேரில்
சொர்க்கத்துப்பூங்காதான் - வாழ்வு
சொர்க்கத்துப்பூங்காதான்
இறைசொல்லை உள்ளத்தில்
ஏற்றிங்கு வாழ்வோர்க்கு
இறைவன் கிருபையுண்டு - அவர்க்கு
இறைவன் கிருபையுண்டு
நபிவழிகண்டு நல்லமல் செய்தால்
நற்கூலிபெறுவாயடா - மஹ்ஸரில்
நற்கூலிபெறுவாயடா

(உலகுக்கு)

## பாட்டு - 123

**பல்லவி**

மீஸான் என்பது மனச்சாட்சி - அதில்
நிறுக்கும் மனிதனே பொறுப்பாளி
தீர்ப்புச் செய்வது பகுத்தறிவு - இதை
சிந்தனை செய்து நிறுத்து எடு - நீ
சிந்தனை செய்து நிறுத்து எடு

**சரணம்**

1. இறைவன் வாக்கை நபிபேச்சை
இருபடிக்கற்களாய்க்கையாளு
இருமலக்குனக்குச்சாட்சியுண்டு
இறைவன் அநீதிசெய்வதில்லை
நிறுவையில் நன்மை மிகைத்திருந்தால்
நிச்சயம் ஸிறாத்தைக்கடந்திடுவாய்
ஹவ்லுல் கௌதரில் நீராடி
களிப்புறும் ஜன்னத்தில் நுழைந்திடுவாய்
களிப்புறும் ஜன்னத்தில் நுழைந்திடுவாய் (மீஸான்)

2. ஸிறாத்து என்பதைப் புரிந்துகொள்ளு
சீர்பெறும் கலிமா அறிந்துகொள்ளு
ஹவ்லுல்கௌதரைப் புரிந்துகொள்ளு
கரையில்லா ஞானம் தெரிந்துகொள்ளு
எல்லாம் அறிவிலுள்ளதுதான்
இதை ஏற்றிடுமுள்ளம் இறைஅர்ஸு
துன்பம் என்றும் தொடராது - இதை
தூயஅறிவும் மறுக்காது - இதை
தூயஅறிவும் மறுக்காது (மீஸான்)



3. இன்று நாளை கிடையாது
இருப்பது என்றும் இக்கணம்தான்
நன்மைதீமையை நிறுப்பவன் நீ
நிறுவைக்குசாட்சி இருமலக்கு
இறைவன் செய்த இயற்கைவிதி - இதை
ஏற்பதும் மறுப்பதும் உன்னுரிமை
கலிமாவின் கருத்தில் கரைந்துவிடு
ஹக்கோடென்றும் நிலைத்திருப்பாய்
ஹக்கோடென்றும் நிலைத்திருப்பாய் (மீஸான்)

## பாட்டு - 124

**பல்லவி**

ஈமானில்லா அமலாளி
உவமையில்லா நோயாளி
ஆக்கமில்லாத் தொழிலாளி
அமைதியில்லா இரப்பாளி
அமைதியில்லா இரப்பாளி

**சரணம்**

1. கொம்பும் குடையும் கொண்டாலும்
கோடிப் பொன்னைக்குவித்தாலும்
ஈமானில்லா அமல்கள் யாவும்
இருளாய் மறைய நேருமடா
ஈமான் வளர அமல்வேணும்
இதயம் உறுதி பெறவேணும்
இறைவன் சொல்லை ஏற்று நடந்தால்
என்றும் ஈமான் வளர்ச்சியுறும்
என்றும் ஈமான் வளர்ச்சியுறும் (ஈமானில்லா)

2. மூமீனென்பது இறைநாமம்
இரவல் எமக்கு அந்நாமம்
ஈமான் முற்றாய் நிறைவுபெற
நான்கு படிகளைத் தாண்டணுமே
கேள்வி ஈமான் வளர்ச்சிபெற
அமலை முறையாய்க்கையாளு
ஞான நிலைமை கிட்டிவிட்டால்
ஹக்குல் எகீனைப் பெற்றிடுவாய்
ஹக்குல் எகீனைப் பெற்றிடுவாய் (ஈமானில்லா)



3. உண்மை வழியை ஆராய்ந்து
உரிய அமல்களைக்கையாளில்
உலகோரளிக்கும் இன்னலெல்லாம்
உயரும் நிலைக்கு உதவி செய்யும்
இறைவன் பண்புன்னில் வெளியாகும்
இருட்திரையாவும் மறைந்துவிடும்
காலத்தின் திரையும் கழன்றுவிடும்
ஹக்கோடொன்றும் நிலைமைகிட்டும்
ஹக்கோடொன்றும் நிலைமைகிட்டும் (ஈமானில்லா)

## பாட்டு - 125

### பல்லவி

இறைவனுக்கிணை காணுமுள்ளம்
இருளில்வாழுது - அதன்
இருளை நீக்கித் தெளிவிலாக்க
கொள்கை இருக்குது
கொள்கை இருக்குது

### அனுபல்லவி

கொள்கையென்றால் விளக்கமென்ன
சொல்லிக்கேட்பாயா -கொள்கை
ஏகத்துவம் என்று சொன்னால்
ஏற்றுக்கொள்வாயா

(இறைவனு)

### சரணம்

1. ஏகமாக உள்ள தத்துவம் ஏகத்துவமாகும்
ஏகமென்றால் எல்லையில்லை
வரைவிலக்கணத்திலமையா
தத்துவமே சக்தியென்று சகலருக்கும் தெரியும்
உண்மைக்கொள்கை ஏகத்துவம் உருக்குலைந்துமாறி
ஓரிறைக்கொள்கையாக உலகமெல்லாம்பரவி
உண்மைஞானம் மறைந்ததாலே உலகே இருளிலாச்சி
உண்மைஞானம் மறைந்ததாலே உலகே இருளிலாச்சி
(இறைவனு)

2. ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டால் இருள்திரைகள்மாறும்
இறைவனன்றி எதுவுமில்லையென்ற உணர்வுதோன்றும்
கொள்ளை கொலைகள் யாவும் தீரும்
கொடிய குணமும் மாறும்
கொதிநிலையிலிருந்த உள்ளம் குளிரடைந்து வாழும்
உலகு சாந்தி பெற்றுவாழ உரிய வழிகள் தோணும்
உத்தமர்கள் சென்ற வழி உண்மையாக இதுதான்
உத்தமர்கள் சென்ற வழி உண்மையாக இதுதான்
(இறைவனு)



3. இன்பதுன்பமிருநிலையும் இறைவனளிக்கும் பயிற்சி
தக்தீரைப் பொருந்திக் கொள்ளும் தகுதி எமக்குவாய்க்கும்
சற்குணங்கள் நிறைவு பெற்றால் சகலருக்கும் சாந்தி
ஈருலகிலும் சாந்திபெற இயற்கைவழி இதுதான்
இதை ஏற்று நடக்கும் இதயமிருந்தால் இன்பசாந்திகிட்டும்
இறைவன் தந்தவாக்குறுதி இதயத்திருத்திச்செயல்படு
(இறைவனு)

## பாட்டு - 126

**பல்லவி**

தன்குறை காணும் தகமை பிறந்திடில்
தலைக்கனம் நீங்குமடா - மனிதா
நற்குணம் பிறக்குமடா

**அனுபல்லவி**

உன்குறை காணாமல் பிறரை நீ தூற்றுதல்
பேயாக மாற்றுமடா - உன்னை
பேயாக மாற்றுமடா

(தன்குறை)

**சரணம்**

1. நபிவழிவாழ்வதாய் நாவினால் கூறினும்
நற்குணம் பெற்றதுண்டா
நாயனுதவியால் நற்குணம் பெற்றிடில்
உன்குறை தென்படுமே
குறைநீக்கி வாழ்வோர்க்கு
கொள்கையில் தரிப்போர்க்கு
கொடிநிழல் கிட்டுமடா - நபியின்
கொடிநிழல் கிட்டுமடா (தன்குறை)

2. கொள்கையே இல்லாக் குருடராய் வாழ்வோர்க்கு
கொடிநிழல் கிட்டாதடா
கோமான் நபி கொள்கை கொண்டிங்கு வாழ்வோரை
கொடும் தீயே தீண்டாதடா
மண்ணென்ன விண்ணென்ன
யாவுமே ஹுறூறென்று
ஹக்கோடு ஒன்றி நிற்பார் - அவர்
ஹக்கோடு ஒன்றி நிற்பார் (தன்குறை)



3. மாசற்ற வேதமும் மாநபியின் போதமும்
மடையர்க்கு ஒவ்வாதுதான்
முத்தக்கீன் வரிசையில் பக்தியைக் கொண்டிடில்
முக்தியில் சேர்வாயடா
புத்தியில் எட்டாத புகழ்பூத்த ஜென்னத்தில்
பேரின்பம் பெறுவாயடா - மனிதா
பேரின்பம் பெறுவாயடா (தன்குறை)

4. ஆசையும் கோபமும் அளவினை மீறினால்
அமைதிக்கு வழிதோணுமா
கொள்கையில் வாழ்ந்திடில்குறையேதும் வாராது
இறைகுணமே வந்து சேரும்
நடுநிலைமைமாறாத நாயன்சொல் மீறாத
நல்லடியாராக வாழ்வாய் - மனிதா
நல்லடியாராக வாழ்வாய் (தன்குறை)

## பாட்டு - 127

### தொகையறா

அச்சத்தின் காரணத்தால் அணுக்குண்டைத் தயார்படுத்தி
அகிலத்தை ஆட்டுவானேன்
அமைதிக்கு வழிகாண அறிவை நீ பயன்படுத்தில்
ஆத்துமா சாந்திபெறுமே

### சரணம்

1. கோரப்பகையும் குறுக்கு வழியும்
குவலயத்தை ஆட்டுது
கொள்கை அறியாக்குருட்டு உள்ளம்
குரங்காய் மாறி வாழுது
குரங்காய் மாறி வாழுது

2. அச்சம் அறிவை மீறும் போது
ஆத்ம சாந்தி கிடைக்காது
அறிவுகூடத் தொழிற்படாது
அமைதி உலகில் கிடைக்காது
அமைதி உலகில் கிடைக்காது

3. இறைவனுக்கஞ்சும் அறிவுபிறந்தால்
இன்பவாழ்வு கிடைக்கலாம்
கொடியவினைகள் நீங்கலாம் - எம்
குணசுபாவமும் மாறலாம்
குணசுபாவமும் மாறலாம்

### தொகையறா

அகங்காரம்குடிகொண்டால் அழிவுக்கே வழிகாட்டும்
அரக்கரின்குணமே மீறும்
அழிவுக்கு வழிகாட்ட அனுமதிதரும் வேதம்
அகிலத்திலெங்குமுண்டா



### சரணம்

4. இன்பதுன்பம் ஓரளவு இருப்பதுலகுக்கவசியம்
அளவைமீறும் இன்பதுன்பம்
அரக்கர் குணத்தை அமைக்கலாம் - உலக
அழிவின் காலமும் நேரலாம் - உலக
அழிவின் காலமும் நேரலாம்

5. இருளில் வாழும் மனிதஉள்ளம்
இறைவனைத்தேடி அலையுது
எங்கும் நிறைந்த இறைவனுடனே - நாம்
இருப்பதை உள்ளம் அறியுமா - நாம்
இருப்பதை உள்ளம் அறியுமா

6. நிழலைப்பொருளாய்க்காட்டும் புலனை
அடக்கித் தியானம் செய்திடில்
ஆத்மஞானம் கிடைத்திடும் - உடன்
அமைதிவாழ்வும் அமைந்திடும் - உடன்
அமைதிவாழ்வும் அமைந்திடும்

## பாட்டு - 128

### பல்லவி

இறைவனென்ற கலைஞன் தந்த
இயற்கைவிதியைப் பார்த்தாயா
அணுவைப்போன்றறோர் அணுவுமில்லை
அறிந்து கொள்ளமாட்டாயா - நீ
அறிந்து கொள்ளமாட்டாயா

### அனுபல்லவி

காலம்கொண்ட கோலம் உலகு
கருத்திருலிருத்திப் பார்த்தாயா
கலிமா கூறும் கருத்தை உணரும்
கல்பு உனக்கு இருக்குதா
கல்பு உனக்கு இருக்குதா (இறைவனென்ற)

### சரணம்

1. அனுபவத்தை மொழியில்க்கூற
அறிஞராலும் முடியாது
அனுபமும் ஐம்புலனின்
ஆட்சிகொண்டு அமைவதே
ஆத்துமாவின் அனுபூதிக்கு
ஆதியந்தம் கலிமாவே
ஆதியந்தம் கலிமாவே
அகங்காரத்தை நீக்கிவிட்டு
அருமைக் கலிமாவைத் தியானம் செய்
அனுபூதியை அடையலாம் - நாம்
அனுபூதியை அடையலாம் (இறைவனென்ற)



2. உடலும் தேவை உலகும் தேவை
உரியவழியில் செயல்படு
நிழலைப்போன்ற உடலை நிஜமாய்
நம்பி நரகில் வீழாதே
கடவுளென்ற காலத்தில்தான்
ககனபுவனமிருக்குது
ககனபுவனமிருக்குது
கடவுளறியா கருமமில்லை
கல்புக்கண்ணை திறந்துபார்
கருணைக்கடலில் மூழ்கலாம் - நாம்
கருணைக்கடலில் மூழ்கலாம் (இறைவனென்ற)

3. சுயமாய் ஏற்கும் உரிமைதந்தான்
சுருதிகொண்டு விளக்கம்தந்தான்
அமைதிவாழ்வுக்கு வழியைச்சொன்னான்
ஆக்கப்பூர்வச் செயலும்தந்தான்
கடவுளென்ற கருணைக்கடலில்
கலக்கும் ஞானம்தந்தானே
கலக்கும் ஞானம்தந்தானே
கடவுள்கருணைக்கு அளவுஏது
கருத்திலிருத்திச் செயல்படு
ஹக்கோடொன்றும் நிலைவரும்
ஹக்கோடொன்றும் நிலைவரும் (இறைவனென்ற)

4. அனைத்துச்செயலும் அவனுக்கென்றே
அமைத்துக்கொண்டு செயல்படு
ஆத்மஞானம் அமைந்துவிட்டால்
அவனின் செயலேதென்படும்
ஞானவிளக்கம் பெற்றுக்கொண்டால்
நாயன் செயலைப் பொருந்துவாய்
நாயன் செயலைப் பொருந்துவாய்
தகுதிவிலாயத்கிடைத்துவிட்டால்
படைப்பின் ரகசியம் புரிந்திடும்
படைத்தோன் ஒன்றுதல் கிடைத்திடும்
படைத்தோன் ஒன்றுதல் கிடைத்திடும் (இறைவனென்ற)

## பாட்டு - 129

**பல்லவி**

இரக்கம் கோபம் இருக்கும் போது நீதி அநீதிதென்படா
நீதிகாணா உள்ளம் என்றும் நிம்மதியைப்பெற்றிடா
நிம்மதியைப்பெற்றிடா

**சரணம்**

1. உன்னை நீயே அடக்கியாளும் உரிமை உனக்கிருக்குதே
பக்கச்சார்பு அற்ற நிலையில் பக்குவமாய்த்தீர்ப்பெடு
நீதி நெறியைக் கண்டறிய வேதவிளக்கம் அவசியம்
பக்கச்சார்பு இருக்கும் வரையில் பகுத்தறிவு தொழிற்படா
ஊரைமேய்க்க வேஷம் போட்டால்
உண்மை உனக்கு விரோதிதான்
உண்மை உனக்கு விரோதிதான் (இரக்கம்)

2. ஆளுக்கொருகட்சி சேர்த்தால் ஆத்மசாந்தி கிட்டுமா
அறத்தின் வழியை மறந்துசெய்யும் அமல்கள் பயனைக்கொடுக்குமா
கொள்கையோடு ஒன்றிவாழக் குறுக்கு வழிகள் வேண்டுமா
குர்ஆன் நேர் வழிகாட்டுமென்று குருட்டு பக்தி ஏற்குமா
பேதபுத்தி பேரின்பத்தைப் பெற்றுக் கொள்ளமுடியுமா
பெற்றுக் கொள்ளமுடியுமா (இரக்கம்)

3. சபல புத்தி சத்தியத்தின் சத்துருவாய் மாறலாம்
ஷைத்தான் உனது வலது கையாய் மாறி உன்னை வீழ்த்துவான்
சாதி சமய வேறுபாடு சத்தியத்தை மறைக்கலாம்
சாந்தி மார்க்கக் கொள்கை கொண்டால்
சபலபுத்தி நீங்கிடும்
கொள்கையோடு வாழுவோருக்கு நீதி நெறிகள் தென்படும்
நீதி நெறிகள் தென்படும் (இரக்கம்)



## பாட்டு - 130

**பல்லவி**

மருட்சிப்புலன்களில் மருண்ட மனிதன்
எங்கே வாழ்கிறான்
மனத்திலுள்ள மறைந்த நெருப்பில்
மறந்து வாழ்கிறான் - அவன்
மறந்து வாழ்கிறான்

**சரணம்**

1. இறப்பின் பிறகு காணும் நெருப்பை
எடுத்துக் கொண்டே இறக்கிறான்
இறந்தபிறகு இன்பவாழ்வு
கிடைக்குமென்றே நம்பினான்
இறைவனீந்த இனிய கொள்கையை
ஏனோ குழியில் வீசினான்
இறைவன் சொல்லை மீறிவாழில்
இன்பவாழ்வு கிடைக்குமா
இன்பவாழ்வு கிடைக்குமா (மருட்சி)

2. உலகை ஏய்க்கச் செய்யும் அமல்கள் உன்
உள்ளத்தையே உருமாற்றும்
உண்மை இன்பம் கண்டறிய
உரிய வழியேதென்படா
ஈருலகிலும் இன்பம்காண
இறைவழியில் வாழணும்
இறைவன் தூதர் தந்த கொள்கையில்
நின்று அமலைச்செய்யணும்
நின்று அமலைச்செய்யணும் (மருட்சி)

3. உறுதி நிறைவு பெறுவதற்கு
உரிய அமல்களைக்கையாளில்
உண்மை உறுதி உள்ளத்தமையும்
உலுத்தும் கவலை நீங்கிடும்
உருக்குலைந்த கொள்கையோடு
உலகை ஏய்க்க முற்பட்டால்
உன்னை நீயே ஏய்த்துக்கொண்டாய்
உணருமறிவு உனக்குண்டா
உணருமறிவு உனக்குண்டா (மருட்சி)



## பாட்டு - 181

**பல்லவி**

உண்மை அழிவதில்லையே - உண்மை
எங்கும் ஒழிவதில்லையே

**சரணம்**

1. அப்தென்றும் றப்பென்றும்
அணைபோட்ட அறிவுக்கு
அதாலத்தைத் தந்துதவினான் - இறைவன்
அதாலத்தைத் தந்துதவினான்
அப்தெல்லாம் அவன் பெயரின்
பொருளென்று அறிந்தோர்க்கு
ஹக்கென்றும் மறைவதில்லையே - அவர்
உள்ளத்தில் ஒளியிருக்குதே
அதாலத்தைக்கற்றுணர்ந்து
அதன்படி செயல்பட்டால்
ஹக்கோடு ஒன்றிவிடலாம் - நாம்
ஹக்கோடு ஒன்றிவிடலாம் (உண்மை)

2. கறைபடிந்த உள்ளங்கள்
உணராமல் இருந்தாலும்
உண்மை மறைவதில்லையே
உண்மை மறைவதில்லையே
கறைபடிந்த உள்ளத்தைக்
கண்ணாடியாய் மாற்றக்
கலிமாவைத் தந்திருந்தானே - உன்
கல்பதனை ஏற்கவில்லையா
கலிமாவின் துணையின்றிக்
கரைசேர முடியாது
ஹக்கான உண்மை இதுதான் - ஆம்
ஹக்கான உண்மை இதுதான் (உண்மை)

3 அறிவலையைப் பொருளாக
அமைத்துன்னை மயக்கிவைக்கும்
ஐம்புலனும் அறியாதப்பா - உண்மையை
ஐம்புலனும் அறியாதப்பா
ஊடகங்கள் உணர்த்துவதன்
உண்மையெல்லாம் மாயையென்று
உணருவோர் சித்திபெறுவார் - அவர்
உண்மையோடொன்றிவிடுவார்
கலிமாவின் கருத்தோடு
ஒன்றிவிடும் உள்ளத்தில்
என்றென்றும் சாந்திகிட்டுமே - ஆம்
என்றென்றும் சாந்திகிட்டுமே (உண்மை)



## பாட்டு 132

**தொகையறா**

இருளடைந்த உள்ளத்துக்கொளியூட்டும் தீன்கலிமா
இணையென்ற ஷிர்க்கை நீக்கும் இகபரத்திலுதவிதந்து
இறைசமூகம் சேர்த்துவைக்கும் இணையில்லாத்தீன்கலிமா
அறிவு கொண்டாராய்ந்து அணுகுமுறை அறிந்து கொண்டு
அமல் செய்தால் வெற்றி பெறலாம்

**பல்லவி**

தன்னையே அறியாத தறுதலை தனது
தலைவனை அறிந்திடுமா - மனிதா
தலைவனை அறிந்திடுமா

**சரணம்**

1. பகட்டுப் படாடோபம் புரட்டுப் பெரும் கோபம்
கொண்டிங்கு வாழாதே
கொண்டிங்கு வாழாதே
அரக்கராய் வாழ்வோர்க்கு அமைதியேதென்படா
அரக்கராய் வாழ்வோர்க்கு அமைதியேதென்படா
அகிலமே கண்ட உண்மை
அறநெறி வாழ்வோர்க்கு
அருட்கொடை கிடைத்திடும்
ஆனந்தமடைவாரே - அவர்
அமரராய் வாழ்வாரே (தன்னையே)

2. ஆசையும் கோபமும் அளவினை மீறினால்
ஆத்துமா சாந்திபெறுமா
ஆத்துமா சாந்திபெறுமா
ஆதியே தந்த கொள்கை அறியாத மூடருக்கு
ஆதியே தந்த கொள்கை அறியாத மூடருக்கு
ஆகிறில் உதவிகிட்டுமா
கொள்கையில் வாழ்வோர்க்கு
குதுபியத்தமைந்திடும்
குறிக்கோளையடைவாரே - அவர்
கொதிநரகேகாரே (தன்னையே)

3. இருதய சுத்தியோடு இருந்து நீ தியானம் செய்
இறைவழி தெளிவாகும்
இறைவழி தெளிவாகும்
வானவருதவி வன்செயல் நீக்கும்
வாழ்வினில் கண்ட உண்மை
கொள்கையில் வாழில்
கொடுவினைதீரும்
குறிக்கோளைப் பெறலாமே - நாம்
கொடிநிழல் பெறலாமே (தன்னையே)



## பாட்டு - 138

### பல்லவி

உலகமக்கள் யாவருக்கும்
தேவையெல்லாம் ஒன்றே ஒன்று
பெற்றுக்கொள்ளும் வழியும் ஒன்றடா - தம்பி
பெற்றுக்கொள்ளும் வழியும் ஒன்றடா

### சரணம்

1. ஜாதி பேதம் கற்பனையே
கலந்தெடுத்த ஒப்பனையே
ஆதி பிதா ஆதம் நபி
அணைத்தெடுத்த தாயார் ஹவ்வா
பெற்றெடுத்த ஓர்குடும்பம் நாம்
பேதம் ஏதும் வேதம் சொல்லுதா - தம்பி
பேதம் ஏதும் வேதம் சொல்லுதா (உலக)

2. ஜாதி பேதம் ஏதும் வேண்டாம்
சச்சரவுதானும் வேண்டாம்
புத்தியற்ற மனிதனாகிப்
புண்ணியத்தை இழக்கவேண்டாம்
பெற்றெடுத்த தாயார் ஒன்றேதான் - எம்மை
வளர்த்தெடுத்த தந்தை ஒன்றேதான் - எம்மை
வளர்த்தெடுத்த தந்தை ஒன்றேதான் (உலக)

3. வேற்றுமையைக் காண்பதற்கும்
ஒற்றுமையை ஏற்பதற்கும்
உரியவழி கொள்கையொன்றுதான்
வேற்றுவழி ஏதுமில்லையே
கொள்கையோடு வாழ்ந்துகொண்டால்
கோஷ்டிமோதல் தேவையில்லையே
குவலயத்தில் அமைதி தோணுமே (உலக)

4. புத்தித்தெளிவு பெற்றமக்கள்
புர்க்கான் கொள்கையை ஆய்வுசெய்து
புவியோருக்குணர்த்தி வைத்தால்
பூவுலகு அமைதி காணுமே
புதியகொள்கை ஏதும் தேவையா
புர்க்கான் கொள்கை ஒன்றே போதுமே
புர்க்கான் கொள்கை ஒன்றே போதுமே (உலக)



## பாட்டு 184

**பல்லவி**

தொல்வினையைத் தோற்கடிக்கும்
நல்வினையைச் சேர்த்துவைக்கும்
நாயனீந்த தீன்கலிமா
நல்லடியாராக்கிவைக்கும்

**சரணம்**

1. மனத்திலுள்ள மருட்சிகளை
மாற்றி உன்னைக் காட்டிவைக்கும்
மனஉறுதி பெற்றுவிட்டால்
ஒளியுலகைக் காட்டிவைக்கும்
உலகு செய்யும் உறுத்தல்களை
உறுதுணையாய் மாற்றிவைக்கும்
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே
(தொல்வினை)

2. அச்சத்தைத் தீர்த்துவைக்கும்
அருள்பெற நல் வழிகாட்டும்
ஆளுமையைத்தந்து உன்னைத்
தோழமையில் சேர்த்துவைக்கும்
கொள்கையில்லாக் கொடுவாழ்வு
கொடிநிழலில் சேர்க்காது
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே (தொல்வினை)

3. செத்திறந்த கற்பனைகள்
ஜென்னத்திலே சேர்க்காது
ஆராய்வில்லா அபத்தவாதம்
அறிவில் தெளிவை ஆக்காது
இறைதந்த கொள்கை உன்னை
எரிநரகில் தள்ளாது
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே
இறையீந்த தீன்கலிமா
இணையில்லா அருட்கொடையே (தொல்வினை)



## பாட்டு 185

### பல்லவி

அறிவை மயக்குவது புலனாட்சி
ஆசையை ஊட்டுவதும் புலனாட்சி
அமைதியைக்கெடுப்பதுவும் புலனாட்சி - இன்றேல்
அகிலத்தில் வாழ்வே இல்லை இறந்தாச்சி

### சரணம்

1. சித்த சுத்தியோடு உண்மைச்
சத்தியத்தில் வாழ்ந்து கொண்டால்
பக்தி முக்தி பெற்றுவிடும் தம்பி
பூவுலகுமட்டுமல்லப்
பொன்னுலகும் காணுவாயே தம்பி
இதைப்புத்தி கொண்டு சிந்தனைசெய் தம்பி
இதைப்புத்தி கொண்டு சிந்தனைசெய் தம்பி (அறிவை)

2. ஈருலக வாழ்வுக்காக இனியவழி தந்திருக்க
இருட்டறையில் வாழ்வதேனோதம்பி
நேர்வழியில் வாழ்வமைந்தால்
தீயவினை நீங்கிடுமேதம்பி
இது இறைவேதம் சொன்னதடா தம்பி
இது இறைவேதம் சொன்னதடா தம்பி (அறிவை)

3. தேவைகளைத் தீர்த்துக்கொள்ள
தீன் நெறியைப் பற்றிக் கொண்டால்
திக்கெல்லாம் வெற்றியுண்டு தம்பி
தீதாறைப்பெற்றுக் கொள்வாய்
தேம்பி அழத்தேவையில்லைத் தம்பி
இதைச் சிந்தித்துச் செயல்படணும் தம்பி
இதைச் சிந்தித்துச் செயல்படணும் தம்பி (அறிவை)

4 சத்தியத்தை உணர்த்தாக் கல்வி
ஜென்னத்திலே சேர்த்துவைக்கா
அனுபவத்தில் பெற்றுக்கொள்ளு தம்பி
ஆராய்ந்து பெற்றுக்கொண்டு
அறவழியில் வாழ்ந்திறந்தால்
ஆகிறிலும் வெற்றியுண்டு தம்பி
இதைப் புத்தியுண்டேல் சிந்தனைசெய் தம்பி
இதைப் புத்தியுண்டேல் சிந்தனைசெய் தம்பி
(அறிவை)



## பாட்டு 136

**பல்லவி**

நீதியை நித்திரையில் ஆழ்த்திவிடும் அம்மாறா
அரக்கனாய் ஆக்கிவிடுமே

**அனுபல்லவி**

நிந்திக்கும் லவ்வாமா நித்திரையை நீக்கி விட்டு
நிம்மதியைத் தந்துவிடுமே - மனிதா
நிம்மதியைத் தந்துவிடுமே (நீதியை)

**சரணம்**

1. முல்ஹிமா முத்மஇன்னா
முஸ்லீமாய் மாற்றி உனக்கு
ஈமானை எத்திவைக்குமே - உன்னைப்
பக்தனாய் மாற்றி வைக்குமே
றாளியா மர்ளியா புர்க்கானோடொத்து நின்று
போராடி வெற்றிபெறுமே
போராடி வெற்றிபெறுமே
கமாலியாக்கிட்டிவிட்டால்
கட்டவிழ்தல் கிட்டிவிடுமே - மனிதா
ஹக்கோடு ஒன்றிவிடுவாய் - மனிதா
ஹக்கோடு ஒன்றிவிடுவாய் (நீதியை)

2. கலீபாவாய் நீ அமைந்த
காரணத்தைக் கண்டறிய
கல்வியேதும் சொல்லித்தராதே - கல்வி
காரணத்தைக் காட்டித்தராதே
ஹக்குணர்த்தும் கலிமாவின்
கருத்தில் நீ மூழ்கிவிட்டால்
காரணத்தைக் கண்டறியலாம்
காரணத்தைக் கண்டறியலாம்
கலிமாவின் துணையின்றி

ஹக்கோடு ஒன்றிவிட
வேறுவழி ஏதுமில்லையே - மனிதா
வேறுவழி ஏதுமில்லையே (நீதியை)

3. பக்கச்சார்பில்லாமல்
பகுத்தறிவு தொழிற்பட்டால்
பாதையினைப் புரிந்து கொள்ளலாம்
பக்தியிலும் சித்தி பெறலாம்
சீர்கலிமா உணர்த்துகின்ற
ஸிறாத்தென்ற நேர்பாதை
சித்தத்தில் தானிருக்குது - உன்
சித்தத்தில் தானிருக்குது
சீர்கல்வி பெற்றபின்
ஸிறாத்திலே நடந்து செல்
சமதோடு சேர்ந்துவிடுவாய் - நீ
சமதோடு சேர்ந்துவிடுவாய் (நீதியை)



## பாட்டு 187

### பல்லவி

உள்ளம் அமைதிபெற ஆத்துமா சாந்திபெற
உரியவழிதந்து விட்டானே - இறைவன்
வேதத்திலே சொல்லிவிட்டானே

### சரணம்

1. உள்ளம் அமைதிபெற உரியவழி திக்கிறென்று
மறைபுர்க்கான் சொல்லவில்லையா
அவ்வேதம் ஆதாரம் தந்ததில்லையா
வேதத்தைப் பார்த்ததுண்டா
விளங்கியறிந்து ஏற்றதுண்டா
வீண்வாதம் தேவையில்லையே - மனிதா
விற்பனைக்கு வேதமில்லையே - மனிதா
விற்பனைக்கு வேதமில்லையே (உள்ளம்)

2. உள்ளத்தை ஓர்நிலையில் ஒன்றாக்கித் திக்கிர் செய்தால்
கட்டவிழ்தல் கிட்டிவிடுமே கல்பு
ஹக்கோடு ஒன்றிவிடுமே
மலக்கூத்தின் மர்மமெல்லாம்
மறைவின்றி வெளியாகும்
மனிதனாய் வாழ்ந்திறக்கலாம் - நாம்
மறுமையிலும் சாந்திபெறலாம் - நாம்
மறுமையிலும் சாந்திபெறலாம் (உள்ளம்)

3. சத்தியத்தை ஏற்றுக்கொண்ட
சாதுவாய் வாழ்ந்து கொண்டால்
சாந்தியை உள்ளம் பெற்றுவிடுமே - சகல
சற்குணமும் வந்துசேருமே
இஸ்லாத்தின் கொள்கையினை

ஏற்றெடுத்து வாழ்ந்துகொண்டால்
இன்பநிலை பெற்றுவிடுவாய் - மனிதா
துன்பநிலை தாண்டிவிடுவாய் - மனிதா
துன்பநிலை தாண்டிவிடுவாய் (உள்ளம்)

4. துன்யாவின் சோதனையில்
வெற்றிபெற்ற வீரருக்குச்
சோபனத்தைச் சொல்லிக்காட்டுதே - வேதம்
சொர்க்கமென்று உறுதி கூறுதே
குர்ஆனின் கூற்றிதனைக்
கூர்மதியோடாய்ந்து வாழில்
குற்றம் குறை நீங்கிவிடுமே - மனிதா
பிறந்த நோக்குக் கிட்டிவிடுமே - மனிதா
பிறந்த நோக்குக் கிட்டிவிடுமே (உள்ளம்)



## பாட்டு 138

**பல்லவி**

உறவும் பகையும் ஒருங்கே அமைந்த
உலகில் வாழும் மனிதனே
இறந்தபிறகும் இன்பம்காண
இயற்கைவழியைத் தெரிந்தெடு
இயற்கைவழியைத் தெரிந்தெடு

**சரணம்**

1. உலகவாழ்வோர் மயக்கநிலைமை
உணர்ந்துகொண்டு செயல்படு
தேடிக்கொண்ட வினையின்பயனைத்
தெளிவாய்க்காணும் நாள்வரும் - நாள்வரும்
யாருமங்கே உதவிதாரார்
தீய்க்கும் நெருப்புன்னைத் தீண்டுமே - தீண்டுமே
மறையை விளங்கிக் குறையை நீக்கி
மனிதனாக வாழ்ந்துசெல் - நீ
மனிதனாக வாழ்ந்துசெல் (உறவும்)

2. நோக்கமில்லாச் செயலே இல்லை
வாழ்வின் நோக்கைக் கண்டறி
நோக்கை முரணாய் மாற்றும் புலனை
அடக்கியாள்வதே அதாலத்து - அதாலத்து
மறந்த உண்மையை நினைவுபடுத்தும்
மார்க்க நெறியே தரீக்கத்து - தரீக்கத்து
உண்மையோடு ஒன்றும் நிலையே
உயர்ந்த பதவி ஹகீகத்து - ஆம்
உயர்ந்த பதவி ஹகீகத்து (உறவும்)

3. உன்னை நீயே மறந்து வாழும்
உலகவாழ்வு பயன்தரா
இறந்தபிறகுன் உலக வாழ்வோர்
மயக்கு என்பது தென்படும் - தென்படும்
ஷைத்தான் உன்னைத் கெடுத்தானென்று
கூறும் வார்த்தை எடுபடா - எடுபடா
இறைவன் பேச்சை விளங்கித்தெளிந்து
நேர்வழியில் வாழ்ந்துசெல் - நீ
நேர்வழியில் வாழ்ந்துசெல் (உறவும்)



## பாட்டு - 139

**பல்லவி**

மணக்கும் கலிமாவைப்புரட்டாதே
மடமையில் மனிதரைத்தள்ளாதே
குருடனாய் வாழ்ந்து இறக்காதே
கொதிநரகேகித் தவிக்காதே

**சரணம்**

1. செய்தோர் பெறுவது ஒருமடங்கு
செய்வித்தோர் பெறுவது பலமடங்கு
இறைவன் போட்ட சட்டங்களை
எண்ணித்துணிந்து செயல்படணும்
தௌபாச் செய்து மீட்சிபெறு
தவறை உணர்ந்து திருந்திவிடு
தலைச்சன் ஆட்டைத் தொடரும் கூட்டம்
தனி வழி ஏதும் அறியாதே (மணக்கும்)

2. உண்மையை மறைத்து உரையாடி
ஊர்மெச்ச வாழநினைக்காதே
உண்மையைப் பட்டம் காட்டித்தரா
உலகோர்புகழும் தெளிவுதரா
வேதவாக்கை விளங்கியறி
வேதனை வாசலை மூடிவிடும்
மூடர்பேச்சில் மூழ்காதே
நபி கொள்கைகண்டு தெளிவுபெறு (மணக்கும்)

3. பிடிவாத நோக்கை விட்டுவிடு
பிறப்பின் நோக்கை அறிந்துகொள்ளு
நோக்குக்கேற்ப வாழ்ந்து கொள்ளு
சுயநலநோக்கைத் தள்ளிவிடு
இறைவனின் ஏவலை ஏற்றெடுத்து
இயன்றவரையில் அமல்களைச்செய்
எல்லாம்வல்ல இறைவனின்வாக்கை
ஏற்றுநடந்து வெற்றிபெறு (மணக்கும்)

## பாட்டு 140

**பல்லவி**

ஒளியைக் கொண்டு வழியைக்காண
உறுதிபூண்ட மனிதனே
பாதில்முகத்தீஸ் வந்து சேர்ந்தாய்
பாதரட்சையைக் கழட்டிக்கொள்
பாதரட்சையைக் கழட்டிக்கொள்

**சரணம்**

1. குதுபியத்தென்ற மலையிலேற
ஊன்றுகோலொன்று அவசியம்
மணக்கும்கலிமா மந்திரத்தை
ஊன்றுகோலாய் எடுத்துக்கொள்
உச்சிசென்று உறவுகொண்டால்
உருவம்மாறும் ஊன்றுகோல்
போலிஅறிவை விழுங்கும்பாம்பாய்
மாறி அறிவைப்புகட்டிடும்
புவியோர்க்கறிவு புகட்டும்நோக்காய்
புதுமைகள்பல காட்டிடும்
வேதம்தந்த ஞானவிளக்கம்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள் (ஒளியை)

2. வேலைமுடிந்து கீழேவந்தால்
பாதரட்சையை எடுத்துக்கொள்
பகுத்தறிவைப் பயன்படுத்திப்
பாதரட்சையைக் காத்துக்கொள்
யாருமறியா அகமியங்கள்
அறிவில்தென்படும் அறிந்துகொள்
தேவைக்கேற்ற விளக்கம்கொண்டு
ஆத்மீகஒளியை ஏற்றிவை



தூயநபியின் போதனையைத்
துணையாய்க்கொண்டு செயல்படு
வேதம்தந்த ஞானவிளக்கம்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள் (ஒளியை)

3. காலைமாலை இறைதியானம்
கண்டிப்பாகச் செய்துகொள்
காற்றடிக்கும் பக்கமெல்லாம்
சாயும்குணத்தை நீக்கிக்கொள்
நீதிநெறியைப் பேணிக்காக்கும்
நீதிபதியாய் வாழ்ந்துகொள்
நிம்மதியாய் வாழ்வதற்குன்
இல்லறத்தை அமைத்துக்கொள்
ஈருலகிலும் வெற்றிகாண்பாய்
இன்னுமிருளில் வாழாதே
வேதம் தந்த ஞானவிளக்கம்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள்
விரும்பிக்கொண்டால் எடுத்துக்கொள் (ஒளியை)

## பாட்டு 141

**பல்லவி**

நப்பாசை கொண்ட உள்ளம் நாயாக மாறும்
நம்பிக்கை இல்லா உள்ளம் பேயாகமாறும்

**சரணம்**

1. உன்னை உணர்ந்துகொள்ள உரியவழி வாழ்ந்திறக்க
 ஒரேவழி தீன்கலிமா உதவிசெய்துகாக்கும்
 ஆசையை அளவோடு அமைத்துன்னைக்காக்கும்
 அறநெறியில் வாழ்ந்திறக்க அனுகூலம் செய்யும்
 பொல்லாத ஷைத்தானைப் போராடி வெல்லும்
 புகழ்பூத்த ஜன்னத்தில் புனிதனாய்ச் சேர்க்கும்
 புனிதனாய்ச் சேர்க்கும் (நப்பாசை)

2. இருள்சூழ்ந்த உள்ளம் உன்னை இடர்படுத்திவைக்கும்
 இறைவேத நல்லறிவை நஞ்சாகக்காட்டும்
 பொய்கூறிப் புறம்பேசிப் புகழ்தேடி ஆட்டும்
 புவியோரை ஏமாற்றப் புது வழிகள்தேடும்
 ஷைத்தானோடுறவாடும் சத்தியத்தை மறுக்கும்
 ஈருலகவாழ்விலும் எரிநரகில் வீழ்த்தும்
 எரிநரகில் வீழ்த்தும் (நப்பாசை)

3. சத்தியத்தைஏற்ற உள்ளம் தக்தீறைப்பொருந்தும்
 தத்துவங்கள் நல்வழிக்கு ஒத்துழைப்புச்செய்யும்
 உண்மைவழி சென்றோர்க்கு ஈருலகும்வெற்றி
 இறைமறையின் தீர்ப்பு இது பொய்யல்லத்தம்பி
 புர்க்கானைப்படித்துப்பார் புரிந்துகொள்ளமுடியும்
 புத்தியோடு கொள்கை கொண்டு புவியுலகில் வாழு
 புவியுலகில் வாழு (நப்பாசை)



## பாட்டு 142

**பல்லவி**

உன்னை உனக்குணர்த்த
உன்நிலையை அறிந்துகொள்ள
ஊடகமாய்த்தந்தடா ஷைத்தானி - எமக்கு
ஊடகமாய்த்தந்தடா ஷைத்தானி

**சரணம்**

1. உன்னறிவைப் பயன்படுத்தி
 ஊடகத்தைப்புரிந்து கொண்டால்
 உயர்நிலையின் ஊடகமே மலக்கானி
 உயர்நிலையின் ஊடகமே மலக்கானி
 உள்ளொன்றும் புறமொன்றும்
 இல்லாமல் ஒன்றானால்
 இதயத்துக்கொளியூட்டும் றஹ்மானி
 இதயத்துக்கொளியூட்டும் றஹ்மானி
 சொல்லாலும் செயலாலும்
 ஒன்றான உள்ளமே
 சொற்கத்துப் பூங்காவாகும் - மனிதா
 சொற்கத்துப் பூங்காவாகும் (உன்னை)

2. பண்பற்ற உள்ளமுயர் பாதையினை அறியாது
 பகுத்தறிவை வஹ்மாய் மாற்றும்
 பகுத்தறிவை வஹ்மாய் மாற்றும்
 பகுத்தறிவு தொழிற்பட்டால் பாதை தெளிவாகிவிடும்
 பயஹம்பர் சந்திப்புண்டு
 பயஹம்பர் சந்திப்புண்டு
 உண்மையைப் புரிந்துகொண்டு உரியவழி செல்வோர்க்கு
 உதவிசெய்யும் றஹ்மானி - மனிதா
 உதவிசெய்யும் றஹ்மானி (உன்னை)

3. கலிமாவே ஸிறாத்தென்று கண்டறிந்து வழி நடந்தால்
கண்டிப்பாய்ச் சித்திபெறுவாய்
கண்டிப்பாய்ச் சித்திபெறுவாய்
கல்புக்கண்திறக்காத கயவரோடிணைந்துசென்று
கடும்துயரில் வீழாதேடா
கடும்துயரில் வீழாதேடா
அளப்பரிய சக்கியுன்னை ஆட்கொள்ளும் நேர்வழியில்
அமைதிநிலை பெறுவாயடா - மனிதா
அமைதிநிலை பெறுவாயடா (உன்னை)



## பாட்டு 143

**பல்லவி**

ஷில்சிலா மயக்குன்னைச் சீரழிக்கும்
சிந்தனைக்குத் தடையிட்டுச் சிறைப்படுத்தும்

**சரணம்**

1. ஸிறாத்தென்றால் எதுவென்று ஷில்சிலா காட்டுமா
ஸிறாத்திலே நடைபோடச் ஷில்சிலா உதவுமா
நசாறாக்கள் போட்ட நரிக்கூத்தை அறியாத
நரிக்கூட்டமிதனைக் கையேற்றுக்கொண்டார்
கையேற்றுக்கொண்டார்
ஷில்சிலா மயக்கில் சிக்குண்டமனிதன்
ஷேகினை அணுகிச் ஷில்சிலா பெற்றான்
ஷேகுயாரென்பதை அறியாத மனிதன்
சொர்க்கத்தில் சொகுசாக வாழவே நம்பினான்
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு
(ஷில்சிலா)

2. ஷில்சிலா தோன்றியது நஸாறாக்கள் காலம்
நரிக்கூட்டம் கையேற்றது தரீக்காக்களின் பின்தான்
தரீக்காக்களை உருவாக்கிய நல்லடியார்கள்
யாருமே ஷில்சிலாக் கொடுத்ததாயில்லை
கொடுத்ததாயில்லை
சஹாபாக்கள் யாரும் ஷில்சிலாப் பெற்றதாய்
சருத்திரத்திலெங்கேனும் இல்லவே இல்லை
றசூலுல்லாகூட யாருக்கும் ஷில்சிலாக்
கொடுத்தாய்ச் சருத்திர ஆதாரம் ஏதேனும் முளதா
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு
(ஷில்சிலா)

3. வஹ்ஹாபிஸ வண்டி தஜ்ஜாலை சுமந்து
வலமிடம் வருகிறதே உலகெல்லாம் சுற்றி
உண்மையைப் பொய்யாய்க் காட்டுவதோடு
உலகமக்களை இருளிலேதள்ளி
இருளிலேதள்ளி
தௌஹீதைச் ஷிர்க்காய் மாற்றுவதாலே
கூட்டம் எழுபத்திமூன்றாக ஆச்சி
ஓர் கூட்டம் மட்டுமே ஜன்னத்தில் சேரும்
ஓர் கூட்டம் மட்டுமே ஜன்னத்தில் சேரும்
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு
அழுவாதா சிரிப்பதா ஆராய்ந்து தெளிவுபெறு

(ஷில்சிலா)



## பாட்டு 144

### பல்லவி

ஈமானை எடுத்துக்கொள்ள
எங்கிருந்தோ இங்குவந்து
இருளில் மூழ்கி வாழ்வதேனடா - மனிதா
மறந்து வாழந்து மாய்வதேனடா - மனிதா
மறந்து வாழந்து மாய்வதேனடா

### சரணம்

1. இருளில் வாழும் மனிதனுக்கு
ஈமான் எங்கும் தென்படா
காணாப்பொருளைக் கையில்கொள்ள
கழா உனக்கு இடம்தரா
வந்த வேலை முடியாவிட்டால்
வாழ்வை வீணாய்க் கழித்திட்டாய்
இறந்தபிறகு வாழ நேரும்
எரியும் நரக நெருப்பிலே
எரியும் நரக நெருப்பிலே (ஈமானை)

2. நோக்கை மறந்த போக்கினாலே
நொந்து வாழநேரிடும்
ஊக்கமில்லாச் செயலினாலே
தாக்கம் நிச்சயம் கிடைத்திடும்
அமைதிதேடும் மனிதஉள்ளம்
ஆண்டவன் சொற்கேட்கணும்
எவருமுதவா வாழ்வு ஒன்று
இருக்குபின்னாலே - நரகு
இருக்குபின்னாலே (ஈமானை)

3. மறந்தநோக்கை நினைவுகாட்டும்
மருந்தே கலிமா உண்டுபார்
வஹ்ஹாபிஸ வாதமெல்லாம்
வந்தநோக்கை மறைத்திடும்
ஈமானைக்கண்டு கொள்ள
இருளை நீக்கும் கலிமாதான்
ஓர்மையோடு எடுத்துக் கொண்டால்
உண்மை ஈமான் கிடைத்திடும்
உண்மை ஈமான் கிடைத்திடும் (ஈமானை)

4. ஈமானை அறியாமக்கள்
எதைஎதையோ கூறட்டும்
இவ்வுலகிலும் சாந்திதேவை
இறந்தபிறகும் சாந்திதேவை
இதற்காகத்தான் தீன்கலிமா
இருட்டடிப்புச் செய்யாதே
தீயோர்பேச்சில் மயங்கிடாமல்
திருமறையைக் கடைப்பிடி
திருமறையைக் கடைப்பிடி (ஈமானை)



## பாட்டு 145

### பல்லவி

பலமுறை சிந்தித்து ஒருமுறை செயல்படு
உன்கையில் வெற்றியுண்டு - மனிதா
உன்கையில் வெற்றியுண்டு

### அனுபல்லவி

பகுத்தறிவென்பது படைத்தவன் அருட்கொடை
பலவீனப்படுத்தாதே - அறிவைப்
பலவீனப்படுத்தாதே

### சரணம்

1. ஊடகம் யாவும் உள்ளத்தை மயக்கி
உண்மையை மறைக்குதப்பா
ஊடகவழியே உலகியல் வாழ்வு
உண்மையை உணரவிடா
உண்மையை உணரவிடா
ஊடகம் கொண்டு உலகிலேவாழ
உறுதுணை செய்வதே தீன்கலிமா
உறுதுணை செய்வதே தீன்கலிமா
உண்மையை உணர்ந்து உள்ளத்தில் பதிக்க
உதவிடும் இறைதியானம் - நிச்சயம்
உதவிடும் இறைதியானம் (பலமுறை)

2. தேனைத்தொட்டு நக்கிப்பார்ப்போன்
இரசனையை அறிந்து கொள்வான்
நக்கிப்பார்த்தும் கைக்குது என்போன்
காரணமறிவானா - காரணமறிவானா
கலிமாவைக்கொண்டு இறைவனை உணர
உதவிபுரிவதே திக்கிர்வழி
உதவிபுரிவதே திக்கிர்வழி
உண்மையை உணர்ந்து உள்ளத்தில் பதித்தால்
உயர்நிலைபெற்று விட்டாய் - உண்மை
உயர்நிலைபெற்று விட்டாய் (பலமுறை)

3. சட்டத்தைக் கொண்டு திட்டத்தில்
செயல்படு சச்சரவிருக்காது
ஒவ்வோர்படிக்கும் வெவ்வேறு சட்டத்தை
வேதம் தரவில்லையா
வேதம் தரவில்லையா
சட்டத்தைமீறித் திட்டத்தைக் கையாளில்
ஷைத்தான் வழிகெடுப்பான்
ஷைத்தான் வழிகெடுப்பான
சாதுவைப்போன்ற வேஷத்தைநம்பிச்
சறுக்கி நீ வீழாதே - நரகில்
சறுக்கி நீ வீழாதே (பலமுறை)



## பாட்டு 146

**பல்லவி**

பொன்னென்றும் பெண்ணென்றும் புகழென்றும்
உன்வாழ்வைப் போதையில் கழித்துவிட்டாய் - வாழ்வைப்
போதையில் கழித்துவிட்டாய்

**சரணம்**

1. இறந்தபின் பொருள் புகழ் உன்னுடன் வருமா
உதவிக்கு ஏதேனும் உறுதுணை தருமா
உண்மையில் விசுவாசம் கொண்டவரானால்
உதவிக்கு விசுவாசம் நிச்சயம் போதும்
சிந்தையில் கொண்டிதைச் சீருடன் வாழ்ந்து
சீர்பெற்ற மூமீனாய்ச் சென்றடைய வேண்டும்
சீர்பெற்ற மூமீனாய்ச் சென்றடைய வேண்டும் (பொன்)

2. நீ விட்டுச் செல்லும் பொருள் யார்வசம் போமோ
யாரறிவார் இதை யோசித்துப்பாரு
நீ விட்டபொருள் நெருப்பாய்
மாறியுனைத்தாக்கலாம்
நிம்மதிகிட்டாது நிரந்தரதுன்பம்
வேதனை வருமுன்பே விசுவாசம் கொள்ளு
வேதனை ஏதுமே வாராது உண்மை
வேதனை ஏதுமே வாராது உண்மை (பொன்)

3. ஆசையை அளவோடும் அறிவோடும் எடுத்துக்கொள்
ஆண்டவன் கட்டளையை அணுவேணும் மீறாதே
ஈமானைப் பெற்ற நீ இன்பசுகம் காண்பாய்
ஈருலகவாழ்விலும் ஈடேற்றம் காண்பாய்
இறையோனின் வாக்குறுதி என்றுமே மாறா
மூமீனாய் வாழ்ந்திறக்க வேணும்
மூமீனாய் வாழ்ந்திறக்க வேணும் (பொன்)

## பாட்டு 147

### பல்லவி

உலகை மயக்குவது வேஷம் - அதன்
உட்பொருளாயிருப்பதுதான் சாபம்

### சரணம்

1. கட்புலனை நம்பிக்கொண்டு காட்சிகண்டு ஆசைகொண்டு
வேஷம் போட்டு வாழவேண்டுமா - தம்பி
இது வேதம் தந்த ஞான போதமா
செவிப்புலனை நம்பிக்கொண்டு சேற்றில் நட்ட கம்புபோல
நாளுக்கொருகோலம் வேண்டுமா - தம்பி
ஆளுக்கொரு வேதம் வேண்டுமா (உலகை)

2. ஐந்து புலன்களையும் ஆட்சிபண்ணி நீதிகாணும்
அறிவை எங்கும் விட்டுவிடாதே - தம்பி
அரக்கனாக வாழ்ந்து கொள்ளாதே
அரக்கர்குணம் ஆத்துமாவை ஆழ்துயரில் ஆழ்த்திவிடும்
ஆத்ம சாந்தி பெறுவதெப்போது - தம்பி
ஆனந்தத்தை அடைவதெப்போது (உலகை)

3. புலனறிவில் சிக்கிக் கொண்டால் புனிதனாக வாழவொண்ணா
பூவுலகும் வெற்றிதராதே - தம்பி
பூதவுடலும் புதைந்து போகுமே
புர்க்கான் வழி வாழவேணும் புண்ணியத்தைத் தேடவேணும்
பூவுலகும் வெற்றிதருமே - தம்பி
ஆகிறாவும் வெற்றிதருமே (உலகை)

4. கற்ற கல்வி அற்பசொற்பம் அறியாக்கல்வி அனேகமுண்டு
அகங்காரத்தை விட்டுவிடவேணும் - தம்பி
ஆத்மா சாந்தியடைந்துவிடும் நம்பி
தேடியோர் கண்டடைவார் திருச்சமூகம் சேர்ந்து கொள்வார்
நேர்வழியில் சென்றுவிடுவார் - அவர்
நித்தியனோடொன்றிவிடுவார் (உலகை)



## பாட்டு 148

### பல்லவி

எண்ணத்தின்விளைவே இகபரவாழ்வு
இறைவன் போட்ட சட்டமிது
எண்ணம் சீராய் அமைந்தவர் வாழ்வில்
என்றும் அமைதிகிட்டும் - வாழ்வு
என்றும் அமைதிகிட்டும்

### சரணம்

1. எண்ணம் சீராய் அமைவதற்குள்ளம்
இறையொளி பெறவேண்டும்
இருள் திரை உள்ளத்திருக்கும் வரையில்
எண்ணம் சீராகா
மதத்தை மீறும் மனிதரின் உள்ளம்
மாண்புறு ஒளிகாணா
இஸ்லாத்தின் லேபலில் வாழ்ந்து கொண்டாலும்
இருள் திரை நீங்காது - உள்ளம்
நல்லெண்ணம் கொள்ளாது - உள்ளம்
நல்லெண்ணம் கொள்ளாது (எண்ணத்தின்)

2. மறுமை வாழ்வை மறந்தவரிங்கே
மன்னனாய் வாழட்டுமே
மறுமைவாழ்வில் மதிபிறந்தாலும்
நரக நெருப்பை நீக்காதே
கொள்கையை அறிந்து குணத்தைத்திருத்தி
வாழுவோர்க்கென்றும் அமைதியுண்டு
கொடிய துன்பம் தொடராது
குறைவில்லா நிலைமை பெற்றிடுவார் - அவர்
கொடிநிழல் கூட்டத்தில் சேர்ந்திடுவார் - அவர்
கொடிநிழல் கூட்டத்தில் சேர்ந்திடுவார் (எண்ணத்தின்)

3. உள்ளக்குமுறலை ஓர்நிலைப்படுத்தி
உயர்நிலை பெறுவதற்கே
உயிருள்ள கலிமாவை இறைவன் தந்தான்
உணர்ந்து நீ பாராயோ
உண்மை பொய்யை உணர்த்தும் கலிமா
உள்ளத்தைச் சீர்படுத்தும்
உரிய வழியில் கையாளில் உள்ளம்
உண்மையோடொன்றிவிடும் - உள்ளம்
ஒளியுலகாகிவிடும் - உள்ளம்
ஒளியுலகாகிவிடும் (எண்ணத்தின்)



## பாட்டு 149

**பல்லவி**

அழுவதும் சிரிப்பதும் அனைத்துச் செயல்களும்
அமைதியைப் பெறுவதற்கே
ஆண்டவனீந்த அருட்கொடையிதனை
ஆராய்ந்து தெளிவுபெறு - இதனை
ஆராய்ந்து தெளிவுபெறு

**சரணம்**

1. விருப்பும் வெறுப்பும்உறவும் பகையும்
தற்கால சாந்தியடா - மனிதா
தற்கால சாந்தியடா
நிலையான சாந்திக்கு நேர்வழிகாட்டும்
நறுமணக் கலிமாவடா – மனிதா
நறுமணக் கலிமாவடா
வேதம் தந்த விதிவிலக்கறிந்து வேலையிலீடுபடு
விளங்காச் செயலில் வீண்காலம் போக்கி
வேதனையடையாதே - நரகில்
வேதனையடையாதே (அழுவதும்)

2. கண்ணுன்னை மருட்டும் செவியுன்னை உருட்டும்
கலக்கம் தீராதடா - மனிதா
கலக்கம் தீராதடா
கடவுளுனக்களித்த கலிமாவைக் கொண்டால்
கரைசேரவழிபிறக்கும் - மனிதா
கரைசேரவழிபிறக்கும்
கல்பைத்திருத்திக்கலிமாவை உணர்ந்தால்
ஹக்கின் உதவிகிட்டும்
கவலைகள் தீரும் கலிமாவின் பொருட்டால்
ஹக்கோடிணைந்து கொள்வாய் - நீ
ஹக்கோடிணைந்து கொள்வாய் (அழுவதும்)

3. உள்ளும் புறமும் ஓர்வழிப்பட்டால்
உள்ளம் தெளிவுபெறும் - மனிதா
உள்ளம் தெளிவுபெறும்
உருவத்தில் மயக்கும் ஊடகம்யாவும்
ஓர்வழிப்பட்டுவிடும்
ஓர்நிலைப்பட்ட உள்ளத்தில் ஈமான்
உறுதியடைந்துவிடும்
உண்மையில் நிலைக்கும் உயர் நிலையொன்று
உண்மையாய்க் கிடைத்துவிடும் - ஆம்
உண்மையாய்க் கிடைத்துவிடும் - (அழுவதும்)



## பாட்டு 150

### இராக மாலிகை

இருட்டறைக்குள் ஏகுமுன்
இலங்கும் தீபம் ஏற்றிக்கொள்
இல்லையெனில் இடருண்டு
இயன்றவரை மாற்றிக்கொள்
அகந்தையெனும் பெருநெருப்பு
அண்டாமல் பார்த்துக்கொள்
அனைத்தையும் கரித்துவிடும்
அறிவைத்துணை சேர்த்துக்கொள்
அறிவு சேர்த்து ஐந்துரைகற்கல்
அளித்திருக்கு புரிந்துகொள்
பாலமெனும் உருவகப் பேச்சில்
பயம்கொள்ளாமல் புரிந்துசெல்
பாதைகண்டு கூறும் மேதை
பாதம் பார்த்துப் பணிந்து கொள்
இதயமென்ற கண்ணாடியில்
இருள் படராமல் பார்த்துக்கொள்
இச்சையெனும் தேவையுன்னை
இடர்படுத்தும் அடக்கிக்கொள்
உள்ளதவன் மட்டுமென்ற
உறுதியை உள்ளத்தமைத்துக்கொள்
உலகு வெறும் கனவு என்ற
உண்மையிலே வாழ்ந்துகொள்
உண்மையிலே வாழ்ந்துகொள்

## பாட்டு 151

### பல்லவி

பதவி மோகம் பயங்கர நோய்
பசுத்தோல் போர்த்த புலியாய் மாற்றும்

### சரணம்

1. வேத நெறியை வீசியெறியும்
வேஷம் போட விரும்பி நிற்கும்
வேத நெறியை வீசியெறியும்
வேஷம் போட விரும்பி நிற்கும்
பொய்யை உண்மையாய் புரட்டிக்காட்டும்
உலகோர் புகழ ஆசை கொள்ளும்
பொய்யை உண்மையாய் புரட்டிக்காட்டும்
உலகோர் புகழ ஆசை கொள்ளும்
வம்பு வேலைக்கு வழிவகுக்கும்
வரட்டு வாதத்தால் ஊரைமேய்க்கும்
ஏழை நிலையை எண்ணிப்பாரா
இதயசுத்தியோடு வாழா பதவி மோகம

(பதவி)

2. பொருளைப் புகழைத் தேடியலையும்
புர்க்கான் கொள்கையைப் புரட்டிக்காட்டும்
மனித குலத்தை மடையராக்கும்
மதத்தின் பெயரால் கொலையும் செய்யும்
மனித உரிமையை மறக்கச்செய்யும்
மனிதப் பண்பை மறக்கடிக்கும்
தஜ்ஜாலாக மாற்றிவைக்கும்
தலைக்கனத்தைத் தளிக்கச்செய்யும் பதவிமோகம்

(பதவி)



3. இடது கண்ணைத் திறக்கச் செய்யும்
வலது கண்ணைக் குருடாய் மாற்றும்
நீதி அநீதி எதுவும் தோனா
நிம்மதியே வாழ்வில் காணா
தஜ்ஜால் தானே என்றுணரும்
தகுதி அறிவுக் கமைந்திடாது
பதவி ஜென்னத்தில் சேர்த்துவைக்கா
பாழும் நரகில் சேர்த்துவைக்கும் பதவி மோகம்

(பதவி)

## பாட்டு 152

**பல்லவி**

இதயத்திற்கு அறிவூட்டும் நாதம்
இன்பபோகத்துக் கமுதூட்டும் வேதம் - வேதம்
இதயத்துக் குயிரூட்டும் நாதம்

**சரணம்**

1. சல்சலத்துல் ஜர்சென்ற தெய்வீக நாதம்
கலிமாவின் துணையின்றிக் கல்பிலே அமையா
சல்சலத்துல் பீலென்ற செவியேற்கும் நாதம்
சக்கின்றி நேர்வழியைக் காட்டிடப் போதும்
தெய்வீக நாதத்தின் வெளிப்பாடே இல்ஹாம்
இதையுணர்ந்து வெற்றிபெற
இறை தியானம் வேண்டும்
இதையுணர்ந்து வெற்றிபெற
இறை தியானம் வேண்டும் (இதயத்துக்)

2. இறைவனுக்கிணை கொண்ட இதயத்தில் தியானம்
எவ்வித பயனையும் வெளிப்படுத்திக் காட்டா
ஏகனை இறைவனென்றேற்று நீ தியானம் செய்
ஒளியுலகைக் காண முடியும்
ஒளியுலகு கிட்டினால் ஒலியுலகு ஆட்கொள்ளும்
உண்மையோடொன்றிவிடுவாய்
உத்தமனாய் வாழ்ந்திருப்பாய் (இதயத்துக்)

3. இல்வாழ்வு தடைப்படா இறையறிவு வழிகாட்டும்
உன் மகாமை உணர்ந்து கொள்வாய்
பகை உறவாய் மாறிவிடும் பகற்கனவு நீங்கிவிடும்
பக்தியின் உச்சநிலை முக்தியில் சேர்ந்து விடும்
பாதையை விட்டுவிடாதே
இதையறிந்து தியானம் செய்
என்றென்றும் சாந்தியுடன் இன்புற்று வாழ்வாய்
(இதயத்துக்)



## பாட்டு 153

**பல்லவி**

நெற்றியுடையாமல் தப்பிக்கொள்ளும் வழி
தலையை குனிந்து நடப்பதுதான்
தலையை குனிந்து நடப்பதுதான்

**சரணம்**

1. சொல் வேறு செயல் வேறு
சோம்பேறிக் குணம் வேறு
சொல்லுள்ளம் செல்லாதடா - இறைச்
சொல்லுள்ளம் செல்லாதடா
உள்ளத்தில் முத்திரை உலகிலே நித்திரை
கனவே உன் வாழ்க்கையடா – மனிதா
கனவே உன் வாழ்க்கையடா
கனவைக் கலைத்திடும் கல்பைத் துலக்கிடும்
ஹக்கோடு சேர்த்துவிடும் - கலிமா
ஹக்கோடு சேர்த்துவிடும் (நெற்றி)

2. மீண்டுவரமுடியாப் பயணமொன்று
நிச்சயம் வந்துவிடும் - மரணம்
நிச்சயம் வந்துவிடும்
கோலத்தை நம்பிக் கொள்கையை மறந்தாயே
கொண்டேகும் பொருளென்னவோ – நீ
கொண்டேகும் பொருளென்னவோ
மூமினாய்ச் சென்றிடில் முதலவனுதவியால்
முழுச் சாந்தி தந்துவிடும் - கலிமா
முழுச் சாந்தி தந்துவிடும் (நெற்றி)

3. கொள்கையில் வாழாமல் கோலத்தில் வீழுதல்
கொடும் தீயில் சேர்த்துவிடும் - உன்னை
கொடும் தீயில் சேர்த்துவிடும்
கொள்கையில் வாழாமல் கோலத்தில் வீழுதல்
கொடும் தீயில் சேர்த்துவிடும் - உன்னை
படைத்தவன் சொல்லை மறந்த மடையனாய்
மஹ்ஸரில் எழும்ப நேரும் - மனிதா
மஹ்ஸரில் எழும்ப நேரும்
ஹக்கை உணர்த்தும் கலிமாவோடிறந்திடில்
ஹக்கோடு சேர்த்துவைக்கும் - கலிமா
ஹக்கோடு சேர்த்துவைக்கும் (நெற்றி)



## பாட்டு 154

**பல்லவி**

இறைவனை ஏகனாய் ஏற்றவருள்ளம்
இன்பம் விளையும் சொர்க்க நிலம்
இணைகொண்ட உள்ளம் இடர்தரும் ஜந்துக்கள்
இருளில் வாழும் நரக நிலம்
இருளில் வாழும் நரக நிலம்

**சரணம்**

1. மாறும் மனத்தை ஓர்நிலைப்படுத்த
மணக்கும் கலிமாவை தியானம் செய்
மனத்தின் இருளெல்லாம் மாயமாய் மறையும்
மறைதந்த விளக்கங்கள் தெளிவாகும்
சரிபிழை அறிவாய் சகலரும் புகளும்
நற்குணமங்கே தழைத்தோங்கும்
சற்குணமங்கே தழைத்தோங்கும் (இறைவனை)

2. இணைகொண்ட உள்ளம் இப்லீஸின் வீடு
மாயையைக்கொண்டு மருட்டிவைப்பான்
அல்லாஹ்வில் தஞ்சமடைந்தவருள்ளத்தில்
ஆசை அளவோடமைந்துவிடும்
ஆசை அளவோடமைந்துவிடிலங்கு
அச்சம் அணுவும் பிறக்காது
துக்கமும் தொடரமுடியாது (இறைவனை)

3. ஷிர்க்கு என்ற நரகினில் சிக்கி சீரழிந்து சாகாதே
சிந்தனையைச் செயல்படுத்தி
ஷிறாத்தை உள்ளத்தில் கண்டுகொள்
சறுக்கிடாமல் தாண்டும் நடையே
வாழ்வு என்று அறிந்துகொள்
வாழ்வு என்று அறிந்துகொள் (இறைவனை)

4. கலிமா விளக்கமே ஷிறாத்து என்று
கண்டறிந்து செயல்படு
கடவுள் தந்த கலிமாவை நீ
கல்பிலிருத்திச் தொழில்படு
கன்ம வினைகள் யாவும் தீரும்
கல்பு ஹக்கில் தரிபடும்
கல்பு ஹக்கில் தரிபடும் (இறைவனை)



## பாட்டு 155

### பல்லவி

உள்ளம் என்பதோர் நீதிமன்றம் - அந்த
மன்றுக்கு நீயே நீதிபதி

### அனுபல்லவி

மன்கூல் மஹ்கூலைச் சாட்சி கொள்ளு
மனித உரிமையை ஏற்றுக்கொள்ளு
மடையனாய் வாழ்ந்து கொடியோனாய் இறந்து
கொடுநரகேகாதே – நீ
கொடுநரகேகாதே

(உள்ளம்)

### சரணம்

1. ஊடகம் யாவும் உண்மையை உணர்த்தா
உலுத்தரின் வாதமும் உண்மையை நெருங்கா
வீண்பிடிவாதம் வேதனை தரலாம்
வேதவிளக்கம் வெற்றியைத் தரலாம்
ஈமானைப் பெற்றோர்க்கு இருட்திரை நீங்கும்
ஈருலக அமைதி இயல்பாக வாய்க்கும்
வம்புக் குணமெல்லாம் மாயமாய் மறையும்
வாழ்வினில் கண்ட வான்மறை உண்மை
ஏற்றிட மறுக்கும் ஈனரின் உள்ளம்
என்றும் சாந்தி அடையாது – அவர்
துன்பமும் தொலைந்து போகாது (உள்ளம்)

2. சார்புள்ள உள்ளம் சரிபிழை அறியா
சமநீதி காணும் அறிவுமங்கமையா
மார்க்கத்தின் கொள்கையை மன்றிலெடு
விதிகளுக்கமைவாய் விசாரணை செய்
தீர்ப்பைத் திருப்தியாய் ஏற்று நட

திக்கெட்டும் வெற்றி நிச்சயம்தான்
அலட்டிக் கொள்ள தேவையில்லை – சாந்தி
அண்மையிலுண்டு உன் கண்ணைத்திற
ஏற்றிட மறுக்கும் ஈனரின் உள்ளம்
என்றும் சாந்தி அடையாது – அவர்
துன்பமும் தொலைந்து போகாது (உள்ளம்)

3. கலிமாவைக் கூறுவோர் முஸ்லிமென்றாவார்
கருத்தினை உணர்ந்தோர் மூமினென்றாவார்
நழுவாமல் காத்தோர் நலம்பெற்று வாழ்வார்
ஒளி உலகோர் அவர்க்குறுதுணையாவார்
ஆண்டவனருளால் அச்சமும்தீர்வார்
பக்தியே முக்தியின் தலைவாசல் - அதைப்
பகுத்து உணர்ந்து செயல்பட்டால்
திக்கிர் திரைகளைக் கிழித்தெறியும்
உண்மை உள்ளத்தில் உறுதிபெறும்
இறைமறை தந்த ஞானவிளக்கங்கள்
இல்ஹாம் மூலம் இதயத்திலமையும் (உள்ளம்)



## பாட்டு 156

### இராக மாலிகை

அகதான சமதொன்றைத் தவிர வேறுளதென்று
சாற்றுவோர்க் கேதேனும் சான்றுமுளதோ
எக்கணமும்மவனோடு இரண்டற்றிருப்போர்க்கு
எதுவரினும் துன்பமுளதோ
அகதான சமதொன்றைத் தவிர வேறுளதென்று
சாற்றுவோர்க் கேதேனும் சான்றுமுளதோ
எக்கணமுமவனோடு இரண்டற்றிருப்போர்க்கு
எதுவரினும் துன்பமுளதோ
எத்திசையும் அவனென்று எண்ணித்துணிந்தோர்க்கு
எப்படையால் சேதம் வருமோ
எத்திசையும் அவனென்று எண்ணித்துணிந்தோர்க்கு
எப்படையால் சேதம் வருமோ
அவனன்றி இலையென்று அகத்திலே பதித்தோர்க்கு
அக்கினி பூஞ்சோலையாகும்
அவனன்றி இலையென்று அகத்திலே பதித்தோர்க்கு
அக்கினி பூஞ்சோலையாகும்
அஞ்ஞான இருள்கண்டு அகன்று கடந்தோர்க்கு
ஆழியிலும் தோஷமுளதோ
நிலையென்று புவிவாழ்வை நினைத்துலகில் வாழ்வோர்க்கு
நீங்கிடாப் பேறுமுளதோ
அகங்காரம் குடிகொண்ட அறிவிலிக்கமுதமொழி
அணுவேனும் சாந்தி தருமா
சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹுஅக்பர்

## பாட்டு 157

### பல்லவி

சிந்தனை செய் தெளிவுபெறு
சித்தத்தில் போராடி வெற்றிபெறு
சித்தத்தில் போராடி வெற்றிபெறு

### சரணம்

1. சற்சன சங்கத்தைக் கண்டறிந்து
சத்திய உண்மையைக் கேட்டறிந்து
சபலபுத்தியை விட்டொழித்து
சாந்திவழியில் வாழ்ந்துசெல்லு
மார்க்கம் நிரப்பம் பெற்றதனால்
மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது
ஆண்டவனருட்கொடை அறிவுடமை
அறிவிலிக்கனுபவம் கிட்டாது
அறிவிலிக்கனுபவம் கிட்டாது (சிந்தனை)

2. ஷிர்க்குள்ள உள்ளத்தில்
குர்ஆனின் ஒளிதோணா
அருள் திருவசனம் பொருள்காட்டா
ஷிர்க்கை நீக்கிச் சீர்கல்வி கொண்டால்
திருக்குர்ஆன் அதன் வழிகாட்டும்
நன்மையை விரும்பு நரிக்குணம் நீக்கு
நாயன் உதவி கிடைத்துவிடும்
நல்லடியானாய் மாறிவிடுவாய்
நல்லடியானாய் மாறிவிடுவாய் (சிந்தனை)

3. அதாலத் என்பது சமூகவியல்
ஆண்டவன் தொடர்பு ஆத்மயியல்
எல்லோரும் இதனை உணர்வதில்லை
இருளில் ஆதவன் தெரிவதில்லை
மணக்கும் கலிமாவைப் புரட்டிக்கொண்டோர்



மார்க்கவிளக்கத்தில் மந்தைகள் தான்
சாந்தி வழியைக்கண்டறிந்து
சாதுவாய் வாழ்ந்து மறுமைசெல்லு
சாதுவாய் வாழ்ந்து மறுமைசெல்லு (சிந்தனை)

4. நல்லோர் சொல்லை மனதிருத்தி
நபி கொள்கைகொண்டு சாந்திபெறு
நபிலுக்கே பர்ளென்று விளங்கியறி
நாயன் உதவியால் தெளிவுறுவாய்
மனிதர்கள் மூவகை மறக்காதே
அவரவர் நிலைக்கேற்ப அமலுண்டு விதியுண்டு
இதயம் சாந்தியடைவதற்கு
இறைவன் தந்ததே திக்கிர்வழி
இறைவன் தந்ததே திக்கிர்வழி (சிந்தனை)

## பாட்டு 158

### பல்லவி

இரக்கம் கோபம் இருக்கவேண்டும் அவசியம் - அவற்றை
அடக்கியாண்டு அமைதிகாண
ஆத்மஞானம் அவசியம் - அவற்றை
அடக்கியாண்டு அமைதிகாண
ஆத்மஞானம் அவசியம் (இரக்கம்)

### சரணம்

1. பூத உடலோடிருக்கும் வரையில்
புலனறிவு அவசியம்
புர்கான் கொள்கையைப் புரிந்துகொண்டால்
புலனறிவு தெளிவுறும்
சபல புத்தி நீங்கிவிட்டால்
இரக்கம் கோபம் இடர்தரா
விருப்பு வெறுப்பு அற்ற நிலையே
வேத ஞான இரகசியம் - இதை
விளங்கியறிந்து செயல்படு (இரக்கம்)

2. விருப்பு வெறுப்பை இயக்கும் முறையை
விளக்கிக் காட்டுதே தீன் கொள்கை
வேத நெறியை வீசிவிட்டு
வேதனையில் வீழாதே
இறைவனீந்த இயற்கைக் குணத்தை
நெறிப்படுத்தி வாழ்ந்துகொள்
புவியுலக விருப்பு வெறுப்பு
புலனறிவின் தாக்கம்தான்
புரிந்துகொண்டு செயல்படு
புனிதனாக வாழலாம் (இரக்கம்)



3. விளங்கியறியாச் செயலிணாலே
வெற்றிவாகை சூடொணா
பேதபுத்தி நீங்காவிட்டால்
சாந்திபாதை தென்படா
விளங்கியறியாச் செயலிணாலே
வெற்றிவாகை சூடொணா
பேதபுத்தி நீங்காவிட்டால்
சாந்திபாதை தென்படா
சற்குணங்கள் இல்லையானால்
சாந்தி பாதை சறுக்கலாம்
மணத்தைக் கொண்டு குணத்தைக் கொடுக்கும்
கலிமாவில் நீ கரைந்திடு
என்றும் ஹக்கோடிருக்கலாம் (இரக்கம்)

## பாட்டு 159

### பல்லவி

வீணாண சந்தேகம் கொள்ளாதே
விதண்டாவாதமும் செய்யாதே
வழிகண்டு செல்ல ஆசை பிறந்தால்
வான்மறை புர்க்கானை கையிலெடு – நீ
வான்மறை புர்க்கானை கையிலெடு

### சரணம்

1. வாழ்வின் நோக்கைப் புரிந்துகொள்ளு
   கொள்கை விளக்கத்தைத் தெரிந்துகொள்ளு
   ஏவல் விலக்கலை ஏற்றுக்கொள்ளு
   இயன்ற தொழிலை எடுத்துக்கொள்ளு
   தினமும் திக்கிர் செய்துகொள்ளு
   தீங்கொன்றும் வாரா அமைதிபெறு
   திக்கெல்லாம் வெற்றி சாந்திபெறு

(வீணான)

2. திக்கிரின் படித்தரம் நாலுண்டு
   தீதாறைப் பெறுவதே முழுநோக்கம்
   நிலைமைக்கேற்ப திக்கிர் செய்தால்
   பதவியுயர்வு பறந்து வரும்
   மணியை உருட்டுதல் போதாது
   மணியை உருட்டுதல் போதாது
   மனதை ஒர்நிலைப் படுத்திக்கொண்டு
   முறாக்கபா செய்து வெற்றிபெறு

(விணான)



3. தங்குமடத்துப் பிரயாணி - நீ
   தலைவன் சொல்லை ஏற்று நட
   எங்கும் நிறைந்த இறைவனை ஏற்றபின்
   இணைகொண்ட இருள் வழி செல்லாதே
   சொல் செயல் கருத்தினை ஒன்றாக்கி
   உரிய முறைப்படி திக்கிர் செய்
   உண்மை தரிபடும் அமைதிபெறு

(விணான)

4. ஆசை அகந்தையை அடக்கியெடு
   ஆத்ம சாந்திக்கு உதவிகிட்டும்
   உயிரற்ற அமலுன்னை நரகோட்டும்
   உண்மை சாந்திக்கவை உதவிதரா
   செல்வம் புகழில் செருக்குறுமுள்ளம்
   செல்வம் புகழில் செருக்குறுமுள்ளம்
   ஷைத்தான் தரிப்பிடம் அறிந்துகொள்ளு
   தியானத்தை செய்து நீ வெற்றிபெறு

(விணான)

## பாட்டு 160

### பல்லவி

வேரறுந்து கெட்டுப்போன
பட்ட மரத்தைக் கட்டிப்பிடித்தால்
கனி கிடைக்குமா – கல்பு
ஹக்கோடொன்றுமா (வேரறுந்து)

### சரணம்

1. ஆழப்பாய்ந்த வேருடைய
வானளாவிய கிளையுடைய
ஜீவ மரத்தைக் கட்டிப்பிடிக்கணும் - நீ
ஜீவ மரத்தைக் கட்டிப்பிடிக்கணும்
தேவையெல்லாம் தீர்ந்துவிடும்
தேவ உலகு வாழ்வு கிட்டும்
தெய்வீக ஜோதியென்றாவாய் - நீ
தெய்வீக ஜோதியென்றாவாய் (வேரறுந்து)

2. ஷிர்க்கென்ற பட்ட மரத்தை
நம்பி வாழும் கோடா கோடி
தீயில் வாழ்வதுனக்குத் தெரியுமா–அதைப்பார்க்க
ஐனுல்யகீன் உனக்கிருக்குதா
ஜீவ மரத்தை எடுத்துக் கொண்டால்
சித்தி பெற்ற நல்லடியார்
ஆனந்த வாழ்வு பெறுவார் - அவர்
ஆத்மீக ஜோதியாகுவார் (வேரறுந்து)

3. சாந்தி தரும் ஒரே வழி
சற்குணத்தை வளர்க்கும் வழி
சகலருக்கும் ஏற்ற வழியே – கலிமா
சகலருக்கும் ஏற்ற வழியே
சச்சரவை நீக்கி வைக்கும்
சற்குணத்தை வளர்த்தெடுக்கும்
தீதாறைக் காட்டிவிடுமே – கலிமா
தீ நரகை மூடிவிடுமே (வேரறுந்து)



4. வேத நெறியை வீசி விட்டு
வேஷத்திலே வாழ்ந்திறந்தால்
வேதனையில் மூழ்க நேருமே - ஆம்
கலிமாவைப் பற்றிக்கொண்டால்
கரும் திரைகள் நீங்கிவிடும்
களிகூரும் வாழ்வமையுமே – உள்ளம்
ஹக்கோடு ஒன்றி விடுமே (வேரறுந்து)

## பாட்டு - 161

**பல்லவி**

வீணெண்ணம் வீழ்ச்சிக்கு வித்தாகும்
நல்லெண்ணம் நாள்தோறும் நன்மைதரும்
உண்மையைப் பொய்யாய் உணர்த்திடும் வீணெண்ணம்
முற்றாய் ஒழியவேண்டும் - மனிதா
முக்தியைப்பெற்றிடலாம்

**சரணம்**

1. உண்மையைப் பொய்யாய் உணர்த்திடும் வீணெண்ணம்
புலனாட்சிமயக்கமடா - மனிதா
உன் புலனாட்சி மயக்கமடா
புலன்களின் உண்மையைப் புரிந்திடில் வீணெண்ணம்
மாயமாய்மறையுமடா - மனிதா
மாயமாய்மறையுமடா
கட்செவி ஈர்ப்பதே ஹக்கென்றுணர்ந்து நீ
காலம் கழிக்காதே - மனிதா
காலம் கழிக்காதே
காலன் வரும்போது ஹக்கு வெளியாகும்
கைசேதம் நேருமடா - மனிதா
கைசேதம் நேருமடா (வீணெண்ணம்)

2. திரைகொண்ட உள்ளத்தில் மேலெண்ணம் வீண்வாதம்
தீன்வழி காட்டாதடா - மனிதா
தீன்வழி காட்டாதடா
திக்கெட்டும் சென்று நீ மட்டின்றிக்கற்றாலும்
உன்னை உணராயடா - மனிதா
உன்னை உணராயடா
உன்னை உணரவும் உண்மையோடொன்றவும்
உண்மைவழி கலிமா - மனிதா
உண்மைவழி கலிமா
அதையூன்றி உணர்ந்துன் உள்ளத்தில் ஏற்றிடில்
உத்தமனாகிடுவாய் - மனிதா
உண்மை யோடொன்றிடுவாய் (வீணெண்ணம்)



3. அனுபவமற்ற அறிவிலிப்போதனை
ஆழ்துயர் காட்டிவிடும் - மனிதா
ஆழ்துயர் காட்டிவிடும்
ஆனந்தம் சாந்தியடைந்திட நாடினால்
அண்ணலார் கொள்கைஎடு - மனிதா
அண்ணலார் கொள்கைஎடு
கொள்கை விழக்கத்தைக் காட்டுங்கலிமாவை
கல்பில் இருத்திநட - மனிதா
கல்பில் இருத்திநட
கல்பைத் திறந்திடும் ஹக்கை உணர்த்திடும்
ஹக்கான சாந்திகிட்டும் - மனிதா
ஹக்கான சாந்திகிட்டும் (வீணெண்ணம்)

## பாட்டு - 162

**பல்லவி**

கொள்கைதவறிக் குழியில்வீழ்ந்தோர் கோடானுகோடி -தௌஹீத்
கொள்கை கொண்டு சாந்தி பெற்றோர் கோடியிலொன்று
கோடியிலொன்று

**சரணம்**

1. கால்நடைக்கொப்பான மனிதன் கொள்கை அறிவானா -அவன்
கொள்கை தவறிச் செய்யும் அமல்கள்
வழியைக்காட்டுமா ஈமானுக்குத் தெளிவை ஊட்டுமா
கொள்கை உள்ளத்தமைவதற்கு
நல்அமலைச்செய்யணும் -அதை
அறிஞரிடம் கேட்டறிந்து சரியாய்ச் செய்யணும்
செய்யும் அமல்கள் ஏற்கப்பட்டால் ஷிர்க்கு நீங்கிடும் - நல்ல
தெய்வீகக் குணங்களெல்லாம் இதயத்தமைந்திடும்
இதயத்தமைந்திடும் (கொள்கை)

2. ஏகமென்றால் என்னவென்று எண்ணித்துணிந்தாயா - அதன்
தத்துவம்தான் என்ன வென்று புரிந்துகொண்டாயா - அதை
உறுதி கொண்டாயா நீ உதட்டால் மொழிந்தாயா
வணக்கத்தை வலியுறுத்த வந்ததல்ல கலிமா - உன்னை
ஏகத்துவத்தில் தரிபடுத்த இறைவன் தந்த கலிமா
குருட்டு அறிவு நீங்கிப்போகும் கொள்கை பிடிபட்டால் -உன்
குணங்கள் கூட மாறுபடும் கொள்கைதரிபட்டால்
கொள்கைதரிபட்டால் (கொள்கை)

3. காலம் ஏகமானது உன் கருத்தில் அமைந்ததா - அதன்
கோலமுலகானதென்று உணர்ந்து கொள்வாயா - ஹக்கைப்
புரிந்துகொள்வாயா கல்பில் இருத்திக்கொள்வாயா
கலிமாக் கொண்டு திக்ரைச் செய்தால்
கல்பு திறந்திடும் - ஹுறூர்
மாயை என்றால் என்ன வென்று விளக்கம் தந்திடும்
திக்ருக்கு நிகரான அமல் இல்லவேயில்லை - நீ
தினந்தோறும் திக்ர் செய்தால் சாந்தியைப் பெறுவாய்
சாந்தியைப்பெறுவாய் (கொள்கை)



## பாட்டு - 163

**பல்லவி**

இறந்தழிந்த உள்ளத்துக்குயிரூட்டி உணர்வுதந்து
உயர்நிலையில் சேர்க்கும் கலிமா - உன்னை
உயர்நிலையில் சேர்க்கும் கலிமா
ஷிர்க்கினைக் களைந்தொதுக்கி
ஸிறாத்திலே செலுத்தியுன்னை
திருச்சமூகம் சேர்த்துவைக்கும் கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா

**சரணம்**

1. ஈருலகும் வாழ்வுதரும் என்றென்றும் இறையுணர்வை
இதயத்தில் இருத்திவைக்கும் கலிமா
இதயத்தில் இருத்திவைக்கும் கலிமா
எழுதிரையை நீக்கிவிட்டு எட்டாம்படியிருத்தி
ஏகனிடம் சேர்த்துவைக்கும் கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா (இறந்தழிந்த)

2. ஈயிறகளவில்லை ஈருலகெனக்காட்டி
குதறத்தை உணர்த்திவைக்கும் கலிமா - அவன்
குதறத்தை உணர்த்திவைக்கும் கலிமா
குன்னென்ற சொல் கொண்டு குவலயம் ஆனதை
குறைவின்றி உணர்த்திவிடும் கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறை தந்த கலிமா (இறந்தழிந்த)

3. அமா என்ற மர்த்தபாவை அனுபவத்தில் உணரவைத்து
நிகழ்காலத்திருத்திவைக்கும் கலிமா - உன்னை
நிகழ்காலத்திருத்திவைக்கும் கலிமா
நித்திய ஜீவனில் நிலைபெற்ற நூறாக
நிலையின்பம் தந்துவிடும் கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா (இறந்தழிந்த)

4. இறையோடு வேறெதுவும் இல்லவேயில்லையிதை
ஏற்றிட மறுப்போன் முஷ்ரிக் - இதை
ஏற்றிட மறுப்போன் முஷ்ரிக்
அவனென்றும் மீட்சியின்றி எரிநரகில் வேகாமல்
காப்பதற்கு தந்ததடா கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா (இறந்தழிந்த)

5. நாள்தோறும் ஐவேளை தவறாமல் தொழுதாலும்
ஷிர்க்குடையோர் ஜன்னத்ஏகார்
ஷிர்க்குடையோர் ஜன்னத்ஏகார் - உண்மை
ஷிர்க்கின்றி ஜன்னத்தில் சீராகச் சேர்த்துவைக்கும்
ஸிராத்தென்ற பாதை கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா - எங்கள்
இணையில்லா இறைதந்த கலிமா (இறந்தழிந்த)



## பாட்டு - 164

**பல்லவி**

ஆசையை அளவோடமைத்தவர் வாழ்வில்
ஆனந்தம் சாந்தி அமைந்துவிடும்
அளவினைமீறும் ஆசையைக்கொண்டால்
அரக்கர்குணமே அமைந்துவிடும் - உன்
ஆனந்த வாழ்வை அழித்துவிடும்
ஆண்டவன் சன்னிதி தவறிவிடும்

**சரணம்**

1. தேவையெனும் நோய் உள்ளத்தில் இருந்தால்
ஆசை அவசியம் வெளியாகும்
அளவினை மீறும் ஆசைகள் அனைத்தும்
அறிவை இருளில் புதைத்துவிடும் - உன்
அன்றாட வாழ்வை நரகாக்கும்
ஆத்ம சாந்திக்கும் ஆசை அவசியம்
அளவறிந்ததனை எடுத்துக்கொள்ளு - நீ
ஆண்டவன் சன்னிதி சேர்ந்திடுவாய்
அருட்கொடைபெற்று மகிழ்ந்திடுவாய் (ஆசையை)

2. உள்ளத்தை உண்மையில் தரிபடுத்து - நீ
உத்தமர் வாழ்வை மேற்கொள்ளு
உலகே சதமென்று நம்பாதே - அதை
என்றோ ஓர்நாள் இழந்திடுவாய்
என்றோ ஓர்நாள் இழந்திடுவாய்
இணைகொண்ட உள்ளத்தில் ஆசையணையா
ஆசையே நரகில் புகுத்திவிடும் - உன்
அன்றாட வாழ்வும் நரகாக்கும்
ஆகிறா வாழ்வும் நெருப்பாகும் (ஆசையை)

## பாட்டு - 165

### பல்லவி

கொள்கை எங்கே கொண்டு செல்லும்
உனக்குத் தெரியுமா - அதைத்
திசைதிருப்பி விட்டோர்க்கும் அதுபுரியுமா

### அனுபல்லவி

மும்மலத்தில் மூழ்கியோர்க்குத் தீன்புரியாது - அதை
நீக்கிவிட்டால் தீனின்கொள்கை திசைதிரும்பாது
(கொள்கை)

### சரணம்

1 எல்லோர்க்கும் சாந்தி வேண்டும் இறைகிருபை கிட்டவேண்டும்
இதற்கென்றே கொள்கைதந்தான் இறைவன் - அதை
உளநோயில் மாட்டிக்கொண்டோர்
உருட்டிப்புரட்டி எடுத்துக்கொண்டு
உபதேசம் செய்துகொண்டால் போதுமா - அதை
வழிகாட்டல் என்று சொன்னால் பொருந்துமா - இல்லை
வழிகேடு என்றால் பிழையாகுமா
இறையைப் புரிந்துகொள்ளும் முறையறியா மூடர்க்குத்
தௌஹீது தலைக்கேறுமா - அவர்க்கு
தௌஹீது தலைக்கேறுமா
வழியறியா வம்பர்கூட்டம் வழிகாட்ட முனைந்து நின்றால்
எவ்வழியை அவர்காட்டுவார் - அவர்
திசைபுரண்ட தீவழியைத்தான் காட்டுவார் (கொள்கை)

2. கடிவாளமிட்டகளுதை குதிரையாய் மாறாது
களம்செல்லா பொதிசுமக்கலாம்
நூலறிவுக்கடிவாளம் நுகர்பொருளைச் சுமக்கலாம்
நூறாக மாறமாட்டா
நூறோடு ஒன்றித்து இறைதிருப்தி பெற்றிட
இறைதந்த வழி கொள்கைதான் - அதை
இருட்டடிப்புச்செய்தலாகுமா - இது
வழிகாட்டலாகிவிடுமா
ஹக்கைப் புரிந்துகொள்ளும் கல்பில்லா மூடர்க்கு
கலிமா வழிகாட்டுமா - அவர்க்கு
கலிமா வழிகாட்டுமா
வழியறியா வம்பர்கூட்டம் வழிகாட்ட முனைந்து நின்றால்
எவ்வழியை அவர் காட்டுவார் - அவர்
திசைபுரண்ட தீவழியைத்தான் காட்டுவார் (கொள்கை)



3. கொள்கையில் தரிபடும் நோக்கில்லாச்
செயல்லெதுவும் ஜன்னத்தில் சேர்த்துவைக்கா
ஜென்னத்தில் நுழையாமல் தீதாறைப் பெறமுடியா
திருத்தூதர் சொன்ன உண்மை
நல்லோர்கள் கண்ட உண்மை
கொள்கையை அறியாத கோமாளி உபதேசம்
குவலயத்தை மீட்டுவைக்குமா
கொடுவினையைத் தீர்த்துவைக்குமா
இருட்டிரையில் மூழ்கியுள்ள வம்பர்க்கு இவ்வுண்மை
இதயத்தில் நுழையாதப்பா - அவர்
இதயத்தில் நுழையாதப்பா
வழியறியா வம்பர்கூட்டம் வழிகாட்ட முனைந்து நின்றால்
எவ்வழியை அவர் காட்டுவார் - அவர்
திசைபுரண்ட தீவழியைத்தான் காட்டுவர் (கொள்கை)

4. கல்லறையை உடைப்பதுதான் வழிகாட்டலென்றிருந்தால்
கருணை நபி கல்லறையை ஏனோ விட்டார்
பணம் பெறுதற்கு இலகுவழி கல்லறையை
உடைப்பதுதான் கயவர்கள் கண்டபாதை
பணநோட்டுக்கிட்டிவிடும் பகல்வேஷம் மறைந்துவிடும்
பலர்செய்து கண்ட உண்மை
பலர்செய்து கண்ட உண்மை
உடனிருக்கும் இறைவனை உணராத குருடர்க்கு
உண்மைவழி புரியாதப்பா - அவர்க்கு
உண்மைவழி புரியாதப்பா
வழியறியா வம்பர்கூட்டம் வழிகாட்ட முனைந்துநின்றால்
எவ்வழியை அவர் காட்டுவார் - அவர்
திசைபுரண்ட தீவழியைத்தான் காட்டுவார் (கொள்கை)

## பாட்டு - 166

**பல்லவி**

அடாதுசெய்தவர் படாதுபடுவர் அறிஞர் அருள்வாக்கு
அகத்தை திருத்தி அறிவைப்பெருக்கு
அறவளிகிடைத்துவிடும் - உன்
அகம்பாவம் தீர்ந்துவிடும்

**சரணம்**

1. முறையற்ற செயல்கள் நிறைவுற்ற வாழ்வை
ஒருபோதும் தாராது
மூடரின் பேச்சில் மூழ்கிய உள்ளம்
உண்மையை உணராது
கட்செவி புலன்களில் மயங்கிய மனிதன்
கால்நடைக்கொப்பாவான்
மூடன்செய்யும் கர்மவினைப்பயன்
கண்டிப்பாய்க் கிடைத்துவிடும்
காலத்தின் தீர்ப்பைக் கண்டுகளிக்க
கல்புக்கண்வேண்டும் - மனிதா
கல்புக்கண்வேண்டும் (அடாது)

2. மதத்தின் பெயரால் மனிதரை மிருகமாய்
மாற்றுது தஜ்ஜாலிசம்
மரணம் வரும்போது மயக்கம் தீரலாம்
மன்னிப்புக்கிட்டாதே
மதத்தின் கொள்கையை மனதார விளங்கி
மறதியைநீக்கிக்கொள்ளு
மண்ணுலகோர்நாள் மறைந்திடும் நிச்சயம்
மறுமைவருவதுண்மை
மனிதனாய் வாழ்ந்து புனிதனாய் இறந்து
ஜன்னத்தில்சேர்ந்துவிடு - மனிதா
ஜன்னத்தில்சேர்ந்துவிடு (அடாது)



3. காலத்தை வீணாய் கழிப்பது கைசேதம்
காலன்வருமுன்னே
கலிமாவை எடுத்துக்கொள் களிப்போடுவாழ
மறுமையில் வழியுமுண்டு
மடையனாய் வாழ்ந்து கயவனாய் இறந்து
மறுமையில் எழும்பாதே
கைசேதம் கைசேதம் கணக்கில்லாக் கைசேதம்
கலிமாவுடன் செல்லு
கர்மவினையைக் களைந்திடும் - கலிமா
கல்போடு கொண்டுசெல்லு
(அடாது)

## பாட்டு - 167

### பல்லவி

நேர்வழியை மூடிவிட்டு தீவழியைத் திறந்துவிட
மேலேண்ணம் போராடுது - தஜ்ஜாலிஸ
மேலேண்ணம் போராடுது

### அனுபல்லவி

மார்க்கமென்ற போர்வையிலே மத அறிஞர் லேபலிலே
மேலெண்ணம் போராடுது - தஜ்ஜாலிஸ
மேலெண்ணம் போராடுது (நேர்வழியை)

### சரணம்

1. மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லவேயில்லை - இதை
மறைபுர்க்கான் விளக்கவில்லையா - இதை
மௌலவிகள் ஏற்கவில்லையா
அறிந்திருந்தும் அடாச்செயலை
அன்றாடம் செய்வோரின் அறிவுரைகள் பலனளிக்குமா - எம்
ஆத்துமா சாந்தி பெறுமா
இம்மையிலும் மறுமையிலும்
ஈருலகும் சாந்தி தேவை
நேர்வழியைத் தெரிந்து கொள்ளணும் - நாம்
கலிமா காட்டும் நேர்வழியில் வாழ்ந்திறக்கணும்
(நேர்வழியை)

2. காசிக்கட்டுக்காசைப்பட்டு
கட்டடத்தை உடைத்தெறிந்தால்
கருணை மழை கிட்டிவிடுமா - அடாச் செயல்கள்
ஆத்ம சாந்தி பெற்றுத்தருமா
அன்றாடம் சாந்திதேடி அலைந்து திரியும் மக்களுக்கு
அறிஞர் காட்டும் வழி இதுதானா - இவர்க்கு
அதிகாரம் அளித்தவர்யாரோ
இம்மையிலும் மறுமையிலும்
ஈருலகும் சாந்திதேவை
நேர்வழியைத் தெரிந்து கொள்ளணும் - நாம்
கலிமா காட்டும் நேர்வழியில் வாழ்ந்திறக்கணும்
(நேர்வழியை)



3. புத்தித்தடுமாறி விட்டோர்
புதுமைப்பித்தில் மாட்டிக்கொண்டு
புதுவழிகள் காட்டவேண்டுமா - இதை
மறைபுர்க்கான் ஏற்றுக்கொள்ளுமா
வேடதாரி மூடர்களின் மூளைதான் ஷைத்தான் ஆலை
விளங்கித் தெளிய வேண்டுமல்லவா
விளங்கித் தெளிய வேண்டுமல்லவா
இம்மையிலும் மறுமையிலும்
ஈருலகும் சாந்தி தேவை
நேர்வழியைத் தெரிந்து கொள்ளணும் - நாம்
கலிமா காட்டும் நேர்வழியில் வாழ்ந்திறக்கணும்
(நேர்வழியை)

## பாட்டு - 168

**பல்லவி**

உலகெல்லாம் சாந்தி தேடி அலைந்தாயே - உன்
உள்ளத்திலே சாந்தியுண்டு அறிந்தாயா

**சரணம்**

1. மாயையே உண்மை என்ற
போதையிலே வாழ்ந்துகொண்டு
சாந்தியை நீ எங்கே காணுவாய் - உண்மைச்
சாந்தியை நீ எங்கே காணுவாய்
சாந்தியைப் பெற்றுக்கொள்ளச் சன்மார்க்க வழியிருக்க
சபலபுத்தி கொண்டலைவதேன் - நீ
சாத்தானாய்ச் வாழ்ந்திறப்பதேன் (உலகெல்லாம்)

2. கற்பனையைக் களைந்துவிட்டு
ஹக்கன் சொல்லை எடுத்துக்கொண்டால்
கொள்கை சாந்தி பாதைகாட்டுமே - உண்மைக்
கொள்கை சாந்தி பாதைகாட்டுமே
ஏகமென்ற சொற்பொருளில் ஏகமாய் அமைந்துகொண்டு
கலிமாவைத் திக்ர் செய்துபார் - நீ
ஹக்கில் கரைந்துவிடுவாய் (உலகெல்லாம்)

3. திக்ர்தரிபட்டு விட்டால் தீயஇணை நீங்கிவிடும்
தீனும் தெளிவாகிவிடுமே - உன்
தீனும் தெளிவாகிவிடுமே
தேடல் நிறைவேறிவிடும் திக்கெல்லாம் சாந்திகிட்டும்
தீதாறின் ஞானம் கிட்டுமே - நீ
நல்லடியார் கூட்டம் சேருவாய் (உலகெல்லாம்)

4. துவிதத்தில் ஷிர்க்கு உண்டு ஏகத்துக்கு இணைகிடையா
என்றென்றும் சாந்திபெறுவாய் - உண்மை
என்றென்றும் சாந்திபெறுவாய்
சத்தியத்தில் பிறந்த முத்தாய்
சற்குணங்கள் நிறைந்த வித்தாய்
சாந்தியில் தரித்திடுவாய் - நீ
சத்புருடனாகிவிடுவாய் (உலகெல்லாம்)



## பாட்டு - 169

**பல்லவி**

கண்ணும் செவியும் கலக்கமூட்டலாம்
கலிமா விளக்கம் தெளிவைக் காட்டலாம்
பக்கச்சார்பு அற்ற நிலையில்
பகுத்துணர்ந்து செயல்படு - நீ
பகுத்துணர்ந்து செயல்படு

**சரணம்**

1. கொள்கை புரியாக் கோமாளிப் பேச்சு
குவலயத்தை மீட்டுமா
கொடிய குணங்கள் நீங்கி உலகு
கொள்கையிலே வாழுமா
கொள்கையிலே வாழுமா
மனுக்குலத்தின் இருளைநீக்க
மனித அறிவு போதுமா
இறைவன் ஈந்த வழியைக்காட்டி
இருளைநீக்க வேண்டாமா
பக்கச்சார்பு அற்ற நிலையில்
பகுத்துணர்ந்து பேசணும் - நாம்
பகுத்துணர்ந்து பேசணும் (கண்ணும்)

2. மண்டை உடைக்கும் சண்டைகளெல்லாம்
மனுக்குலத்துக்குத் தேவையா
அதிகாரத்தில் அளவைமீற
ஆசையூட்டி வழர்ப்பதா
ஆசையூட்டி வழர்ப்பதா
வேத போதத்தை மூடிமறைத்து
வேதனை வாசலைத் திறப்பதா
வேதியராய் இருந்துகொண்டும்
வேஷம் போட்டு நடப்பதா
இறந்த பிறகும் நரகில்வாழ
நரிக்குணமிங்கு தேவையா
நரிக்குணமிங்கு தேவையா (கண்ணும்)

3. அரக்கர் குணத்தை அழித்தொழிக்க
ஆத்மவழியைக் காட்டணும்
அனைவர் வாழ்விலும் அமைதிகாண
அறவழியைத் தெளிவாக்கணும்
அறவழியைத் தெளிவாக்கணும்
ஆண்டவன் சொல் ஏற்றுலகை
அணைத்தெடுத்து வாழணும்
அனைத்து நபிமார் சொன்ன கொள்கையை
அனைவருக்கும் சொல்லணும்
அன்புகொண்டு வாழப்பழகில்
ஆண்டவனருள் கிட்டிடும்
ஆண்டவனருள் கிட்டிடும் (கண்ணும்)



## பாட்டு - 170

### பல்லவி

புவிவாழும் மக்களுக்கும் பொதுமறையே புர்கான் - அதை
இருட்டடிப்புச் செய்வோர்க்கு ஈருலகும்சாபம்
ஈருலகும்சாபம் எரிநரகே தஞ்சம் - அவர்க்கு
எரிநரகே தஞ்சம்

### சரணம்

1. மறுமை வாழ்வை மறந்தவர்க்கு மதத்திலென்ன தேவை
மனச்சாட்சி இழந்தோர் வாழ மறையின் போர்வை தேவை
மறையின் போர்வை தேவை
மறுமை வாழ்வை நம்பியோர்க்கு மறையினறிவு தேவை
அதை மனத்திலிருத்தி வெற்றிகாண மனத்தில் ஓர்மை தேவை
மனத்தில் ஓர்மை தேவை
ஸிறாத்திலே சீராய்ச் செல்ல கொள்கை விளக்கம் தேவை
ஷிர்க்குள்ளத்தமையாமல் திக்ர் செய்தல் தேவை
திக்ர் செய்தல் தேவை
மருட்சியறிவை மாய்த்துக்கொண்டு
மனித அறிவை எடுத்துக்கொண்டால்
ஈருலகிலும் இன்பம் காணலாம் - நாம்
இறையுதவி பெற்று வாழலாம் (புவிவாழும்)

2. மானக்கேட்டை நீக்கிவைக்கும் நிறைவுபெற்ற தொழுகை
மாபெரும் காரியமாம் மனதில் செய்யும் திக்ர்
மனதில் செய்யும் திக்ர்
இதயத்தில் சாந்திபெற உரியவழி திக்ர் என்று
இறைவேதம் கூறவில்லையா - இதை
இறைதூதர் சொல்லவில்லையா
திக்ர்றைச் செய்வோரின் ஊணுறக்கம் அமல்கள் யாவும்
இறைவனுக்காய் செய்வதாகுமே
இறைவனுக்காய் செய்வதாகுமே
நபி வழியை எடுத்துக்கொண்டு நரி வழியை நீக்கிவிட்டால்
ஈருலகிலும் இன்பம் காணலாம் - நாம்
இறையுதவி பெற்று வாழலாம் (புவிவாழும்)

3. கல்பின் கதவைத் திறந்துவிடும் கலிமா என்ற திக்ர்
கடினஷிர்க்கை நீக்கிவைக்கும் கல்புரற்றால் கலிமா
கல்புரற்றால் கலிமா
இணையை நீக்கும் ஏகமாக்கும்
ஸிறாத்தைக் கணத்தில் கடக்கச் செய்யும்
கௌலுல்கௌதரில் சேர்த்துவைக்கும் கலிமா
கௌலுல்கௌதரில் சேர்த்துவைக்கும் கலிமா
கடலில் கரைந்தழிந்த கல்லுப்புப் போலாக்கி
ஹக்கில் அமிழ்த்துவிடும் கலிமா
ஹக்கில் அமிழ்த்துவிடும் கலிமா
உள்ளத்தை ஓர் நிலையில்
உறுதியாய் நிலை நிறுத்தி
கலிமாவை திக்ர் செய்யணும் - நாம்
இறைநிழலில் வாழ்ந்திருக்கலாம் (புவிவாழும்)



## பாட்டு - 171

### பல்லவி

அல்லாஹ்வின் அருளின்றி அகப்பரிசுத்தம்
யாருக்கும் கிடையாது
அகம் புறம் இரண்டிலும் பரிசுத்தமடைய
அனுதினம் பிரார்த்தனை செய் - அத்தோடு
தினமும் திக்கிறுசெய்

### அனுபல்லவி

குற்றத்தைப் பொறுத்துக் குறைகளை நீக்க
இறைவனிடம் பிரார்த்தனை செய்
தௌபாவின் வாசல் திறந்தே இருக்குது
நம்பிப் பிரார்த்தனை செய் - அத்தோடு
தினமும் திக்கிறுசெய் (அல்லாஹ்)

### சரணம்

1. நம்பிக்கை என்பது நற்பயன் நல்கும்
நபிவழி இதுதானே - மனிதா நபிவழி இதுதானே
இதய சுத்தியோடிறைவனை இறைஞ்சில்
இதயம் ஒளிவுபெறும்
மறதி தவறு மனிதனின் இயல்பு
மன்றாடு மன்னிப்புண்டு
தினமும் திக்கிறில் ஈடுபடு - நீ
இதயம் சுத்தி பெறும்
தீவினை நீங்கும் தீன்வழி கிட்டும்
தேவை நோய் தீர்ந்துவிடும்
தேடிய சாந்தி படிப்படி கிடைக்கும்
தினமும் திக்கிறுசெய் - நீ
தினமும் திக்கிறுசெய் (அல்லாஹ்)

2. மூடநம்பிக்கை முக்தியில் சேர்க்கா
முதலை இழக்காதே - வாழ்நாள் முதலை இழக்காதே
மணக்கும் கலிமா மந்திரத்தோடு
இறப்பவர் வெற்றி பெற்றார்

இருக்கும் நாளை முறையாய்க் கழித்து
ஈமானனோடிறந்து செல்லு
இன்பம் துன்பம் எதுவந்தாலும்
ஈமானை இழக்காதே
இன்பம் துன்பம் இரண்டுமுன் உயர்வுக்கு
இறைவன் அருட்கொடைதான்
நடப்பதைப் பொருந்து நபிலைத்தொடரு
தினமும் திக்கிறு செய்
தினமும் திக்கிறு செய் (அல்லாஹ்)

3. கனவுலகிலும் கருத்தோடு வாழ்ந்து
கரைசேர வழிதேடு - கலிமாக்கருத்தோடு வாழ்ந்தேகு
ஆர்ப்பளவாவது ஈமானோடிறப்பவர்
கரைசேர வழியுண்டு
கற்பனை இறைவனைக் கருத்தினில் கொண்டால்
கரைசேர வழி தோணா
இணையை நீக்கி ஏகத்தில் தரித்து
இயன்றவரையில் திக்கிறு செய்
திக்கிர் இதயத்தில் சாந்தியை ஊட்டும்
இறைவன் திருவாக்கு
தௌபாச் செய்து கொள் திக்கிறைத் தொடர்ந்து கொள்
சாந்தியில் நிலைபெறுவாய்
சாந்தியில் நிலைபெறுவாய் (அல்லாஹ்)



## பாட்டு - 172

**பல்லவி**

அருள் வெள்ளக் கரையிலுமா தாகம் - அதை
அள்ளிப் பருகாவிடில் சாபம் - சாபம்
அருள் வெள்ளக் கரையிலுமா தாகம்

**சரணம்**

1. அள்ளிப் பருகில் தீரும் தாகம் - அது
ஆண்டவனின் நற்கருணையாகும்
பாலர் பருவத்திலே கற்றறிந்து வெற்றிபெற்றால்
தாகம் தீர்ந்து வாழ்ந்திறக்கலாம்
வாலிபத்தில் காதல் தாகம்
வயோதிபத்தில் வாழ்நாள் தாகம்
வாழ்ந்திருப்போர் காணும் உண்மை
எல்லோர்க்கும் தாகம் தீர்க்கும்
இலகு வழி ஏகத்துவம்
இழமையிலே அறிந்து வாழணும் - நாம்
இழமையிலே அறிந்து வாழணும் (அருள்)

2. கையிலுள்ள வேதம் அருள் வெள்ளம் - உன்
தாகத்தைத் தீர்க்கும் அதன் கொள்கை
தாகமென்றால் சாந்தியென்று கொள்ளு - அதைத்
தீர்த்துவைக்கும் தீன்கலிமா நம்பு - அதைத்
தீர்த்துவைக்கும் தீன்கலிமா நம்பு
ஆசாபாசம் நீக்கிவைக்கும்
ஆளுமையைத் தந்துதவும்
ஆதிபிதா கொண்ட கலிமா
ஆண்குலத்தார் பெண்குலத்தார்
அனைவருக்கும் தாகம் தீர்க்கும்
ஆதிபிதா கொண்ட கலிமா
ஆதிபிதா கொண்ட கலிமா (அருள்)

3. பூரணத்தைப் பெற்றுக்கொள்ளப் பிறந்தோம்
அதைப் பூவுலகில் ஈந்துதரும் கலிமா
விளங்கித் தெளிவு பெற்று வாழ்ந்தால் - அது
வேதனையின் வாசலையே மூடும்
விளக்கத்தைத்தந்துதவும்
வேதநூலை வீசிவிட்டு
வேதனையில் வீழ்தல் சரியா
புத்தியுள்ள மனுக்குலத்தார்
புர்க்கானைக் கேட்டறிந்து
புண்ணியராய் வாழ்ந்திறக்கணும்
புண்ணியராய் வாழ்ந்திறக்கணும் (அருள்)

4. இவ்வுலக இன்பதுன்பம் மாயை
இவ்விரண்டும் அற்ற நிலைபாதை
பாதையை விளக்கித்தரும் வேதம் - அதைத்
பக்குவமாய்க் கேட்டறிந்து செல்லு
கயவர்க்குப் பயந்து கொண்டு
ஹக்கை இழந்துவிட்டு
கைசேதத்தோடிறக்காதே
காலம் வரும் போது உண்மை
கண்டிப்பாய்த் தெரியவரும்
கற்பனைகள் சாந்திதராதே
கற்பனைகள் சாந்திதராதே (அருள்)



## பாட்டு - 173

**பல்லவி**

கொள்கையில் ஏனோபேதம்
கொடியோர் செய்த யூகம்
இறைவன் போட்ட சாபம்
கொடியோர் இதயம் ஏனம்

**சரணம்**

1. வேத பேத சர்ச்சைகளெல்லாம்
வேதியர் போட்ட சதித்திட்டம்
வரவுபெருக வயிறு வழர்க்க
வகுத்தெடுத்த சதித்திட்டம்
அறிவில்லாத பாமரமக்களை
ஆட்டிப்படைக்கிறார் வேதியர்
ஆழநீளம் அறியா வாலிபர்
அரக்கர் குணத்தில் மூழ்கிறார்
உண்மையை எங்கே தேடுவார்
அமைதியை எங்கே காணுவார்
அறிவு குறைந்த மக்கள் சாந்தி
அடையும் வழியைக் காண்பாரா
அடையும் வழியைக் காண்பாரா (கொள்கை)

2. சுயநலத்தை அடிப்படையாய்க்
கொண்டமைந்த கொள்கைகள்
உலகமக்கள் சாந்திகாண
உண்மை வழியைக்காட்டுமா
வரட்டுவாதம் வழியைக்காட்டா
வான்மறையைக் கேட்டறி
பகுத்தறிவைப் பயன்படுத்திப்
பாதையை நீ கண்டறி
உண்மையை நீ காணலாம்
உறுதிபெற்று வாழலாம்
அன்றாடச் செயல்களோடும்
ஆனந்தமாய் வாழலாம்
ஆனந்தமாய் வாழலாம் (கொள்கை)

3. பொய்மைக்கஞ்சும் சபலபுத்தி உன்னைப்
பொசுக்கும் நெருப்பென்றறிந்துகொள்
புதியபாதை ஏதுமில்லை
புர்க்கான் பாதையைப் பிடித்துக்கொள்
நல்லசெயல்களை எடுத்துக்கொள்
தீயசெயல்களை நீக்கிக்கொள்
தினமும் திக்கிர் செய்துகொள்
தீன் ஒளியை ஏற்றிக்கொள்
உண்மையோடு ஒன்றலாம்
உதவி பெற்று வாழலாம்
ஈருலகிலும் சாந்தியோடு
இன்பவாழ்வு வாழலாம்
இன்பவாழ்வு வாழலாம் (கொள்கை)



## பாட்டு - 174

### பல்லவி

சத்தியத்தைத் தேடுகின்ற புத்தியுள்ள மனிதருக்கு
புர்க்கான் வேதம் போதாதா - மனிதா
புர்க்கான் வேதம் போதாதா

### அனுபல்லவி

சத்தியத்தைத் தெளிவாய்க்காட்டி
அசத்தியத்தை நீக்கி வைக்கும்
புர்க்கான் மறை போதாதா - புத்திக்குப்
புர்க்கான் மறை போதாதா (சத்தியத்தை)

### சரணம்

1. இணைகொண்ட நெஞ்சமெல்லாம்
இப்லீஸின் இல்லமென்று
இறைவேதம் விளக்கிக்காட்டுதே - மனிதா
இறைவேதம் விளக்கிக்காட்டுதே
இணைற்ற நெஞ்சங்களே ஈமானிய நெஞ்சமென்று
இறைவேதம் தெளிவாக்குதே - மனிதா
இறைவேதம் தெளிவாக்குதே
வேதத்தை விளங்காமல் வீண்பேச்சில் சிக்குண்டு
வேதனையில் வீழாதேடா - மனிதா
வேதனையில் வீழாதேடா (சத்தியத்தை)

2. மேலெண்ணம் கொண்ட மக்கள்
இப்லீஸின் கூட்டமென்று
வேதம் தெளிவாய் விளக்குதே - மனிதா
வேதம் தெளிவாய் விளக்குதே
நிரந்தர நரகத்திலே நித்தியம் வாழ்ந்திட
ஒப்பந்தம் செய்து கொண்டார் - இறையோடு
ஒப்பந்தம் செய்து கொண்டார்
வேதத்தின் போதனையை உள்ளத்தில் கொள்ளாமல்
வேஷத்தில் வாழாதேடா - மனிதா
வேதனையில் வீழாதேடா (சத்தியத்தை)

3. இறந்தழிந்த வாழ்நாள் மீண்டும் வாராதே வாராது
உள்ளத்திலிதை இருத்திக் கொள்ளு - மனிதா
உள்ளத்திலிதை இருத்திக் கொள்ளு
எத்தனை நாளினி வாழ்வாயோ யாரறிவார்
ஏகத்துவத்தில் வாழ்ந்து செல்லு - மனிதா
ஏகத்துவத்தில் வாழ்ந்து செல்லு
ஏகத்துவத்தோடிறப்பின் இறைகிருபை நிச்சயம்
என்றென்றும் சாந்தி பெறுவார் - அவர்
என்றென்றும் சாந்தி பெறுவார் (சத்தியத்தை)



## பாட்டு - 175

**பல்லவி**

தம்மைத் தாமே அறிஞராக
அனேகர் நம்பி வாழ்வதால்
அனேக முட்டாள் கூட்டமுண்டு
அறிஞர் கூட்டம் சொற்பம்தான்
அறிஞர் கூட்டம் சொற்பம்தான்

**சரணம்**

1. பேத புத்தியை பகுத்தறிவாய்
நம்பிக்கொள்ளுது வெளிமனம்
காணும் உலகோர் கனவே என்று
பகுத்துக்காணுது உள்மனம்
பகுத்தறிவுக்கும் பேதபுத்திக்கும்
பேதம்காண முடியாதோர்
தம்மைத்தாமே அறிஞராக
அனேகர் நம்பி வாழ்வதால்
அனேக முட்டாள் கூட்டமுண்டு
அறிஞர் கூட்டம் சொற்பம்தான்
அறிஞர் கூட்டம் சொற்பம்தான் (தம்மை)

2. வாழ்வின் நோக்கைப் புரிந்து கொள்ள
வேதக் கொள்கை அவசியம்
கொள்கை நோக்கை ஏற்றுக்கொள்ளப்
பகுத்திறவு அவசியம்
ஏற்றுக் கொண்ட கொள்கையோடு
உலக வாழ்வு அமைந்திடில்
உருட்டுப் புரட்டு மறைந்திடும்
உலகும் சாந்தி பெற்றிடும்
வேதனை வாசல் அடைபடும்
வேதக் கொள்கை நிலைபடும்
வேதக் கொள்கை நிலைபடும் (தம்மை)

3. பிணத்தை விரும்பும் காக்கைபோல பேதபுத்தி வாழுது
பகுத்தறிவு சாந்திகாண பகலிரவாய்த் துடிக்குது
பாருலக நிகழ்ச்சிகளை பகுத்துத் தெளிவு காணுது
தெளிவு கொண்ட உள்ளத்தோடு
தெய்வப் பொருத்தம் தேடுது பேதபுத்தி நரகில் வீழ்ந்து
நெருப்பில் வாழத் துடிக்குது
நெருப்பில் வாழத் துடிக்குது (தம்மை)

4. இறந்தகாலம் பகற்கனவு எதிர்காலமோ கற்பனை
நிகழ்கால நிம்மதிக்கு நிதான அறிவு அவசியம்
கொள்கை விளக்கம் புரிந்து கொண்டால்
நிகழ்காலம் சாந்திதான்
மனம்போன போக்கில் வாழ்வோர்
மனிதராகவாழொனா
தம்மைத்தாமே அறிஞராக அனேகர் நம்பி வாழ்வதால்
அனேக முட்டாள் கூட்டமுண்டு
அறிஞர் கூட்டம் சொற்பம்தான்
அறிஞர் கூட்டம் சொற்பம்தான் (தம்மை)

5. உன்னை நீயே முட்டாளாக மாற்றுகிறாய் மறுப்பாயா
பன்றிக் கூட்டம் நிமிர்ந்து வானைப்
பார்ப்பதில்லை அறிவாயா
கடைப்பல் இருக்கும் வரையில் நரிக்கு
கடவுள் பக்தி தென்படா
வேதனையின் வாசல் கண்டு
விம்மி அழுதல் பயன்தரா
தம்மைத்தாமே அறிஞராக
அனேகர் நம்பி வாழ்வதால்
அனேக முட்டாள் கூட்டமுண்டு
அறிஞர் கூட்டம் சொற்பம்தான்
அறிஞர் கூட்டம் சொற்பம்தான் (தம்மை)



## பாட்டு - 176

### பல்லவி

அறிவும் அன்பும் அரவணைப்பும் அமைந்துவிட்டதா - நீ
ஆளும் திறமை பெற்றுக்கொண்ட ஆண்மகனானாய் - நீ
ஆண்மகனானாய்

### சரணம்

1. பேடிகள் பேச்சில் மயக்கமுற்றுப் பித்தனாகாதே
பேரின்ப வாழ்வை இழந்துவிட்ட பேயனாகாதே
மணக்கும் கலிமா மந்திரத்தை விளங்கிச் செயல்படு - அதை
என்றென்றும் இதயத்திருத்தி இன்பம் கண்டறி
இன்பம் கண்டறி
இன்பம் கண்டறி (அறிவும்)

2. உலக வாழ்வு நிலைக்குமென்று உறுதி கொள்ளாதே
உண்மை பொய்யாய் மாறுவதில்லை மறந்துவிடாதே
மறந்திறந்தோர் மறுமை வாழ்வு நரகில் அமைந்திடும்
மணக்கும் கலிமாவோடிறந்தால் ஜென்னத்தமைந்திடும்
ஜென்னத்தமைந்திடும்
ஜென்னத்தமைந்திடும் (அறிவும்)

3. இறைவன் சொல்லை ஏற்றுக்கொள்ளும் இதயம் அமையணும்
இறைவன் வழியில் சென்று வாழ்ந்து இன்பம் காணணும்
எல்லாச் செயலும் இறைவனுக்கே என்று அமையணும்
இதயம் கலிமாவை மறந்திடாமல் வாழ்ந்திறக்கணும்
வாழ்ந்திறக்கணும்
வாழ்ந்திறக்கணும் (அறிவும்)

4. நேர்வழியில் நீ வாழ்ந்திறக்க நிதானம் அவசியம்
நித்திய சாந்தியைப் பெற்று வாழ கலிமா அவசியம்
புரட்டர் கலிமாச் சாந்திகாட்டா புரிந்துகொள்ளணும்
புர்க்கான் கொள்கையை எடுத்துக்கொண்டு புவியில் வாழணும்
புவியில் வாழணும்
புவியில் வாழணும் (அறிவும்)

## பாட்டு - 177

**பல்லவி**

தீன்கலிமா உன் திரைநீக்கும்
திரும்பும் திசைகளெல்லாம் திருமுகம் காட்டும்
தீன்கலிமா உன் திரைநீக்கும்

**சரணம்**

1. பிறப்பின் நோக்கைத் தெளிவாக்கும்
பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டும்
ஹுூறென்ற மயக்கை நீக்கிவைக்கும்
குதுபின் நிலைக்கறிவை உயர்த்திவைக்கும்
பலகலை உணரும் பக்குவமளிக்கும்
பயஹம்பர் பாதையில் பழுதின்றிச் சேர்க்கும்
இதயத்தில் நூர் அமைந்திடச் செய்யும்
இறைதூதர் திரைகொண்டு இறைசொன்ன கலிமா
(தீன்கலிமா)

2. ஹையுல் கையூமென்ற கடலிலே கரைக்கும்
குறைவில்லா இறையிலே நிறைவோடமர்த்தும்
குவலயம் யாவுமே மழ்ஹறென்றுணர்த்தும்
அனைத்தும் நூறின் ஆற்றலென விளக்கும்
நவிலொணாத் தனிச்சாந்தி தானாக வாய்க்கும்
ஏகத்தின் தனியுணர்வை இதயத்திலமைக்கும்
ஸிர்ருடைய அடியாரென்ற சிறப்புரிமை வழங்கும்
இறைதூதர் திரைகொண்டு இறைசொன்ன கலிமா
(தீன்கலிமா)

3. சொர்க்கத்தின் வாழ்வை துன்யாவில் காட்டும்
சோபனம் சொல்வோரின் உறுதுணை கிடைக்கும்
தீயவர் சேருமிடம் எதுவென்று தோன்றும்
தீயவர் கதிக்குரிய காரணம் காட்டும்
விலாயத்தின் ரகசியத்தை விளங்கிடவைக்கும்
வேதியர் யாரென்ற விளக்கமும் காட்டும்
வேதனை வாசலை முற்றாக மூடும்
இறைதூதர் திரைகொண்டு இறைசொன்ன கலிமா
(தீன்கலிமா)



## பாட்டு - 178

**பல்லவி**

திக்கிர் என்பது எதற்காக
மறதியை நீக்கி தெளிவைத்தேக்கி
உரிய இடத்தில் உனையிருத்தி
உண்மைச் சாந்தியில் நிலைப்படுத்த

**சரணம்**

1. புலன்கள் ஊட்டிய புத்தறிவாலே
புவியில் பிறந்தாய் நம்புகிறாய்
பிறப்பும் இறப்பும் மருட்சியடா - உன்
பேதபுத்தியின் சூட்சியடா
பேதபுத்தி நீங்கிவிட்டால்
பேரொளியறிவு நினைவில் வரும்
பிறந்ததும் இறந்ததும் கற்பனையே
நிலையான சமதோடமைந்திடுவாய்
இதற்காகத்திக்கிறை இறைவன் தந்தான்
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு (திக்கிர்)

2. இரவும் பகலும் இல்லாமகாம்
பிறப்பும் இறப்பும் அற்றமகாம்
எல்கையே இல்லா ஜோதிமகாம்
ஏகத்தில் ஏகமாய் அமைந்தமகாம்
திக்கிர் ஸிர்ராய் அமைந்துவிடில்
இன்பம் துன்பம் மறைந்துவிடும்
இருப்பவன் நான் எனும் உணர்வுவரும்
இறைவனின் உணர்வே அதுவாகும்
இதற்காகத்திக்றை இறைவன் தந்தான்
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு (திக்கிர்)

3. இல்லையென்பது இல்லாமகாம்
ஏகமாய் எல்லாமுள்ளமகாம்
கன்ஸுல் மஹ்பியா என்றமகாம்
ஹக்கேயன்றிப்பிறிதில்லாமகாம்
சாந்தி பூரணம் பெற்றமகாம்
அதுவே உனது சொந்த இடம்
அவ்விடம் சேர நல்லமல் வேணும்
அதுவே திக்கிர் அறிந்துகெள்ளு
இதற்காகத்திக்றை இறைவன் தந்தான்
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு (திக்கிர்)

4. கனவொத்த உலகில் விழிப்பூட்டும்
ஹக்கான நூறோடிணைத்துவிடும்
அப்தை றப்பை விளக்கித்தரும்
ஆலம்மிதாலைத் துலக்கிவைக்கும்
ஹக்கை பாதிலை உணரவைக்கும்
கமாலியத்தங்கே தரித்துவிடும்
காலம் நானே எனும் உணர்வு
ஹக்காய் உன்னை ஆட்கொள்ளும்
இதற்காகத்திக்றை இறைவன் தந்தான்
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு
இயன்றால் அதனை எடுத்துக்கொள்ளு (திக்கிர்)



## பாட்டு -179

### பல்லவி

உள்ளப்பரிசுத்தத்தோடு
உயிர்க்கலிமாவை எடுத்துக்கொண்டு
உரியபடி திக்கிர் செய்யணும் - நாம்
உரிய இடம் சேரும் வரை
உரியபடி திக்கிர் செய்யணும்

### சரணம்

1. தொழிலுக்குரிய நேரத்தை
ஒதுக்கிக் கொள்ளச் சொல்லுகிறேன்
திக்கிறுக்கோர் நேரத்தை
வகுத்துக் கொள்ளச் சொல்லுகிறேன்
ஊணுறுக்கம் உறவாடலை
அளவாக்கச் சொல்லுகிறேன்
ஒவ்வாத செயல்களை நீ
நிறுத்திக் கொள்ளச் சொல்லுகிறேன்
கடிக்கவரும் நாய்க்கு நீதிக்
கல்லை எடுக்கச் சொல்லுகிறேன்
வீணரைக்கண்டால் விலகி
வழியை விடச் சொல்லுகிறேன்
உஸ்லத்தில் தரிந்திருந்து
திக்கிர்செய்யச் சொல்லுகிறேன்
உரிய இடம்சேரும் வரை
உரியபடி திக்கிறைச் செய் (உள்ளப்)

2. உள்ளத்தை ஓர்நிலையில்
நிலைநிறுத்தித் திக்கிறைச் செய்
ஜர்ஸென்ற நாமத்தோடொன்றிருந்து
திக்கிறைச் செய்
முஆமலாவும் முஆதபாவும் முறாக்கபாவும்

இணைந்துவிட்டால்
ஒளியுலகில் முஸாஹிதா
உரியவழி காட்டும்
ஷைத்தானின் மருட்டுதலை
இவ்விடத்தில் நீ காண்பாய்
தலைக்கனத்தை விட்டுவிட்டு
தௌபாவைக் கைக்கொள்ளு
உஸ்லத்தில் தரித்திருந்து
உரியபடி திக்கிறைச் செய்
உரிய இடம் சேரும் வரை
உரியபடி திக்கிறைச் செய் (உள்ளப்)

3. மலக்கூத்தின் மர்மங்கள்
மறைவின்றி வெளியாகும்
மார்க்கமென்றால் என்னவென்று
மனதார உணர்வாய்
ஸிறாத்தென்ற நேர்பாதை
எதுவென்று காண்பாய்
முடிவுநிலை லிகாவென்று
முற்றாக உணர்வாய்
காலத்தின் திரைநீங்கி
ஹக்கிலே தரிக்க
கலிமாவின் துணையின்றி
வேறுவழி கிடையா
உஸ்லத்தில் தரித்திருந்து
உரியபடி திக்கிறைச் செய்
உரிய இடம் சேரும் வரை
உரியபடி திக்கிறைச் செய் (உள்ளப்)



4. கலிமாவின் கருத்துன்னைக்
கட்டவிழ்த்து விடுவிக்கும்
பிறப்பிறப்பு வாழ்வெல்லாம்
கற்பனையே என்றாகும்
கரையில்லா ஞானாமிர்தம்
ஹக்கிலே ஆழ்த்தும்
இறைஅஸ்மாத் தோற்றமேயன்றிப்
படைப்பில்லையென்றாகும்
ஏகத்தையன்றி உடன் வேறெதுமில்லை
இதற்கப்பால் கூறமொழி இல்லவேயில்லை
இல்லவே இல்லை
உஸ்லத்தில் தரித்திருந்து
உரியபடி திக்கிறைச் செய்
உரியஇடம் சேரும்வரை
உரியபடி திக்கிறைச் செய் (உள்ளப்)

## பாட்டு - 180

**பல்லவி**

எங்கும் நிறைந்த ஹக்கை
ஏகமாய் இருக்கும் தாத்தை
ஏன் மறந்தாய் மனிதா - நீ
ஏன் மறந்தாய் மனிதா

**சரணம்**

1. ஏகத்தோடேகமாய் என்றென்றும் உள்ள - நீ
ஏன் மறந்தாய் மனிதா - நீ
ஏன் மறந்தாய் மனிதா
பிறப்பிறப்பெல்லாம் மாயை
பேதமை அறிவின் லீலை
எப்போது நீ உணருவாய் - இதை
எப்போது நீ உணருவாய்
ஏகத்தில் அமைந்து கொண்டால்
எல்லாம் உன் எண்ணத் தோற்றம்
பிறிதொன்று வேறேதடா - மனிதா
பிறிதொன்று வேறேதடா (எங்கும்)

2. இருப்பதை மறக்கும் போது
மறந்தது நினைவிலாகும்
ஏகத்தில் ஏகமாகலாம்
இதற்காகத்தான் கலிமா
திக்கிறில் மூழ்கிவிட்டால்
ஏகத்தில் ஆழ்ந்துவிடலாம்
என்றென்றும் நித்தியனாய்
ஏகத்திலமைந்தவர்க்கு
பிறிதொன்று வேறேதடா - மனிதா
பிறிதொன்று வேறேதடா (எங்கும்)



3. கண்காணும் உலகம் யாவும்
கண்காணா உலகும் கூட
ஹக்கனின் நாமத் தோற்றம்தான்
நாம் அறிந்த அனைத்துலகும்
அல்லாஹ்வின் வேறு என்றால்
அறியாமல் ஷிர்க்கில் ஊறினாய்
ஷிர்க்கை நீ நீக்காவிட்டால்
ஸிறாத்தை நீ தாண்டமாட்டாய்
சீர்கெட்ட நரகில் வீழுவாய் - மனிதா
சீர்கெட்ட நரகில் வீழுவாய் (எங்கும்)

## பாட்டு - 181

### பல்லவி

இறைஹாதி எமக்கீந்த கொள்கை - இன்று
தலைகீழாய் மாறியதாலே
உள்ளத்தின் ஷிர்க்கு
உலகத்தில் துன்பத்தை
ஊட்டியிருப்பதைக் கண்டேன் - நான்
ஆதலால் குழந்தைபோல் அழுதேன்

(இறைஹாதி)

### சரணம்

கொள்கையில் தரிப்பட்ட கூட்டத்தோர் ஒருசாரார்
ஹக்கை உணர்ந்து கொண்டார் - அவர்
ஹக்கை உணர்ந்து கொண்டார்
அன்னவர் பொருட்டினால் உலகத்திலே அமைதி
ஒரளவிருக்குதப்பா - அமைதி
ஒரளவிருக்குதப்பா
கொள்கையில் வாழ்வோரைக் கொடுவினை தாக்காது
குர்ஆனின் தீர்ப்பல்லவா - இது
குர்ஆனின் தீர்ப்பல்லவா
நல்லோர்கள் இல்லீனில் இருப்பதைக் கண்ட நான்
குழந்தை போல் சிரிக்கின்றேன் - நான்
குழந்தை போல் சிரிக்கின்றேன்

(இறைஹாதி)

மார்க்கத்தை காற்பந்தாய் மாற்றிக் கொண்டோர் நிலை
மஹ்ஸரிலே புரியும் - அவருக்கு
மஹ்ஸரிலே புரியும்
ஈமானில் தரிபட்ட இறைநேசர் அன்நிலையை
இங்கேயே கண்டு கொள்வார் - அவர்
இங்கேயே கண்டு கொள்வார்
ஷிர்க்கினை நீக்கினால் சித்தீக்காய் வாழலாம்
சீரான வாழ்வும் கிட்டும்
சீரான வாழ்வும் கிட்டும்
காற்பந்து வீரரின் கதியினைக் கண்ட நான்
குழந்தைபோல் அழுகின்றேன் - நான்
குழந்தைபோல் அழுகின்றேன்

(இறைஹாதி)

கருனைக் கடலான ஹக்கனின் தீர்ப்பிலே
தப்பேதும் இருப்பதில்லை - அதை
கண்டுணர்வோர் சிலரே
கண்டு கொண்டால் நீ கழாவைப் பொருந்திக்கொள்
கல்பிலே சாந்திகிட்டும் - ஆம்
கல்பிலே சாந்திகிட்டும்
இம்மை மறுமை இயக்கங்கள் யாவுமே
இறை நாட்ட மெண்றுனரு
இறை நாட்ட மெண்றுனரு
ஹக்கிலே தரிபடக் கலிமாவை எடுத்துக்கொள்
இறைஹாதி வழிகாட்டும் - மனிதா
இறைஹாதி வழிகாட்டும்

(இறைஹாதி)

## கலைச்சொற்பதம்

| | | |
|---|---|---|
| அகில் | - | நுண்ணறிவு |
| அமல் | - | வணக்க வழிபாடு (செயல்) |
| அதாலத் | - | நீதி நிர்வாகம் |
| அர்ஷு | - | இறைஸ்தானம் |
| அஸ்மா | - | பெயர் |
| அஹது | - | ஏகம் |
| ஆகிறா | - | மறுமை |
| இஸ்க் | - | தெய்வீகக் காதல் |
| இன்ஸான் | - | மனிதன் |
| இப்லீஸ் | - | வழிகெடுப்பவன் |
| இருடிகள் | - | ரிஷிமார் (ஞானிகள்) |
| இலாஹு | - | படைப்பினம் |
| ஈமான் | - | விசுவாசம் |
| உஹது | - | சக்தி |
| உன்சியத் | - | உறவாடல் |
| ஐனுல் எக்கீன் | - | பித்தியட்சப் பிரமாணத்தினால் உண்டான நம்பிக்கை |
| ஒஸ்த்தாத் | - | குரு |
| கல்பு | - | இதயம் |
| கலிமா | - | பரிசுத்த வாக்கியம் |
| கலிமத்துல் கபிஸா | - | துர்வாடை வீசும் வாக்கியம் |
| கலீபா | - | பிரதிநிதி |



| | | |
|---|---|---|
| ஹக்குல் எகீன் | - | அனுபவத்தில் கண்ட உண்மை (அனுபூதி) |
| ஹக்கு | - | உண்மை |
| ஹசது | - | பொறாமை, வஞ்சனை |
| ஹவ்லுல் கவ்தர் | - | பாற்தடாகம் |
| காபிறா | - | ஞானத்தின் ஓர் படித்தரம் |
| காமில் | - | பூரணம் பெற்றவர் |
| காத்தமுன் நபி | - | இறுதித் தூதர் |
| குர்ஷி | - | பிரபஞ்சத்தின் இறுதி அங்கம் |
| ஹுருர் | - | மயக்கு (மாயை) |
| சலாம் | - | சாந்தி |
| சக்கூம் பழம் | - | நரகில் கொடுக்கப்படும் கள்ளிப்பழம் |
| ஷைத்தான் | - | வழி கெடுப்பவன் |
| ஸாபிறா | - | ஞானத்தின் ஓர் படித்தரம் |
| சில்சிலா | - | பெயர் வரிசை |
| சிர்ரு | - | இரகசியம் |
| ஸிறாத்தல் முஸ்த்தக்கீம் | - | நேர்பாதை |
| ஸித்றத்துல் முன்தஹா | - | வானுலகின் ஓர் இடம் |
| ஸிபத்து | - | பண்பு |
| ஷிர்க் | - | இணைவைத்தல் |
| தஜ்ஜால் | - | வழி கெடுப்பவன் |
| தக்தீர் | - | தெய்வசித்தம் |

| | | |
|---|---|---|
| தஜர்ருத் | - | கட்டவிழ்தல் (மரணிக்காமல் மரணித்தல்) |
| திக்ர் | - | தியானம் |
| தீதார் | - | இறைசமூகம் |
| தீன் | - | மார்க்கம்(வழி) |
| துன்யா | - | உலகம் |
| தையிபா | - | மணம் |
| நபி | - | இறைதூதர் |
| நப்ஷு | - | மனம் (உள்ளம்) |
| நூர் | - | அறிவு |
| பர்க் | - | ஏற்றம் |
| பயஹம்பர் | - | றசூலின் சிறப்புப் பெயர் |
| பரிவட்டம் | - | நன்கொடை |
| பாதின் | - | மறைவு |
| பித்றத் | - | இயற்கை நியதி |
| பித்அத் | - | மார்ககத்துக்கு முரணான புதுமை |
| புர்க்கான் | - | வேத நூல் (பிரித்து அறிவிப்பது) |